பெ.சு.மணி

தமிழ்ப் புலவர் மரபும் பாரதி மரபும்



பூங்கொடி பதிப்பகம்

தமிழ்ப் புலவர் மரபும்
பாரதி மரபும்

பெ. சு. மணி

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004

நூல் விபரக்குறிப்பு

நூலின் பெயர் : தமிழ்ப்புலவர் மரபும்
பாரதி மரபும்

நூலாசிரியர் . பெ. சு, மணி

நூலின் பொருள் : கட்டுரைகள்

வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்
14. சித்திரக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர். சென்னை-4

விலை : ரூ. 55. 00

நூல் உரிமை ; ஆசிரியர்

அச்செழுத்து : 10 புள்ளிகள்

வெளியிட்ட ஆண்டு : டிசம்பர் 1995

நூல் அளவு : கிரவுன் 1×16

பக்கங்கள் ; 296

பயன்படுத்திய தாள் ; 10.7 Kg. வெள்ளைத்தாள்

அச்சகம் : ராஜ் அச்சகம்
நெ. 23, பர்மாகனகாம்பாள்தெரு
மேற்கு மாம்பலம் சென்னை-33

முன்னுரை

மரபு, மாற்றம், நவீனத்துவம் பற்றிய கோட்பாடுகள் காலந்தோறும் மாறிக் கொண்டே வருவன என்பதை வரலாறு அறிவுறுத்திக் கொண்டே வருகின்றது.

நெடுநாள் தேங்கிக் கிடக்கும் பாசியை எற்றி வெளியேற்றும் புதுவெள்ளம் போன்று மாற்றம், மரபின் தொடர்ச்சிக்கு புதிய வலிமையையும், பொலிவையும் தருகின்றது. இன்றைய மாற்றம், நாளைய மரபாகிவிடுகின்றது.

மரபு-மாற்றம் இரண்டிற்கும் இடையே எங்கே ஓயாத போராட்டம் நடைபெறுகின்றதோ. அங்கே சமூக மாற்றம் உயிர்த்துடிப்புடன் நிகழ்ந்து கொண்டே வருகின்றது. இந்தியாவின் சமூக அமைப்பு ஆழமான முரண்பாடுகளைக் கொண்டது.

உள்நாட்டு முரண்பாடுகளுடன் வெளிநாட்டு கலாசார, அரசியல் ஆதிக்கங்கள் காரணமாக ஏற்படும் முரண்பாடுகள் மோதும்பொழுது தேசிய எழுச்சித் தோன்றுகிறது. இந்தத் தேசிய எழுச்சி தோன்றும் பொழுது, மரபிற்கும், மாற்றத்திற்கும் இடையேயான போராட்டமும் கூர்மையடைகின்றது. இதன் விளைவுகளில் ஒன்றாகப் பண்டையப் பெருமையைச் சாற்றும் இலக்கியங்கள், தத்துவங்கள், கண்டுபிடிக்கப்படுகின்றன,

''வாஸ்கோடகாமா இந்தியாவைக் கண்டுபிடித்ததைக் காட்டிலும், இந்தியாவின் இலக்கியத் தத்துவக் கருவூலங்கள் மீண்டும் கண்டுபிடிக்கப் பெற்றதே 'புதிய

இந்தியா' வின் தோற்றத்திற்கு மிக முக்கியமான தென்று நான் நம்புகிறேன்'' என்று வேத இலக்கிய மரபை உலகறியச் செய்த பேரறிஞர் மாக்ஸ்முல்லர் கூறியது இங்கு நினைவுகூரத்தக்கது.

பண்டையப் பெருமையைப் பற்றி பேசும்பொழுது. மூண்டெழும் சீரழிவையும், அந்தச் சீரழிவிலிருந்து விடுபட்டு சமுதாய ஆற்றல் அனைத்துத் துறைகளிலும் வெற்றிகரமாகச் செயல்பட வேண்டும் எனும் போராட்ட வுணர்வும் வெளிப்பட வேண்டும்.

இந்த நோக்கில் பார்க்கும் பொழுதுதான் தமிழ்ப் புலவர் மரபிற்கும், பாரதி மரபிற்கும் இடையே நிகழ்ந்த செயற்பாடுகளை ஆய்ந்தறிவதில் பயன் ஏற்படும்.

இந்திய இலக்கியக் கர்த்தாக்களில் பங்கிம் சந்திர சட்டர்ஜி (1838-1894) பண்டைய இலக்கியம், தத்துவங் களை தற்காலத் தேவைக்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கு முதன் முதலாக வழிகாட்டியுள் ளார். அரசியல், சமூக மாற்றத்திற்கு பகவத் கீதையைப் பயன்படுத்த வழி காட்டியவர், பங்கிம் சந்திரர். 1886-இல் வெளிவந்த அவருடைய 'கிருஷ்ண சரித்திரம்' கீதாசார்யன் கிருஷ்ணனின் அவதார மகிமை, கடவுட்தன்மையை ஒப்புக் கொண்ட அதே சமயத்தில், இந்த நம்பிக்கை இல்லாதவர்களுக்காக கிருஷ்ணனை ஓர் இலட்சிய மானிட னாக சித்தரித்து பாரதத்தின் சீரழிவை அழித்து ஒழிக்கத் தேவைப்படும் தேசிய மாவீரனாக இனங்காண, கிருஷ்ண சரித்திரத்தை படைத்தார், பங்கிம் சந்திரர். 1881-இல் வெளிவந்த பங்கிம் சந்திரரின் 'ஆனந்த மடம்' என்னும் வங்க மொழி நாவல் அளித்த 'வந்தே மாதரம்' பாடல் பிற்காலத்தில் வீறார்ந்த ஓர் இயக்கமாகவே வெடித்தெழுந்ததைக் கண்டோம். இவரை பண்டைய ரிஷிமரபின் வழிவந்தவராக பாரதி போற்றியுள் ளார்.

புதிய மரபைப் படைத்த பாரதியார் பழைய மரபையும் பேணியவர் என்பது இந்நூலில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. நான்மணிமாலை, தசாங்கம், திருப்பள்ளி யெழுச்சி போன்ற பண்டைய மரபிலும் பாடவல் லேன் என்பதை நினைவுறுத்தி. 'ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களுக்கு...காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும்' கவிதை படைக்க வல்லேன் எனும் புதிய மரபையும் நிறுவிக்காட்டியவர் பாரதி.

பண்டைய மரபில் பாட வந்தபொழுது, தற்கால மாற்றத்திற்குத் தேவைப்படும் வகையிலும் பாரதியார் பாடியவர் என்பதற்கு எடுத்துக் காட்டுகளில் ஒன்று, ''விநாயகர் நான்மணிமாலை'' பாட்டுடைத் தலைவர் விநாயகப் பெருமானேயானாலும், சமய சமரசம் வேண்டி, 'அல்லா', 'யெஹோவா' எனும் பிற சமயத் தெய்வங்களின் பெயர்களையும் விநாயகர் பெயருடன் இணைத்துப் பாடியவர் பாரதியார். இவ்வாறே, ''ஈசன் வந்து சிலுவையில் மாண்டான், எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்'' எனத்தொடங்கும் 'யேசுகிறிஸ்து' பாடலை முடித்து விட்டு, இறுதியில் 'ஓம் சக்தி' எனும் சொல்லைப் பெய்திருப்பதும் மரபின் வழிவந்த மாற் றத்தை அறிவிப்பதாகும்.

''Patriotism and Religious Differences'' எனும் கட்டுரையிலும் ('நியூ இந்தியா', மே 18, 1915) மரபில் காணவேண்டிய மாற்றத்தை பின்வருமாறு குறிப்பிட் டுள்ளார்.

''True Patriotism must be spiritual, but that does not mean that differences of belief concerning the nature of the other world should be brought into the theatre of secular nation-building''. உண்மை யான நாட்டுப் பற்று ஆன்மிகமாக இருக்க வேண்டும் என்றாலும், மறுவுலகத் தொடர்பான சிந்தனைகளின்

மீதான நம்பிக்கை வேற்றுமைகளை, சமயச்சார்பற்ற நாட்டு நிருமாணக் களத்தில் கொண்டுவரக் கூடாது என்று பாரதியார் உணர்த்தியுள்ளார்.

பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகள் இந்தியாவின் பிற மொழி இலக்கியங்களில் மரபுகள் மாற்றங்கள் எவ்வகையில் நவீனத்துவம் காண அவாவி நின்றன என்பதையும், பாரதியாரையும் ஒப்பிட்டு ஆய்வு செய்வோமானால், பாரதியார் தனித்தன்மையில் ஒளிரும் சிறப்பம்சங்களை மேலும் விரிவாக அறிய வாய்ப் பேற்படும்.

சென்னை மறைமலை அடிகள் நூலகம், அடையாறு தியோசாபிகல் சொஸைடி நூலகம், உ.வே.சா. நூலகம், தமிழ் நாடு அரசு ஆவணக் காப்பகம் முதலான நூலகங் கள் இந் நூலிற்கு தேவைப்பட்ட அரிய செய்திகளை அறிய உதவின என்பதை நன்றியறிதலுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கொழும்பு இலங்கை அரசின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பா ளர் நண்பர் க. சண்முகலிங்கம், மார்க்ஸ் நூலகம் தோழர் ச.சீ. கண்ணன் ஆகியோர் உதவிய நூல்களும் பயன்பட்டன. அவர்களுக்கும் என்நன்றி.

'பூங்கொடி' பதிப்பக உரிமையாளர் அருமை நண்பர் வே. சுப்பையா என்னுடைய நூல்கள் பலவற்றை வெளி யிட்டு ஊக்கம் அளித்து வருவதின் தொடர்ச்சியாக இந் நூலையும் வெளியிட்டுள்ளதற்கு என் நன்றி உரியது. ஓவியர் ஆனந்தன், அவருக்கும் ராஜ் பிரிண்டர்ஸ்' உரிமை யாளர் ராஜ் ஆகியோர்க்கும் என் நன்றி.

பெ. சு. மணி

11. இராமகிருஷ்ணாபுரம், 2-வது தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600033

பாரதியியலுக்கு செழுமை சேர்த்த
பேராசிரியர் கைலாசபதிக்கு

காணிக்கை

-பெ. சு. மணி

பிறப்பு
5-4-1933

மறைவு
6-12-1982

பொருளடக்கம்

முன்னுரை ;

1. பாரதிக்கு முந்திய தமிழ்ப்புலவர் மரபு 9

2. பாரதியார் படைத்த புதிய மரபு 49

3. இருவேறு விழிப்புகளின் முன்னோடிகள் 85

4. உ. வே. சா. வும் பாரதியாரும் 105

5. புலவர் மரபும் தேசிய மரபும் இணையக் குரலெழுப்பியவர் 123

6. பாரதியார் அடையாளங் காட்டிய கனக சுப்புரத்தினப் புலவர் 171

7. முதல் பாரதி திறனாய்வாளரான தமிழ்ப் பெரும் புலவர் 191

8. தமிழ் உறவில் பாரதியாரும் வ. உ. சி.யும் 208

9. பரிசு பெறத் 'தவறிய' பாடல் படைத்த புதிய வரலாறு 228

10. 'சுதேச கீதங்கள்' சந்தித்த தடையுத்தரவு 252

பின்னிணைப்பு 1

பாரதியியலில் பேராசிரியர் கைலாசபதி 263

பின்னிணைப்பு 2

பாரதியியலுக்கு பெ. சு. மணியின் பங்களிப்பு 293

பாரதிக்கு முந்திய தமிழ்ப்புலவர் மரபு

சங்க காலம் முதல் தமிழரின் சமூக வாழ்க்கையில் தமிழ்ப் புலவர்கள் தனித்தலைமை பெற்றிருந்தனர். இந்த நிலைமை பிற்காலச் சோழர் காலத்திற்குப் பிறகு தேய் வடையத் தொடங்கியது.

தொடர்ச்சியான அந்நிய ஆதிக்கங்கள் தமிழ்ப் புலவர் களின் தாழ் நிலைக்கு காரணங்களாயின. தெலுங்கர், மூகமதியர், ஆங்கிலேயர் முதலான அந்நிய ஆதிக்கங்கள் தமிழ்ப் புலவர்களின் சமூகச் செல்வாக்கை தேய்த்தன.

18 ஆம் நூற்றாண்டில்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய மண்ணில் வலுவாக காலூன்றியதும், ஆங்கில மொழியின் அரசாட்சிச் செல் வாக்கு, புதிய அலையாகத் தோன்றி, ஏற்கெனவே ஊக்க மும் உள் வலியுமற்ற தமிழ்ப் புலவர்களின் சமூகச் செல்வாக்கை தூக்கி எறிந்தது.

அடிமை வாழ்வில் பொது மக்கள் தொடர்பை, தமிழ்ப் புலவர்கள் போற்றியிருந்தால் நிலைமை சற்று சீரடைந்தி ருக்கும். இதற்கு மாறாகத் தமிழ்ச் சமூகத்தில் இருந்து தங்களைத் தாங்களே அந்நியப் படுத்திக் கொள்ளும் வகையில் இலக்கியங்களைப் படைத்தனர்.

கலம்பகம், உலா, அந்தாதி, ஏகபாதம், மூற்று, மடக்கு, யமகம், திரிபு என்னும் இலக்கிய வடிவங்களில் எழுதிக் குவித்தனர். தங்கள் பொருள்தேடலுக்கும் புகழிற்கும் பொதுமக்களை நாடாமல், மடாலயங்கள், சிற்றரசர்கள், ஜமீன்தாரர்கள் ஆகியோரிடம் புகலிடம் தேடிக் கொண்டனர் தமிழ்ப் புலவர்கள்.

இதோடமையாமல், தமிழ் வழக்கிலும் இரு துருவங்களை தோற்றுவித்தனர். பொது மக்கள் நடைத் தமிழும், புலமை நடைத் தமிழும் இருதுருவங்களாகி விட்டன.

இந்த நிலையில் பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ்ப் புலவர்கள் நோக்கிலே ஒரு சிறிய மாறுதல் மின்னற்கீற்றெனத் தோன்றியது. செய்யுள் வடிவமொன்றையே வழிபட்டு வந்த தமிழ்ப் புலவர்கள் இந்த நூற்றாண்டில் உரை நடை வடிவத்தின் தேவையையும் உணர்ந்தனர்.

கிறிஸ்துவ மதப் பிரசாரத்திற்காக தமிழ் மொழியை கற்க வந்த ஐரோப்பிய கிறிஸ்துவப் பாதிரிகளின் தொடர்பு தமிழ்ப் புலவர்கள் சிலருக்கு ஏற்பட்டது. இவ்வழியில் இத்தாலிய நாட்டு இராபர்ட் தெ நோபிலி (1577-1636) பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் (1680-1747) முதலானோர் தமிழ் உரை நடை வளர்ச்சிக்கு தொண்டாற்றினர்.

மேற்கும், கிழக்கும் சந்தித்தது; இதன் பயனாக உரை நடை உணர்வும் சிலிர்த்தது.

இந்த நிலையிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் தமிழ் மொழிக்கு குறிப்பிடத்தக்கப் புதுத்திருப்பம் தோன்றவில்லை.

தமிழறிஞர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், சிறந்த தமிழ்த் திங்கள் இதழாக வெளி வந்த விவேக சிந்தாமணியில் எழுதிய ஒரு கட்டுரை இங்கு நினைவுகூரத் தக்கது.

கட்டுரையின் தலைப்பு, **''18-ம் நூற்றாண்டின் தமிழ்ப் பாஷாபி விர்த்தி''** என்பதாகும். அதன் ஒரு பகுதிவருமாறு:

''ஆரியர் மகம்மத்தியர்கள் மூலமாய்ப் பொறுக்க முடியாத துன்ப மடைந்து தன்னுருமாறி நிற்கின்றது... திருநெல்வேலி ஜில்லாவிலிருந்த (**Bishop caldwell**) பிஷப் கால்ட்வெல் துரையவர்கள், 'சென்ற 200 வருஷமாகத் திராவிட பாஷையானது அபிவிர்த்தியற்றுக் கிடக்கின்றதெனக் காணப்படுகிறது' என்றெழுதினார். அது ஏக தேசமுண்மையே யென்பதற்கு ஆக்ஷேபணையில்லை. இப்படிய விர்த்தியற்றுக் கிடப்பதற்குக் காரணமென்ன வென்று சற்று விசாரித்துப் பார்ப்போமானால் எளிதில் விளங்கலாம். நம் சுதேச பண்டிதர்கள் இதற்குக் காரணம் ஆங்கிலேய அரசாட்சியே யென்பார்கள். இப்படி இவர்கள் சொல்வது தன்னைப் பெற்ற தாயாரை மலடியென்றாற் போலுமிருக்கிறது. இவ்வாறு தமிழ் அபிவிர்த்தியில்லாதிருக்குங் குற்றம் நம்மைச் சார்ந்தேயொழிய அரசாட்சியாரைச் சார்ந்ததேயல்ல வென்பது எல்லார்க்குத் தெரிந்த விஷயம்.''*

'சின்ன சங்கரன் கதை'யில் பாரதியார் கூறியுள்ள பின்வரும் கருத்தும், இங்கு, நினைவு கூர்வதற்குரியது. யமகம், திரிபு, பசுமூத்ர பந்தம், நாக பந்தம், ரத பந்தம், தீப்பந்தம் முதலிய யாருக்கும் அர்த்தமாகாத நிர்ப்பந்தங்கள் கட்டி அவற்றை மூடர்களிடம் காட்டி ஸமர்த்தனென்று மனோ ராஜ்யம் செய்து கொள்வது-இவைதான் அந்தக் காலத்திலே கவிராயர்கள் செய்த தொழில்.''

---

* விவேக சிந்தாமணி, ஆகஸ்டு 1892, பக். 110

19-ஆம் நூற்றாண்டில்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய தேசிய உணர்ச்சி, இந்திய மொழிகள் பலவற்றின் புத்துணர்ச்சிக்கு வழி வகுத்தது. இந்த தேசியவுணர்ச்சி அப்பொழுது புதிதாகத் தோன்றிய மத்தியதர வருக்கத்தினால் வளர்க்கப் பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் புகுத்திய ஆங்கில மொழிக் கல்வியால் உருவானது, மத்திய தர வருக்கம்.

அரசாங்க உத்தியோக வாய்ப்புகளுக்காக ஆங்கில மொழிக் கல்வியில் திளைத்த இந்த மத்தியதர வருக்கம், மொழிச் சிந்தனையில் இருபோக்குகளை தோற்றுவித்தது. ஆங்கிலத்தில் எல்லாம் இருக்கின்றன; தமிழில் என்ன இருக்கின்றது என்பது ஒரு போக்கு. ஆங்கிலத்தின் துணையோடு தமிழ் மொழியையும் வளர்க்க வேண்டும் என்பது மற்றொரு போக்கு.

தமிழ் மட்டுமே அறிந்த புலவர்கள் மேற்கண்ட இரு போக்குகளுக்கு அப்பால் நிறுத்தப்பட்டனர்.

தமிழ் ஞானத்தோடு, ஆங்கில மொழி அறிவையும் வலியுறுத்திய தமிழறிஞர்கள், ''**பாஷாபிமானம், தேசாபிமானம், மதாபிமானம்**'' எனப் பேசத் தொடங்கினர்.

வேதநாயகம் பிள்ளை (1826- 1889)

தாய் மொழியைப் புறக்கணித்த ஆங்கில மோகம் கண்டிக்கப்பட்டது. இந்தக் கண்டனத்தை 'மாயூரம் முன்சீப்' வேத நாயகம் பிள்ளை தமது 'பிரதாப முதலியார் சரித்திரம்' எனும் தமிழ் நாவலின் கதாபாத்திரங்கள் வாயிலாக பின் வருமாறு வெளிப்படுத்தினார்.

''இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய ராஜ பாஷைகளைப் படிகக வேண்டா என்றும் நாம் விலக்கவில்லை. ஆனால்

மாதா வயிறெரிய மகேசுர பூசை செய்வதுபோல சொந்த பாஷைகளைச் சுத்தமாக விட்டு விட்டு இராஜ பாஷைகளை மட்டும் படிப்பது அனுசிதம் அல்லவா?... அவர்களுக்குத் தேசாபிமானமுமில்லை, பாஷாபிமான முமில்லை.''.

வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார்(1870-1903)

இவ்வாறு தமிழ்மொழியை அலட்சியப்படுத்தி ஆங்கிலத்தை மட்டுமே தழுவும் போக்கை ''சுதேசாபிமான மற்றது'' எனச் சாடினோருள் பரிதிமாற் கலைஞர் என தனித்தமிழில் பெயர் மாற்றம் செய்து கொள்ள முதன் முதலில் வழிகாட்டிய அறிஞர் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும் ஒருவர். அவர் கூறியதாவது:

''இக்காலத்தில் ஆங்கில பாஷை கற்ற தமிழ் மக்களிற் பலர் தமது தாய்மொழியான தமிழைப் படிக்க வேண்டுவது அவசியமற்றதென்றும், தமக்கு வேண்டிய விஷயங்கள் ஆங்கிலத்திலேயே அகப்படுகின்றனவென்றும பல திறப்படக் கூறுவர். அவர் ஆங்கிலமொழிச் சிறப்பு மட்டிற் கூறியமை வதே நன்றாகுமன்றித் தமிழ் கற்க வேண்டியதவசியமன்று என்பது அறியாமையோடு கூடிய துணிந்துரையாம். இது சுதேசாபிமானமும் சுபாஷாபிமானமு மற்றவர் கூற்றாகும்.*

''ஆங்கில நூற்பயிற்சியுடைய தமிழ்மக்கள் தமிழ் மொழியைப் பெரிதும் கவனித்தலின்றிக் கைசோர விடுகின்றனரெனப் பலருங்கூறும் வசைமொழி எம் செவிப் படலும் மனம் பொறேம். புதுமை வழியால் ஏதேனும் செய்ய வேண்டுமென்று புகுந்தோம்'' எனக்குறிப்பிட்டு தனிப்பாசுரத் தொகை (41 பாடல்கள்) என்னும் நூலை 1901-இல் வெளியிட்டார்.

---

* தமிழ்மொழியின் வரலாறு. 8-ம் பதிப்பு, 1953 ப
க். 120

''தனித்தனி பதினாலடி யளவினவாய்ப் பலவேறு வகைய பொருள் பொதிந்த'' பாடல்களை ஜி.யூ.போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனுப் பியதைச் சேர்த்தும் இந்நூலைப் பதிப்பித்தார். 'வி.கோ சூ'. பாடல்களை ''A new departure in Tamil Poetry'' என்றும் போப் பாராட்டியுள்ளார்.*

பேரறிஞர் வி.கோ. சூ. மற்றொரு முக்கியக் கருத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார். ''பண்டிதர் தமிழும், சாமானியர் தமிழும் பெரிதும்வேறுபடுகின்றது.அதுமிகாதிருக்கும் பொருட்டு நேரிய வழிகளை நாடவேண்டும். பண்டிதர்கள் தமது உயரிய நடையினின்றும் இறங்கி சாமானிய ஜனங்களை பாஷை உணர்ச்சியில் உடன் கொண்டு செல்ல வேண்டும். இதுவரை அங்ஙனம் செல்லாமையால் தமிழ் பாஷை வளர்ச்சியின்றி ஒரு நிலைப்பாடு எய்தி விட்டது.''

திரு.வி.கோ.சூ. குறிப்பிட்ட அந்தத் தேக்கத்தை நீக்க ஒரு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை

சாதாரண தமிழ் மக்களிடையே நவீன அறிவு நூல்களை பரப்பவும், பண்டைய நூல்களைப் பதிப்பிக்கவும் ஆங்கிலமும் தமிழும் கற்ற தேசாபிமானிகள் சிலர் முன் வந்தனர்.

இவர்கள் முயற்சியால் 1883-ல் 'உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபை' எனும் ஓர் அமைப்பு தோன்றியது. சென்னை திருவல்லிக்கேணியில் தோன்றிய இச்சபையின் முதற்குறிக்கோள் வருமாறு:

---

* தனிப்பாசுரத் தொகை-1901-ப.XiV

''நமது தேசத்திலுள்ள சாதாரணமான ஜனங்கள் துரைத்தன விஷயமாயும், கைத்தொழில் விஷயங்களைத் திரட்டி கூடிய திரவிய சகாயத்துக்குத் தக்கபடி அடிக்கடி சிறிய புத்தகங்களாகவும் எல்லோருக்கும் விலையின்றிக் கொடுக்க வேண்டும்.''*

தொடக்கத்தில், இந்தச் சபையில் பாடுபட்டவர்களுள் தேசபக்தர்கள் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயரும், முடும்பை வீரராகவசாரியாரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ் மொழியின் வாயிலாக அரசியல் அரிச்சுவடிகளை இச்சபை வெளியிட்டது.

1883-ல் வெளிவந்த தேசபக்தர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயரின் ''சுய அரசாட்சி வினா—விடை''யும், 1887-ல்வெளி வந்த தேசபக்தர் திரு.மு.வீரராகவாசாரியாரின் 'காங் கிரஸ் வினா-விடை'யும் மேற்படி சங்கத்தின் தொடக்க கால வெளியீடுகளாகும். இவர்களுக்குப் பிறகு, 'விவேக சிந்தாமணி' ஆசிரியர் சி.வி.சுவாமிநாத ஐயர் இச்சபையின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

தென்னாட்டு தமிழ்ச் சங்கம்

ஆங்கிலம்-தமிழ் இரண்டிலும் புலமை பெற்றோரின் தமிழ்ப் பணியின் நோக்கங்களை தென்னாட்டு தமிழ்ச்சங் கம் என்னும் மற்றொரு அமைப்பு வாயிலாகவும்அறிகிறோம் உபயோகமான அறிவைப் பரவச் செய்யும் சபையின் நோக் கங்களை காட்டிலும் தென்னாட்டு தமிழ்ச்சங்கத்தின்நோக் கங்கள் விரிவானவை. பொது மக்களுக்கு புரியும் வகையில்

---

*சுய அரசாட்சி வினா-விடை-1883; பக்-1

எளிய தமிழ் நடையில் வெளியீடுகளைக் கொண்டு வர வேண்டும் என்னும் நோக்கம் இச் சங்கத்தினாலும் வற் புறுத்தப்பட்டது,

தேசிய அரசியலில் நேரடியாகத் தொண்டு புரிந்த தேசபக்தர்களும், ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் ஆற்றல் பெற்ற அறிஞர்களும் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்தனர். தென்னாட்டு தமிழ்ச் சங்கத்தின் தோற்றத் தைப்பற்றி **சுதேசமித்திரன்**, 10-5-1890-ல் வெளியிட்டுள்ள செய்தி வறுமாறு:

''மேற்குறித்த பேரால் தமிழ் பாஷாபிவிர்த்தியை நாடிய சங்கமொன்று ஸ்தாபிப்பதற்காக சென்ற மாதம் பட்டணம் தொண்டை மண்டலம் ஸ்கூல் ஹாலில் கூடிய கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கமிட்டியார் நாளது மாதம் 1-ந் தேதி ''காஸ்மா பொலிடன் கிளப்'' கட்டடத்தில் ஒரு கூட்டம் கூடினார்கள். அப்பொழுது ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் அக்கிராசனாதிபதியாக இருக்கப் பின்வரும் கனவான்கள் கமிட்டி மெம்பர்களாக ஆஜராயி ருந்தார்கள்.

ரர்வ்பகதூர் பூண்டி அரங்கநாத முதலியார் அவர்கள் எம்.ஏ., மகா ா ஸ்ரீ பி. வி. விஜயரங்க முதலியார் அவர் கள், சேஷகிரி சாஸ்திரியார் அவர்கள் எம்.ஏ.,சி. டபிள்யூ. தாமோதரம் பிள்ளை அவர்கள் பி,ஏ.பி,எல்; ராவ்பகதூர் இராமசாமி முதலியார் அவர்கள் எம்.ஏ.,பி.எல்., எம். வீரராகவாச்சாரியார் அவ்ர்கள் பி.ஏ.,டி.பாலசுந்தர முதலியார் அவர்கள் பி.ஏ.(தற்கால காரியதரிசி)

மேற்படி சங்கத்தின் நோக்கங்கள் பின் வருவனவாக இருக்கத் தக்கதென்று தீர்மானிக்கப்பட்டது. அவை:

(1) தமிழ்ப் புத்தகசாலையொன்று ஏற்படுத்தி அதற்கு இதுவரையில் தமிழில் அச்சாகியிருக்கும் கிரந்தங்களை யெல்லாம் சேகரித்தல்.

(2) இதுவரையில் அச்சிடப்படாத கிரந்தங்களின் ஏட்டுப் பிரதிகளையும், அச்சிடப்பட்டுள்ள நல்ல கிரந்தங்களை இனிமேல் எப்போதாவது இன்னும் நன்றாய் சீர் திருத்துவதற்கு உபயோகமாகும்படி அவைகளின் ஏட்டுப் பிரதிகளையும் சேகரித்து வைத்தல்.

(3) தமிழில் சுயமாகவேனும்; மொழி பெயர்ப்பினாலேனும் எளிய செந்தமிழ் நன்னடையில் ஜனங்களுக்கு அனுப வத்தில் உபயோகப் படத்தக்கதாகவாவது, சாஸ்திர சம்பந்தமான தாகவாகயுள்ள நூல்களை வசன ரூப மாகச் சித்தஞ்செய்து பிரசுரிக்க வேண்டிய ஏற்பாடு கள்செய்யல்.

(4) தமிழில் பிரபலமாயுள்ள எல்லா கிரந்தங்களினுடைய பேர்களும், கூடுமான வரையில் அவற்றிலடங்கிய விஷயங்களின் விவரமும் அவைகள் இன்னார் வசமிருக் கிறதென்கிற விவரமுமடங்கிய சரியான ஜாபிதா ஒன்று தயார் செய்யல்·

(5) தத்துவஞான சம்பந்தமாகவாவது, வித்தியாசம்பந்த மாகவாவது அருமையாயுள்ள விஷயங்களைப் பற்றி சிறந்த பிரபந்தங்கள் எழுதிவாசிக்க அல்லதுஉபந்நியா சங்கள் செய்ய ஏற்பாடு செய்யல்.

(6) இது வரையியிலும் அச்சிடப்படாது இப்போது கை யேட்டுப் பிரதிகளாயிருக்கும் நூல்களில் பிரசுரிக்கத் தகுந்ததைப் பார்த்து எடுத்து அவற்றைப் பிரசுரிக்க உதவி செய்யல்-ஆகிய இவைகளேயாம்.''*

---

*நூலகம், அக்டோபர் 1971. பக். 35.

தமிழ்ப் பேரறிஞர்கள் உ. வே. சாமிநாதய்யரும், சி. வை. தாமோரம் பிள்ளை அவர்களும் பழந்தமிழ் ஏட்டுச்சுவடி இலக்கியங்களை அச்சேற்றும் அரியதிட்டத்தை 1887 முதலிலேயே தொடங்கிவிட்டனர். இந்தத் திட்டத்திற்கு பேராதரவைத் திரட்டித்தர, 1890-ல் ஏற்படுத்தப்பட்ட தென்னாட்டு தமிழ்ச் சங்கமும் முன் வந்தது. இச்சங்கத்தின் சிறு முயற்சியும் காலகதியில் ஓய்ந்தது.

திராவிட பாஷா சங்கம்

ஆங்கிலமொழியோடு தென்னாட்டு சுதேச மொழிகளையும் கற்ற அறிஞர்கள் கூடி தென்னாட்டு மொழிகளின் வளர்ச்சிக்காக ஒரு சங்கத்தை அமைத்தனர். இந்தச் சங்கத்திற்கு திராவிட பாஷா சங்கம் எனப்பெயர் வைக்கப்பட்டது.

டாக்டர் டங்கன் என்னும் ஆங்கிலேய அறிஞர் ஆதரவும் இந்தச் சங்கத்தின் தோற்றத்திற்கு உதவியது.

அக் காலத்தில் சென்னைநகர பொது நிகழ்ச்சிகள் பெரும்பாலும் நடைபெறும் இடமான பச்சையப்பன் ஹாலில் '**திராவிட பாஷா சங்கம்**' பற்றி அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. மார்ச்சு 5, 1899-ல் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு, நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் ராமனாத ஐயர், சேஷாத்ரியாச்சாரியார், டி. பாலசுந்தர முதலியார், ஏ. நாராயணராவ், லாஸரஸ் பாதிரியார், ஜி சுப்பிரமணிய ஐயர், திவான் பகதூர் வி. கிருஷ்ணமாச்சாரியார், சேஷகிரி சாஸ்திரியார், டி. சம்பந்த முதலியார் ஆகியோர் தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

ஐம்பது பிரமுகர்களும், பச்சையப்பன் கல்லூரி மாண வர்களும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சங்கத்தின் தொடக்க விழாவிற்கான ஏற்பாடுகளை செய்ய பின்வரும் குழு அமைக்கப்பட்டது.

அமைப்பாளர்: வி. டி. சேஷாத்ரியாச்சாரியார்.

உறுப்பினர்கள்: டி. பாலசுந்தர முதலியார், ராவ் பகதூர் வீரேசலிங்கம் பந்துலு, ஜி. சுப்பிரமணிய ஐயர், எஸ். ரங்கய்ய செட்டியார், ஏ. நாராயண ராவ், திவான் பகதூர் வி. கிருஷ்ணமாச்சாரியார், ஜே. லாஸரஸ், டி. ராமகிருஷ்ண பிள்ளை, எம். சேஷகிரி சாஸ்திரிகள், எம். ரங்காச்சாரியார், டி. எம். சுப்பு நெடுங்காடி, எஸ். மங்கோஷ் ராவ், எம். கிருஷ்ணன், சி. வி. சுவாமி நாதய்யர்.

மேற்படி பட்டியலில் தமிழ், கன்னட, கேரள, ஆந்திர அறிஞர்களின் பெயர்களைக் காண்கிறோம்.

1. பழமைமிக்க திராவிட மொழி நூல்களை வெளியிடுதல்.

2. அவ்வப்பொழுது தமிழ், தெலுங்கு, கன்னடம் மலையாளம் ஆகிய மொழிகளில் சிறப்புச் சொற்பொழி வுகள் ஏற்பாடு செய்தல்.

3. தரமான விஞ்ஞான, இலக்கிய நூல்களை மேற்படி மொழிகளில் வெளியிடவோ, அல்லது வெளியிட முன் வருவோர்க்கு உதவி அளித்தல்.

4. சிறந்த நூல்களுக்கு, பரிசுகள், பதக்கங்கள் வழங்குதல்.

5: ஒவ்வொரு மொழியிலும் பத்திரிகைகள் வெளி யிடுதல்.

சாதாரண உறுப்பினர் கட்டணம் ரூ. 5, ஆயுள் உறுப் பினர் கட்டணம் 100 ரூ.*

திராவிட பாஷா சங்கத்தை தமிழறிஞர்கள் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும், எம் எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையும் நடத்திய ''ஞானபோதினி'' பத்திரிகை வரவேற்று, பின் வருமாறு, எழுதியது.

''ஆங்கிலமும் சுய பாஷைகளும் பயின்ற அநேககனவான் கள் மார்ச் 5, 1899 (மாலை) பச்சையப்பன் கல்லூரியில் கூடினர். சபாநாயகர் கனம நீதி அதிபர் சுப்பிரமணிய ஐயரவர்கள். மேற்றிசையோர் பதிப்பித்து வரும் ஆயிரக் கணக்கான புத்தகங்கள் தேசத்திற்கு உபயோகப்படக்கூடிய கிருஷிகைத்தொழில் முதலிய சாஸ்திரங்களை மொழி பெயர்த்து-முக்கிய திராவிட பாஷைகளில்-வெளியிடல் கருத்தாம்.**

தமிழ்ப் பண்டிதர்கள், காலத்திற்கேற்றவாறு தங்களை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும் என்பது திராவிட பாஷா சங்கத்தைச் சார்ந்த அறிஞர்களின் கருத்தாகும். இந்தச் சங்கத்தின் வளர்ச்சியைப் பற்றி 'ஞானபோதினி' எழுதியதாவது.

''தமிழ்ப் பண்டிதர்கள் கர்நாடக நடையிலேயே யிராமல் தற்காலத்திற்குத் தகுந்தவாறு தாங்கள்

---

* திராவிட பாஷா சங்கத்தின் கூட்ட நடவடிக்கைகள் ஹிந்து பத்திரிகையில் 1899 ஆம் ஆண்டு மார்ச் 6, மே 12, ஜூன் 29 தேதிகளில் வெளிவந்துள்ளன.

** ஞானபோதினி, மார்ச்சு-1899; பக். 318.

விருத்தியடைந்து மேனாட்டார்சாஸ்திரத்திலும் அவர்கள் கற்பிக்கும் முறையிலும் கொஞ்சம் தெரிந்திருந்தால் தமிழ்கற்கும் மாணவர்களுக்கு இவர்கள் இப்போது கற்பிப்பதைப் பார்க்கினும் நன்றாய்க் கற்பிக்கக் கூடு மென்பது இச்சபையோரும் வகிக்கும் அபிப்பிராயம்.''*

திராவிட பாஷா சங்கத்தின் அமைப்புக் கூட்டத்தில் பேசிய தேசபக்தர் திரு ஜி.சுப்பிரமணிய ஐயர்கூட மேலை நாட்டுக் கல்விப் பயிற்சியின் சேவையை வலியுறுத்தினார். இது பற்றிய ஒரு செய்திக்குறிப்பு வருமாறு:

''ஞானத்தை ஜனங்களுக்கு கற்பிப்பதே அச்சங்கத்தினுடைய கருத்தாயிருக்க வேண்டுமென்றும், அதிலும் மேற்கு தேசத்திய ஞானத்தைக் கற்பிக்க வேண்டுமென்றும் ஆகையால் ஜனங்களுக்குப் புலப்படும்படி விஷயங்களைச் சஞ்சிகைகள் மூலமாய் அறிவிக்க வேண்டுமென்றும் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் சொன்னார்கள்.''**

''திராவிட பாஷா சங்கம் வளர்ச்சியின்றி பிறந்த நிலையிலேயே இருந்து இருக்குமிடமும் தெரியாது மழுங்கிக் கிடந்தது, யாவரும் பரிதவிக்கத்தக்கதே'' என்று ஞானபோதினி ஆகஸ்டு 1901 ஆம் இதழ் கூறியது.

தமிழ்ப்புலவர்கள், ஆங்கில மொழி யறிவுபெற வேண்டும் என்று ஆங்கிலம்-தமிழ் ஆகிய இருமொழிவல்லார் வாய்ப்பு நேர்ந்த பொழுதெல்லாம் திராவிட பாஷா சங்கம் தோன்றியதற்கு முன்பும் வலியுறுத்தி வந்தனர்.

---

* ஞானபோதினி-ஜூலை 1900, பக். 480.

** விவேக சிந்தாமணி, மார்ச்சு; பக். 348.

இந்த இரு பிரிவினரையும் சேர்த்து வைத்தும் மூற்கூறிய கருத்து எடுத்துரைக்கப்பட்டது. இத்தகைய ஒரு கூட்டம் கும்பகோணத்தில் நடைபெற்றது. கூட்ட நடவடிக்கைகளைப் பற்றி விவேக சிந்தாமணி குறிப்பிட்டதாவது.

''கும்பகோணத்தில் சுதேச பாஷா பண்டிதர்களும், இங்கிலீஷ் பாஷா பண்டிதர்களும் சேர்ந்து போர்டர் டவுன் ஹாலில் ஒரு மஹாசபை கூடி கனம் டாக்டர் டங்கனும், கனம் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர் அவர்களுமாக சென்னை யூனிவர்ஸிடி ஸெனேட்டின் சுதேச பாஷாபிவிர்த்தியை நாடிக் கொண்டு வந்திருக்கும் ஏற்பாட்டைப்பற்றித்தர்க்கித்து அவருக்கு வந்தனமளித்துப் பேசினார்கள். முடிவில் சுதேச பாஷா ஞானத்தோடு இங்கிலீஸ் பாஷா ஞானமும் கொஞ்சமும் கலந்திருப்பதே உத்தமமென்று பெரும்பாலோர் நினைப்பதாகத் தெரிய வந்தது.''

சோழவந்தான் மகாவித்துவான் அரசஞ் சண்முகனார் அவர்களும் இந்த 'ஆங்கிலம் கற்கவேண்டும்' என்னும் நிலைமையை சந்திக்க நேர்ந்தது. ஆனால் மகாவித்துவான் அவர்கள் ''எனக்கு வயதும் ஆகிவிட்டது. இனி ஆங்கிலம் கற்றுக் கொள்ள என்னால் இயலாது; கற்கவும் விருப்பம் இல்லை'' எனக் கூறி மறுத்துவிட்டார். இந்த நிகழ்ச்சி தாம்பரம கிறிஸ்துவக் கல்லூரியில் நடந்தது. கல்லூரித் தலைவர் டாக்டர் மில்லர் துரையிடம் அரசஞ் சண்முகனாரை அறிமுகப்படுத்தி கல்லூரியில் வேலை தந்துதவுமாறு மறைமலை அடிகள் கேட்டார். வேலையில் சேர்ந்த பிறகு ஆங்கிலம் கற்க வேண்டும் என மில்லர் கேட்டுக் கொண்ட பொழுது, அரசஞ் சண்முகனார் மேலேயுள்ள மறுப்புரையைத் தெரிவித்தார். ஆங்கில மொழி பட்டதாரி

விவேக சிந்தாமணி, மார்ச்சு 1897-பக்.350.

களாக இல்லாமல், தனித் தமிழ்ப் புலவர்களாக கல்லூரி களில் வேலை பார்த்தவர்கள், தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ள குரல் கொடுக்கத் தொடங்கினார்கள்.

பல்கலைக் கழகத்தில் தமிழ்த் தேர்வு விடைத்தாள் பரிசோதகர்கள், ஆங்கிலம் பயின்றவர்களாக இருக்க வேண்டும் என்பதைத் தனித் தமிழ்ப்புலவர் எதிர்க்கத் தொடங்கினர்.

இந்த எதிர்ப்புக்குரலை, ''ஞான போதினி'' மிகத் தெளிவாக எதிரொலித்தது. திரு. திரவியம் பிள்ளைஎனப வர் எழுதிய ''**தமிழுஞ் சர்வகலாசாலையும்**'' என்னும் கட்டு ரையில் ஒலித்த தனித் தமிழ்ப் புலவர்களின் எதிர்ப்புக் குரலை கேட்போம்.

> ''தமிழ்ப் பரீட்சை கற்றவரெல்லாம் ஆங்கிலேய பாஷை பயின்றவர்களாகவேயிருக்க வேண்டுமென்பது என்ன நியாயம் பற்றியோ? .. இராச பாஷை பயின் றவர்களே யங்ஙனமாதற்குரியவர் என்பரேல் யாமுத் தரஞ் சொலற்பால தொன்றுமில்லை. எல்லாம் வல்ல முழு முதற் கடவுளிடத்து முறையிட வேண்டு வதுதான். அதைத் தவிர்த்து வேறு கதியில்லை.''

''நம் பண்டிதர்கள்''

தமிழ்ப் புலவர்களின் இந்தக் கோரிக்கைக்கு தேச பக்தர் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயர் தமது சுதேசமித்திரன் வாயிலாக ஆதரவளித்தார்.

தமிழ் மொழியை நவீன காலத் தேவைகளுக்கு ஏற்ப வளர்த்து சாதாரண பொது மக்களிடம் கொண்டு போக

ஞான போதினி, செப்டம்பர் 1898, பக்.45

பாடுபட்ட தேசபக்தர்களில் முதல் கவனம் செலுத்தியவர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர். (1855-1916)

. தேசமக்களுக்கு உற்ற நண்பனாக இருக்க வேண்டும் எனும் குறிக்கோளில் 1882-ல் தொடங்கிய பத்திரிகைக்கு **'சுதேச மித்திரன்'** என்னும் பொருத்தமான பெயரையிட்டவர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர். ஆங்கிலம் அறியாத தமிழர்களுக்காகவே சுதேச மித்திரனைத் தொடங்கியதாக 'பத்திரிகைத் துறையின் மூலவர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் கூறியிருக்கிறார். சுதேசமித்திரன் தான் முதல் தமிழ் நாளிதழ்; தமிழில் முதன் முறையாக அரசியல் வெளியீட்டை [சுய அரசாட்சி வினாவிடை-1883] கொணர்ந்தவர் திரு ஜி சுப்பிரமணிய ஐயர்; அரசியல் பிரசங்க சுற்றுப் பணத்தை முதன் முதலில் மேற்கொண்டவர் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர். திருவாளர்கள் சி.வி. சுவாமிநாதயய்யர், கல்குளம் குப்புசாமி முதலியார், குருமலை சுந்தரம் பிள்ளை, சங்கரலிங்கம் பிள்ளை, வரகவி அ. சுப்பிரமணிய பாரதியார் ஆகிய தமிழறிஞர்களை சுதேச மித்திரனில் உதவி ஆசிரியர்களாக அமர்த்திப் போற்றியவர் திரு.ஜி.சுப்பிர ம்ணிய ஐயர்.

தேசிய பாரம்பரியம், தமிழ்ப் புலவர்களின் பிரச்னைகளை பரிவுடன் கவனித்து, ஆதரவளித்தது என்னும் நிலைக்கு வித்திட்டவர் திரு.ஜி சுப்பிரமணிய ஐயர்.

தமிழ்ப்புலவர்கள், விடைத்தாள் பரிசோதகர்களாக நியமிக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை ஆதரித்து சுதேச மித்திரனில் **''நம் பண்டிதர்கள்''** எனும் துணைத் தலையங்கத்தை, திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் எழுதினார்.

9-8-1898 சுதேசமித்திரனில் வெளிவந்த துணைத் தலையங்கத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, அது முழுமையாகத் தரப்பட்டுள்ளது.

''சுந்தர தீட்சிதர் என்பவர் இவ்வகுப்பாரின் எளிய நிலைமையைக் கண்டு மனமுருகி இந்து பத்திரிகையில் ஒரு கடிதம் பிரசித்தம் செய்திருக்கிறார். இவர் கருத்தை நாம் முற்றிலும் ஏற்றுக் கொள்வோம். நமது பண்டிதர்களின் ஞானம் எவ்வளவாயிருந்தாலும் அதற்கு மகிமையில்லை யென்பது பிரசித்தம். தற்கால பி.ஏ.க்களின் தமிழ், ஸம்ஸ்கிருத ஞானத்தையும், அவர்களுக்குக் கிடைத்திருக் கிற இங்கிலீஷ் ஞானத்தையும் ஒத்திட்டுப் பார்த்தால் பண்டிதர்களின் சம்பளத்திற்கும், இங்கிலீஷ் புரொபஸர் களின் சம்பளத்திற்கும் இருக்கப்பட்ட தாரதம்மியம் ஏற்படும் என்கிறார். இந்த உபமான உபமேயத்தின் நயத் தைக் கண்டு மகிழ்ந்தோம்.

'கும்பகோணம் காலேஜ் தற்கால தமிழ்ப் பண்டிதரை* ஐரோப்பாவிலுள்ள சிறந்த வித்துவான்களுக்குச் சமதை யாக டாக்டர் போப் சொல்லியிருப்பதை ஞாபகத்தில் வைப்போம். இப்பேர்ப்பட்ட கல்வித்திறம் வாய்ந்த பண்டி தர்களுக்கு பதினைந்து முதல் ஐம்பது ரூபாய் வரை சம்பளம் கொடுக்கிறார்கள்.

'இப்பிரஸ்தாபத்தைக் கிளப்பிய சுந்தர தீட்சிதர்என்ப வர் என்ன சொல்கிறார்கள் எனில் யூனிவேர்ஸிடியில் எல்லோரையும் போல இப்பண்டிதர்களையும் தங்கள் தங்கள் பாஷையில் பரீட்சிகர்களாக நியமித்து அது மூலமாவது இவ்வகுப்பாருக்கு ஓர் வரும்படியை உண்டாக்க வேண்டும் என்கிறார்.

'இப்போது கும்பகோணம் காலேஜ்தமிழ்ப் பண்டிதரா யிருக்கப்பட்டவரால் நசித்துப் போக இருந்த கிரந்தங்கள்

---

* உ.வே. சாமிநாதய்யர் (நூலாசிரியர் குறிப்பு)

பல தீர்க்காயுள் பெறலானதைப் பார்த்தால் இவ்வகுப்பின ராலும் உலகத்திற்கு உபகாரம் உண்டாகக் கூடியது என் பது ஒப்பவேண்டும். இந்த லாபம் உலகிற்கு நெடுகிலும் உண்டாகும்படி இவ்வகுப்பினர்க்கு உதவி செய்ய வேண்டி யது நமது ஜன சமூகத்தாரையும், நமது யூனிவேர்ஸிடியை யும், நமது துரைத்தனத்தையும் பொறுத்த கடமை.

ஆனபடியாலே இவர்களுக்கு பரிட்சை கர்த்தா வேலை தருவதும் உசிதமாகும்.

'இது நவிர, கிணற்றில் விழுந்தவர்களை தைரியமாய் எடுத்து மீட்போருக்கு சீமையிலுள்ள சங்கத்தார் வெகுமதி யளிப்பதுபோல, கரையான வாயினின்றும் மீட்பித்து அரிய கிரந்தங்களை உயிர் கொடுத்து எழுப்பி உலகம் முழுவதும் உலாவச் செய்யும் தீரர்களுக்கு ஏதேனும் வெகு மதியும் செய்ய வேண்டும்.

''வங்காளத்திலுள்ள கல்வி விசுவாசம் இங்கிருக்குமேல் அங்கு மல்லிக் என்பவர் ஒரு வேதாந்தப் பிரசங்கிக்கு மாதம் நானூறு ரூபாய் சம்பளம் கொடுக்கும் படியாக மூதல் வைத்து தருமம் செய்தது போல இங்கும் செய்வார்கள்.''*

மேற்படி துணைத் தலையங்கத்தில், தேசபக்தர் ஜி. சுப்பிரமணிய ஐயர், தமிழ்ப்புலவர்களின் சில பிரச்னை களை பரிவோடு விவாதித்துள்ளார். ஏடு காத்த தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயரவர்களை, பெயர் குறிப்பி டாமல் போற்றிப் புகழ்ந்துள்ளது பாராட்டுதலுக்குரியது.

தமிழ்ப் புலவர்களின் வறுமைப் பிரச்னையைக் குறிப் பிட்டுள்ளார். இதைப் போக்குவதற்கு பொதுமக்கள், பல்கலைக் கழகம், ஆட்சி மூன்றும் முயற்சியெடுக்க வேண் டும் என வலியுறுத்தியுள்ளார்.

---

* மறுவெளியீடு—குமரிமலர்-ஜுன், 1981.

ஏட்டுச் சுவடிகளில் உள்ள பழந்தமிழ் இலக்கியங்கள் தேய்ந்து அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்றி அச்சேற்றி பதிப்பித்த தமிழ்த் தொண்டர்களை தேசபக்தர் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் பாராட்டியுள்ள இடம், நெஞ்சை அள்ளுகிறது.

சொல்லளவில் அமையாமல், செயலளவிலும் துணை புரிய முன் வந்தவர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர்.

சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901)

யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சா.வோடு ஒத்த அளவில் பழந்தமிழ் இலக்கியங்களை பதிப்பித்து அரும்பணியாற்றியவர்.

இவர் பதிப்பித்த நூல்கள் பின்வருவன:

1868 தொல்காப்பியம் சொல்லதிகாரம்

1881-வீரசோழியம்

1883-தணிகைப் புராணம்

1885-தொல்காப்பியம் பொருளதிகாரம்

1887-கலித்தொகை

1889-இலக்கண விளக்கம், சூளாமணி

1891-தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

1892 சொல்லதிகாரம்

இவற்றுடன் வேறு சில நூல்களையும் எழுதியுள்ளார்.

1887-ல் இவர் பதிப்பித்த கலித்தொகையில் ஏட்டுச் சுவடிகளைத் தேடியலைந்து பதிப்பதில் உள்ள துன்பங்களைப் பற்றி உருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். இப்பணியில் உ.வே.சா. வைக் குறிப்பிடும் பொழுது ''எனக்கு அவரும், அவருக்கு தானுமே சாட்சி'' எனக் குறிப்பிட்டார்.

இதே முன்னுரையில், ''பழைய சுவடிகள் யாவும் சிதிலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன...துரைத் தனத்தாருக்கு அதின் மேல் இலட்சியமில்லை'' * என்றும் உளம் நொந்து குறிப்பிட்டுள்ளார்.

தேசபக்தர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் தமிழ்ப்புலவர்களின் பதிப்பு முயற்சிக்கு ஆதரவளிக்க முன் வந்ததை பாராட்டி பேரறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை தமது பதிப்புரையில் எழுதியுள்ளதாவது:

''இந்து பத்திராதிபர்களாகிய ஸ்ரீ க. சுப்பிரமணியையர் ஸ்ரீ மு. வீரராகவாசாரியாரிவரும், 30-35 பாரத்திற்கு மேற்படாமல் ஒரு நூல் காகிதச் செலவோடு கூடத் தமது அச்சுயந்திரசாலையில் பதித்துத் தருவதாக உத்தரவு செய்தார்கள். இவர்கள் முன் மாதிரியைப் பின்பற்றிப் பிற அச்சுக் கூடத்தலைவர்களும் தலைக்கொரு பழைய நூலைத் தத்தம் யந்திரசாலையில் தக்க வித்துவான்களைக் கொண்டு பரிசோதிப்பித்துப் பதிப்பாராயின் எத்தனை அழியா தொழியும்'' **

பழம் பெரும் தமிழ் நூல்களை வெளிக் கொணர்ந்து பதிப்பித்த முன்னோடிகளைப் பாராட்டி 'மனோன் மணீயம்' நூலின் முகவுரையில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கூறியதாவது:

''இவ்வழியில் தற்காலம் உழைத்து வரும் பெரும்புகழ் படைத்த ஸ்ரீதாமோதரம் பிள்ளையவர்கள் பிரமஸ்ரீ சாமிநாதய்யர் அவர்கள் முதலிய வித்வ சிரோமணிகளுடைய நன்முயற்சிக்கு ஈடுகூறத் தக்கது யாது?''

---

* கலித்தொகை-பதிப்புரை 1887; பக்-22

** மேற்படி நூல்

சிறந்த பதிப்பாளர் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் முன்னுரையில் மேலும் ஒரு கருத்து விளக்க முறுகிறது.

பண்டைய, அரிய ஏட்டுச் சுவடிகளை பதிப்பிக்கப் புரவலர்கள் முன் வரவேண்டும். அவ்வாறு முன் வருவதே ''**தேசாபிமான, மதாபிமான, பாஷாபிமான**''த்திற்கு ஏற்றச் செயலாகும் என்பதை அறிஞர் சி.வை. தாமோ தரம்பிள்ளை பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்:

''சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண்கினும் மனந் தளம்பு கின்றதே! தமிழ்மாது நுந்தாயல்லவா?இவள் அழிய நமக்கென்றுவாளாவிருக்கிறீர்களா? தேசாபிமானம் மதாபிமான்ம், பாஷாபிமானம் இவையில்லாதார் பெரு மையும் பெருமையாமோ? இதனைத் தயை கூர்ந்து சிந்திப் பீர்களாக.''*

தமிழ்ப் புலவர்களின் வறுமை

பொது வாழ்க்கையில் தமிழ்ப் புலவர்கள் தங்கள் பங்கை செலுத்தவிடாமல் தடுத்த பிரச்னைகளில் ஒன்று, அவர்களிடம் நிலவிய வறுமையும் ஆகும்.

தமிழ்ப்புலவர்களின் ''நடை, உடை, பாவனைகள்'' கேலிக்குரியனவாகவும் கருதப்பட்ட காலம் உண்டு. இதற்கு அடிப்படைக் காரணம்,வறுமை.

விகடதூதன் என்னும் பத்திரிகையில், 29-4-1898 ஆம் இதழில் '**தமிழ்ப் பயின்றவர்கள்**' எனும் தலைப்பில்

---

* கலித்தொகை-பதிப்புரை. 1887, பக்-34.

வெளிவந்துள்ள கட்டுரையின் பின்வரும் பகுதி, தமிழ்க் புலவர்களின் நிராதரவான நிலைமையை எடுத்துக் கூறுகிறது.

''தற்காலம் தமிழ் வல்லவர்கள் நமது தேசத்தில் அநேகருண்டு. இவர்களில் சிலர் ஆங்கிலேயப் பாஷையை யும் பயின்று உத்தியோகம் முதலிய சுக வாழ்விலிருக்கின் றார்கள். மற்றும் சிலர் இங்கிலீஷ்ப் பாஷையே தெரியாம லிருப்பவர்கள். இவர்கள் உத்தியோக முதலிய துறை களுக்கு முக்கி முக்கி முயற்சித்தும் இங்கிலீஷ்ப் பாஷை யில்லாததால் கூடிவராமல் நிர்ப்பாக்கிய வாழ்விலிருக்கி றார்கள்...தமிழ்ப் படிப்பாளிகளைப் பார்த்தாலும் அதிக மாகப் புதுநாகரிக பாஷைப் படித்து விட்டவர்களுக்கு கசப்புத்தான். தமிழ் வித்துவானென்றால் கேவலம் மட்டு மல்ல, வெகுகேலி, வெகு அசங்கிதம், மூக்கை அப்போதே அறுத்துப் போட்டுக் கொள்வார்கள்.''*

தமிழ்ப் புலவர்கள் வறுமையின் காரணத்தை வெளி படுத்தாது வீண் பேச்சு பேசுகின்றவர்களைக் குறித்து **மாகறல்கார்த்திகேய முதலியார்** (1857-1916) என்னும் தமிழ்ப் பேரறிஞர் வருந்தினார்.

அவருடைய நொந்த உள்ளம் சிந்தியச் சொற்கள் '**தமிழ்ப் புலவர்கள்நிலைமை**' எனும் கட்டுரையாக வடிவமெடுத்தது.

ஆங்கிலமொழி பயின்ற தமிழ் அறிஞர்கள், தமிழ் மட்டும் பயின்ற தமிழ்ப்புலவர்கள் எனும் இந்த இரு பிரிவு

---

* குமரிமலர், ஜூன், 1981.

களில், தலைமைத்தகுதி ஆங்கிலம் பயின்றவர்களுக்குரிய தாக இருந்தது. இதை எதிர்த்துப் போராடச் சக்தியற்ற வர்களாக இருந்தனர், அக்காலத் தமிழ்ப்புலவர்கள்.

'தமிழ்ப் புலவர்கள் நிலைமை' எனும் கட்டுரை சுட்டிக் காட்டிய ஒரு பேருண்மை வருமாறு:

''ஆங்கிலேய மொழியிற் சிறிது பயின்ற சில தமிழ் நாடர்கள் தமிழ்ப்புலவர்கள் வித்யாசாலைகளுக்குச் சிறந்த தோருடையும் உடுப்பும் இன்றி வருகின்றார்கள், எனக் கூறி யதே யாமும் செவிப்புலனுற்றாம். அஃதுண்மையே... ஆயின் வித்தியாசாலை நடாத்துபவர்க்கு அனுகூலமாகக் கருதியோ, நகைசெய்து இகழல் வேண்டுமெனக் கருதியோ, தமிழ்ப்புலவர் வினை, தடைசெய்ததனாலேயோ இன்றி யமையாததாகிய ஒன்று மாத்திரம் எடுத்துக் கூறாது விடுத்தனர்.

''பாவம், பாவம்.. இவை போன்றவற்றை சிறிதாரா யின் எல்லாவற்றுக்கும் பொருளே இன்றியமையாததா யிருக்கின்றது...தக்கதோர் மாதவேதனமின்றி மிகப்பரி தாப நிலையில் நின்று வருந்துகின்ற தமிழ்ப்புலவர்கள் என்ன செய்வார்கள்''*

தமிழ்ப்புவவர்கள் வரலாற்றைப் பார்ப்போமாயின், 'வறுமை'யின் தோழமை இல்லாமற் போகவில்லை. ஆனால் அடிமைப்பட்ட நாட்டில் 'வறுமை' தமிழ்ப் புலவர் களின் பெரும் பிரச்னையாக வாட்டியது.

---

* ஞானபோதினி, மார்ச்சு 1901: பக். 308, 309.

''தமிழ்ப்புலவர்கள் நிலைமை'' எனும் கட்டுரையை வெளியிட்ட சில மாதங்களுக்குப் பிறகு ஞான போதினி ஆசிரியரே, ''**வறுமையுந் தமிழ்ப்புலமையும் (Poevrty and Tamil seholarship)** எனும் தலைப்பில் தமிழ்ப் புலவர் களின் 'வறுமை' பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என எழுதினார். அதன் ஒரு பகுதி வருமாறு.

''முற்காலத்தில் தமிழ்ப் புலமைக்குச் சிறந்ததோர் கருவியாயிருந்த வறுமை இக்காலத்தில் தமிழ்ப்புலமைக்கு பெருங்கேடாய்ப் பொருந்தியந்தோ!

இன்னும் சின்னாளில் உள்ள தமிழ்ப்புலவர்களது வறுமையும் இன்னே களையப்படா தொழியின் அஃது அருந்தமிழ்ப் புலமையெனும் ஆரமிழ்தில் வீழ்ந்து அதனை நஞ்சமாக்கி விடுங்காண்; புலமையே யின்மையாய் விடும். ஆதலின் அறிவுடையாளர்காள்! தமிழ்ப்புலமை மாட்சி யுறச் செய்ம்மின்! தமிழராய்ப் பிறந்த நீவிர் ஒவ்வொரு வரும் சிறிதேனும் பாஷாபிமானமுடையராய்த் தமிழ்ப் புலமை யொழிந்து படாது அதனைப் போற்றுவீராக''*

சமுதாயத்தை வழி நடத்தும் தலைமைத்தகுதி ஆங்கிலம் பயின்றவர்களிடம் விடப்பட்டதைக் குறித்து, பாரதியார் தமது கருத்துகளை வருத்தத்துடன் இரண்டு சந்தர்ப்பங்களில் வெளியிட்டுள்ளார்.

''காலச் சக்கரத்தின் மாறுதலால் இந்நாட்டில் அறிவுத்துறைகள் பலவற்றிலும் மேற்படி இங்கிலீஷ் படிப் பாளிகளே தலைமை வகிக்கும்படி நேரிட்ட தினின்றும் ..''

---

* ஞானபோதினி-நவம்பர், 1901. பக். 124

* பாரதி நூல்கள் (கட்டுரைகள்) பாரதிபிரசுராலயம் பக். 218.

என்று ஓரிடத்திலும்; ''விதிவசத்தால் நம் ஜனங்களுக்கு இந்தக்ஷணத்திலே பல் விஷயங்களிலும் வழிகாட்டக் கூடிய திறமை இங்கிலீஷ் படித்த சிலரிடத்திலேதான் காணப்படு கின்றது''...என்று பிறிதோரிடத்திலும்;*

பாரதியார் வருத்தத்துடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

இந்த நிலைமை ஏற்பட, என்ன காரணம் என்பதைப் பற்றியும் பாரதியார் பின் வருமாறு விளக்கியுள்ளார்.

''அதற்குக் காரணம் பூ மண்டலத்தின் சாஸ்திரங்களும் நவீன யோசனைகளும் நமது பாஷையில் மொழி பெயர்க் கப்படாமல் இருப்பதொன்று; நம்மவர் அந்நிய தேசங் களில் யாத்திரை செய்து தற்கால அனுபவங்களைத் திரட்டிக் கொண்டு வராமல் இருப்பது இரண்டு; நமக்குள் வந்து படிந்திருக்கும் கோரமான வறுமை மூன்றாவது.''**

தமிழ்ப் புலவர்கள் விஷயத்தில் காங்கிரஸ் எப்படி நடந்துக் கொண்டது என்பதை அறிய '**விகட தூதன்**' தலை யங்கம் உதவுகிறது.

29-4-1898-ல் ''**தமிழ்ப் பயின்றவர்கள்**'' எனும் தலைப் பில் எழுதப்பட்ட பின் வரும் பகுதி காங்கிரஸ்-தமிழ்ப் புலவர்கள் உறவை விமர்சனம் செய்துள்ளது.

''சென்னையிற் கூடிய காங்கிரெஸ்ஸுக்கு சில தமிழ் நாவலர்கள் உள் போக பிரயத்தனித்துப் பயனின்றி வெறு மனே வந்த வழி பிடித்தேகினர். ஆய்ப்பார்த்த கலியாணத் தைப் போய்ப் பார்த்தாலல்லவோ தெரியும்.

---

* பாரதி புதையல்-முதல் பாகம். ப. 126

** மேற்படி நூல் பக். 126.

தமிழ்ப் பண்டிதர்கள் 'சுதேச மித்திரன்' அபிப்பிராயப் படுகிறபடிதேசப் பொது நல விஷயமாகத் தனியாகமுயற் சிக்கலாந்தான். அப்போது தமிழ்க்கக்ஷி இங்கிலீஷ்க்கக்ஷி யென இருகக்ஷிகளரேற்படும். ஒரு கக்ஷியின் ஏற்பாட்டை மற்றொரு கக்ஷிஏற்காது காரியம் கெடுமேயன்றி பூர்த்திக்கு இடமிராது.

தமிழ்க் கறுப்பன்களும், இங்கிலீஷ்க் கறுப்பன்களும் ஏகோபித்து ஒரு காரியத்தை நடத்தும் ஒற்றுமையில்லாமற் போனால் தனித்தனி செய்யுங் காரியம் தற்போது வழிப் படாதென்று நமது 'சுதேசமித்திரன்' நன்கறிவர். இவரும் வெகு நாளாகக் காங்கிரெஸ் முதலான பொதுக் கூட்டங் களின் விவரங்களையும் காரியங்களையும் தமிழைத் தழுவியே நடத்தி சகல சனங்களுக்கும் எளிதில் தெரியச் செய்து, பாடுபட்டுழைப்பது மெத்த நலமாயிருக்கிற தென்று பன்முறை பேசி வருகிறார்.

ஆகவே சுதேசிகளுக்குள் ''தாங்களே வாழ வேண்டும், தாங்களே மேன்மையடைய வேண்டும்'' என்கிற ஒரு அற்ப எண்ணம் எப்போது ஒழியுமோ அப்போது எல்லாம் ஒற்று மைப்பட்டு சீரடைய ஏதுவாகும். இதற்கு ஒருவர் சொல்லத் தேவையில்லை. சுபம்.''*

தமிழ்ப் பண்டிதர்கள் பொது வாழ்க்கையில் பங்கேற்க வேண்டும் என வாய்ப்பேற்படும் பொழுதெல்லாம் சுதேச மித்திரனில் திரு. ஜி. சுப்பிரமண்ய ஐயர் வற்புறுத்தி வந்தார்.

மேலைச் சிவப்பட்டியில் தமிழ்ப் பண்டிதர் கூட்டம் 20-4-14 முதல் 22-4-14 வரையில் நடைபெற்றது

---

* குமரிமலர்; ஜூன் 1981 பக்:50

இந்தத் தமிழ்ப் பண்டிதர் கூட்டம் பற்றிய பின்வரும் செய்தி விமர்சனம் சுதேசமித்திரனில் 25-4-1914-ல் வெளி வந்தது.

''தேச பாஷையை ஆழக்கற்ற பண்டிதர்களுக்கு தேசத்தின் லௌகிக நன்மைக்குரிய பல முக்கியமான காரியங்களில் எதையும் மேற்கொண்டு நடத்த சாமர்த்தியமில்லாதிருப்பது அதிக விசனகரமானது.''

இந்த விமர்சனத்திற்கு மதுரையில் இருந்து வெளி வந்த **வித்தியா பாநு**' எனும் சிறந்த தேசிய தமிழ் மாத இதழில், 'மதுரை வாசி' என்பவர் பதில் அளித்தார். இலக்கிய இரட்டையர்களாகத் திகழ்ந்த மதுரை கந்தசாமிக் கவிராயரும், பண்டிதர் ம.கோபால கிருஷ்ணய்யரும் வித்தியா பாநுவின் ஆசிரியர்கள்.

'மதுரை வாசி' எழுதியாவது:

''தமிழ் வேந்தர்கள் காலத்தே தமிழ்ப் புலவர்கள் சகல லௌகிக காரியங்களையும் நடத்தினர். அவ்வேந்தர் காலம் ஒழியவே புலவர்களும் அதனை விட்டனர். கருணை தங்கிய பிரிட்டிஷ் அரசாங்கத்தில் சகலமும் ஆங்கில பாஷையிலே அறிவிக்க வேண்டும் அதைத்தான் ராஜாங்கத்தார் கவனிக்கின்றனர். ஆதலின் ஆங்கிலங் கற்றுத் தமிழும்றிந்த அதிமேதாவிகளான நமது சுதேச மித்திரன் பத்திராதிபரவர்கள் போன்றோரே லௌகிக காரியங்களில் பிரவேசிக்கவும் சாதிக்கவும் வல்லவராவார்கள். தனித் தமிழ்ப் பண்டிதர்கள் லௌகிக காரியங்களில் பிரவேசியாதிருத்தல் முறையாகாது.'' *

வித்தியா பாநுவில் வெளிவந்த பதிலில் தமிழ்ப் புலவர்கள் பொது வாழ்க்கையில் பங்கேற்க குறுக்கே நின்றது ஆங்கில மொழியே என்பது எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

---

* வித்தியா பாநு; 1914 தொகுதி 6-பகுதி.1 பக்:17

இது மட்டுமே காரணமன்று; காலத்திற்கேற்ற நவீன உணர்ச்சியை, நவீன அறிவைப் பெறுவதில் தனித்தமிழ்ப் பண்டிதர்கள் ஆர்வம் காட்டாமற் ஒதுங்கி நின்றதும் மற்றொரு காரணமாகும்.

இந்த இரண்டு காரணங்களையும் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் 21-1.1918-ஆம் தேசபக்தன் இதழில் சுட்டிக் காட்டியுள்ளார். '**தமிழ்ப் புலவர்கள்**' எனும் தலைப்பில் உள்ள கட்டுரையின் ஒரு பகுதி வருமாறு,

தமிழ்ப் புலவர்களும், தங்களுக்குள்ள குறைகளை அரசாங்கத்தாரிடம் முறையிடுவதில்லை. முறையிடும் முறைகளும் அவர்களுக்குத் தெரியா . தமிழ்ப் புலவர்களே! ஆகுபெயர் அன்மொழித் தொகை சண்டையையொழியுங்கள்; ஓய்ந்த காலத்தில் ஆங்கிலம் பயின்றோரை அடைந்து பூத பௌதிக தத்துவ சாஸ்திரங்களைக் கேட்டுத் தற்காலத்துக்கேற்ற 'உணர்ச்சி பெற முயலுங்கள்.''*

மீண்டும், தமிழ்ப் புலவர்களின் இதே பிரச்னையைக் குறித்து 6-5-1918 ல் பின்வருமாறு தேசபக்தன் ஆசிரியர் திரு. வி. க. எழுதினார்.

''பொது நலம், ஜனஊழியம் என்பன இன்னவென்றே பண்டிதர்கட்குத் தெரியா...இப்பொழுது தமிழ்ப் பண்டிதர்களில் தலையிட்டு உழைத்து பெற்றுப் பொதுக் காரியங்களில் தலையிட்டு உழைத்து வருகிறார்கள்... ஜனத் தலைவர்களும் பண்டிதர்களும் ஒன்று கூடிப் பல காரியங்கள் செய்யக் கூடிய காலத்தை ஈசன் கருணை செய்திருக்கின்றான்.''**

அன்மொழித் தொகையா, ஆகு பெயரா? எனும் விவாதத்தையும் கடந்து தமிழ்ப் புலவர்கள் தற்கால

---

* தேசபக்தாமிர்தம் பக்: 122.

** தேசபக்தாமிர்தம். பக்: 129

உணர்ச்சி பெறவேண்டும் என பாரதியார் உணர்த்தியதை யும் முன்பே பார்த்தோம்.

பொது வாழ்க்கையில் பங்கேற்று தமிழ்ப் புலவர்கள் மொழியையும், நாடடையும் முன்னேற்ற முன் வர வேண்டும் என்று பாரதியார் அவாபினார்; இதன் எதிர் கால நம்பிக்கையிலும் உறுதி கொண்டிருந்தார்.

தமிழ்த் தாய் வாழ்த்தில் பாரதியார் வெளியிட்ட இந்த நம்பிக்கையை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

தந்தை அருள்வலி யாலும் — இன்று
    சார்ந்த புலவர் தவவலி யாலும்,
இந்தப் பெரும்பழி தீரும் — புகழ்
    ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.

கால்டுவெல் தந்த திருப்பம்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், அது புகுத்திய ஆங்கில மொழி ஆதிக்கம், இம்மொழி ஆதிக்கம் உருவாக்கிய சிறு பான்மையோரான பட்டதாரிகளின் ஆதிக்கம் முதலான வற்றை எதிர்த்து, முன்னேற, வழி காண வேண்டிய சமயத்தில் **பிஷப் ராபர்ட்கால்டுவெல்** (1814-1891) எழுதிய '**திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்**' எனும் நூல் (1856) தமிழ்ப்புலவர்கள் சிந்தனையிலே ஒரு புதுத் திருப்பத்தை தந்தது.

கால்டுவெல் பாதிரியார் திட்டமிட்டு, மிக நுட்பமாக வகுத்தளித்த சில கருத்துகள் ஆய்வுலகிற்கு அப்பாற்பட்ட புதிய நிலைகளை தோற்றுவித்தன.

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை வழி காட்ட, புதிய தமிழ்ப்புலவர்களின் அணி ஒன்று தோன்றியது.

பதினெட்டாம் நூற்றாண்டின் மேலைநாட்டு ஆய்வாளர்களின் கருத்துகளை பயன்படுத்திக்கொண்டு, ''ஆரியர் மேன்மை'' ''சமஸ்கிருத மேன்மை'' எனும் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன.

இத்துறையில் பேரறிஞர் மாக்ஸ்முல்லரின் ஆய்வுகள் பயன்படுத்திக்கொள்ளப்பட்டன. இவர், 'ஆரியர்' எனும் சொல்லை இனத்தைக் குறிக்கும் சொல்லாக அறிமுகப்படுத்தியது, பழக்கத்தில் வேரூன்றிவிட்டது. தமது வாழ்க்கையின் இறுதியில் இந்தத் தவற்றை உணர்ந்து, 'ஆரியர்' எனும் சொல்லிறகு கற்பித்த இனப்பொருள் குறியீட்டை விலக்கிக் கொள்ள மாக்ஸ்முல்லர் விழைந்தார்.*

தமிழ் உயர்தனிச் செம்மொழி; திராவிட மொழிக் குடும்பத்திலே மூத்தது; சம்ஸ்கிருத மொழியின் துணை வேண்டாதது; முதலான நல்லாய்வுகளை பாரறிய வெளிப்படுத்திய கால்டுவெல் தமிழர்களின் நன்றிக்கு என்றும் உரியவர்.

பழந்தமிழ் நூல்கள் இன்னின்னவை என்றுகூட அறியாது தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்த காலத்தில் கால்டுவெல் மொழியாராய்ச்சி செய்தார் என்பதும் நினைவிற்குரியது. திராவிட மொழிகளுள் மூத்தது தமிழே என்று நிலை நாட்டுவதற்குச் சிறந்த சான்றுகளாகத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் அவர்க்குக் கிட்டாத நிலையில், அவர் தமது ஆய்வை நிலை நாட்டினார் என்பதும் கருத்தில் கொள்ள வேண்டியதாகும்.

ஆய்வு நெறிக்கு அப்பாற்பட்ட முறையில், வெறுப்பையும், பகைமையுணர்ச்சியையும் தூண்டும் வகையில் அவர்

---

* டாக்டர் ரொமீலா தாப்பர்; 'ஆராய்ச்சி' ஜூலை 1972. பக், 093

பிரசாரம் செய்துள்ள கருத்துகள், தமிழ் இன ஒற்றுமை உணர்ச்சிக்கு எதிரானவை.

''அமைதியாகக் குடியேறி, வஞ்சப் புகழ்ச்சியால் வாழி டம் பெற்ற ஆரியப் பார்ப்பனர்கள்'' என்று பிரசாரம் செய்கிறார், கால்டுவெல். உள்நோக்கம் கலந்த இந்த அணுகுமுறை தமிழ் இனத்தைப் பிளவுபடுத்தத் தூண்டு வது.

''திராவிடர்களை இந்து மத வேலிக்குள் கொண்டு வந்து அடைத்தது, போராடிப் பெற்ற வெற்றியின் விளை வன்று; மாறாக அவரிடையே குடியேறி வாழ்ந்து, அவர் உள்ளத்தில் தம் ஆரிய நாகரிக வேட்கையை மெல்ல மெல்ல புகுத்திய தன் விளைவே ஆகும் என்றே தோன்றுகிறது.'' இவ்வாறு கூறுமிடத்தில இந்து மத ஒற்றுமையை ஊடுருவித் தாக்க ஒரு படைக்கலனை அமைத்துக் கொடுக் கிறார், கால்டுவெல் பாதிரியார்.

கால்டுவெல்டு 1849-ல் எழுதிய 'திருநெல்வேலி சாணார் கள்' (The Tinnevely Shanars) என்னும் நூலைப் பற்றித் தமிழறிஞர் டாக்டர் கா. சிவத்தம்பி கூறியுள்ள பின்வரும் கருத்து இங்கு நினைவு கூரத் தக்கது.

> ''தமிழர்களிடையே கிறித்துவத்தைப் பரப்பும் முயசியின் முதற்படியாக இந்துத் தமிழர்களை பிராம ணர்களிடமிருந்து பிரித்துக் கொள்ளும் நோக்கும் செயறபாடும் பாதிரிமார்களிடையே காணப்பட்ட தென்பதற்கு இந்நூல் சான்றாகும்.*

கிறிஸ்துவமதப் பாதிரிகள் மீது இதே குற்றச் சாட்டை பாரதியாரும் பின்வருமாறு சுமத்துகிறார்: ''அப்பாதிரிகள்

---

* தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி பக்.25.

ஹிந்து மதத்துக்கு பிராமணரே இதுவரை காப்பாளிகளாக இருந்து வருதல் கண்டு. அந்தப் பிராமணரை மற்ற ஜாதியார் பகைக்கும்படி செய்தால் தம்முடைய நோக்கம் நிறைவேறுமென்று யோசிக்கத் தொடங்கினார்கள்.''

ஆரிய ஆதிக்கத்தை அலசி ஆராய்ந்த கால்டுவெல், வர்த்தக் குழுவாக வந்த பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி மோசடிகளாலும், சூழ்ச்சிகளாலும் இந்தியாவை அடிமைப் படுத்த முற்பட்ட ஆதிக்கத்தைப் பற்றி ஒரு சொல்லை யாவது மறைமுகமாகக் கூடக் குறிப்பிடவில்லை.

பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதியின் பின்வரும் ஆய்வுரை முற்கூறிய கருத்தை அரண் செய்கிறது.

''வடவர்- தென்னவர், ஆரியர்- திராவிடர், பிராமணர்-பிராமணரல்லாதார், வந்தேறு குடிகள்-பூர்விக மக்கள் என்பன போன்ற பேதங்களைத் தோற்றுவித்து, சோதரரைக் கூறுபடுத்தி, நாட்டிலே உருவாகக் கூடிய தேசிய ஒற்றுமைக்கு ஊறு விளைவித்து தமது ஆட்சியைப் பலப்படுத்த அந்நிய ஆட்சியாளர் கடைப்பிடித்த தந்திரோபாயங்களில் பாதிரிகளாக விருந்த படிப்பாளிகளுக்கும் பங்கிருந்தது என்பதை ஆராய்ச்சியாளர் இப்பொழுது உணரத் துவங்கியுள்ளனர்.''* இத்தாலிய நாட்டு இராபர்ட் தெ நொபிலி (1577-1656), வீரமாமுனிவர் (1680—1747) முதலான பல கிறிஸ்துவ சமயப் பாதிரிமார்கள் தொண்டாற்றியத் தமிழ்ப்பணி பாராட்டுதலுக் குரியது என்பது வேறு; சாதி சமய இனப்பூசலுக்கு ''தந்திரோ பாயங்களை'' சிலர் கையாண்டது என்பது வேறு. இரண்டையும் தனித்தனியே நோக்க வேண்டும்.

டாக்டர் ஜி.யு.போப் அவர்கள் தமிழர்களின் ராஜ விசுவாசத்தைப் பாராட்டியுள்ளது சுந்தரனார் இயக்கத்

---

* முன்னுரை: மண்ணும் மனித உறவுகளும்; பக். ix

தைச் சேர்ந்த ஜே.எம். நல்லசாமி பிள்ளையின் **சித்தாந்த தீபிகா** என்னும் ஆங்கில இதழில் [மே, 1898] வெளிவந்துள்ளது. அந்தச் செய்தி பின்வருமாறு: ''போப் அவர்கள் தமிழ் மக்களின் ராஜ விசுவாசத்திற்கு பாராட்டு தெரிவித்துள்ளார். அவர் கூறுகிறார்: ''தமிழ் மக்கள் எப்பொழுதுமே ராஜ விசுவாசிகள். 160 லட்சம் தமிழ் பேசும் மக்களின் இதயங்களில் அவர்களுடைய மகா அன்னைக்கு [பிரிட்டிஷ் மகாராணி] பக்தியும் அன்பும் கலந்த பெரு மதிப்பு உண்டு.''

கால்டுவெல் அமைத்துத் தந்தப் பாதையிலே நடைபோட்ட மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை தமிழ்த் தாய் **வாழ்த்துப் பாவில்** 'ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து' எனும் **வசைச் சொற்களையும்** பெய்தார்

1914-ல் எழுதிய ஒரு நூலில் தமிழறிஞர் எம். சீனுவாசயங்கார், சுந்தரனாரின் தலைமையின் கீழ் திரண்ட தமிழ்ப்புலவர்களைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''கடந்த பதினைந்து வருடங்களுள் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற பேராசிரியரும் தொல்லியல் ஆய்வாளருமான திரு.சுந்தரம் பிள்ளையவர்களின் அபிமானிகளையும் அவர் தம் **சாதிக்காரர்களையும் முதன்மையாகக் கொண்ட ஒரு புதிய தமிழறிஞர் குழாமொன்று தோன்றியுள்ளது.** ஆரியர்களிடத்திலிருந்து தமிழர்களுக்கு வந்துள்ள கடமைப்பாடுகளின் சகாயங்களைக் கூட மறுப்பதும் அத்தகைய கடமைப்பாடு தவறானதென்று நிரூபிப்பதும், பழந்தமிழர்களின் நாகரிகத்தைப் புகழ்ந்து கூறுவதும் வரலாற்றாய்வு என்ற பெயரில் வழக்கிலிருக்கும் பல பாரம்பரியங்களையும், இலக்கியங்களையும் திரித்துக் கூறுவதும் தமிழகத்தில் பிராமணீயமயப் பாட்டினை ஆதரிக்

கும் முந்தைய அறிஞர்களின் கருத்துகளை ஊதியெறிந்து உதறிவிடுவதுமே இவர்கள் நோக்கமாக உள்ளது.''*

வேதியர்களுக்கு எதிரான வேளாளர் எழுச்சிக்கு தலைமை தாங்கினார் சுந்தரம்பிள்ளை என்பதை மேலேயுள்ள மேற்கோள் சுட்டிக் காட்டுகிறது.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் பழந்தமிழ் இலக்கியவுணர்வோடு, புதிய விஞ்ஞானக் கல்வியுணர்வும் வளர வேண்டும் என்பதை எடுத்துக் காட்ட 'நூற்றொகை விளக்கம்' என்னும் நூலை 1888-இல் வெளியிட்டார். இந்த நூலின் பின்வரும் தமிழ்முன்னுரைப் பகுதி தமிழ் வளர்ச்சிப் பணிக்குரிய திசையைக் காட்டியது.

''பூர்வீகர்கள் மேல் உண்மையான பக்தியும் தேசாபிமானமும் உடையோர் முன்னோர் நூல்களை அன்போடாராய்வதோடு நூதனமாக அந்நிய தேசத்தாரால ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நூல்களையும் கற்றறிந்து கலந்து 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்னும் முதுமொழியை மறவாது, அவர் அவர்களால் கூடிய அளவும் நம் முன்னோர் உழைத்தபடி உண்மை அறிய உழைத்து, ஜனசமுதாய அறிவை வளர்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.''**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்கலைக் கழக பாடத் திட்டத்தில் சம்ஸ்கிருதத்திற்கு மட்டும் இடமளித்து சுதேச மொழிகளை விலக்கக் கோரும் ஒரு தீர்மானம் மத்திய சட்டசபையில் கொண்டு வரப்பட்டது. இத்தீர்மானம் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கருத்

* Tamil Studies; P4.6 (அழுத்தம் இந்நூலாசிரியருடையது)

** நூற்றொகை விளக்கம்; பக்-2.

தறிய அனுப்பப்பட்டது. பரிதிமாற் கலைஞர் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், தமது தோழர் எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையுடன் சேர்ந்து தீர்மானத்திற்கு எதிராக பல்கலைக்கழகத்தில் ஆதரவு திரட்டினார். சுதேச மொழிகள் நீக்கம் பற்றிய தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

சுந்தரம் பிள்ளையின் வழிவந்த தமிழறிஞர்களின் புத்தெழுச்சியை-''The Light of Truth or SiddhantaDeepika'' (1 97-1913) ஆசிரியர் ஜே. எம். நல்லசாமி பிள்ளை-எனும் பத்திரிகையும், பண்டித டி.சவுரிராயன் அவர்களின் தமிழ்த் தொன்மை ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் வெளிவந்த The Tamilian Antiquary (1907-1914) எனும் பத்திரிகையும் வெளிப்படுத்தின. சித்தாந்ததீபிகை, சைவ சித்தாந்தத்தின் நனி உயர் தனிச் சிறப்பை உணர்த்தும் ஆய்வுகளை வெளியிட்டது. பண்டித சவுரிராயன் அவர்களின் பத்திரிகையில் தமிழ் மொழி-பண்பாடு வரலாற்று ஆய்வுகள் வெளிவந்தன.

சுவாமி விவேகாந்தர் [1863-1902]

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தமிழறிஞர் ஜே.எம். நல்லசாமி பிள்ளை, பண்டித சவுரிராயன் ஆகியோரின் இனவாதக் கருத்துக்களை, சுவாமி விவேகானந்தர் அறிய வாய்ப்பேற்பட்டது.

திருவாளர்கள் சுந்தரம் பிள்ளை, ஜே. எம். நல்லசாமி பிள்ளை இருவரும் சுவாமிகளை நேரில் சந்தித்து உரையாடிருக்கின்றார்கள். 1893-இல் திருவனந்தபுரம் கிளப்பில் சுந்தரம் பிள்ளை, சுவாமி விவேகானந்தரைச் சந்தித்தார். புலமை மிக்க சுந்தரம் பிள்ளை இனத்துவேஷத்திற்கு சிந்தனை செய்யாமல் இடமளித்து விட்டாரே என்று சுவாமி விவேகானந்தர் வருந்திய துண்டாம்.

1897-இல் திருவல்லிக்கோணியில் சிகாகோ வீரராகத் திரும்பிய சுவாமி விவேகானந்தரைச் சந்தித்தார் நல்லசாமிப்பிள்ளை.

சித்தாந்த தீபிகையில் பண்டிதர் சவுரிராயன், ''தமிழ்ரோடு ஆரியர் கலப்பு'' எனும் ஆய்வுக் கட்டுரையை* எழுதத் தொடங்கினார். சித்தாந்தத் தீபிகை, சுவாமி விவேகானந்தருக்கு அனுப்பப்பட்டது. இந்தத் தொடர் கட்டுரையில் கூறப்பட்டனவற்றை ஏற்றும், மறுத்தும் சுவாமி விவேகானந்தர், '**ஆரியரும் தமிழரும்**' எனும் கட்டுரையை** எழுதினார். இந்தக் கட்டுரையில் பண்டிதர் சவுரிராயன் அவர்களைக் குறிப்பிட்டு எழுதியதாவது:

''அறிவற்ற இந்த ஆரவாரமும் பகையும் ஏற்பட்டுக் கொண்டு இருக்கும் போதே, பண்டிதர் டி. சவுரிராயன் அவர்கள் இப்பகை ஒழிவதற்கு உரிய ஒரே ஒரு பாதையை நியாயமான அறிவுள்ள பாதையை, கடைப்பிடித்து வருவது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.. ஆரியரைப் பற்றிக் கூறப்படுகிற கொள்கையிலே இருக்கிற குற்றங்களையும், அக் கொள்கையால் விளைந்துள்ள தீமைகளையும், அமைதியோடும் அறவே நீக்கவேண்டியது தென்னிந்தியாவின் நலத்திற்கு மிகவும் அவசியமாகிறது.''

இவ்வாறு சுவாமி விவேகானந்தர், கால்டுவெல் காலந் தொடங்கிய இனவாதத்தைப்பற்றி கருத்து தெரிவித்ததோடு, தமிழ் உணர்ச்சியின் நியாயத்தையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதையும் பின்வருமாறு சுட்டிக் காட்டினார்.

''ஆரிய இனமே தோன்றுவதற்குக் காரணமான மிகச் சிறந்த, தாய் இனங்களாய் விளங்கியவற்றிலே ஒன்றான, புகழ்படைத்த தமிழர்களது பழம்பெருமையை அறிவதால் விளையும் நியாயமான, தன்

* ''The Admixture of Aryan with Tamilian''
The Light of Truth or Siddhanta Deepika,
Monthly, Madras. October, 1901

** Complete works, Vol. IV. P. 296

மதிப்பை ஏற்படுத்த வேண்டுவது மிகவும் அவசிய மாகிறது.''

தமிழ் உணர்ச்சியை, இனவாதத்தின் அடிப்படையில் தான் காண வேண்டும் என்பதில்லை என்பதற்கு சுவாமி விவேகானந்தர் கருத்து ஒரு தக்கச் சான்றாகும்.

''1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்'

தமிழ் உணர்ச்சியை வளர்த்த தொடக்ககால ஆய்வு நூல்களுள் **'ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்'** என்னும் நூல தமிழ்நாட்டு முதல் வரலாற்று நூலாகும். இநநூலாசிரியர் திரு.வி. கனகசபைபிள்ளை (1855-1906) அவர்கள்'தி மெட்ராஸ் ரெவ்யூ' (The Madras Review) என்னும் ஆங்கில இதழில் 1895—1901-க்கும் இடையில் எழுதிய தொடர் கட்டுரைகளே 16-1-1904-ல் நூல் வடிவுபெற்றது. தொடர்கட்டுரைகளாக வந்த காலத்தில், தேசிய உணர்ச்சி கொண்ட நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர், திரு.கனகசபை பிள்ளையை ஊக்கு வித்தார். நூலாசிரியா தமது நூலை, நன்றி யுணர்ச்சி யுடன், நீதிபதி எஸ். சுப்பிரபணிய ஐயருக்கு உரிமையாகக் கினார். தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரும் ''1800 வருஷங்களுக்கு முன்பாகவே'' எனும் சொற்றொடரை பெருமிதத்துடன் ஆண்டுள்ளார். இது, 1907 இல் 'இந்தியா' வார இதழில் ''வீரத்தாய்மார்கள்'' என்னும் தலையங்கத்தில் ஆளப்பட்டது.

ஆங்கிலக் கல்வியோடு கூடிய தமிழ்க்கல்வி யுணர்ச்சி வுடையோர் கூறியதைப்போல் நூலின் இறுதியில் பின் வரும் கருத்துகளையும் குறிப்பிட்டார், நூலாசிரியர் திரு. கனகசபை பிள்ளை.

''மேலை நாடும் கீழை நாடும் இணைந்ததால் உண் டான புது நாகரிகத்தைப் பின்பற்றி, பேராசையினறி, சாதிமத வேறுபாடுகளைக் களைந்து...அறிவியல் (Science) துறையை சீராக்கி...புத்தம் புதிய வாழ்வுக்கு வேண்டிய

வளம் பெருக்கும், நல்ல கருத்துகளை...வெறும் ஆவேச உணர்ச்சி வகையில்லலாது செயல் துறையில் புகுத்தி நாடு வாழ நல்வழிகாட்டுவார்களாக.'' இந்த விழுமியக் கருத்திற்கு மேலும் வலிவும் பொலிவும் அளித்து தமது வாழ்க்கையையே கவிதையாகப்படைத்துக் கொண்டவர் பாரதியார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்

''**சுய பாஷாபிமானம், ஏனைத் தேசாபிமானம், மதாபிமானங்கட்கு மூலமாகும்**'' என்னும் சீரியச் சிந்தனையைக் கொண்ட தமிழ்ப் புரவலர் **பாண்டித்துரை தேவர்** (1867-1911) அவர்கள் முயற்சியால் தோன்றியது மதுரைத் தமிழச் சங்கம். இந்த முயற்சிக்கு உறுதுணையாக விளங்கியவர். இவரது சகோதர முறை வாய்ந்த ராமநாதபுரம் மன்னர் **பாஸ்கர சேதுபதி** (1868-1903) அவர்கள்.

தமிழ் வளர்த்த பாண்டியர் மரபின் புகழ் விளங்கவைத்த இவ்விருவரும் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் புலமைப் பெற்றவர்கள்; இருவரும் சிறந்த தேசியவாதிகள் சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவிற்கு செல்லத் தூண்டி உதவி அளித்தவர்களுள் பாஸ்கர சேதுபதியும் ஒருவராவார்.

தமிழகத்தில் நடைபெற்ற தேசிய காங்கிரஸ் மாநாடுகளுக்கு நிதி உதவி அளித்து ஆதரித்தவர்கள், இவ்விருவரும். தேசிய உணர்ச்சியும், தமிழ்வுணர்ச்சியும் ஒரு நாணயத்தின் இரு பச்கங்கள் எனும் கொள்கையின் ஏந்தல்கள், இவர்கள.

மதுரைத் தமிழ்ச் சங்கம் பற்றிய அறிவிப்பு சென்னை மாகில (காங்கிரஸ்) அரசியல் மாகாட்டில் தான் வெளியிடப்பட்டது.

---

* தூத்துக்குடியில 'கல்வி' என்னும் தலைப்பில், 1905-ல் திரு.தேவர் பேசியது.

1901 ஆம் ஆண்டில் மதுரையில் சென்னை மாநில அரசியல் (காங்கிரஸ்) மாநாடு கூடியது. மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவர் பாண்டித் துரை தேவர் அவர்கள் தமிழறிஞர்கள் புடைசூழ எப்பொழுதும் விளங்கியவர் என்பதால் மாநாட்டில் தமிழறிஞர்கள் திரண்டிருந்தனர். மாநாட்டின் முடிவில் தமிழ்ச் சங்கம் நிறுவுவது பற்றிய தம் கருத்தினை வெளியிட்டார். தேவர் அறிவிப்பை தமிழறிஞர்கள் ஒரு மனதாய்ப் பாராட்டி வரவேற்றனர்.

1901 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாளன்று மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் கூடிய தமிழ்ப் பெரும் புலவர்கள் அவையில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. இந்த அமைப்போடு, செந்தமிழ்க் கல்லூரி, பாண்டியன் புத்தக சாலை, நூல் ஆராய்ச்சித்துறை, அச்சகம் முதலானவைகளும் அமைக்கப் பட்டன.

கல்லூரித் தலைமயாசிரிராக வடமொழிதென் மொழிகளில் புலமை நிரம்பிய திரு.நாராயண ஐயங்கார் நியமிக்கப் பெற்றார். திரு.ரா.இராகவையங்கார் தமிழ் நூல் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும், திரு.சே.சுப்பிரமணியக் கவிராயர், திரு.சே. அருணாசலக் கவிராயர், திரு.சே.கந்தசாமிக்கவிராயர் ஆகியோர் நூற் பரிசோதகராகவும் நூல் பதிப்பாளராகவும் இருந்தனர். கல்லூரியில் உடன் ஆசிரியர்களாக அரசஞ் சண்முகனர், சுந்தரேஸ்வர ஐயர், கோபாலையர் ஆகியோர்கள் பணிபுரிந்தனர்.

தொடக்கம் முதல் பாண்டித்துரைத் தேவர் அவர்களே சங்கத்தின் ஆயுள் காலத்தலைவராக இருந்து வந்தார்கள்.

1903 ஆம் ஆண்டு முதல் 'செந்தமிழ்' என்னும் திங்கள் இதழ், மதுரைத் தமிச் சங்கத்தின் வெளியீடாக வந்தது.

இதற்கு ஆசிரியராக இருந்தவர்கள் முறையே ரா.இராகவையங்கார், மு.இராகவையங்கார், நாராயண ஐயங்கார். ஆய்வுலகம், கண்ட மிக அரிய ஆய்வுக் கட்டுரைகள் 'செந்தமிழ்' இதழில் வெளிவந்தன.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பற்றியும், அதன் பெரும் புலவர்களின் தேசியப்பணி, தமிழ்ப்பணிகளைக் குறித்தும் பாரதியார் பாராட்டியுள்ளார். ''மிஸ்டர்பாண்டித்துரைத் தேவர் அவர்களும் பிறரும்மதுரையிலே தமிழ்ச்சங்கம்ஸ்தாபிக்கவேண்டுமென்று யோசித்தது மிகவும் நேர்த்தியான யோசனை ..மதுரைச் சங்கம் ஒரு தமிழ் யூனிவர்சிடியாக வளர்ச்சி பெற வேண்டியதே நமது நோக்கம். அதற்கு ஸயன்ஸ் பகுதி, சரித்திர ஆராய்ச்சிப் பகுதி, கணிதப் பகுதி முதலிய எத்தனையோ பகுதிகள் ஏற்பட வேண்டும்.'' இவ்வாறு 1906-ல் பாரதியார் விரும்பினார்.

பாரதியாருக்கு முந்திய புலவர்கள் எழுப்பிய பிரச்னைகளையும், புகுத்திய புதுக் கண்ணோட்டங்களையும் பாரதியார் ஆய்ந்து தமது கருத்துகளை திட்டவட்டமாகச் சாற்றியுள்ளார்.

பாரதியார் படைத்தப் புதிய மரபு

தமிழ்ப் புலவர்களின் வீறார்ந்த நெடிய பாரம்பரியத்தை போற்றிய பாரதியார் (1882-1921) இடைக்கால வீழ்ச்சிகளையும் விண்டுரைத்துள்ளார். **'சென்ற சில நூற்றாண்டுகளாக'** எனக் குறிப்பிட்டு, **இடையில் நமக்கு நேர்ந்த கேடு'** எனச் சுட்டிக் காட்டுமிடத்தில் தமிழ் வளர்ச்சியில் தமிழ்ப் புலவர்களால் ஏற்படுத்தப்பட்ட தேக்க நிலையை உணர்த்தினார். தேக்க நிலையை அகற்றி புது வாழ்வு காண வேண்டினார்.

தமது மதிப்பீட்டை **'புனர் ஜென்மம்'** எனும் கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

தமிழுக்கு புனர்ஜென்மம்-மறுவாழ்வு-அளித்த பாரதியார் கூறியதாவது:

''கரடு முரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை நமது கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றியது. நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்து பாஷையைத் தழுவியவை. காலம் மாற, மாற பாஷை மாறிக் கொண்டு போகிறது, பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்த காலத்து ஜனங்களுக்குத் தெரியக் உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல

கவிதை. ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாக, புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அசாதாரண அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித்திறமை என்று தீர்மானம் செய்து கொண்டார்கள்.''

கடந்த காலத் தமிழ்ப்புலவர்களின் கடுந்தமிழ் நடையை நமது காலத்துப் புலவர்களும் பின்பற்றுவதைப் பற்றி பாரதியார் பின்வருமாறு குறிப்பிட்டார். ''தமிழ்ப் புலவர்களிடம் போனால் நிகண்டுக்குக் கூட அர்த்தம் தட்டும்படியான வார்த்தைகளை எழுதிக் கொடுப்பார்கள். சாமான்ய பாஷையில் எழுதும் தொழில் புலவர்களுக்குத் தெரியாது.''

எளிய நடைக்கேற்ற சொற்களை கவிதையில் தாமே கூட ஒரு சமயத்தில் ஆளத் தவறியதற்காக பாரதியார் வாசகர்களிடம் மன்னிப்புக் கேட்டார். அரவிந்தரின் 'கடலுக்கு' என்ற ஆங்கில மொழிக் கவிதையை தமிழில் மொழி பெயர்த்தார் பாரதியார். மொழி பெயர்ப்பிற்கு முன் பாரதியார் ஒரு குறிப்புரை எழுதினார். இந்தக் குறிப்புரையில் மன்னிப்பைக் கேட்டுள்ளார்.

''இம்மொழி பெயர்ப்பைச் சகல ஜனங்களுக்கும் தெளிவாகும்படி மிக எளிய நடையிலே அமைக்க வேண்டுமென்று சிரமப்பட்டிருக்கிறேன். என்னையறியாமல் அகராதிப் பண்டிதர்களுடைய சில 'கற்சற்' மொழிகள் விழுந்திருக்கின்றன. செய்யுள் அமைதி நாடி அம்மொழிகளுக்கு எளிய பிரதி பதங்கள் போடாமல் இருந்து விட்டேன். இதன் பொருட்டும் படிப்போர்கள் க்ஷமிக்குமாறு பிரார்த்தனை செய்கிறேன்.''

பாண்டித்தியம்-கவித்வம்

உண்மையான கவிதை மறைந்து போனதற்கு இலக்கண வித்வான்கள், கவிபாடத் தொடங்கியதும் ஒரு காரணம் எனக் குறிப்பிட்டார், பாரதியார்.

''பாண்டித்தியம் உடையோர்களும, பாண்டித்தியம் இருப்பதாக நினைத்துக் கொள்வோர்களும், கவிகள் கூறத் தொடங்கி விடுகின்றார்கள். கவித்திறமை இருப்பதற்கும் பாண்டியத்தியம் ஒருவாறு அவசியமென்றாலும், பாண்டித்தியம் இருப்போர்க்கெல்லாம் கவிதா சக்தி இருப்பதில்லையென்பதை நம்மவர்கள் மறந்துவிட்டார்கள். இலக்கண வித்துவான்கள் கூடத் தாம் கவிபாடாமல் இருந்தால் அது மதிப்புக் குறைவென்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். இங்ஙனமாக உண்மையான கவிதை இந்நாட்டிலே மறைந்து போய்விட்டது.''*

சுதந்திர நாட்டில்தான் தமிழ் வளர்ச்சி

தமிழ்க் கவிதையின் வீழ்ச்சிக்குரிய மேலும் ஒரு சான்றை பாரதியார் எடுத்துக் காட்டினார்.

ராஜ பக்தியையும், தேச பக்தியையும் இரு கண்களாகக்கொண்டொழுகிய தமது முந்திய காலத் தமிழ்ப் புலவர்களின் கொள்கையில் இருந்து முற்றிலும் விலகி, அந்நியர் ஆதிக்கமும் அடிமைத் தனமும் தமிழ் வளர்ச்சியை தடை செய்தன எனப் பாரதியார் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டினார்.

---

* பாரதி நூல்கள் (நான்காம் பகுதி) தமிழ்நாடு அரசு வெளியீடு. பக்.247.

அன்னியர் தமக்கடிமை யல்லவே-நான்
அன்னியர் தமக்கடிமை யல்லவே

என ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல் கொடுத்து, பாரதியார் 'சுதந்திர தேவியின் துதி' யிலே, அடிமைத்தன வாழக்கை யில் எந்தப் பெருமையும் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று என்றும் பாடினார்.

'நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி,
படைத்துயர்ந் திட்டாரேனும்

பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தாரேனும்,
அன்னவர் வாழ்க்கை பாழாம்,
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

அடிமைப்பட்ட நாட்டில் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு இடமில்லை என்னும் கருத்தை கட்டுரையிலும் எதிரொலித் தார், பாரதியார்.

''தமிழர்களாகிய நமக்குள்ளே ஆண்மை போய் விட் டது; வீரியம் போய் விட்டது. நமக்கு தேசம் கிடையாது. ராஜ்யம் கிடையாது. இந்த நிலைமையில் 'ஸரஸ்வதி' இந்த நாட்டிலே வந்து அவதரிப்பாளா?'' என்று பாரதியார் வினா விடுத்தார். *

இதோ கருத்தை, ஆங்கிலம்கற்றச் செருக்குடன் பேசும் ஒரு வாலிபன், ஆங்கிலப் படிப்பற்ற ஒரு புலவர் ஆகிய இரு

---

* மேற்படி நூல்; பக்: 248

வரிடையேயான ஓர் உரையாடல் வாயிலாகவும் வலி யுறுத்தினார். புலவர் கூற்றாக வரும் பாரதியாரின் கருத்து வருமாறு:

''தமிழ் நாடு இப்போது சுதந்திரமும் செல்வமும், சரீர பலமும், மனோ பலமுமிழந்து தாழ்ந்த நிலைக்கு வந்து விட்டது. எனவே இந்நாட்டில் உயர்ந்த கவிஞர் இல்லாமல் போய் விட்டார்கள்.''*

தமது காலத்திற்கு முந்திய தமிழறிஞர்களிடம் காண முடியாத துணிவை பாரதியார் பெற்றிருந்தார். ஏகாதி பத்திய எதிர்ப்புணர்வை உயிர் மூச்சாகக் கொண்டவர் பாரதியார். தமிழ் விழிப்பையும் அரசியல் விழிப்பையும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்விற்கு பயன்படுத்தியவர் பாரதி யார். ஏகாதிபத்திய ஆட்சி, தமிழ் வளர்ச்சியில் நாட்டம் இல்லாதது என்பதை பின்வருமாறு எடுத்துக் காட்டினார்.

''தமிழ் நாட்டில் நடைபெறும் ராஜாங்கம் தமிழ்ப் பாஷையில் தேர்ச்சியுடையதன்று. 'தமிழ் முழு நாகரிக முடையதா, இல்லையா'' என்பதைப் பற்றிய சந்தேகங் களுடையது; ஆதலால் தமிழ்ப் படிப்பில்லாமலும், தமிழ் மணமில்லாமலும் ஸந்தோஷமடைந்திருக்கும் இயல்பு டையது.''**

கடுந்தமிழ் நடை, கவித்வமற்ற பாண்டித்தியம், அந்நிய ஆட்சி ஆகியவற்றோடு, பொது மக்கட் தொடர் பின்மையும், தமிழ்க் கவிதையின் வளர்ச்சியைத் தேய்த்து, தேக்க நிலையில் ஆழ்த்தியது என்பதையும் பாரதியார், அடுத்து குறிப்பிடுகிறார்.

* மேற்படி நூல்; பக்: 248

** பாரதி தரிசனம்-2ம் பாகம்; பக். 205

தமிழ் நாட்டில் பக்தி இயக்கக் கால கட்டத்தில், பொதுமக்கட் தொடர்புச் சாதனமாக கவிதை ஏற்றம் பெற்றிருந்தது. விடுதலைப் போராட்டத்தை நடத்தும் அரசியல் இயக்கத்திற்கு கவிதை, பொது மக்கட் தொடர்புச் சாதனமாக விளங்க வேண்டும் என பாரதியார் வலியுறுத்தினார்.

1981-ல் மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில்புலவர் குழுக் கூட்ட நடவடிக்கையின் ஒரு செய்திக் குறிப்பையும இங்கு இணைத்து சிந்திக்கத்தக்கது. ''பாமர மக்களிடம் தொடர்பு கொள்ளாததால், தமிழகத்தில் புலவர்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு விட்டனர் என்றும, புலவர்கள் மிகவும படித்தவர்கள் என்ற காரணத்தினால், அவர்களிடம் பாமரர்கள் நெருங்கிப் பழகுவதில்லையென்றும், இக்குறையினைப் போக்குவது புலவர் குழுவின் நோக்கங்களில் ஒன்று என்றும் அவர் (கி. ஆ. பொ. விசுவநாதம) கூறினார்.''

மக்கள் கவிஞர் பாரதியார் கூறுகிறார் :

''இப்போது உலக முழுவதிலுமே ராஜாக்களையும், பிரபுக்களையும் நம்பி வித்தை பழகும் காலம் போய் விட்டது. பொது ஜனங்களை நம்பவேண்டும். இனிமேல் கலைகளுக்கெல்லாம் போஷணையும் ஆதரவும் ஜனங்களிட மிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருசி உண்டாக்கிக் கொடுப்பது வித்வான்களுடைய கடமை.''*

சோஷலிச யதார்த்த வாதத்தின் தந்தை மாக்சிம் கார்க்கி, அல்லலுற்ற ஆதரவற்ற, பழிக்கப்பட்ட எளியவர்

---

* பாரதி நூல்கள் (கட்டுரைகள்) பாரதி பிரசுராலயம் பக்: 401

களுக்கு இலக்கியத்தில் முதலிடம் அளித்து, இலக்கியத்தின் பொது மக்கட் சார்புநிலையை உருவாக்கியது போல, பாரதியார் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் பொது மக்கட் சார்பு நிலையின் தந்தையானார்.

கலை-இலக்கிய வளர்ச்சியில் பொது மக்கள் பங்கேற்று விட்டால் எவ்விதக் குறையும் ஏற்படாது என்பதை பாரதி மிகத் தெளிவாக உணர்த்துகின்றார்.

''ஊர்தான் ராஜா. இந்த ராஜாவுக்கு ஆரம்பத்திலே கொஞ்சம் ஞானம் அளித்துப் பழக்கங் கொடுத்தால் வித்தைகளுக்கு எவ்விதமான குலைவும் ஏற்படாது.*''

பொது மக்கட் சார்பான இலக்கியக் கொள்கையை ஏற்றுக் கொண்டால், வருவாயும் பெருகும் எனப் பாரதியார் கருதினார்.

''ஒரு பிரபு மாதம் ரூபாய் 100 கொடுப்பார். ஊர் சேர்ந்தால் தலைக்குக் கால் ரூபாயாக வசூல் பண்ணி மாத 1000 ரூபாய் கொடுக்கும். ஊரை யஜமானனாகக் கொள்ள வேண்டும்.''**

வேறோரிடத்திலும் பாரதியார் இதே கருத்தை பின் வருமாறு வெளியிட்டுள்ளார்.

''யாவருக்கும் எளிதில் புலப்படாத வலிய நடையில் காவியங்கள் எழுதுவதிலே படித்த படிப்பையெல்லாம் செலவிடுவோருக்கு அதிகச் செல்வம் சேர மார்க்கமில்லை

---

* மேற்படி நூல்; பக்கம். 412

** மேற்படி நூல்; பக்கம். 412.

யென்பது ப்ரத்யக்ஷம். எளிய நடையில் எழுதினால் அச்சுத் தொழிலும் பொது ஜனக் கல்வியும் பரவிவரும் இக்காலத்தில் ஆசிரியர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கும்.''*

பொதுமக்கட் சார்பாக இலக்கியக் கொள்கையை ஊக்குவிக்க வேண்டும் எனக் கூறிய பாரதியார், புதுமை இலக்கியங்களை பொதுமக்கள் போற்ற முடியாது அவல நிலையில் வைக்கப்பட்டதையும் குறிப்பிட்டார். இந்த அவல நிலைமைக்குக் காரணம், ஆங்கிலம் படித்த மக்கட் தலைவர்ககள என்று குற்றம் சாட்டினார்.

''இங்கிலீஷ் படித்த ''ஜனத்தலைவர்'' காட்டும் வழியையே மற்றவர்கள் பிரமாணமென்று நினைக்கும்படியான நிலைமையில் தேசம் இருக்கிறது. இந்தப் 'பிரமாணஸ்தர்கள்' தமிழ் நூல்களில் புதுமையும் வியப்பும் காணுவது சாத்தியமில்லை என்ற நிச்சயத்துடனிருக்கிறார்கள்.''**

இவர்கள், பொது மக்களிடையே உயர்ந்த கலாரசனையை ஏற்படுத்தி, வளர்க்க வேண்டிய பொறுப்பை மட்டும் தவிர்த்து மற்ற வழிகளில் எஜமானத்துவம் பாராட்டினர். இதனால் ஏற்பட்ட இழி நிலைமையையும் பாரதியார் எடுத்துக் காட்டியுள்ளனர்.

''உண்மையான கவிதைக்குத் தமிழ்நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகளை மொழி பெயர்த்துப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறார்கள். அல்லது, இங்கிலீஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புது நாவல்கள் எழுதுகிறார்கள். அவர்களுக்கு கொஞ்ச லாபமேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒரு சிலர்

* மேற்படி நூல்; பக்.397

** மேற்படி நூல்; பக்கம்.584

தோன்றியிருக்கிறார்கள்; இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை; அச்சிட்டால் வாங்கு வாரில்லை. அருமை தெரியாத, ஜனங்கள் புதிய வழியில் ஒரு நூலைக் காணும்போது அதில் ரஸமனுபவிக்க வழியில்லை.''*

'புதிய வழி'யை பொதுமக்கள் அறியாமல் போனதற்கு ஆங்கிலம் படித்தவர்களே காரணம் எனப் பாரதியார் சுட்டிக்காட்டினார்.

''ஜமின்தார்கள் மீதும், பிரபுக்கள் மீதும் 'காமா சோமா' என்று புகழ்ச்சிப் பாட்டுக்கள் பாடினால் கொஞ்சம் ஸன்மானம் கிடைக்கிறது. உண்மையான தொழிலுக்குத் தகுந்த பயன் கிடைக்கவில்லை. மேற்படி 'பிரமாணஸ்தர்' தமிழ் மணத்தை விரும்பாமல் இருந்ததால் இந்த நிலைமை உண்டாகி விட்டது.''**

'புதிய வழி; யில் தமிழின் ஆற்றலை விளக்க வந்த இரு பேரறிஞர்களுக்கு ஆதரவு கிடைக்காமற் போனதைப் பற்றி பாரதியார் வருத்தமுற்றார்.

பி. ஆர். ராஜமய்யர், மகேசகுமார் சர்மா எனுமிருவர் அந்தப் பேரறிஞர்களாவர்.

பி. ஆர். ராஜமையர் (1872-1898)

தமிழ்நாவல் வளர்ச்சித் துறையிலே முக்கிய இடம் பெறும் கமலாம்பாள் சரித்திரத்தை எழுதிய பேரறிஞர் பி. ஆர். ராஜமைய்யர் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் புலமை நலம் வாய்ந்தவர். வேதாந்த விற்பன்னர், சுவாமி விவேகானந்தரின் பாராட்டுதல்களைப் பெற்றவர்; சுவாமி

---

* மேற்படி நூல் : பக். 397

** மேற்படி நூல் : பக். 398

களின் தூண்டுதலின் பேரில் தோன்றிய 'பிர்புத்த பாரதா' என்னும் ஆங்கில இதழின் முதல் ஆசிரியராக இருந்தவர். இவரைப் பற்றி பாரதியார் கூறியதாவது :

''காலஞ் சென்ற . ராஜமையர் புதிதாகத் தமிழ்க் கதை எழுதுவதில் உண்மையான திறமையைக் காட்டியிருக்கிறார். அவருக்குத் தகுந்த சம்மானமில்லை. ஆதலாய் அவர் அந்தத் திறமையை மேன்மேலும் வளர்த்துக் கொண்டு போக இடமில்லாமல், ஆரம்பத்திலேயே கைவிட்டு, இங்கிலீஷ் மாதப் பத்திரிகை நடத்தப் போய் விட்டார்.*

மகேசகுமார் சர்மா

மகேசகுமார் சர்மாவின் இயற்பெயர் மாம்பாக்கம் குப்புஸ்வாமி ஐயர். பாரதியாரின் மிக நெருங்கிய நண்பர். பங்கிம் சந்திரரின் ஆனந்த மடத்தை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர்; தேசிய எழுச்சி யூட்டும் இந்த நாவலில் வரும் சில பாடல்களை பாரதியாரைக் கொண்டு தமிழில் மொழி பெயர்த்தார். பாரதியாரின், 'வந்தேமாதரம்' இப் பாடல்களில் ஒன்று. மகேச குமார் சர்மாவின் எழுத்துக்கள் அவர் காலத்தில் வெளிவந்த முக்கியத் தமிழ் இதழ்களில் வெளிவந்தன. குறிப்பாக தேசியச் சிந்தனையோடு தமிழை வளர்க்க பாடுபட்ட பத்திரிகைகளில் மகேசகுமார் சர்மா எழுதி வந்தார். பாரதியாரின் 'சக்ரவர்த்தினி', வ.வே.சு. ஐயரின் 'பால பாரதி', ஜி. சுப்பிரமணிய ஐயரின் 'சுதேச மித்திரன்' ஆகிய இதழ்களில் மகேசகுமார் சர்மா தொடர்ந்து எழுதினார்.

இந்திய எழுச்சியின் இடி முழக்கமாக ஒலித்த வந்தே மாதரத்தை அளித்த 'ஆனந்த மடம்' என்னும் நாவலை வங்கமொழியினின்று நேரே தமிழில் மொழி பெயர்த்து,

---

* மேற்படி நூல்; பக். 398.

1908-ல், முதல் முறையாக வெளியிட்டவர் மகேசகுமார் சர்மா. தேசபக்தர் ஜி. சுப்பிரமணிய ஐயரின் அருமையான முன்னுரை இந்நூலில் உள்ளது. தேசபக்தி பிரசாரத்திற்கு 'புது வழி' யையும் பயன்படுத்த வேண்டும் என்று முன்னுரையில் கூறுகிறார்.

தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், பங்கிம் சந்திரரின் வந்தே மாதரத்தை முதல் முதலில் மகேசகுமார் சர்மாவின் ஆனந்தமட மொழி பெயர்ப்பு நூலுக்காக தமிழாக்கம் செய்தரர், இதற்குரிய அகச்சான்று இந்நூலில் உள்ளது.

பாரதியார் தமது வேண்டுகோளை உதவியதை முகவுரையில் மகேசகுமார் சர்மா பின் வருமாறு நன்றியுடன் குறிப்பிட்டுள்ளார்.

''இதில் வரும் வந்தே மாதரம் பாடலையும் ஜயதேவ கவியின் கீத கோவிந்த கீர்த்தனைகளில் சிலவற்றையும்,* நான் கேட்டபொழுதெல்லாம் தமக்குள்ள அவசரமான வேலைகளை கூடப் பாராட்டாமல் மனமுவந்து தயவு கூர்ந்து இன்சுவை யொழுகும் செந்தமிழ்ப்பாக்களில் மொழிபெயர்த்து பகரித்த தேசபக்த ஆசுகவியும் 'இந்தியா' பத்திராசிரியருமான ஸ்ரீ. யு.த.சி. சுப்பிரமணிய பாரதியாரிடம் நான் பெரிதும் நன்றிக்கடன் பட்டவனாயுள்ளேன்.''**

பாரதியாருக்கும், மகேசகுமார் சர்மாவிடம் மிக்க மதிப்புண்டு. இவருடைய எழுத்தாற்றலையும், அது பெரிதும் பயன்படுத்தப்படாமல் போனதையும் குறித்து பாரதியார் கூறியதாவது:

---

* ஆநந்தமடம் முகவுரை; பக். ix

** இவை. பாரதியார் கவிதைப் பதிப்புகளில் இன்னமும் சேர்க்கப்படவில்லை.

''இவருடைய கல்வியையும், அறிவுத் தெளிவையையும், ரஸிகத்தன்மையும் தமிழ்நாட்டாருக்குப் பலமுறை நன்கு திருஷ்டாந்தப்படுத்திக்காட்டியிருக்கிறார்...... இப்படிப் பட்ட பண்டிதர்களைத் தமிழ் நாட்டார் போதியபடி ஆதரவு செய்து அவர்களை வேறு ஸாதாரணப் பிரவிருத்திகளில் மனம் செலுத்தாதபடி காத்துக்கொள்ளவில்லையென்ற குறை என் மனதிலிருக்கிறது.''*

சுய விமர்சனக்குரல்

பாரதியாரின் சுய விமர்சனக்குரல், பண்டைத்தமிழ்ப் புலவர்களுக்கிருந்த பெருமித வுணர்ச்சியின் பாற்பட்டதே. பண்டைய இலக்கண நூலாகும் ''மன்னுடைமன்றத்து ஓலை * தூக்கினும் தன்னைப் புகழ்தலும் தரும் புலவோர்க்கே'' எனக் கூறுவர்.

பாரதியாரை, சீட்டுக்கவி-ஓலைத்தூக்கு-எழுதத்தூண்டியவர் நம் நன்றிக்குரியவர். சீட்டுக் கவியால் பாரதியார் பயனடையவில்லையென்றாலும், ஒரு புதிய சகாப்தம் தன்னில் இருந்து தொடங்குகிறது என்பதை தமிழர்கள் உணர்ந்திட ஒரு சுய விமர்சனக் குரலை, ஓலைத் தூக்கில் கேட்கும் பயனைப் பெற்றோம்.

முதல் ஓலைத் தூக்கை பதினைந்தாம் வயதில் (1897-ல்) எழுதினார்; முப்பத்தேழாம் வயதில் (1919-ல்) மற்றொரு ஓலைத் தூக்கை எழுதினார். இரண்டுமே எட்டயபுரம் மன்னருக்கு எழுதப்பட்டது.

---

* ஞானரதம் முன்னுரை; ஆறாம்பதிப்பு; பாரதி பிரசுராலயம்; பக். 8.

ஏழாம் வயதில் கவிபுனையத் தொடங்கி, பதினோராவது வயதிலேயே 'பாரதி'ப் பட்டம் பெற்ற சுப்பிரமணிய பாரதியார், **தனது இருபத்திரண்டு ஆண்டு கால கவிதை வாழ்விற்குப் பின் எழுதிய ஓலைத் தூக்கில்தான் தமது சுய விமர்சனக் குரலைக் கொடுத்தார்.**

1897-ல்எழுதிய முதல் ஓலைத் தூக்கில் தமது தமிழ்ப் பற்றையும் தமிழ்க்கல்வியின் தாழ்ச்சியையும் பின்வரும் ஆசிரியப்பா அடிகளில் குறிப்பிட்டார்.

பெருஞ்சிறப் பேற்றுப் பிறைச் சடைக் கடவுளும்
அருந்திரு நூலொன் றருளப் பெறீஇ
இன்னமு தினுஞ்சுவை எய்வுறீஇ அமைந்த
செந்தமிழ்த் திருமொழி சிறிதுமா தரிப்பவர்
இன்மையின் இந்நாள் இனிதுகற் பவர்க்கு
நன்மை பயவாது நலிந்திட, மற்றைப்
புன்மொழி பலவும் பொலிவுற லாயின.

'செந்தமிழ்த்திருமொழியின்' இடத்தில் 'புன்மொழி' யின் ஆதிக்கம் தோன்றியதை பதினைந்தாம் வயதிலேயே பாரதியார் எடுத்துக் காட்டிவிட்டார்.

இந்த வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தத் தாம் தோன்றியதாக 1919-ல் எழுதிய ஓலைத்தூக்கில், சுய விமர்சனக் குரலாக இசைத்தார்.

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்புடைத்துத்
தமிழ் மொழியைப் புகழி லேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே!

புதிய கவிதைக்கு புதுப்பாதை அமைத்த தெப்படி? எனும் வினாவிற்கு பாரதியாரே விடையளித்து, அயல்

நாட்டவரும், புதுப்பாதையில் பீடுநடை போடும் தமது கவிதைகளைப் பாராட்டுவதாகப் பாவிசைத்தார்.

''சுவை புதிது, பொருள்புதிது, வளம்புதிது,
சொற்புதிது சோதி மிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மகாகவிதை'' என்று நன்கு,
பிராண் ஸென்னும் சிறந்தபுகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறரு மாங்கே
விராவுபுக ழாங்கிலத் தீங் கவியரசர்
தாமுமிக வியந்து கூறிப்
பராவியென்றன் தமிழ்க் கவியை மொழிபெயர்த்துப்
போற்றுகின்றார்''.........

சுவை, பொருள், வளம், சொல் அனைத்திலும் புதுமையைப் புகுத்தி, தமிழ்க் கவிதைக்கு புதிய திருப் பத்தை பாரதியார் வகுத்தளித்தார். தமக்கு முற்பட்ட புலவர்களின் மொழி நடையை, ''அலௌகிக அந்தகார நடை'' எனக் குறிப்பிட்ட பாரதியார், காலத்திற்கேற்ற கவிதை நடையைப்பற்றிய தமது கருத்துகளை ''பாஞ் சாலி சபத''த் முகவுரையில் ஐயந்திரிபுக்கு இடமில் லாமல் தெளிவுப்படுத்தியுள்ளார்.

''நான் என்னுடைய சொந்த பாஷையில் என் முழு மூளையையும் கசக்கிப் பிழிந்து 'பாஞ்சாலி சபதம்' எழுதி யிருக்கிறேன்.'' இவ்வாறு பெருதுதமாகப் பாரதியார் கூறியதையும் இங்கு நினைவு கொள்வோம்.

1912-ல் புதுச்சேரியில் வெளிவந்த பாஞ்சாலி சபதத் தின் முகவுரை, மக்கள் கவிதை நடைக்கு வழிகாட்டியது.

''எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்துக் கொள்ளக் கூடிய சந்தம் பொது ஜனங்கள் விரும்பும்மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும்...தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தர வேண்டுமென்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலே தூண்டினாளாதலின், இதன நடை நம்மவர்க்குப் பிரியந்தருவதாகும் என்றே நம்புகிறேன்.''

பாரதியாரின் முகஉரையில் உள்ள பின்வரும் கருத்துகளின் அடிப்படைமீதுதான் அவர் தமிழ்க்கவிதைக்கு புதுத் திருப்பத்தை அளித்தார்.

''எளிதில் அறிந்துக் கொள்ளக்கூடிய சந்தம்.''

''பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு.''

''ஓரிரண்டுவருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ்மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவது.''

பாஞ்சாலி சபதம் முதற்பாகத்திற்கு பொருள் விளக்கமும் குறிப்புகளும் பாரதியாராலேயே எழுதப்பட்டுள்ளன. மக்கள் மொழி நடையையும், மக்கள் இலக்கிய உருவகங்களையும், ஒரு காப்பியத்தில் பயன்படுத்தி காப்பிய நெறியில் புதியத் திருப்பத்தை பாரதி அளித்தார். பாரதியாரின் பின்வரும் பொருள் விளக்கம்—குறிப்புகள், கவிதை நடையைப்பற்றிய அவருடைய புதிய பார்வையைப் புலப்படுத்துகின்றன.

'' (பாட்டு 182—முதல் 193 முடிய]

லால லாலலா லா லாலா

லால லாலலா லா

என்ற மெட்டுள்ள சிந்துகள், தெருவில் ஊசிகளும், பாசிமணிகளும் விற்பதோடு பிச்சையெடுக்கவும் செய்கிற பெண்கள் 'மாயக்காரனம்மா— கிருஷ்ணன் மகுடிக்காரனம்மா' என்று பாடும் நடை, சூதாட்ட வருணனைக்கும் அதில் ஏற்படும் பரபரத்த வார்த்தைகளையும் செய்கைகளையும் விளக்குதற்கும் இந்நடை மிகவும் பொருந்திய தென்பது எளிதிலே காணப்படும்.''

இவை, மரபு வழி இலக்கிய நெறியாளர் மீது வீசப்பட்ட வெடிகுண்டுச் சொற்களாகும். ஊசிகள், பாசிமணிகள் விற்பதோடு, பிச்சையெடுக்கும் பெண்கள் பாடும் நடையை ஒரு காப்பியத்தில் துணிவுடன் ஆண்டு வெற்றி பெற்று பொருத்தத்தையும் சுட்டிக்காட்டுவது மாபெரும் காப்பிய நெறிப் புரட்சியாகும்.

படிப்பற்ற பாமரர் நடையை, கற்றாம், பாடி மகிழ்ந்து, சுவைக்க வைத்தது புரட்சி அல்லவா?

மேலும் ஓரிடத்தில் மக்கள் வழக்கில் உள்ள சந்தத்தின் சிறப்பை உணர்த்துகின்றார் பாரதியார்:

''பாட்டு 53 முதல் 83 முடிய நாலடி, எண் சீர்ச் சிந்து.

லாலல லாலல லாலலா என்ற மெட்டு.

சம்பாஷணைகள் முதலியவற்றைத் திறனுடனும் உண்மையுடனும் காட்டுவதற்கு இப்பாட்டின் நடை மிகவும் சௌகர்ய மாததலைப் பாடிப்பார்த்து உணர்ந்து கொள்க.'']

தமிழ் இலக்கிய வரலாற்றில் மரபுவழி இலக்கிய நெறி மக்கள் வழி இலக்கிய நெறி எனும் இரு பரம்பரைகள் ஒன்றோடு ஒன்று போராட்டம் நடத்தி ''இந்தப் போராட்டம் பாரதியில் வந்துதான் முற்றுப் பெற்றது'' எனப்பல்கலைச் செல்வர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் புகழ்ந்துரைத்தார்.

''மக்கள் பாடலாகிய சிந்துவைக் காவிய ஆக்கத்துக்கும் பயன்படுத்தலாம் என்று காட்டியவர் பாரதியார். அவருடைய பாஞ்சாலி சபதத்திலும், கண்ணன் பாட்டிலும் உள்ள பாடல்களில் பெரும்பாலானவை சிந்துப் பாடல்களே.''*

பாரதிக்குமுன் சிந்துவைப் பயன்படுத்தியப் புலவர்கள் உண்டென்றாலும், காப்பியத்திலே சிந்துவை காவிய நயங்கள் குறைவுபடாது' பயன்படுத்தி, அதற்கு ஓர் இலக்கிய பீடத்தை அளித்த காரணத்தினால்தான் **'சிந்துக்குத் தந்தை'** எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சாற்றினார்.

வ. வே. சு. ஐயர் கூறுகிறார்

பாரதியாரிடம் 'புதிய நடை', 'புதிய வழி'' தோன்றக் காரணமென்ன?

இந்தக் கேள்விக்கு, பாரதியாரின் யாத்த நண்பர் வ.வே.சு.ஐயர், 1881-1925) பின்வருமாறு விடையிறுத்துள்ளார்.

''இயற்கையாகவே கவிதை நிரம்பிய பிரதிபையோடு கூடிய அவருக்கு பழைய காவியங்களின் பழக்கமும், புதிய கல்வியின் வேகமும், பாரத தேசத்தின் புதிய ஜீவோதயமும் சேர்ந்த புதிய நடையையும், புதிய வழியையும் கற்பித்தன.''**

பாரதியார் தமது ''புதிய நடை,'' ''புதிய வழி''யின் மூலம் தோற்றுவித்த மறுமலர்ச்சியை வ.வே.சு. ஐயர் வரலாற்றுப் பின்னணியுடன் மிகத் தெளிவாக 'மறுமலர்ச்சி' எனும் கட்டுரையில் பின் வருமாறு திறனாய்வு செய்துள்ளார்.

---

* தமிழ்ப் பொழில்-சித்திரை; 1965.
** வ.வே.சு. ஐயர் கட்டுரைகள். பக்.26

''நாட்டில் புதிய இயக்கம் பிறந்ததும், அதற்கேற்ற கவி ஒருவரும் தோன்றினார். அவர் பெயர் ஸுப்ரஹ்மண்ய பாரதி என்று நாம் சொல்லுவதற்கு முன்னேயே எல்லோரும் கண்டு பிடித்திருப்பார்கள். அவரும் பழைய இலக்கிய வகையில் தான் பழகினவரானாலும், புதிய இயக்கமானது அவரைத் தனக்கு ஓர் பிரதானமான ஆதாரமாக ஆக்கிக் கொண்டு விட்டது. அவரும் அந்த இயக்கத்தின் வேகத்தால் தூண்டப்பட்டு, பழைய இலக்கணக் கவிஞரின் துறைகளை விட்டுப் பொது ஜனானுசாரமான துறைகளிலேயே பாடத் துவக்கினார்.''*

புரட்சி வீரர் வ.வே.சு ஐயர் '**புதிய இயக்கம்**' என்று குறிப்பிடுவது, 1906-ல் வங்கப் பிரிவினையை எதிர்த்து தோன்றிய சுதேசிய இயக்கத்தையாகும். இந்திய தேசிய இயக்கம் 1885-ல் தோன்றியதென்றாலும் தீவிரவாத தேசிய அணியைச் சேர்ந்தவர்கள் 1906-ஆம் ஆண்டில் தோன்றிய சுதேசிய இயக்கத்தைத்தான் தனியாகச் சிறப்பித்து கூறுகிறார்கள்.

1909-ல் வெளிவந்த 'ஜன்ம பூமி' (ஸ்வதேச கீதங்கள் இரண்டாம் பாகம்) யில் பாரதியார் கூட தமது முகவுரையில் வங்கத்தில் தோன்றிய சுதேசிய இயக்கத்தைத் தான் சிறப்பித்துக் கூறுகிறார்.

பாரதியார் கூறியதாவது:

''சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில், சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய 'தேசபக்தி' என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால்

---

* வ.வே.சு. ஐயர் கட்டுரைகள்-பக்.26.

புதிய சுடரினடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரண மாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து மாதா வின் திருவடிக்குப் புனைந்தேன்...மறுபடியும் தாயின் பாத மலர்க்குச் சில புதிய மலர்கள் கொணர்ந்திருக்கின்றேன்.''

ஆக, வ. வே. சு. ஐயர் குறிப்பிட்டது போல், பாரதி யாரின் 'புதிய நடை'க்கும், 'புதிய வழிக்கும்' தேசபக்தியே மூலமாகும் என்பதை பாரதியார் வாக்கினாலும் அறி கிறோம்.

இந்தப் 'புதிய-இயக்கம்' பொதுமக்களைத் தழுவியது என்பதை குறிப்பாக பாரதியார் 21-9-1909-ஆம் ஆண்டு **'இந்தியா'** இதழிலும் பின்வருமாறு சுட்டிக் காட்டிகிறார்.

''நவீனக் கிளர்ச்சி (நவசக்தி) இப்போது தோன்றி யிருக்கிறது. இது ராஜவம்சத்தில் தோன்றவில்லை. ஆனால், சாமான்ய ஜனங்களிடத்திலேயே தோன்றி... பரவி வருகிறது.''*

இந்த 'சாமன்ய ஜனங்களுக்காக'த்தான் பாரதியார் புதிய நடையை, புதிய வழியைப் பின் பற்றினார் என்று வ. வே, சு. ஐயர் மேலும் விளக்கினார்.

''பழைய வழிகளில் இவர் தேர்ச்சியற்றவர் என்று நினைக்க வேண்டாம். பாரத தேவியின் திருத்தசாங்கம். திருப்பள்ளி எழுச்சி முதலிய செய்யுள்கள் இவருடைய திறமையை ஒருவாறு விளக்கும். ஆனால் இவர் **வேணு மென்றே பொது ஜன ரஞ்சனமான வர்ண மெட்டுக்களைக் கையாடுகிறார்.** இந்த மெட்டுக்களில் உன்னதமான எண் ணங்களும் உணர்ச்சிகளும் பாடப்பட்டிருப்பது சாமானிய ஜனங்களுக்குள் இவ்வுணர்ச்சிகளும் எண்ணங்களும் பரவு வதற்குப் பெரிய உதவியாக இருக்கிறது.''**

---

* குமரிமலர். மார்ச்சு 1975.

** வ. வே. சு. ஐயர் கட்டுரைகள்; பக். 27. அழுத்தம் இந்நூலாசிரியருடையது.

தேசபக்தியின் பேரொளியிலேதான் **அனைத்தும் மலர்ச்சியுறுகின்றன** எனும் கொள்கையை வலியுறுத்தியவர் பாரதியார். தேசபக்தியை, தமது தமிழ்க் கவிதையின் ஆதார சுருதியாக அமைத்து, பொருளாதாரச் சுரண்டல் எதிர்ப்பு, சமூக சீர்திருத்தம், மொழிப் பற்று முதலான வற்றையும் பாடு பொருளாக்கியப் புதுமையை பாரதியார் தொடக்கி வைத்தார்.

செந்தமிழ்-மதிப்புரை

1908-ல் வெளிவந்த பாரதியாரின் 'ஸ்வேத கீதங்கள்' நூலை, அதே ஆண்டில் தேசியவுணர்ச்சி கொண்ட தமிழ்ப் புலவர்கள் வரவேற்றனர். நான்காம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில வெளிவந்த '**செந்தமிழ்**' திங்கள் இதழ், 'ஸர்வதேச கீதங்கள்' நூலுக்கு ஒரு நீண்ட மதிப்புரை எழுதியது. **தேசபக்தி முதன் முறையாக, புது வழியாக, தமிழ் மொழியில் 'சுவதேச கீதங்கள் வெளிப்பட்டது என்லும் உண்மையை** எடுத்துக் **காட்டியது**.

'**புத்தகக் குறிப்பு**' எனும் பகுதியில் வெளிவந்ததின் சுருக்கம் வருமாறு:

''சுவதேச கீதங்கள்:- இப்பெயர் கொண்ட பாடற் றிரட்டொன்று சென்னையினின்று சிறக்க வெளிவரும் 'இந்தியா' பத்திராதிபர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியவர் களால் இயற்றி வெளியிடப்பட்டுள்ளது. இதன் பெயரைக் கேட்கும் போதே '**இத்திரட்டு நம்மவர்க்கு** ஒரு **புதுவழியைக் கற்பிக்க வந்ததென்பது விளங்கும்**...

நம் தமிழ் மொழியில், ஈசுவர சம்பந்தமான பாடல் களும் காவியங்களும் புராணங்களும் பிறவும் நிரம்பவுண் டாயினும் நம்மவர்க்குத் தற்காலம் இன்றியமையாது வேண்டத் தக்கனவும் **தேசாபிமானத்தை உண்டாக்க வல்ல னவுமான உயர்கவிகள் கிடைத்தில**......

இப்போது பாரதியார் தாமியற்றிய தேச கீதங்களைத் திரட்டிச் சிறு புத்தகமாக வெளியிட்டிருப்பது எமக்கும் பெரு மகிழ்ச்சி விளைத்தது. செய்யுள்களும் கீதங்களும் சொன்னயம் பொருணயங்களுடையன வாயிருத்தலோடு, படிப்போர் மனதில் எழுச்சியை உண்டாக்க வல்லனவாக வும், விளங்குகின்றன...

இயற்கையில் இனிய கவிகள் பாடவல்ல **பாரதியார் தம் சக்தியை இத்தகைய புது வழியில் திருப்பி உபயோகப்படுத்தி யிருப்பது, நம்மவர்க்கு ஒரு நல்வழியைக் கற்பிக்கின்றது.** இத்தகைய கீதங்கள் தேசாபிமானிகளான நந்தமிழ் நாட் டாரெல்லாம் படித்து மகிழ்வதுடன் முக்கியமாகத் தம் மக்கட்கு இவற்றை மனப்பாடம் பண்ணும்படி செய்வித்தல் வேண்டப்படுவது என்போம்.''*

பாரதியின் தேசாபிமானப் புது வழியை தமிழ்ப் புலவர் உலகச் சார்பில் செந்தமிழ் பாராட்டியது.

நாலு திசையும் ஸ்வாதந்தர்ய
நாதம் எழுகவே!
நரக மொத்த அடிமை வாழ்வு
நைந்து கழிகவே!

என்று பாரதியார் கொடுத்தது, புதுக்குரல்; போர்க்குரல். ஆம்; விடுதலைப் போர்க்களத்தின் தனியொரு புலவனாக நின்று கொடுத்த காலத்தின் குரல்.

பாடல்களின் பண்ணழகு

பாரதியார் அளித்த புதியத் திருப்பங்களில் மற் றொன்று பண்ணழகு அமைந்த பாடல்களைத் தந்தது.

---

* செந்தமிழ் - தொகுதி 6, பகுதி 3; பக்: 105-106. அழுத்தம் இந்நூலாசிரியருடையது.

பொது மக்கள் தம் கவிதைகளைப் பாடிப் பழக வேண்டும் எனும் சீரிய நோக்கத்தால், இராக தாள முறையை அமைத்து தமது பாடல்களை பாரதியார் அச்சிட்டார்.

சமய, பௌராணிக மரபிற்கு பயன்படும் வகையில் பாரதியாருக்கு முன் இசைப் பாடல்கள் தோன்றின. ஆனால் விடுதலை வேட்கையுடன் பொது மக்களை ஒன்றுத் திரட்டுவதற்காக இசைப் பாடல்களை பாரதியார் தான் முதன் முறையாகப் படைத்தார்.

பாரதியார், கவிதை எழுதினார் என்பதைவிட கவிதை பாடினார் என்பதே உண்மையாகும்.

பாரதியாரின் கண்ணன் பாட்டுக்கு எழுதிய முன்னுரையில் வ. வே. சு. ஐயர், பாடல்களில் அமைந்துள்ள பண்ணழகை எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறார்:

''இன்னொன்று; கவிதையழகை மாத்திரம் அனுபவித்து விட்டு, இந்நூலின் பண்ணழகை மறந்துவிடக் கூடாது, இதிலுள்ள பாட்டுக்களிற் பெரும்பாலானவை தாளத்தோடு பாடுவதற்காக எழுதப்பட்டவையாயிருக்கின்றன. கடற்கரையில், சாந்தி மயமான சாயங்கால வேளையில் உலகனைத்தையும் மோஹ வயப்படுத்தி நீலக் கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனா கர்வத்தோடும், சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடியுள்ளதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந்நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக மதிப்பர்.''

பழம் பண்டிதர்கள்-புரியாமல் எழுதுவதுதான் பாட்டு என்பவர்கள்-உணர்ச்சி வேகமும் இசைப் பண்புகளும் நிறைந்த பாரதி பாடல்களை உரைநடையாகப் படித்து இடர்ப்பட்டு பாரதியார் பாடல்களை **'வெள்ளைப் பாட்டுக்கள்'** என அறியாது கூறினர்.

தடை செய்யபட்ட ''கனவு''

தமது சுயசரிதையை கவுதையில் எழுதியதை, ஒரு புது மையாக, பாரதியாரே குறிப்பிடுகிறார்.

1910-ல் பாரதியாரின் சுயசரிதைப் பாடல்கள் **'கனவு'** எனும் பெயரில் வெளிவந்தது. அதன் முகவுரையில் பாரதியார் குறிப்பிட்டதாவது;

''இச்சிறிய செய்யுள் நூல், விநோதார்த்தமாக எழுதப் பட்டது. ஒரு சில பாட்டுக்கள் இன்ப மளிக்கக் கூடியதானாலும் பதர் மிகுதியாகக் கலந்திருக்கக் கூடும். இதன் இயல்பு தன் கூற்றெனப்படும். அதாவது, கதாநாயகன், தன் சரிதையைத் தானே நேராகவே சொல்லும் நடை. இக் காவியமுறை நவீனமானது. இஃது தமிழறிந்த நூலோர்கள் அங்கீகரிக்கத்தக்கது தானா என்று பார்க்கும் பொருட்டுச் சிறிய நூலொன்றை முதலில் பதிப்பிடுகிறேன். இதனைப் பதம் பார்த்து மேலோர்கள் நன்றென்பாராயின் இவ்வழியிலே வேறு பல வெளியாக்குவேன்.''

''**இக்காவிய முறை** நவீனமானது'' எனக் குறிப்பிடும் பாரதியார் இதை ஒரு சோதனை முயற்சியாகக்கருதினார். தமிழில் கவிதை வடிவில் அச்சில் தோன்றிய முதல் சுயசரிதை நூல் இதுவாகும். பாரதியாருக்கு முன் தேசபக்தர் வ. உ. சி. தமது சுயசரிதையை கவிதையில் எழுதியிருந்தாலும், நூல் வடிவில் பின்பே வந்தது.

இந்நூலுக்கு 1911-ல் தடை விதிக்கப்பட்டது; அதாவது புதுச்சேரியில் இருந்து சென்னை மாநிலத்திற்குள் **'கனவு** **'ஆறில் ஒரு பங்கு'** என்ற இரு நூல்களும் நுழையத் தடை செய்யப்பட்டன.

1911 டிசம்பர் 6-ல் சென்னை மாநில அரசு, இந்திய அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. சுப்பிரமணிய பாரதி எழுதிய ''கனவு என்னும் கவிதையும் பிற

பாடல்களும், 'ஆறில் ஒரு பங்கு' எனும் சிறு கதையும்'' பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் கொண்டு வரக் கூடாது எனக் கடல் சுங்க விதி 19-ன் கீழ் தடை செய்யப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. புதுச்சேரியில் இந்த நூல்கள், நிறைய உள்ளன. மதுரை, திருநெல்வேலியில் இந்த நூல்களைப் படிப்போர் தொகை அதிகமாக உள்ளது என்றும் சென்னை அரசாங்க வேண்டுகோள் குறிப்பிட்டது.

இந்தியன் பிரஸ் ஆக்ட்—1910-ன் பன்னிரண்டாம் பிரிவின் கீழ் ''கனவும்'', ''ஆறிலொரு பங்கும்'' தடை செய்யப்பட்டன தடைக்கான காரணங்கள் வருமாறு: திருநெல்வேலி சதி வழக்கில் ஈடுபட்டோரின் கடிதப் போக்கு வரத்துகளில் இந்த இரு நூல்களில் இருந்து மேற்கோள்கள் எடுத்தாளப் பட்டுள்ளன. இவர்கள் வீடுகளில் இந்த இரு நூல்களும் இருந்தன.

ஏப்ரல் 8, 1914-ல் பிரிட்டிஷ் நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் ராம்ஸே மெக்டனால்டுவிற்கு பாரதியார் எழுதிய கடிதத்திலும் இந்தக் காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரு நூல்களில் எவையெவை ஆட்சேபணைக் குரியன என்பவை அட்வகேட்—ஜெனரல் கருத்திற்கிணங்க அடையாளமிடப் பெற்று, அதன் ஆங்கில மொழிபெயர்ப் களுடன் டெல்லி-மத்திய ஆட்சிக்கு அனுப்பி வைக்கப் பட்டன.*

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் தடை செய்யப்பட்ட முதல் தமிழ்க் கவிதை நூல் 'கனவு' என்பதேயாகும்.

தடை செய்யப்பட்டதை எதிர்த்து பாரதியார் 8-10-1912-ல் இந்து பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதினார்.

---

* [G.O.No.1909-1910 (Confdl) dated 6-12-1911]

'கனவு', 'ஆறிலொரு பங்கும்', ராஜத்துவேஷமானவை எனும் ஊகத்தின் பேரில் தடை செய்யப்பட்டிருக்கலாம்; அவையிரண்டும் ஆபத்தை விளைவிப்பன அல்ல என்றும் கடிதத்தில் குறிப்பிட்டார். மேலும், எழுத்துச் சுதந்திரத்திற்காகப் போராடுவதாகவும், பொதுமக்கள், பத்திரிகைத் துறையினர் இப்பிரச்னையை கவனிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.*

தமது நூல்களுக்கு விதிக்கப்பட்டத் தடையை எதிர்த்து, ஏப்ரல் 8, 1914-ல், பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தொழிற் கட்சித் தலைவர் ராம்ஸே மெக்டனால்டுவிற்கு பின்வருமாறு எழுதினார்.

''ஆஷ் கொலை வழக்கில் சதிகாரர்களெனக் கூறப்பட்ட சிலரிடம் நான் எழுதிய ''தீங்கற்றகாதல் கவிதை'' யும் சமூக சீர்திருத்த நாவலும் இருந்ததாக் குறிப்பிடப்பட்டது. இந்த நூல்களை வைத்திருந்தவர்கள், வழக்கில் விடுதலை செய்யப்பட்டனர் என்பதும் கவனிக்கத் தக்கது. என்னுடைய நூல்களை வைத்திருந்தார்கள் என்பதொன்றே இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு! அதுவும் நிரூபிக்கப்பட வேண்டியது!''

பாரதியார், 'தீங்கற்ற காதல் கவிதை' (harmless love poem) என்று 'கனவு' கவிதையைக் குறிப்பிடுகிறார்.

பிரிட்டிஷ் வேவுகாரர்களை குறிப்பிடும் இடமும், ஆங்கிலக் கல்வியை பேடிக் கல்வி என்று குறிப்பிடும் இடமும், 'கன'வில் குறிப்பிடத்தக்கன.

---

* பாரதி தமிழ்-இன்ப நிலையம் வெளியீடு—பக்.134

''வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்ந்தி டச்செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெடுத்த புலையுயிர்ச் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல் போல்.''

என்னுமிடத்தில் பிரிட்டிஷ் வேவுகாரர்களை ''புலையுயிர்ச் சாரர்கள்'' எனக் கண்டித்துள்ளார், பாரதியார்.

''முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்

பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்;
என்ன கூறிமற் றெங்கன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே!

இவ்வாறு ஆங்கிலக் கல்வியை பேடிக்கல்வி என்று சாடி, அது தேசிய உணர்ச்சியைக் கொல்லும் எனும் கருத்தை வலியுறுத்தினார், பாரதியார்.

புதுக்கவிதையின் தந்தை

புதுக் கவிதை அல்லது, 'வசன கவிதை' என்றும் கூறப் படுவதின் தொடக்கத்தையும் பாரதியாரின் கவிதைகளில் காண்கிறோம்.

அமெரிக்க தேசத்து கவிஞர் வால்ட் விட்மன் அவர் களைப்பற்றி குறிப்பிடும் பொழுது பாரதியார் வசன கவிதையைப் பற்றி பேசுகின்றார்.

''இவருடைய பாட்டில் ஒரு புதுமை என்னவென்றால், அது வசன நடை போலதான் இருக்கும்...வால்ட் விட்மன் 'கவிதையை பொருளில் காட்ட வேண்டுமேயல்லாது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோஜனமில்லை'யென்று

கருதி ஆழ்ந்த ஓசை மாத்திரம் உடையதாய் மற்றப்படி வசனமாகவே எழுதி விட்டார்.'' காட்சி, சக்தி, காற்று, கடல், ஜகச் சித்திரம், விடுதலை என்னும் ஆறு தலைப்புகளில் அமைந்துள்ள கவிதைகள், 'வசனகவிதை' களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 'வசன கவிதை' என்னும் பெயர் பாரதியாரால் வைக்கப்படவில்லை.

சிக்கலான யாப்புகளில் எல்லாம் கவிதைகளைப் படைத்தப் பழம் பண்டிதர்கள், உரை நடையில் சேர்ந்தாற் போல எழுதச் சோர்வுப்பட்டதுண்டு. 'வசன கவிதை' என்பதை எண்ணிப் பார்க்கவும் துணிவு — தெளிவு பெறாத காலத்தில் பாரதியார் ''புதுக் கவிதைகளை''ப்படைத்ததும் தமிழ்க்கவிதைக்கு அளித்த திருப்பங்களில் ஒன்றாகும்.

தமக்குப் பின் ஒரு கவிதா பரம்பரைக்கு வழி வகுத்த பாரதியார், தமது பாஞ்சாலி சபதத்தை வருங்கால கவிஞர்களுக்கு 'ஸமர்ப்பணம்' செய்தார்.

''தமிழ் மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள் செய்யப்போகிற **வரகவிகளுக்கும்** அவர்களுக்கு தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப் போகிற **பிரபுக்களுக்கும்** இந்நூலைப் பாதகாணிக்கையாகச் செலுத்துகிறேன்.''*

எதிர்காலத் தமிழ்க் கவிஞர் பரம்பரைமீது பாரதியார் கொண்ட, புலமைக் காய்ச்சல் அற்ற, விழுமிய தன்னம்பிக்கையும், புலவருலகச் சிந்தனையில் ஒரு புதியதிருப்பம்தான்.

1916 - ஏப்ரல் 3 ஆம் தேதி சுதேசமித்திரனில் வெளிவந்த ''தமிழ்'' என்னும் கட்டுரையின் பின்வரும் பகுதி, அவரிடமிருந்த தன்னம்பிக்கையையும் எதிர்காலத் தமிழ் வளர்ச்சியைப்பற்றிய நம்பிக்கையையும் காட்டுகிறது.

---

* பாஞ்சாலி சபதம்-பாரதி பிரசுராலயம்.

''உலகத்திலுள்ள ஜாதியர்களிலே **ஹிந்துஜாதி** அறிவுத்திறமையில் மேம்பட்டது. **இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய ஸாம சிகரம்** போல் **விளங்குகிறோம்.*** எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல வலிமையும், திறமையும் உள்ளத்தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால், போன நிமிஷம் போய்த் தொலைந்தது; இந்த நிமிஷம் ஸத்யமில்லை; நாளை வரப் போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்.''**

''தமிழ்'' என்னும் கவிதையிலும், பாரதியாரின் தமிழ் வளர்ச்சிக்கான வழிமுறைகளையும் பற்றி இசைக்குமிடத்தில் பெயரளவில் ''நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு ''வாழ்ந்திடாமல்'' 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என அறிவுறுத்துகின்றார். 'பரவும் வகை செய்தலுக்கு' பாரதியார் வழிகாட்டியுள்ளார். அதுவே, தமிழ்வளர்ச்சி வரலாற்றின் மாபெரும் திருப்பமாக அமைந்தது.

---

* அழுத்தம் இந்நூலாசிரியருடையது

** பாரதி தமிழ்— இன்பநிலையம்; பக். 175.

பாரதியார் பாராட்டு பெற்ற தமிழ்ப்புலவர் மரபு

தொன்மைநலம் வாய்ந்த தமிழ்ப்புலவர் மரபின் மேன்மைப் புகழைப் பாடவேண்டும் என பலவாறு வற்புறுத்தியவர், பாரதியார்.

தேசிய எழுச்சியின் மூலக் கூறுகளில் பண்டையப் பண்பாட்டு நலம் பேணுதல், பெருமிதம் கொள்ளுதல் இயற்கையாக அமைந்து விடுகின்றன.

வாழ்க்கையின் உறுதிப்பொருள்களை- புருஷார்த்தங்களை-விளக்க வந்த பாரதியார், பொருள்பற்றிய தமது குறிப்புரையில் **'இனப்பெருமை சேருதல்'** என்பதையும் சேர்த்துள்ளார்.*

இனப் பெருமையை தமிழருக்கு கூவி அழைத்து, "தமிழா, உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள்,"** என உணர்த்துகின்றார்.

---

* பாரதியார் நூல்கள் (கட்டுரைகள்) பக்,302,

** மேற்படி நூல், பாரதி பிரசுராலயம்; பக். 300

''யாமறிந்த மொழிகளிலே'', ''யாமறிந்த புலவரிலே'' எனப் பாடுமிடங்களில் தமிழ்ப்புலவர் மரபு அளித்த மேன்மைகளை அறுதியிட்டுக் கூறுகிறார்.

கவிஞர்களில் திருவள்ளுவர், இளங்கோ, கம்பனை உச்சி மேல் வைத்து மெச்சுகின்றார்.

வள்ளுவர், இளங்கோ, கம்பன், தமிழினத்தின் அமரத் தன்மைக்கு அமுதளித்தவர்கள் எனப்பாராட்டுகின்றார்:

''சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்,
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்,
'எல்லையொன் றின்மை' எனும் பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழ்ச்
சாதியை அமரத்தன்மை வாய்ந்தது''

என்று உறுதிகொண்டிருந்தேன்.'' என்று பாரதியார் கூறினார்.

பாரதியாருக்கு சங்க இலக்கியப் புலவர்களைப்பற்றி ஒன்றுமே தெரியாதா? அவர்களைப் பாராட்டவில்லையே? எனச்சிலர் வினாவெழுப்பக்கூடும்.

பாரதியார் காலத்தில், சங்க இலக்கியப் பயிற்சி அப்பொழுதுதான், ஊர்ந்து பரவத்தொடங்கியது. பேரறிஞர்கள் மு. இராகவய்யங்கார், உ. வே. சாமிநாதய்யர் வாயிலாகச் சங்க இலக்கியச் செயதிகளை கேட்ட அளவிலேயே துள்ளிக்குதித்து பெருமிதம் கொண்டார். 'சங்க இலக்கியக் கல்வியை முழுவதுமாக துய்த்துப் பயன் பெறும் முன்பே பாரதியாரின் காலம் முடிவடைந்துவிட்டது.

ஆனாலும், அறிமுகமாகப் புரிந்துக்கொண்ட நிலையி லேயே பின்வருமாறுதுள்ளலுடன் கூறி மகிழ்ந்தார்.

''1800 வருஷங்களுக்கு முன்பாகவே இத்தனை பெருங்குணங்கள் வாய்க்கப்பெற்றுருந்த நாகரிக நாட்டிலே இவ்வளவு உயர்வு கொண்டிருந்த பெரியோரின் சந்ததி யிலே, இவர்கள் நடையிலும் செய்கையிலும் நிகரில்லாது கையாண்டு வந்த தமிழ்ப்பாஷையைப் பேசும் பெருங்குடி யில் நாம் பிறந்திருக்கிறோமென்பது அரிய மகிழ்ச்சி யுண் டாக்குகிறது.''*

இப் பாராட்டுரையை 1907-ல் தமது ''இந்தியா'' இதழில் தலையங்கமாக எழுதி மகிழ்ந்தார், பாரதியார்.

''ஐந்து மகாகாவியங்களிலே சிறந்ததாய் ''சிலப்பதி காரம் செய்த இளங்கோ முனிவர்'' என்ற பாரதியார் வாக்கின்மூலம் அவருக்கு ஐம்பெருங் காப்பியங்களைப் பற்றிய கணிப்பும் இருந்ததை அறிகிறோம்.

தமிழ்ப் புலவர் மரபின் தோற்ற காலத்தில் அதன் காவல் அரணாக விளங்கியது, மூவேந்தர் மரபு. இந்த மூவேந்தர் மரபின்மீதும் பாரதியாருக்கு பெருமதிப் பிருந்தது.

''மூன்று குலத்தமிழ் மன்னர்-என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்''

இவ்வாறு தமிழ்த்தாய் மகிழ்வாய் மொழிந்ததாகப் பாடினார், பாரதியார்.

---

* மேற்படி நூல், பக்-695

மூவேந்தர் மரபை அறியவொட்டாது தடுத் பேடிக் **கல்வியை**- ஆங்கிலக்கல்வியை-பாரதியார் சாடினார்.

சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்.
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததும்' தர்மம் வளர்த்ததும்

....

....

அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்.

தமிழ்மொழியின் வாழ்வும் வளர்ச்சியும் தமிழ்ப்புலவர்களின் ஆற்றலால் அமைந்தது என்பதைப் பாரதியார் போற்றினார். தமிழ்த்தாய் கூறுவதாக அமைந்த பாடலின் ஒரு பகுதி வருமாறு;

கள்ளையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்-பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்
தந்தை அருள்வலி யாலும்-முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன்-என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்

தமிழுக்கு பெரும் பழி ஏற்படுங்காலத்திலும் **அதைத்** துடைத்தெறியப் பயன்படுவது, **புலவர் தவ வலிமையே** என்று பாரதியார் முடிவாகப் பிரகடனப் படுத்துகிறார்.

பாரதியாரின் பத்திரிகைத் துறை குருநாதர் திரு.ஜி. சுப்பிரமணிய ஐயர் பழந்தமிழ்ப் புலவர் சிலரையும் பாரதியாரையும் இணைத்து பாரதியாரிடமே நேரில் பின்வருமாறு கூறினார்: ''கம்பனையும் ஔவையையும் இப்போது தான் நினைத்தோம்! நீரும் வந்தீர்-அவரினத்தவன் நான் என்று! கம்பன் காசுக்குப் பாடினான்! ஔவை அகப்பைக் கூழுக்குப் பாடினாள்! நீர் ஊருக்குப் பாடுகிறீர் இல்லையா?''*

தேசிய எழுச்சிக்கு, தமிழ்ப் புலவர்களின் நினைவுநாள் விழாக்கள் உறுதுணையாவன என்பதை, பாரதியார் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

''தமிழ் நாட்டில் இப்போது 'புதிய உயிர்' தோன்றியிருப்பதால், நாம் இவ்விஷயத்தில் தமோ குணஞ் செலுத்தாமல், கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகா கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.''

பாரதியார் மேலே '**புதிய உயிர்**' என்று குறிப்பிடுவது தேசிய எழுச்சியையாகும்.

இவ்வாறு தமிழ்ப்புலவர்களைப் போற்றிக்கொண்டாடுவது ''அறிவு வளர்ச்சிக்குப் பெருந்துணையாகும்'' என்பதையும் எடுத்துக் காட்டுகிறார்.

பாரதியார் மது கட்டுரைகளில் அகஸ்தியர், தொல்காப்பியர், புறநானூற்று பெண்பாற் புலவர்கள், ஔவை,

---

* குமரிமலர், ஜூன் 75;பக்: 38.

ஆண்டாள், வள்ளுவர், இளங்கோ, கம்பர், நம்மாழ்வார் திருநாவக்கரசர், சித்தர்கள், தாயுமானவர், பட்டினத்தடிகள், இராமலிங்க சுவாமிகள், கோபாலகிருஷ்ண பாரதியார் முதலான தமிழ்ப் புலவர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுரைகளில் வள்ளுவர், தாயுமானவர் மேற்கோள்கள் நிறைந்துள்ளன.

கவிதையில், வள்ளுவர், இளங்கோ, கம்பரை ஏற்றிப் போற்றிய பாரதியார், கட்டுரையில் ஔவையாரை அம்மூவர்ச் சிறப்பினுக்கும் மேலாக உயர்த்திக் காட்டுகிறார்.

''நாங்கள் இந்தியா தேசத்து ராஜ்யாதிகாரத்தை இழக்க ஒருப்பட்டாலும் ஒருப்படுவோமேயன்றி ஷேக்ஸ்பியரை இழக்க ஒரு நாளும் ஒருப்படமாட்டோம்'' என ஆங்கிலக்கல்வி இந்தியாவில் புகத்துணைசெய்த மெக்காலே கூறியதின் அடிப்படையில் மறுமொழி உரைக்க முற்படுகையில், பாரதியார் ஔவையாரையே எடுத்துக்கொள்கிறார்.

''மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் சமைத்துக் கொள்ள வல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்பட மாட்டோம், அது மீட்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப் பெருஞ் செல்வம்.''

சங்ககால ஔவையார், நீதி நூல்கள் இயற்றிய ஔவையார், ஔவை குறள், விநாயகர் அகவல் எழுதிய ஔவையார் ஆகிய பல ஔவையார்களுள் எந்த ஔவையாரை பாரதியார் பாராட்டுகின்றார் எனக் கேட்டால், 'ஔவையார் ஒருவரே' எனும் கொள்கையை ஏற்றுக் கொண்டு பாராட்டுகிறார் என்று விடையே கிடைக்கின்றது. இரண்டு ஔவையார்கள் எனக் கூறும் கட்சி

யைக் குறிப்பிட்டே பாரதியார் ஒரே ஔவையாரைப் ப்ராட்டுகின்றார்.

வள்ளுவர், இளங்கோ, கம்பரைக் காட்டிலும் ஔவையாரையே ''மிகவும் விசேஷமாக'' எடுத்துக் கூறப்படுவதற்கான காரணத்தை பாரதியார் குறிப்பிடுகின்றார். ஔவை மரபு சாதாரண பொது மக்களைக் கவர்ந்ததே அதற்கு காரணமாகும் என பாரதியார் கூறுகின்றார்:

புலமையின் ஆற்றலுடன், மக்கட் தொடர்பின் ஆற்றலை எடுத்துக் காட்டுவது, ஔவை மரபு. மக்கட் கவிஞரான பாரதியார் இதை மனதில் கொண்டு மொழிந்ததாவது:

''ஜன சமூக நீதிகளின் விஷயத்தில் தமிழ்நாட்டில் எப்போதும் ப்ரமாணமாக இயன்று வருவது ஔவையின் நீதி வாக்கியங்களும், நீதி நூல்களுமேயாம். ஆண் மக்களிலே கூட உயர்ந்த கல்வி பயின்றோர் மாத்திரமே ஜன சமூக விதாயங்களில் வள்ளுவர் குறள், நாலடியார் முதலியவற்றை ப்ரமாணமாகக் கூறுவர். அதிகப் படிப்பில்லாதவர்களும், படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள் ஆண், பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழி காட்டி, தமிழ் ஜனங்களில் பெரும்பான்மையோருக்கு சுமார் இரண்டாயிரம் வருஷங்களாக ஔவையாரின் நீதியே ப்ரமாணமாக நடைபெற்று வருகின்றது.''*

தமிழ்ப் புலவர் மரபு மீதான அழுத்தமான பற்றை, **தமிழபிமானி யார்?** என வினாவெழுப்பி அளிக்கும் விடையிலேயும் பாரதியார் வெளியிடுகிறார்.

---

* மேற்படி நூல்: பக், 238.

''தமிழிலிருந்து பூ மண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான்...... தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருவாய் மொழியிலும், திருக்குறளிலும், கம்பராமாயணத்திலும், அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழபிமானம் உண்மையிலேயே பிறக்க நியாயமில்லை.''*

மரபு என்பதாலேயே அனைத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை எனும் எச்சரிக்கையையும் பாரதியார் வலியுறுத்துகிறார்:

''தமிழா! எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை; எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. 'முந்திய சாஸ்திரந்தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய்' என்று தீர்மானஞ் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? 'தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்' என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.''**

''புலவோர் வாயின் துதியறிவாய்'' என்னும் ஓரடியிலேயே தமிழ்ப் புலவர் மரபின் மீதான தமது கருத்தை செறிவுறச் செய்து விட்டார், பாரதியார்.

---

* பாரதி தமிழ்—இன்ப நிலையம்—பக்: 274

** பாரதி நூல்கள்— கட்டுரைகள்- பாரதி பிரசுராலயம். பக்: 302

இருவேறு விழிப்புகளின் முன்னோடிகள்

25-8-1918- சுதேசமித்திரனில் பாரதியார். சக்தி தாஸன் என்ற புனை பெயரில் **'தமிழ் நாட்டின் விழிப்பு'** எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார்.

இந்தக் கட்டுரையில், ''ராமலிங்க சுவாமிகளும், 'சுதேசமித்திரன்' சுப்பிரமணிய அய்யரும், இவர்களைப் போன்ற வேறு சில மகான்களும் தமிழ் நாட்டின் புதிய விழிப்புக்கு ஆதிகர்த்தாக்களாக விளங்கினர்'' எனக் குறிப்பிட்டார்.

பாரதியார், இராமலிங்க சுவாமிகளையும், தேசபக்தர் ஜி.சுப்பிரமணிய ஐயரையும், பிறரையும் தமிழ் நாட்டின் விழிப்புக்கு ஆதிகர்த்தாக்கள் எனக் குறிப்பிட்டாலும், தமிழ் நாட்டின் வரலாற்றுப் போக்கில் மாபெரும் விழிப்பை ஏற்படுத்தியவர்கள் வேறு இருவராவர்.

அந்த இருவர், மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையும் (1855-1897). மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் ஆவர்.

ஒரு புது விழிப்பின், மிக வேறுபட்ட இரண்டு அம்சங்களுக்கு சுந்தரம் பிள்ளையும், மகாகவி பாரதியாரும் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். ''அருமையாகிய பூருவ நூல்களைப் பாதுகாத்துப் பயின்று வருதலாகிய முதற் கடமையோடு அவ்வழியே முயன்று அந்த அந்தக் கால நிலைக்கேற்றவாறே புது நூல்களை இயற்ற முயலுதல் தமிழ் நாடென்னும் உயிர்குடியிற் பிறக்கும் ஒவ்வொரு தலைமுறையாருக்கும் உரித்தான இரண்டாம் கடமையாய், ஏற்படுகின்றது.'' இவ்வாறு சுந்தரனார் 'மனேன்மணீயம்' முகவுரையில் கூறியுள்ளார்.

இந்தியா, தமிழ்நாடு இரண்டினிடத்திலும் தமிழரின் அணுகு முறை எவ்வாறிருக்க வேண்டும் என்பதை இருவரும் இரு வேறு கோணங்களில், வகுத்தளித்தனர்.

இனவாதம், வடமொழி எதிர்ப்பு, வேத எதிர்ப்பு, பிராமணர் எதிர்ப்பு முதலானவை மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் அணுகு முறையில் செல்வாக்கு பெற்றன.

பாரதியாரின் அணுகுமுறை, சுந்தரம் பிள்ளையின் அணுகு முறையின் அம்சங்கள் பலவற்றை நிராகரித்தது.

பாரதியார் குறிப்பில் சுந்தரம் பிள்ளை

பாரதியார், மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையைப் பற்றி 'சின்ன சங்கரன் கதை'யில் குறிப்பிட்டுள்ளார்.

''**சின்ன சங்கரன் கதை**'யில் பாரதியார், சமஸ்தானப் புலவர்களிடையே தமிழ்-சம்ஸ்கிருதம் பற்றி எழுந்த ஒரு மோதலை நகைச் சுவையுடன் சித்தரித்துள்ளார்.

''திருவனந்தபுரம் பெரிய கலாசாலையில் தமிழ்ப் பண்டிதராகி, அன்னிய பாஷைகள் ஆயிரம் கற்று நகரில் புலவர் சிகரமாக விளங்கிய சுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய நூல்களில் ஏதோனுமொன்றை எப்போதாவது தலையணையாக வைத்துப் படுத்திருந்ததுண்டா? அல்லது அவர் புத்தகங்கள் வைத்திருந்த அலமாரியை மோந்து பார்த்ததுண்டா?''

திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றி சுந்தரனார் 1894-இல் 'சைவப்பிரகாச சபை' எனும் அமைப்பை நிறுவி சைவத் தொண்டும் ஆற்றினார். தமிழிற்கு கொடையாக ''மனோன் மணீ''யத்தை அளித்ததோடு, திருஞானசம்பந்தர் கால

ஆராய்ச்சியை மேற்கொண்டு ஆங்கிலத்தில் **Some mile Stones in the History of Tamil Riterature** (1895) என்ற நூலையும் அளித்தார். 1898-இல் வெளிவந்த இவருடைய "நூற்றொகை விளக்கம். குறிப்பிடத்தக்கது. திருமுருகாற்றுப்படை, நெடு நல்வாடை, மதுரைக் காஞ்சியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்

இவ்வாறு சுந்தரனார் ஆற்றியத் தமிழ் பணியும் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மைல்கல்தான்.

தமிழ் மொழியின் சிறப்பை விதந்தோது மிடங்களில், சுந்தரம் பிள்ளை, வடமொழி எதிர்ப்புணர்வை முன் நிறுத்துகிறார். அவருடைய வடமொழி ஆவேச எதிர்ப்புணர்வு, தமிழ்த் தாய் வாழ்த்துப் பாவில், 'அழிந்து, ஒழிந்து', எனும் சொற்களை புகுத்தி விட்டது. சில சான்றுகள் வருமாறு:

(1) விந்தம் அடக்கினோன் தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந்திரம் அறும் அற்பர் வாய்ப்படுமோ?
(2) சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ அனாதியென மொழிகுவதும்
வியப்பாமோ
(3) மனங் கரைந்து மலங்கெடுக்கும் வாசகத்தில்
மாண்டோர்கள்

கனஞ் சடை யென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ?*

இவ்வாறு தமிழ் உணர்ச்சியை வெளிப்படுத்து மிடங்களில் எல்லாம் சம்ஸ்கிருவமொழி எதிர்ப்புணர்ச்சியையும் இணைப்பதில் குறியாய் இருந்தார், சுந்தரம் பிள்ளை.

---

* வேதமந்திர உச்சரிப்பு முறைகள்.

பாரதப் பண்பாட்டின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாய் தமிழ்ப்பண்பாட்டையும் இணைத்துப் பாடவந்த பாரதியார், சம்ஸ்கிருத மொழிக்காழ்ப்புணர்ச்சியை ஏற்க மறுத்தார்.

''தம்பி,-நான் ஏது செய்வேனடா! தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்த முண்டாகிறது'' எனத் தம்மை முன்னறிந்து போற்றிய உண்மை நண்பர் பரலி. சு. நெல்லையப்பருக்கு எழுதியக் கடிதத்தில் பாரதியார் கூறியது, அவருடை யஆழ்ந்த தமிழ்ப் பற்றை உயர்த்திக் காட்டுகிறது.

பாரதியாரின் தமிழ்ப் பற்று, தேசிய எழுச்சியின் ஒரு கூறான தாய் மொழியைப் பேணும் தேசியக் கல்வியை அடிப்படையாகக் கொண்டது.

சுந்தரம் பிள்ளையின் தமிழ்ப்பற்று ஆரிய-திராவிட இன வாதத்தை அடிப்படையாகக் கொண்டது.

தமிழ் மொழிப்பற்றின் இந்த இரண்டு அடிப்படைகளின் மீது பிற்காலத் தமிழ் இயக்கங்கள் தோன்றின.

தேசீயக் கல்வி எனும் தலைப்பில் உள்ள பாரதியார் கட்டுரையின் பின்வரும் பகுதி, வடமொழி-தமிழ் மொழிகள் பற்றிய பாரதியாரின் கொள்கையை விளக்குகிறது.

''தேச பாஷையே ப்ரதானம் என்று நான் சொல்லுவதால் டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக்ஷியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்யா பாஷா விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது. தமிழ் நாட்டிலே தமிழ் சிறந்திடுக. பாரத தேச முழுதிலும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க.

இன்னும் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூர்ண மாகச் செய்யுமாறு நாடு முழுதிலும் வடமொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்கும். எனினும், தமிழ் நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக.''

வேறொரிடத்தில் மிகத் தெளிவாக ஆரிய திராவிட இன வாதத்தை கண்டனம் செய்துள்ளார் பாரதியார்.

''பொய்யும் புலையுமாக, திராவிடர்களென்றும் ஆரிய ரென்றுமுள்ள பழைய சொற்களுக்கு புதிய அபாண்டமான அர்த்தங்கள் கற்பித்துக்கொண்டு வீண் சண்டைகள் வளர்ப்பதனால் ஹிந்து சமூகத்துக்கே கெடுதி விளையக் கூடும்.''

'ஆர்ய' என்பதை இனப் பெயராகக் கொள்ளாமல், பண்புப்பெயராகக் கொண்டு, ''தமிழ்நாட்டில் ஒரே ஜாதி தான் உண்டு. அதன் பெயர் தமிழ்ஜாதி. அது ஆர்ய ஜாதி என்ற குடும்பத்திலே தலைக்குழந்தை என்றெழுது'' என பெருமிதத்துடன் பேசுகிறார்.*

சம்ஸ்கிருத மொழியை எதிர்த்து சீறிக் கறுவி சுந்தரம் பிள்ளை வெகுண்டெழ, சில சம்ஸ்கிருதமொழி வெறி யாளர்கள் காரணமாயினர் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

வடமொழியின் துணையின்றி, தமிழ் தனித்தியங்காது என வாய்கூசாமல் பேசத் தொடங்கினர், ஒரு சிலர்.

பிரயோக விவேகம் எனும் இலக்கண நூலை இயற்றிய சுப்பிரமணிய தீட்சதர் வடமொழி இலக்கணத்தை தமிழில் புகுத்தினார்.

---

* பரலி சு. நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம்

ஈசான தேசிகர் எனும் சாமிநாத தேசிகர் ''ஐந்தெழுத்தாலொரு பாடை என்றறையவும் நாணுவர்'' என்று கூறியதும், ''வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழிகளிலும் இலக்கணமொன்றே'' என்று கழறியதும், வடமொழி எதிர்ப்புணர்வை கொழுந்து விட்டெரியச் செய்தன.

இரு தீவிரவாதக் கருத்துகள், நடுநிலையாளருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தின.

பேரறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை போன்ற நடு நிலையாளர் இந்த வடமொழி-தென்மொழி போராட்டத்தை எச்சரிக்கை யுணர்வுடன் அணுகினர்.

18௦9-ல் தாம் பதிப்பித்த சூளாமணியில், ஏடுகாத்த தமிழ்க்காவலர் சி.வை. தாமோதரம் பிள்ளை பதினேழு பக்கங்களில் ஒருபதிப்புரை வழங்கியுள்ளார். இந்தப் பதிப்புரையில் தமது காலத்தில் எழுந்த வடமொழி-தென்மொழி போராட்டத்தைப்பற்றி தமது கருத்தை விளக்கியுள்ளார்.

பாரதியார் குறிப்பில் தாமோதரம் பிள்ளை

பாரதியார், தமிழறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளையைப் பற்றி ''சின்ன சங்கரன் கதை''யில் குறிப்பிட்டுள்ளார். முத்திருளக் கவுண்டன் எனும் கதை மாந்தர் வாய் மொழியாக பாரதியார் கூறியதாவது.

> ''சென்னப் பட்டணத்தில் சி.வை. தாமோதரம் பிள்ளை என்று ஒரு மகாவித்துவான் இருந்தாரே கேள்விப்பட்டதுண்டா? அவர் சூளாமணி என்னும் காவியத்தை அச்சிட்டபோது அதற்கெழுதிய முகவுரையை யாரைக் கொண்டேனும் படிக்கச் சொல்லியாவது கேட்டதுண்டா?''

சூளாமணி பதிப்புரையின் பின்வரும் பகுதியில் சம்ஸ்கிருதம், தமிழ் பற்றிய தாமோதரம் பிள்ளையின் கருத்துகள் உள்ளன.

''தமிழுஞ் சம்ஸ்கிருதமும் ஈஸ்வரன்பால் உதித்த இரட்டைப் பிள்ளைகளாம். சம்ஸ்கிருதத்திற்குப் பாணினியுந் தமிழிற்கு அகத்தியருஞ் செவிலித் தாயராயினர்... சம்ஸ்கிருதம் உச்சாரண வன்மையானும் வேதாகமதிகாரத்தானும் மந்திரோபதேசப் பயிற்சியானும் ஆடூஉ லக்ஷணமுடையதாகத், தமிழ் தன் மிருதுத்தன்மையானுங் குயில், கிளி பூவைகள் தலைநாணும் ஔஷதங்களும் கரும்பு தேன் பாகுபாலென்றிவற்றை வென்று தேவாமிர்தத்தோடொத்த இனிமையும் உடைமையான தேவாரதிருவாசாகாதிகளினாற் சாக்ஷாத் ஈஸ்வரனையும் மயங்கச் செய்யும் வசீகரணத்தினானுஞ் சங்கீத சர்கித்திய செய்யுள் வினோதங்களாலும் மகடூஉ லக்ஷணம் மேற்பட்டது. இரண்டும் ஒன்றோடொன்று கலவாது விந்தகிரிக்கும் வேங்கட மலைக்கும் இடையே கிடந்ததோர் பேராரணியத்தாற் சர்க்கப்பட்டு வளர்ந்தன. ஆயினும் மங்கைப் பருவமுற்ற கன்னித்தமிழ் பின்னர்த் தன் புராணதிகாச காலத்திற் சம்ஸ்கிருத நாயகனை மாலை சூட்டி மணம் புரிந்தது. ஆதலால் இஞ்ஞான்றைத் தமிழில் வழக்கினுஞ் செய்யுளினுஞ் சம்ஸ்கிருதம் எங்ஙனும் வியாபித்துக் கொண்டிருக்கின்றது. பண்டைத்தமிழோ அக்கலப்புடையதன்று. இஃது இரண்டு பாஷையில் இலக்கண விதிகளாலுஞ் சங்க மரீஇய பழைய தனித்தமிழ் நூல்களாலும் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெள்ளிதிற் புலப்படும்.''*

பதிப்புத்துறைச் செம்மல்' சி.வை.தா'வின் சம்ஸ்கிருத தமிழ்பற்றிய கருத்துகள் விரிவாக, 'வீரசோழியப்

---

* சூளாமணி-பதிப்புரை: 1889. பக்: 1-3.

பதிப்புரை', 'கலித்தொகைப் பதிப்புரை', 'இலக்கண விளக்கப்பதிப்புரை.' முதலானவைற்றில் மேலும் விளக்க முறுகின்றன.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை சம்ஸ்கிருதத்தின் மீது வெறுப்பை, நெருப்பெனக் கொட்ட, பாரதியார் சம்ஸ் கிருதத்தை 'தெய்வ பாஷை' என்று உயர்வு நவிற்சியாகக் கூறத் தயங்கவில்லை.*

''சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே-அதை
தொழுது படித்திடடி பாப்பா''

என்று பாரதியார் குழந்தைப்பருவத்திலேயே தமிழ்ப் பற்றை பதியவைக்கப் பாடியதும் இங்கு நினைவுகூரப்பட வேண்டியதாகும்.

தமிழ் இலக்கண வரலாற்றின் தோற்றத்தைப் பற்றி பாரதி கூறிய ஒரு கருத்து, குழப்பத்தில் தோன்றிய தெனக் கருதலாம்.

தமிழ் இலக்கண வழக்கை வடமொழி இலக்கண வழக் கோடு பொருத்திக் கூறும் சுவாமிநாத தேசிகரின் இலக் கணக்கொத்து கிளப்பிவிட்ட புழுதிக்காற்று சிலர் பார் வையை.மறைத்த காலம், அது. தொல்காப்பியத்தை குறிப்பிட வந்த பாரதியார், ''ஸம்ஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கிற தென்பது மெய்யே'' எனும் கருத்தைக் கூறிவிட்டார். ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' எனும் குறிப்பிற்கு வடமொழி இலக்கணமான ஐந்திரத்தைப் பின்பற்றி தொல்காப்பியர்

---

* பாரதியார் நூல்கள் (கட்டுரைகள்) பக். 62. பாரதி பிரசுராலயம்.

இலக்கணம் செய்தார் என வலிந்துரைத்தனர், சிலர். ஆய்வுலகம், இக்காலத்லைப் போல, அப்பொழுதே ஒரு மனதாக இந்த ஐந்திர விவகாரத்தை முற்றிலும் நிரா கரித்து விடவில்லை. இதனாலும் பாரதியாருக்கு குழப்பம் ஏற்பட்டிருக்கலாம்.

பாரதியார் கூறியதாவது: ''தமிழ் பாஷைக்கோ, இலக்கணம் முதல்முதலாக அகஸ்தியராலும், அவருடைய சிஷ்யராகிய திரணதூமாக்நி (தொல்காப்பியர்) என்ற ஆரியமுனிவராலுமே சமைத்துக்கொடுக்கப்பட்ட தென்பது மெய்யே. அதனின்றும் தமிழ் இலக்கணம் பெரும்பா லும் ஸம்ஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே அமைக்கப் பட்டிருக்கிறதென்பது மெய்யே.''

ஆனால், பழந்தமிழ் இலக்கியத்தின் தொன்மை, மேன் மைகளைப் பற்றித்தெளிவாக, பெருமிதமாகப் பேசு கிறார்.

''இஃது எவ்வாறாயினும், ஸம்ஸ்கிருத பாஷையின் கலப்புக்கு முன்னதாகவே, தமிழ்நாட்டில் மிகவும் உயர்ந்த நாகரிகமொன்று நின்று நிலவி வந்ததென்பதற்கு அடை யாளமாக தமிழில் மிக உயர்ந்த தரமுடைய பல பழைய இலக்கிய நூல்கள் காணப்படுகின்றன.''

தமிழ்த்தாய், ''ஆன்ற மொழிகளினுள்ளே- உயர் ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்'' என்று கூறுவதாகக் கவிதையில் குறிப்பிட்ட பாரதியார் கட்டுரையில், ''ஆர்ய நாகரிகத்துக்கு ஸமமான பழமை கொண்டது தமிழருடைய நாகரிகம் என்று கருதுவதற்குப் பலவிதமான ஸாக்ஷ்யங்களி ருக்கின்றன'' என்று குறிப்பிட்டதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

---

* பாரதியார் நூல்கள் (கட்டுரைகள்)

பாரதிபிரசுராலயம், பக்.222 223

இனவாதம், இந்துமத உணர்விற்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பது பாரதியார் கருத்து!

''இந்த ஆர்யநாகரிகத்துக்கு சமமான பழமை கொண்டது தமிழருடைய நாகரிகம் என்று கருதுவதற்குப் பலவிதமான ஸாக்ஷ்யங்களிருக்கின்றன..... இவ்விரண்டு வகுப்பினரும் பழைய நாட்களிலேயே ஹிந்துமதம் என்ற கயிற்றால் கட்டுண்டு ஒரே கூட்டத்தாராகிய செய்தி பூமண்டலத்தின் சரித்திரத்திலேயே மிகவிசேஷமும் நலமும்பொருந் செய்திகளில் ஒன்றாகக் கவனித்தற்குரியது. இவ்வாறு, ஆர்யநாகரிகத்தையும், தமிழர் நாகரிகத்தையும் இந்து மதவுணர்வின் வெளிப்பாடாகப் பாரதியா குறிப்பிடுகின்றார்,

சுந்தரம் பிள்ளையும், பாரதியாரும் அடுத்து முரண் படுவது, வேதநெறியைப் பின்பற்றுவதிலாகும்.

'மனோன்மணீயம்' சுந்தரம் பிள்ளை கூறுகிறார்:

''முக்கியாம்சங்களில் தமிழராயுள்ளோருக்கு வேதங்களிலிருந்தும் மற்றைய ஸம்ஸ்கிருத நூல்களிலிருந்தும் அநுமதிகளும் ஆதாரங்களும் தேடப்புகுவது தப்பு.''*

பாரதியார் வேதநெறியில் ஊறித் திளைத்தவர். ''என்னை வேதங்களாக்கிடுவீர்'' எனத் தெய்வத்திடம் முறையிட்டவர் பாரதியார். ''தமிழா!'' என அழைத்து, ''வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு'' என வழிப்படுத்துகின்றார். ''வேதம் நிறைந்த தமிழ் நாடு'' என்றும் இசைத்தார்.

சைவ சித்தாந்தத்தை ஆரியச்சார்பற்றதாகச் சித்தரிப்பதிலும், வேளாளர்களை ஒன்று திரட்டி வலுவான ஓர்

---

* இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்-வெ. ப. சுப்பிரமணிய முதலியார். அடிக்குறிப்பு-பக்:2

இயக்கத்தின் கீழ் கொண்டு வருவதிலும் சுந்தரம்பிள்ளை ஆர்வம் காட்டினார்.

சுந்தரம்பிள்ளை இந்தப் போர் முனையில் நின்று ஆங்கிலத்தில் தொடுத்தச் சொல்லம்புகள் தமிழில் வருமாறு:

''சைவ சித்தாந்த தத்துவமும் வழிபாட்டு முறைகளும் மூற்றிலும் விசேஷமாக நமக்கேயுரியன.....நாம் கட்டிய திருக்கோயில்களிலே நமது குருக்கள் வழிபாடு நடத்திய காலம் போய் விட்டது. இன்று அவர்களுக்கு அங்கு இடம் இல்லை. 'கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடியிருக்கும்' எனும் குறிப்பிடத்தக்கப் பழமொழி,பரிதாபகரமான நமது திராவிடஇன வீழ்ச்சி வரலாற்றுக்கு பலவழிகளிலும்விளக்க மளிக்கின்றது.... **திராவிட இனத்தில் பூத்த நறுமலர், வேளாளர்.''***

பிராமணரல்லாதார் இயக்கத்தில் முன்னணியில் நிற்ப வர்கள் சைவ வேளாளர்கள் என்றும், இவர்கள் தமக்குக் கீழேயுள்ள சாதியினரின் மேம்பாட்டிற்குப் பாடுபட வில்லை என்பதும் பாரதியார் கருத்துக்கள்.** 1871-ஆம் ஆண்டி மக்கட் கணக்கெடுப்பை ஒட்டி 'சூத்திரர்' என்ற சொற் பிரயோகத்திற்கு எதிரான இயக்கம் வீறுபெற்றது. 1871-க்குமுன் பிராமணரல்லாதார் அனைவரும் 'சூத்திரர்' என மக்கட் கணக்கெடுப்பில் குறிப்பிடப் பட்டனர். 1871-ஆம் கணக்கெடுப்பை பயன்படுத்திக் கொள்ள கல்விகற்ற பிராமணரல்லாதார் முன் வந்தனர். குறிப்பாக வேளாளர் போர்க் கொடி தூக்கினர். அரசாங்கத்திடம் கொடுத்த

---

* மேற்படி நூல்: பக்: 22-23, (அடிக்குறிப்பு) (அழுத்தம் இந்நூலாசிரியருடையது)

** பாரதியார் நூல்கள் (கட்டுரைகள்) பாரதிபிரசுராலயம்; பக்: 559

மனுவில் தங்களை 'வைசியர்கள்' எனக் குறிப்பிட வேண்டும் எனக் கோரினர். இதற்காக மனுநீதி சாஸ்திரத்தில் இருந்தும் சான்று காட்டினர்.''

'சூத்திரர்' என்ற சொற் பிரயோகத்தை வன்மையாக எதிர்த்தார், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

''எப்படிப் பிரெஞ்சுக்காரர் சூத்திரரல்லரோ, அப்படியே அவர்களும் (வேளாளரை யுள்ளிட்ட திராவிடர்களும்) சூத்திரரல்லர்.''

சுந்தரம் பிள்ளையின் இந்தக் கருத்தை பாரதியார் ஆதரித்துள்ளார்.

வேளாளர் குலத்தை, 'சற்சூத்திரர்' என்று மக்கட்தொகை கணக்கெடுப்பில் சென்னை அரசாங்கம் குறிப்பிட்டது. இதை எதிர்த்து திரு. கனகசபை பிள்ளை என்பவர் 1908-ல் **'வருண சிந்தாமணி'** எனும் நூலை வெளியிட்டார்.

இந்த நூலுக்கு இருபத்து நான்கு வரிகளில் ஒரு பாயிரத்தை அளித்துள்ளார் பாரதியார். 'வேளாளரை, சூத்திரர்' என அழைப்பது, 'பழம் பொய்' எனக் கூறியுள்ளார்.

''பன்னாளா வேளாளர் சூத்திரரென்
றெண்ணி வரும் பழம் பொய்...''

பிற்கால பிராமணரல்லாதார் இயக்கத்தின் சக்தி வாய்ந்த போராட்டங்களுள் ஒன்று, 'சூத்திரர்' எனும் வழக்கிற்கு எதிராக நடந்தப் போராட்டம். இந்தப் போராட்ட வரலாற்றின் ஊற்றுக் கண்களில் ஒன்றாக விளங்கியவர் சுந்தரம்பிள்ளை.

பாரதியார், 'பாஞ்சாலி சபதம்' பொருள் விளக்கக் குறிப்புரை ஒன்றில் 'சூத்திரர்' என்ற சொல்லை தவிர்த்ததைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

''பலதரனுடைத் தொழில் செயுமாசனமும்'' மாசனம், மஹாஜனங்கள், பொதுப்படையான குடிகள். [இவர்களேதேசத்திற்கு உயிராவர்] இவர்களை சூத்திரர் என்பது தற்கால வழக்கு. சூத்திரர் என்னும் பெயரைச் சில மூடர்கள் இழிவான பொருள்பட வழங்குவது பற்றி நூலில் அப்பெயர் தரவில்லை.''

சுந்தரம் பிள்ளையும், பாரதியாரும் நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இனப்பற்று மூன்றையும் வலியுறுத்தி யுள்ளனர்.

1891-ல் தாமே பதிப்பித்த மனோன்மணீயத்தில் சுந்தரம் பிள்ளை படைத்த சீவகன் தன் படையாளரை நோக்கி கூறிய வீரவுரைகளில் நாட்டுப் பற்றின் பெரு முழக்கத்தைக் கேட்கலாம்.

> ''பாஷா பிமானமும், தேசாபிமானமும்
> பொருளெனக் கருதா தருணிறை நுமது
> தாய்முலைப் பாடலுடன் வாய்மடுத் துண்டநல்
> ஆண்மையுஞ் சுதந்திரக் கேண்மையு மொருங்கே
> நிந்தை வஞ்சியர் செய வந்தலுங் கோபம்
> முற்று மியல்பே.''

நாட்டுப் பற்றை வெளியிடும் உணர்ச்சியில் சுந்தரம் பிள்ளையையும், பாரதியாரையும் ஒப்பிட்டு, ''**பாரதி-நான் கண்டதும் கேட்டதும்**'' எனும் நூலில் மூதறிஞர் பி.ஸ்ரீ. ஆச்சார்யா கூறியுள்ளதாவது:

''மனோன்மணீய ஆசிரியரான சுந்தரம் பிள்ளையும் சுதந்திரத்தைப் பற்றிப் பாடியிருக்கிறார்; தமிழர்களின் சுதந்திரக்காதலைச் சிறப்பாகவலியுறுத்தியும் இருக்கிறார். ஆனால் மனோன்மணீய ஆசிரியரின் அந்தச் சுதந்திர விருப்பத்திற்கும், பாரதியாரின் சுதந்திர வெறிக்கும் வேற்றுமை உண்டு என்பதையும் நன்கு அறிந்திருந்தேன்.

பண்டைத் தமிழர்களின் வீர சுதந்திர உணர்விலிருந்து தெறித்து, ஷேக்ஸ்பியர் நாடக பாணியில் வந்து விழும் நினைவுப் பொறிதான் சுந்தரம் பிள்ளையின் சுதந்திரக் குறிப்பு; நம்மைக் கொத்தடிமை கொண்ட அன்னிய அரசு மீது வெறுப்பால் ஏற்பட்ட தாகம் அல்ல, தவிப்பல்ல!''

மூதறிஞர் பி.ஸ்ரீ.ஆச்சார்யாவின் பார்வை இவ்வாறிருக்க **குமரன்** எனும் இதழின் தலையங்கம், சுந்தரம் பிள்ளை, பாரதியார் ஆகியோரின் நாட்டுப் பற்றில் உள்ள ஓட்டுறவை ஒப்புமையாக்கமாக வெளிப்படுத்தியுள்ளது.

'குமரன்' தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

'மனோன்மணீய ஆசிரியரும் ஓர் உத்தம தேசபக்தரேயாவர்''... ''சுதந்திரமே உயிர்; சுவாசம் மற்றன்று'' என்ற வீர முழக்கத்தினை, இருள் சூழ்ந்த பிற்காலத்தில் மூதல் முதல் 'மனோமணீய'த்திலே தான் கேட்கும் பேறு பெறுகின்றோம். இச்சுதந்திர முழக்கம் பாரதியார் வாயிலாக வெளிப்படுகையில் ஒப்பற்ற பேரிடி முழக்கமாக முதிர்ந்துவிடுகின்றது.

''அந்தணர் வளர்க்கும் செந்தழல் தனிலும் நாட்டபிமானம் உள்மூட்டிய சினத்தீ அன்றோ, வானோர்க்கு என்றுமே உவப்பு!'' என்ற மனோன்மணீய ஆசிரியரின் கம்பீர மணிவாக்கு, பாரதியார் பாட்டில் நிகரற்றதோர் அரும் பெருஞ் சிங்கநாதமாகப் பரிணமிக்கின்றது.

'உரிமைமேல் ஆண்மை பாராட்டார் சாந்தம்
பெருமையில் பிணத்தில் பிறந்தோர் சீதம்'

என்று சுந்தரம் பிள்ளை கூறுகின்றார்.

மனோன்மணீய ஆசிரியர் வழங்கிய வீர உரையே, பாரதியார் உள்ளத்தினின்றும் ஒப்பற்ற வீரமுரசாக ஒலி செய்யலாயிற்று. மனோன்மணீயத்தில் மறைந்தொளிரும் தேசபக்தி பாரதியாருக்கு ஓர் மதமாகவே வெளிப்பட்டது. தமிழ்மொழி, மனோன்மணீய ஆசிரியரின் தெய்வமெனின் பாரத நாடே பாரதியாரின் தெய்வமாக விளங்கியது.''*

1887இல் வெளிவந்த ''பிரதாப சந்திரவிலாசம்'' என்னும் நாடகத்தின் முதல் அங்கத்தில் சுதேசபிமானம் பற்றி சுதேச மித்திரன் என்னும் நாடக மாந்தர் விரிவாகப் பேசியுள்ளார். நாடக ஆசிரியர், ப.வ. இராமசாமி ராஜு (1852-1897) மனோன்மயம், 1891-இல் வெளிவந்தது.

இருவேறு வித்தியாசமான விழிப்புகளை ஏற்படுத்திய சுந்தரம்பிள்ளை பாரதியார், ஆகியோரிடையே ஒற்றுமை அம்சங்களைவிட வேற்றுமை அம்சங்களே மிகுதியாய் உள்ளன.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை மறைவு குறித்து, அன்றைய ''விவேக சிந்தாமணி'' என்னும் உயர்தர இதழில் அதன் ஆசிரியர் சி.வி. சுவாமிநாதய்யர் எழுதிய இரங்கல் உரையின் பின்வரும் பகுதி உளங்கொளத்தக்கது:

''சுதேச பாஷையபிவிர்த்தியைப் பற்றிய பிரஸ்தாபம் பலமாயிருக்கும் இக்காலத்தில் இவருடைய நூற்றொகை விளக்கத்தைப் பார்க்கும் எவரும் ஆங்கிலேய சாஸ்திர உண்மைகளை நமது பண்டிதர்கள் தமிழ் மூலமாகவே கற்றுணர்வது கூடாது என்று சொல்லும் ஆக்ஷேபணையை யொத்துக் கொள்ளத் தயங்குவர் என்பதற்கு சந்தேகமில்லை. தமிழில் இவர் இயற்றிய நூல்களினால் மட்டுமில்லை, மற்றபடி தமிழ்ப்பாஷாபி விர்த்தி விஷயமாய்

---

* குமரன், செப்டம்பர் 16, 1926. பக்: 6.

பாடுபடும் எவர்க்கும் இவர் மனப்பூர்வமாய் வாக்குமூல மாகவும் எழுத்து மூலமாகவும் அநேக உதவிகள் செய்து அவர்களை உற்சாகப்படுத்தி அவர்கள் உழைக்கும் வழியில் நேரும் கஷ்டங்களைத் தவிர்க்கத் தயாராயிருந்து அவர் களுக்கு நேர்வழி காட்டி உற்றவிடத் துதவியாய் நின்று சகாயஞ் செய்து வந்ததை அற்ப சொற்பமாக எண்ணக் கூடாது.''*

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் முக்கியக்கடிதமும்-அதன் பின்னனியும்

தமிழ் மொழியை நவீனப்படுத்துவதில் ஆர்வமுடன் உழைத்தவர், 'விவேக சிந்தாமணி' ஆசிரியர் **சி.வி.சுவாமி நாதய்யர்.** இவர் சிறிது காலம் ஜி.சுப்பிரமணிய ஐயரின் சுதேசமித்திரனில் ஆசிரியராகவும் பணியாற்றியவர். 1899-இல் ''Vernacular Studies in Madras'' எனும் சிறு வெளியீட்டைக் கொணர்ந்தார். அக்காலத்தில் செல் வாக்கு பெற்றிருந்த ''மெட்ராஸ் மெயில்'' எனும் ஆங்கில நாளிதழில் இவர் எழுதியதே முற்கூறிய வெளியீடாக வந்தது. இந்த வெளியீட்டிற்கு முன்னுரை எழுதிய 'மெட்ராஸ் மெயில்' ஆசிரியர் ஹென்றி ப்யூ சாம்ப், சுவாமி நாதய்யரைப் பற்றி பின் வருமாறு குறிப்பிடார்.

''சுவாமிநாதய்யர் வெறும் புனைவியலாளர் (**Theorist**) அல்லது கட்டுரையாளர் மட்டுமல்லர். அவருடைய ''உப யோகமான அறிவைப் மரவச் செய்யும் சபை'' எனும் அமைப்பின் வாயிலாக தாய் மொழிக் கல்வியை ஊக்கு விக்க மிகவும் செயல் முறையாகப் பாடுபடுபவர். அத்து டன் 'விவேக சிந்தாமணி' எனும் பத்திரிகையை திறமை யாக நடத்தி வருபவர். ஆகவே இந்த மாதிரி விஷயங்களில் தமது தகுதியை நிலை நிறுத்தியவர்.''

---

* விவேக சிந்தாமணி-சென்னை-ஏப்ரல் 1897-பக் .37

இவர், தமது காலத்தில் பல்கலைக்கழகம் தாய் மொழிக் கல்வியைப் பரப்புவதில் ஆர்வம் கொள்ளாததைப் பற்றி விரிவாக எழுதினர். அப்பொழுது 'இந்து' பத்திரிகையில்'' Revival of Tamil Learning'' என்னும் தலையங்கத்தை பத்திரிகை ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய ஐயர் எழுதினார். இந்தத் தலையங்கத்தில் சென்னைப் பல்கலைக்கழகம், தாய் மொழிக் கல்வி விஷயததில் மாற்றாந்தாய் மனப் பான்மை கொண்டிருப்பதாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தலையங்கத்தில் பின்வரும் பகுதியை தமது கட்டுரையில் மேற்கோளாகக் காட்டி, அதை விமர்சனம் செய்யுமிடத்தில், தமக்கு மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை எழுதியத்தனிப்பட்டக் கடித வாசகங்களை வெளியிட்டர், சுவாமிநாதய்யர்.

''துரதிர்ஷ்ட வசமாக நம்மிடையே பெருந்தமிழ் அறிஞர்கள் எனப் பெயர் பெற்றோர், மகத்தான செவ்வியல் இலக்கியங்களைப் படைத்த சமூகத்தின் பேருள்ளங்களின் இயல்பாக அமைந்த கூர்மதியுடைய நுண்ணறிவாளர் அல்லர்; சுதேச இலக்கியத்திற்கு பயன்படத்தக்கத் தொண்டாற்ற விரும்பும் போராடும் இளைஞர்களிடமும், ஆர்வலர்களிடமும் பரிவும் காட்டுபவர் அல்லர் சுயநலமும் குறுகிய மனப்போக்கும் கொண்ட இவர்கள் பல்கலைக் கழகமோ, தனிநபர்களோ தமிழ்ப் படைப்பாளர்களுக்கு எந்த ஆதரவைக் காட்டுகின்றதோ அதையும் சரிவரப் பயன்மடுத்திக் கொள்வதில்லை. ஆனால், இளைஞர்கள், குறைவாகத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் எழுத்தாளர்கள் பாதையிலே போதுமளவிற்கு தடைகளை வீசுகின்றார்கள்; அவர்களிடம் மிகவும் தகுதியற்றப் பொறாமை கொள்ளுகின்றார்கள்,''

மேற்காணும் கருத்தை சுவாமி நாதய்யர் விமர்சனம் செய்யுமிடத்தில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையைச் சான்றாகக் காட்டி எழுதியாதவது.

'''இந்து' பத்திரிகைத் தலையங்கம் குறிப்பிடுவதைப் போல இளைஞர்கள், மற்றவர்கள் மட்டு மல்ல இந்தத் துர்பாக்கியத்தை அனுப்விப்பவர்கள். பேராசிரியர் சுந்த ரம்பிள்ளை போன்ற வயதானவர்களும் கூடத்தான்... ஆனால் இவர்கள் பொதுவாழ்க்கை மதிப்பீட்டில் முக்கி யப் பெரறுப்பு வகிப்பதால், நயத்தக்க நாகரீகம் கருதி தங்களுக்கும், தங்கள் நூல்களுக்கும் இழைக்கப்படும் அவமதிப்பை பொருட்படுத்துவதில்லை. ஆனால் தாங் கள் அந்தரங்க நண்பர்களிடம் பழகும்பொது தங்களு டைய சலிப்பையும், ஏமாற்றவுணர்வுகளையும் வெளிப் பயெத்துகின்றனர்.''

இவ்வாறு சுவாமிநாதய்யர் எழுதிச் செல்லும்பொழுது தமக்கு 1893-ல் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆங்கிலத் தில் எழுதிய அந்தரங்கக் குறிப்பு கொண்டக் கடிதத்தின் ஒரு பகுதியை தமது கட்டுரைக் கருத்தை வலியுறுத்து வதற்காகத் எடுத்துக் காட்டத்தயங்கவில்லை. இதன்மூலம் பேராரிசிரியர் உள்ளத்துணர்வுகளையும் தமிழின் நிலை காண்போர்புரிந்து கொள்ளவும் வாய்ப்பளித்து விட்டார், சுவாமிநாதய்யர்.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை வாழ்க்கை வரலாற்றில் இதுவரை இடம் பெறாத சிறந்த செய்தியும் ஆகும். இது மிகச்சிறந்தப் படைப்பான **'மனோன்மணியம்'** பல்க லைக்கழகத்தாரிடமும், பொதுவாக படித்த வகுப் பாரிடமும் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது, என்பதைப் பற்றி வருத்தமுடன் தமது கடித்த்தில் பின்வருமாறு எழுதியுள்ளார், பேராசிரியர்.

''பல்கலைக்கழகம் இந்த ஆண்டிலும் 'எப், ஏ' அல்லது. 'பி ஏ.' விற்கு பாடநூலாக என்னுடைய நாடகத்தை வைத்து நியாயம் வழங்க வேண்டும். அவ் வாறு செய்யவில்லையென்றால் நான் மிகவும் மனந்

தளர்ந்து போவேன். நீண்ட பல ஆண்டுகளாக 'பாவம்' தேர்வெழுதும் மாணவனையும், விடைத்தாள்களை திருத்துபவரையும் துன்புறுத்தித்தண்டிக்கும் வகையில் அமைந்த உரைநடைக்கும் சார்பாக சமாதானம் கூறு வதற்கு பதிலாகவும், உயிர்ப்பற்ற, சுவையற்ற பழைய புராணங்களுக்கு பதிலாகவும் எனது நாடகத்தைப் பாடநூலாக வைக்கலாம்.''

சுவாமிநாதய்யருக்கு எழுதிய மற்றொரு கடிதத்தில் பேராசிரியர் எழுதியதாவது.

''நான் நோயாளியாகிவிட்டேன். என்னுடைய தாய் மொழியை முதலில் மிக்க ஆர்வத்துடன் படித்துவருவதா லும் பிறகு ஐரோப்பிய தத்துவம்,விஞ்ஞானத்தைப்படித்து வருவதாலும், என் தேக நலத்தை இழந்து விட்டேன். பலவகைப்பட்ட எனது திட்டங்களில் சிலவற்றைக் கவ னிக்க நான் விவேகமில்லாமல் என்னுடைய சக்திகளை அளவிற்கதிகமாகச் செலவழித்து விட்டதால் நான் நோய்வாய்பட்டுவிட்டேன்.''

பேராசிரியரின் இந்த உள்ளத்துணர்வுகளைச் சுட்டிக் காட்டிப் பல்கலைக்கழகமும், பொறுப்பில் உள்ள பிறரும் குறுகிய எண்ணத்தாலும், அலட்சியப் போக்காலும் பேராசிரியர் நியாயம் கேட்டு எழுப்பியக்குரல், கான கத்தில் எழுப்பப்பட்ட குரலாகச் செய்து விட்டனர் என்று சுவாமிநாதய்யர் வருத்தப்பட்டார். கவலையும், துன்ப மும், சக்திவிரயமும் ஏற்பட்டாலும் கூட இறுதியில் 'எப். ஏ,' தேர்விற்கு மனோன்மணீயம் பாடநூலாக்கப் பட்டத் தகவலையும் சுவாமிநாதய்யர் தந்துள்ளார்.

'எப்.ஏ.' தமிழை நவீனமயப்படுத்த முயற்சிசெய்து பாடுபட்டவர்களுள் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையும், ஒருவர் ஆவார்.

விஞ்ஞானச் சிந்தனையை வெளியிடும் ஆற்றல் தமிழ் மொழிக்கு உண்டு என்பதை விரித்துக் கூற, 'நூற்றொகை விளக்கத்தை' வெளியிடுவதாக சுந்தரனார் தமது ஆங்கில முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தமிழ் மொழியை காலத்தேவைக்கு ஏற்ப புதுமையாக்கம் செய்யவும் சுந்தரனார் மீண்டும் வலியுறுத்தினார்.

''பூர்வீகர்கள் மேல் உண்மையான பக்தியும் தேசாபிமானமும் உடையோர், முன்னோர் நூல்களை அன்போடாராய்வதோடு. நூதனமாக அந்நிய தேசத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நூல்களையும் கற்றறிந்து கலந்து பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே' என்னும் முதுமொழியை மறவாது அவர் அவர்களால் கூடிய அளவும் நம் முன்னோர் உழைத்தபடி உண்மை அறிய உழைத்து. ஜனசமுதாய அறிவை வளர்க்கத் தக்க கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்''.*

• நூற்றொகை விளக்கம்-பக்.2. இதே கருத்தை மனோன்மணியம் நூலின் முகவுரையிலும் கூறினார்.

உ. வே. சா. வும் (1855-1942) பாரதியாரும்

இளம் வயதிலேயே, எட்டயபுரத்தில், மணிமுத்துப் புலவர் என்பவரின் கவிதையைப் பாராட்டி, வாழ்த்திப் பாடினார் பாரதியார். இப்பாடல் எந்த ஆண்டில் பாடப் பட்டது என்பதை அறிய முடியவில்லை.

1906-ல் மகா மகோபாத்யாயர் உ.வே.சாமிநாதய் யர் மீது பாடிய வாழ்த்துப்பா, மணிமுத்துப் புலவர் மீது பாடிய வாழ்த்துப் பாவைக் காட்டிலும் சொற்சுவை; பொருட்சுவைகளில் விஞ்சியுள்ளது.

பாரதியாரின் வரலாற்றை அறியக் கிடைத்துள்ள ஆரம்பகால கவிதைகளுள் மணிமுத்துப்புலவர் வாழ்த் துப்பா ஒன்றாகும்.

மணிமுத்துப் புலவரைப் பற்றி வித்வான் மு.சண்முகம் பிள்ளை அவர்கள், ''பாரதி பாராட்டிய பாவலன்' என்னும் கட்டுரையில் எழுதியுள்ளார்.*

எட்டயபுரம் சமஸ்தானத்துப் புலவர்கள்,பாரதியாரின் கவிதையாற்றலைப் போற்றத் தொடங்கிய காலம், அது. வைணவ பக்தரான மணிமுத்துப்புலவர், சமயக்காழ்ப் பற்றவர்.

மணிமுத்துப்புலவர், பாரதியாரிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர்; ஒரு சமயம் தாம் திருமால் மீது புனைந்தப்

* சக்தி -மாத இதழ்-ஆசிரியர், வை.கோவிந்தன்; 1954 மார்ச்; பக்:46-47

பக்திப் பாடலை பாரதியார் முன் பாடிக் காட்டினார். மணி முத்துப் புலவரின் கவித் திறமையைப் பாராட்டிப் பின்வரும் வெண்பாவைப் பாடினார், பாரதியார்.

பந்தைத் தெறுமுலைமாப்
பான்மொழிவ னுங்கரிய
எந்தைக்குச் சால
இனிக்குமே-விந்தை
அணிமுத்துக் கோவையென
அஞ்சொலிசை சேர்க்கும்
மணிமுத்து நாவலவர்
வாக்கு.

உமாதேவியை விடவும் கருநிறங் கொண்ட திருமாலுக்கு, மணிமுத்து நாவலரின் அழகிய முத்துக் கோவை போன்ற பண்ணழகு சேர்ந்துள்ள செஞ்சொற்கள் இனிக்கும் என்பது இப்பாடலின் கருத்து.

1935-ல் 'மணிமுத்துப் புலவர் பாடல்' வெளியிடப்பட்டது. மணிமுத்துப் புலவரின் குமாரர் முத்தையாப் புலவர் வெளியிட்ட இந்நூலில், பாரதியார் அருளிய வாழ்த்துப் பாவைப் பற்றிய பின் வரும் குறிப்பு உள்ளது.

''ஒருகால எட்டயபுரத்தின் கண் நமது தேசாபிமானியும் பாஷாபிமானியுமாகிய சுப்பிரமணிய பாரதியாரவர்கள் வைணவ சித்தாந்தமாக இப்புலவர் பெருமான் இயற்றிய பாசுரங்களை கேட்டுத் தமது உள்ளங் களிகூர்ந்து 'பந்தைத் தெறு. நாவலர் வாக்கு' என்றொரு வெண்பாவால் வியந்துரைத்துள்ளனர்.''

எட்டயபுர சமஸ்தானத்தின் கர்வம் கொண்டலைந்த 'பெரிய மனிதர்கள்' சிலரை நையாண்டி செய்து,

''மூடமதி மாலைப் பாடல்களை'' பாரதியார் புனைந்தார் என்றும் கூறுவர்.*

இது அச்சிடப்படாததால், வாய்மொழியாகவே அருகி விட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆக, வாழ்த்துப் பாக்களும், நையாண்டிப் பாக்களும் எட்டயபுர சமஸ்தானகால கவிதை வாழ்க்கையிலேயே பாரதியாருக்கு அமைந்து விட்டன.

தமிழ் தாத்தா கும்பகோணம் காலேஜில் 1880 முதல் 1903 நவம்பர் வரையில் தமிழ்ப் பண்டிதராகப் பணி செய்து விட்டு, சென்னை பிரசிடென்ஸி காலேஜில் 1903 டிசம்பர் மாதத்தில் தமிழ்ப் பண்டிதராகப் பொறுப்பேற்றார்.

பாரதியார் மதுரைச் சேதுபதி கலாசாலையில் 1-8-1904 முதல் 10-11-1904 வரை தமிழாசிரியராகப் பணி புரிந்து விட்டு, சென்னை வந்து சுதேசமித்திரனில் உதவி ஆசிரியரானார்.

'பிரஸிடென்ஸி காலேஜி'ன் தமிழ்ச் சங்கக் கூட்டங்களுக்கு பாரதியார் சென்று உ. வே. சா. வுடன் பழகும் பழக்கமுடையவராய் இருந்தார்.

''சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ச்சங்கம்'' என்னும் தலைப்பில் பாரதியார் தமது **இந்தியா** இதழில்-அக்டோபர் 20, 1906-ல் எழுதியுள்ளார். 'பிரஸிடென்ஸி காலேஜ்' மாணவர்களின் தமிழ்ப்பற்றையும், அவர்களுக்கு ஊக்கமளித்த உ. வே. சா. அவர்களையும் பாரதியார் இந்தக் கட்டுரையில் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

---

* டாக்டர் ஜே. பார்த்தசாரதி- நூலகம்- மாதஇதழ்- மார்ச்சு 1975 பக்: 34.

''சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ் சங்கத்தாரின் வருடாந்தர உற்சவம் சென்ற சனிக் கிழமையன்று வெகு வைபவமாக நடந்தேறிற்று. தக்க வித்வான்களும், பெரிய பிரபுக்களும் வந்திருந்தார்கள். சபைத்தலைவராக ஸ்ரீபாண்டித் துரைத் தேவர் வீற்றிருந்தார். அரிய உபந்நியாசங்கள் நடைபெற்றன. பிரஸிடென்ஸி காலேஜ் மாணக்கர்கள் அன்புடனே தமிழ்ப் பயிரை வளர்த்து வருதல் பற்றி மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். தற்காலத்தில் தமிழ் அரசராக விளங்கும் பிரம்ம ஸ்ரீ **சாமிநாத** ஐயரவர்களுடன் எப்பொழுதும் பழகுகின்ற இம்மாணாக்கர்கள் ஐயரவர்களுடைய விடா முயற்சி, தாய் மொழியினிடத்தில் அன்பு என்ற நற்குணங்களையும் பயின்று கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றோம்.''*

பாரதியார் தமது பாராட்டுரையில் உ. வே. சா. அவர்களை **''தற்காலத்தில் தமிழ் அரசாக விளங்கும்''** என்று குறிப்பிட்டு மகிழ்கிறார். ''தாங்கள் தமிழுக்கு ஒரு கண் என்று மனோன்மணீயம், சுந்தரம் பிள்ளை பாராட்டியுள்ளார்.

1909-ஜனவரியில்- சென்னை அரசாங்கம் 'தமிழ்ப் பண்டிதர்' உ. வே. சா. அவர்களைப் பெருமைப்படுத்த விரும்பி, அவருக்கு **'மகா மகோபாத்தியாயர்'** என்னும் பட்டத்தை அளித்தது.

தமிழோடு, ஆங்கிலமும் அறிந்திருந்தால் தான் பெரு மதிப்பு கிடைக்கும் என்று கருதப்பட்ட காலத்தில் **'தமிழ்**

---

* பாரதி தரிசனம்-1; பக் 215-276

**29-11-1896 இல் டாக்டர் உ. வே. சா. விற்கு எழுதிய கடிதம். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய மனோன்மணீயம்- ஆறாம் பதிப்பு, 1892-ஆசிரியர். பி. ஸ்ரீ. -ப. vii

மட்டுமே' அறிந்த உ. வே. சா, அவர்கள் உலகெங்கும் இருந்த தமிழ் ஆய்வாளர்களின் வணக்கத்திற்குரியவராய் விளங்கினார்.

தமிழ் மொழிப் பற்றை வளர்ப்பதில் கண்ணுங் கருத்து மாயிருந்த சுதேமித்திரனில் உ. வே. சா. அவர்களைப் புகழ்ந்து ஒரு துணைத் தலையங்கம், பத்திரிகை ஆசிரியர் தேசபக்தர் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரால், 9-8-1898-ல் எழுதப்பட்டது.

'கம் பண்டிதர்கள்' என்னும் அந்தத் துணைத் தலையங்கத்தில், ''கும்பகோணம் காலேஜ் தற்கால தமிழ்ப் பண்டிதரை ஐரோப்பாவிலுள்ள சிறந்த வித்துவான்களுக்குச் சமதையான டாக்டர் போப் சொல்லியிருப்பதை ஞாபகத்தில் வைப்போம்.'' எனக் குறிப்பிடப்பட்டது.''*

பாரதியார், 'தமிழ் அரசருக்கு,' அன்னிய அரசாங்கம் ''மகா மகோபாத்தியாயர்'' என்னும் பட்டத்தை அளிக்க முன் வந்ததைப் பாராட்டி ஓர் அரிய குறிப்புரையுடன், செஞ் சொற் கவிதையின்பம் பொங்கித் ததும்பும் வாழ்த்துப் பாவையும் தமது **'சக்ரவர்த்தினி'** இதழில் வெளியிட்டார்.

''**மஹா மஹோபாத்தியாய சாமிநாதய்யர்**'' என்னும் தலைப்பில் அமைந்த குறிப்புரை வருமாறு:

''பலவகைத் தானங்களிலே நல்லறிவுத்தானமே விசேஷமுடையதென்று மேலோர் சொல்வார்கள். அழிந்து போன ஆலயங்களை மறுபடி புதுக்கிக் கட்டிப் பிரதிஷ்டை புரிந்தோர், நெடுங் காலமாக நின்று போன அன்ன சத்திரங்களுக்கு மறுபடியும் உயிரளிப்போம். வறண்டு மண்

---

* குமரி மலர், ஜூன் 1981; பக்; 18.

ணேறிப் போய்க் கிடக்கும் தடாகங்களை மறுபடி வெட்டி நலம் புரிவோர் என்னும் பல வகையாரினும்; மங்கி மறைந்து போய்க் கிடக்கும் புராதனப் பெருங் காவியங் களைப் பெரு முயற்சி செய்து திரும்ப உலகத்துக்கு அளிக் கும் பெரியோர்கள் புண்ணியத்தின் குறைந்தவர்களல்லர். மேலும் புகழ் நிலைக்குந் தன்மையில் மற்றெல்லோரைக் காட்டிலும், இவரே சிறந்தவராவர்.

பிரம ஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயர் மேற்கூறப்பட்ட பெருந் தருமத்தை நன்கு புரிந்தவர். சிந்தாமணி, சிலப்பதி காரம், மணிமேகலை முதலிய பழந்தமிழ் நூல்களை இன்று நம்மவர் கற்றுக் களிப்பது சாமிநாத ஐயருடைய கருணை மிகுதியாலல்லவோ? இவருக்கு கவர்ன்மெண்டார் மஹாமஹோபாத்தியாய''ப் பட்டம் கொடுத்துப் பெருமைப்படுத்தியது மிகவும்பொருத்தமுடைய விஷயமே, இன்னும் நெடுங்காலம் இம் மஹா மஹோபாத்தியாயர் சீரும் சிறப்பும் பெற்று தமிழுலகத்தாருக்கு இனியன புரிந்து வாழ வேண்டுமென்பதே எமது விருப்பம்''*

மேற்காணும் குறிப்புரையில் உ.வே.சா. அவர்களின் ஒப்பற்றத் தமிழ்த் தொண்டின் அருமை பெருமை களை பாரதியார் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் எனும் வழியில் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் கலாசாலைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் மஹா மஹோபாத்தியாயரைப் பாராட்டிப் புனையப் பெற்ற கவிதையை மேடையில் தாமே படித்து தமது இருகரங்களால் உ வே.சா.வின் தமிழ் வளர்க்கும் தூயக் கரங்களில் சமர்ப்பித்தார்.

---

* சக்ரவர்த்தினி, பிப்ரவரி, 1906 பக்.153

சக்ரவர்த்தினியில் வெளிவந்துள்ள, ''செம்பரிதி யொளி பெற்றான்...'' எனத் தொடங்கும் கவிதைக்கு மேலேயுள்ள குறிப்பு வருமாறு:

''சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் மிஸ்டர் ஸி. சுப்பிரமணிய பாரதி மகா மகோபாத்தியாய சாமிநாத யரைப் பற்றிச் சொல்லியன.''

உ.வே.சா. அவர்களும் பாரதியாரின் கவிதையை களிகூர ஏற்று, ஸி.சுப்பிரமணிய பாரதி' என்னும் தமது குறிப்பையும் தாளின் மேல் இட்டு பாதுகாத்தளித்துள் ளதை இன்றும் காணலாம்.

பாரதியாரின் வாழ்த்துக் கவிதையிலே தமிழ்மொழி யின் அரிய வரலாற்றுக் குறிப்புகள், சூத்திரங்களாக, அமைந்துள்ளன. ''**கும்பமுனியெனத் தோன்றும் சாமிநாத புலவன்**'' எனும் சீரிய சொற்றொடர், உ. வே. சா. வை தமிழ் தந்த அகத்திய முனிவராக உருவகப்படுத்துகிறது.

தமிழ்ச் செவ்வியறிாத அன்னியர்கள் ஆட்சியிலேயே, ''பொன்னிலவு குடந்தை நகர்ச் சாமிநாதன் தனக்கு'' இவ்வளவு புகழ் என்றால், ''**முன்னிவனப்பாண்டியர் நாள் இருந்திருப்பின்**'' சேரும் புகழைச் சொற்களில் சித்தரிக்க முடியுமோ என்பதாகப் பாரதியார் வியப்பெய்துகிறார். தமிழ் வளர்ச்சியின் மூச்சான மூவேந்தர் மரபை எவ்வளவு நுட்பமாக கூறவேண்டிய இடத்தில் கூறிவிட்டார்.

''**புலவோர் வாயில் துதியறிவாய்**''

என்ற 'அட்சரம் லட்சம் பெறும்' பாரதியின் கவிதைச் சொற்கள் —தமிழ் நெஞ்சங்களை சங்க காலத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

''புலவோர் வாயின் துய''ப் பெருமையை, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ''உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின புலவர் பாடாதுவரைக, என் நிலவரை'' எனும் சூளுரையில் செறிவுற உள்ளடக்கிவிட்டார்.

மகாமகோபாத்தியாயர் சாமிநாதைய்யர் அவர்களைப் பாராட்டிக் கவிதை எழுதும்படி பாரதியாரிடம், அவருடைய அருமைத்தோழர் சோமசுந்தர பாரதியார் கேட்டுக் கொண்டாராம்.*

தமிழ் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், பிரஸிடென்ஸி காலேஜில் பாரதியாருடன் தமக்கேற்பட்டத் தொடர்பைப் பற்றிப்பின் வருமாறு கூறுகிறார்.

> ''சென்னையில் இவர் இருந்த காலத்தில் நான் இவரோடு பலமுறை பழகியிருக்கிறேன். பிரஸிடென்ஸி காலேஜில் வாரந்தோறும் நடைபெறும் தமிழ்ச்சங்கக் கூட்டத்துக்கு வருவார்; பேசுவார். வருஷபூர்த்திக் கொண்டாட்டங்களில் புதிய செய்யுட்கள் செய்து வாசிப்பார்.''**

1806-நவம்பரில் பிரசிடென்சி காலேஜில் யாரதியார் பட்டினத்துப் பிள்ளையின் சரித்திரம்' பற்றி பேசினார். பேச்சின் சுருக்கத்தை தமது, 'இந்தியா, இதழிலும் வெளியிட்டார்.

1936 - ஆம் ஆண்டில் அகில இந்திய காங்கிரசின் ஜுபிலி விழாவில் சென்னை காங்கிரஸ் மண்டபத்தில் பாரதியாருடைய படத்தை திறந்துவைத்துப் பேசும் பொழுது முற் கூறியவாறு உ.வே.சா அவர்கள் குறிப்பிட்டார்.

---

* நற்றமிழ் பக்; 102.

* நினைவு மஞ்சரி இரண்டாம் பாகம். பக்.43

இந்தப்படத்திறப்பு நிகழ்ச்சி, ராஜாஜி அவர்களால் இட்டமிடப்பட்டது. சாமிநாத ஐயர் திருவாக்கால் பாரதி புகழ் பரவ வேண்டும் என ராஜாஜி விழைந்தார். தாம் எதிர்பார்த்தவாறே உ.வே.சாமிநாத ஐயர், பாரதியாரை சிறந்த கவிஞர் எனப் புகழ்ந்துரைத்ததைக் கேட்டு மகிழ்ந் தார் ராஜாஜி. தமது நன்றியுரையில் ஐயர் அவர்களின் பாராட்டுரையைக் குறிப்பிட்டு ''**வசிஷ்டர் வாயால்** பிரம்ம ரிஷி'' எனப் பாரதியார் இன்று பாராட்டப் பெற்றார்''. எனப்பொருத்தமாக எடுத்துரைத்து சபையோரை மகிழ் வித்தார் ராஜாஜி.*

பாரதியாரின் உரை நடையைப்பற்றியும் உ. வே. சா. தமது உரையில் குறிப்பிட்டார்.

''வசனமும் எளிய நடையுடையது, வருத்தமின்றிப் பொருளைப் புலப்படுத்தும் நடைதான் சிறந்தது.பாரதியா ருடைய வசனம் சிறு வாக்கியங்களில் அமைந்தது'' அர்த்த புஷ்டியுடையது.

இவருடைய கவிகளின் பொருள் படிக்கும்போதே மனத்துக்குள் பதிகின்றது. வீர ரஸம், சிருங்கார ரஸம் ஆகிய இரண்டும் இவருடைய பாட்டுக்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.''*

உ. வே. சா. அவர்கள், ''சுப்பிரமணிய பாரதியா ருக்குப் பல வழிகளில் ஆதர்ஷ புருஷராக இருந்தவருமான கோபாலகிருஷ்ண பாரதியார்'' என்றும் நினைவூட்டு கிறார்.

* 10-6-1978-ல் தி. நகர் இராமகிருஷ்ணா மிஷன் (மெயின்) உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ராஜாஜி பிறந்த நூற்றாண்டு விழாக்கூட்டத்தில் கலைமகள் ஆசிரி யர் கி.வா.ஜகன்னாதன் பேசியது.

---

* நினைவுமஞ்சரி—2-ஆம் பாகம் பக். 47.

1936-ல் காங்கிரஸ் பொன் விழாவில் பாரதியாரைப் பற்றிப் பேசிய உ. வே. சா. அவர்கள் 1933 டிசம்பரில் சென்னையில், நடைபெற்ற தமிழன்பர் மாநாட்டில் நிகழ்த்திய வரவேற்புரையில் பாரதியைக் குறிப்பிட வில்லை.

'**தமிழ் வளர்ச்சி**' என்னும் தலைப்பில் பேசிய பேச்சில் தற்காலத் தமிழைக் கூறுமிடத்தில் பாரதியாரைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். உ.வே.சா. அவர்கள்.

பெயருக்கேற்றவாறு முற்றிலும் தமிழில் இந்த மாநாடு நடைபெறவில்லை. ஆங்கிலத்தில் அறிக்கைகளும் சிலர் பேச்சுகளும் அமைந்திருந்தன. உ. வே. சா. தவிர, திரு. வி. க. வையாபுரி பிள்ளை, டி. கே. சி; பி. ஸ்ரீ ஆச்சார்யா, பெ. நா. அப்புசாமி, பேராசிரியர் கே. சாமிநாதன், மந்திரி சிவஞானம்பிள்ளை, மகா கனம் சாஸ்திரியார் சேதுபதி ஆகியோர் இதில் கலந்து கொண்டு பேசினார்கள்.

இந்த மாநாட்டில் பாரதியாரை எவரும் நினைவு கூராததை தமிழ் எழுத்தாளர் திரு. பி. எஸ். ராமையா வருத்தமுடன் குறிப்பிட்டுள்ளார்.

''அவ்வளவுதான், பாரதியார், தமிழில் புதிய இலக்கியம், உலக இலக்கிய இயக்கத்துடன் தமிழ் இலக்கிய இயக்கத்தை இணைக்கும் புதிய முயற்சிகள் பற்றி ஒரு சொல் கூட கூறப்படவில்லை.''*

பாரதியார் அவர்கள் தற்காலத் தமிழ் இலக்கிய உணர்வில், சமகால உணர்வை உறவாட விட்டு, உலக

*மணிக்கொடி காலம்-பக்: 78.

இலக்கியத்தோடு, தமிழ் இலக்கிய இயக்கத்தையும் இணைத்தார்.

இந்த முயற்சியில், ஆங்கிலப் படிப்பு, தமிழ்ப் படிப்பு என்று பிரிவுப் படுத்திப் பழிபோரை பாரதியார் தாக்கினார். இவ்வகையில் உ.வே.சா.வின் கருத்துக்களை பயன்படுத்திக் கொண்டார் பாரதியார்.

1906 செப்டம்பர் 29-ஆம் '**இந்தியா**' இதழில் '**தென்றலுடன் பிறந்த பாஷை**' என்னும் தலைப்பில் பாரதியார் ஒரு குறிப்புரை எழுதினார். தமிழ்ப் பயிற்சியில்லாதவர்கள், தமிழைக் குறை கூறுவதை கடுமையாகக் கண்டித்தார். தமது கருத்திற்கு ஆதரவாக உ. வே. சா. அவர்களின் சொற்பொழிவொன்றை எடுத்தாண்டார்.

''இதன் சம்பந்தமாகச் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய மஹாவித்வான் ஸ்வாமிநாதையர் சொல்லிய வார்த்தையொன்று நமது நெஞ்சை விட்டு ஒருபோதும் அகலமாட்டாது. மேற்படி காலேஜ் தமிழ்ச் சங்கத்தில் ஒரு 'மீட்டிங்' நடந்தது, தமிழ்ப் பாஷையின் அருமையைப் பற்றி ஏதோ பிரஸ்தாபம் வந்தது. அப்போது ஸ்வாமிநாத ஐயரவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினார்:- 'ஆங்கிலேய பாஷையின் இலக்கிய நூல்களில் எத்தனையோ அருமையான கருத்துக்கள் ததும்பிக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். அந்த பாஷை எனக்குத் தெரியாது. அதனால் அவ்விஷயத்தில் ஒரு விதமான அபிப்பிராயமும் என்னால் கொடுக்கமுடியாது என்றபோதிலும் மேற்கண்டவாறு சொல்வோர் தமிழ்ப் பாஷையிலே அவ்விதமான அருமையான விஷயங்கள் கிடையாவென்று சொல்லும் பொழுது உடன் எனக்கு வருத்தமுண்டாகிறது. இவ்வகுப்பினர்களுடன் நான் எத்தனை முறையோ சம்பாஷணை செய்திருக்கிறேன். அந்தச் சமயங்

களிலே நான் இவர்களது தமிழ் வன்மையைப் பரிசோதனை புரிந்திருக்கிறேன். இவர்கள் அத்தனை சிறந்த பண்டிதர்களென்று எனக்குப் புலப்படவில்லை. பழங்காலத்துத் தமிழ் நூல்களிற் பயிற்சியில்லாத இவர்கள் அவற்றைப் பற்றி இழிவான அபிப்பிராயம் கொடுப்பது தான் வெறுக்கத்தக்கதாக இருக்கிறது.'' என்று அப்பண்டிதர் முறையிட்டார். வாஸ்தவம்தானே?*

பாரதியார், உ. வே. சா. அவர்களின் எழுத்தையும், பேச்சையும் கருத்துடன் ஊன்றிக் கவனித்து வந்தார். ஒரு சமயம் உ. வே. சா. அவர்கள் தமிழின் மூவா இளமை நலத்தைக் குறிப்பிட்டுப் பேசினார் வழக்கம் போல ஆங்கில மோக எதிர்ப்புப் போருக்கு உ. வே. சா. அவர்களின் உரை நலத்தைப் பயன்படுத்திக் கொண்டார், பாரதியார்.

தமிழ் தாத்தா பேச்சில் இடம்பெற்ற '**கன்னித் தமிழ்**' எனும் சீரிய சொல்லாட்சியை தமது குறிப்புரையின் தலைப்பாகக் கொண்டார்.

நவம்பர் 7, 1908-ல் 'இந்தியா'வில் வெளிவந்த ''**கன்னித் தமிழ்**''எனும் தலைப்பில் வந்த குறிப்புரை:

''தமிழ்ப் பாஷை இறந்து போய்விடும் என்றும்' நமது தமிழ் நாட்டில் எல்லா பாஷைகளுக்குமே பிரதியாக இங்கிலீஷ் பாஷை ஏற்படுமென்றும் நம்பிய மூடர்கள் சுமார் 100 வருஷங்களின் முன்பு நமது ஜனங்களிலே பலர் இருந்தார்கள். இப்போதுங்கூட அந்த நம்பிக்கையுடையவர் ஆங்கிலேயர்களிலே அனேகர் இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பாஷைகள் எல்லாம் மடிந்துபோய் அவற்றின் இடத்திலே இங்கிலீஷ் நிலவி வரும் என்பது

---

* பாரதி புதையல் (முதற்பாகம்); பக்: 100

இதரர்களுடைய எண்ணம் இஃதிவ்வாறு இருப்ப, மகாவித்வான் ஸ்ரீ உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் சில தினங்களின் முன்பு இவ்விஷயத்தைப் பற்றிப் பேசிய போது பின்வருமாறு கூறியிருக்கிறார்:

''அன்னியர்களைக் குறை கூறிப் பயனில்லை. தமிழ்ப் பாஷையின் செல்வங்களையெல்லாம் தக்கவாறு பயன் படுத்திக் கொள்ளாத குற்றம் நம்மவர்களையே சார்ந்ததாகும். எவ்வாறாயினும் நமது தாய்மொழி சாம்ராஜ்யத்தில் இறந்து விடக் கூடியதன்று. பெரியோர்கள் இதனைக் 'கன்னித் தமிழ்' என்று பெயரிட்டழைத்திருக்கிறார்கள். இது எக்காலமும் வனப்பும் இளமையும் மாறாத கன்னிகையாகும். இதற்கு முதுமையே கிடையாது. மரணமும் இல்லை'' என்றார்.*

தேச ஐக்கியம், தேசபக்தி, தேசிய உணர்ச்சி இவை யாவும் ஆங்கிலக் கல்வியின் 'அருட்கொடைகள்' என்று சாற்றுவதை, பாரதியார் அறியாமை எனக்கூறுவார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில் புறநானூறு காலத் தமிழகத்தைப் பற்றி உ.வே.சா.அவர்கள் நிகழ்த்திய ஆய்வுரை பாரதியாரின் நெஞ்சை அள்ளியது.

1894-ல் முதன் முறையாக அரும்பாடுபட்டு உ.வே.சா. அவர்கள் புறநானூற்றை அச்சிட்டு வெளியிட்டார்கள். தமிழ்ச் சிந்தனையில் புதிய புரட்சியை நிகழ்த்தியது, இந்த 'புற நானூறு' வெளியீடு.

'புறநானூறு', புனைந்துரையோ புராணமோ அல்ல என்பதை பாரதியார் அக்காலத்தில் எடுத்துக்காட்ட வேண்டியிருந்தது. உ.வே.சா. கண்டெடுத்துத் தந்த புறநானூற்றை அறிமுகம் செய்து கொண்ட நிலையில் பாரதியார் கூறியதாவது;

---

* பாரதி புதையல் (முதற்பாகம்) பக்- 14.

''புறநானூறு'' என்னும் அரிய தமிழ் நூல் எத்தனையோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தொகுக்கப்பட்டது. பின்னிட்ட நூல்களைப் போல இது புராணக் கதைகளை விரிக்கும் தன்மை உடையதில்லை. அக்காலத்தில் தமிழ் நாடு இருந்த நிலைமையையும், தமிழ் மன்னர்கள் செய்த போர்களையும் இன்னும் பல இயற்கைச் செய்திகளையும் விளக்கிக் கூறுவது.''

'பழந்தமிழ் வீரத்தை மட்டும் புறநானூற்றில் பலர் காண, பாரதியார் புதிய செய்தியை புறநானூற்றில் கண்டார். ''அழியாப் புகழ்கொண்ட பழங்கால தமிழ் மாது'' என்று தலைப்பிட்டு'' இந்தியாவில் (8-9-1906) எழுதினார்.

தமிழ் படிப்புக்கும், தேச பக்திக்கும் அழுத்தமான உறவு உண்டு என்பதே பாரதியார் அன்று கண்ட அந்தப் ''புதிய செய்தி''யாகும். இதை, அவர் கூறக் கேட்போம்:

''சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ் பண்டிதராகிய ஸ்ரீ.வி.சாமிநாதய்யர் சென்ற மதுரைத் தமிழ்ச் சங்க வருடாந்திரக் கூட்டத்தின் போது, ஓர் பாடலெழுதி பொருள் விரிக்கும்படியேற்பட்டது தமிழ் படிப்பினால் காரியமில்லையென்றும், ஆங்கிலேய நூல்களைப் படிப்பதனால் ஏற்படும் தேச பக்தி, பெருந்தன்மை முதலியவை உண்டாகாவென்றும் சிலர் அறியாமையால் கருதுகிறார்களல்லவா? இவ்வாறு நினைப்பது பிழையென்பதை விளக்கும் பொருட்டாக ஸ்ரீ அய்யரவர்கள் மேற்படி பாடலையெடுத்துக் கூறினார்'' *

அயல் நாட்டு தமிழறிஞர்களைப் பாராட்டும் வேகத்தில் த்தாய் நாட்டு அறிஞர்களுக்குரிய பெருமதிப்பைக் குறைத்து விடலாகாது எனக் கருதியவர், பாரதியார்.

* புறம்- 278-இல் வரும் இப்பாடல் முதிய வீரத்தாயின் சூளுரையை விளக்குவது.

தமிழ்ப் புரவலர் பாண்டித்துரைத் தேவர், தமிழ் தாத்தா சாமிநாய்யர் ஆகியோரைக் கொண்டு தமது கருத்தை வெளிப்படுத்தினார், பாரதியார்.

1906-ல் பிரசிடென்ஸி காலேஜ் தமிழ்ச் சங்கக் கூட்ட மொன்றில் பாண்டித்துரைத் தேவர் தலைமையேற்றார். இந்தக் கூட்டத்திற்கு ஐரோப்பியர் சிலர் வந்தனர். இவர் களுக்கு ''வந்தனம்'' செலுத்திப் பேசினார் பாண்டித் துரைத்தேவர்.

பாரதியார் மேற்படி நிகழ்ச்சியைப் பின்வருமாறு விமர்சனம் செய்தார்.

''சாதாரணமாக ஒருவருடைய உபந்நியாசத்திலேபிழை சொல்ல வேண்டுமென்ற மூட எண்ணம் நமக்குக் கிடையாது. ''வந்தனம்'' என்ற பதம் மேலோர்களுக்கே உபயோகிக்கத் தக்கவையாகையாலும் அதை 'நன்றி' என்னும் பொருளிலே உபயோகிப்பது சில சமயங்களில் அசம்பாவிதங்களாக முடியுமாகையால், தேவரவர்கள் போன்ற பண்டிதர்கள் மேற்படி சொல்லை உபயோகிக்கும் அப்பியாசத்திலிருந்து நீக்கிக் கொள்ள வேண்டுமென்பதே நமது நோக்கம்.

உண்மையைக் கூறப்புகுவோமானால் சொல்லால் மட்டுமேயன்றி, செய்கையாலும் கூட அன்றைய தினம் ''**ஐரோப்பிய பூஜை**'' வெகு சாஸ்த்ரியமாக நடந்தேறிற்று. இதைப் பற்றி, அதிகமாக எழுத விரும்புகின்றோமில்லை. **நமது மதிப்புக்கும் சன்மானத்திற்கும் உரிய பெரியோர்கள் அன்னிய தேசத்தார் முன்பு சமானசமமில்லாத கீழான ஜீவன்களைப் போல நடந்து கொள்வது நமது மனதைப்புண் படுத்துகிறது**. ஆனால், இதைச் சொல்லப் போகுமிடத்து

அவர்கள் மனது புண்படும். ஆதலால் இத்துடன் நிறுத்து கின்றோம்.''*

சென்னை அரசாங்கம் டாக்டர் ஜி.யு.போப் அவர்களுக்கு தமிழ் அகராதியை தயாரித்து வெளியிடுவதற்காக 30, 000 ரூபாய் அளிக்க முன் வந்தது. தமிழகராதியை உருவாக்குவதில், போப்பைப் போலவே ஐயரவர்களும் தகுதியுடையவர் என்று பாரதியார் முடிவு செய்தார். அன்னிய அரசாங்கம் அன்னிய தமிழறிஞர் ஒருவருக்கு அளிக்கும் உதவியை தாய் நாட்டு அறிஞருக்கு வழங்க முன் வரவில்லையே என்றும் பாரதியார் வருத்தப்பட்டார். 'தமிழ் மாணவர்' என்று தம்மைப் பெருமையாகக் கூறி கொள்ளும் வழக்கமுடைய டாக்டர் ஜி.யூ.போப் அவர்களின் தமிழ் உணர்ச்சியை, தமிழ்த் தொண்டை, மறவாத பாரதியார், உ.வே.சாவின் தகுதியைப் பற்றிக் குறிப்பிட்டார்.

1906.செப்டம்பரில் டாக்டர் ஜி.யூ,போப் அவர்களின் தமிழ் உணர்ச்சியை பாராட்டி தேசபக்தர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர், சுதேசமித்திரனில் ஒரு குறிப்பை எழுதினார்.

''தமிழ் மட்டும் தெரிந்த ஜனங்களில் சிறு பாலார் தமிழ் விஷயத்தில் ஒரு விதமான மூடபக்தியாவது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலம் கற்றுணர்ந்தவர்கள் இவ்விஷயத்தில் தமது கடமையை முற்றும் மறந்து விடுகிறார்கள். இவர்கள் தமிழ் பாஷை விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தையும், இவ்விஷயத்தில் இவர்கள் வகிக்கும் அசிரத்தையையும் டாக்டர் போப்பைப் போன்ற ஆங்கிலேயர்கள் அறியும் பக்ஷத்தில் இவர்கள் இருக்கும் திசையை நோக்கி காறியுமிழும் வண்ணமாக நம்மவர்கள் நடந்து கொள்கிறார்கள்.''

---

* பாரதி தரிசனம்-1; பக்.277. ''ஐரோப்பிய பூஜை'' யைத் தவிர பிற வரிகளில் அழுத்தம் இந்நூலாசிரியருடையது.

முற்கூறியதில் உள்ள கடுமையான சொற் பிரயோகமான '**காறியுமிழ்தலை**', ''நாம் முற்றும் அங்கீகாரம் செய்கிறோம்'' எனப் பாரதியார் எழுதியுள்ளார்.

இவ்வாறு போப் அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பை குறிப்பிட்டு, ''**சென்னை கவர்ன்மெண்டாரும் டாக்டர் போப்பும்**'' என்று அக்டோபர் 20, 1996 ஆம் '**இந்தியா**' இதழில் பின்வருமாறு எழுதினார்,

''மகாமஹோபாத்தியாய சாமிநாதய்யர் போன்ற வித்வான்கள் புதிதாகத் தமிழ் அகராதி தொகுக்க ஆரம்பிப்பார்களாயின் அது எத்தனையோ சிறப்பாக இருக்கும். ஆனால், அதற்கு கவர்ன்மெண்டார் இத்தனை ஆத்திரத்துடன் உதவிக்கு வந்திருக்கமாட்டார்கள். பழங் காலத்து நூல் பிரசுரிக்கும் விஷயத்திலே சாமிநாதய்யர் அவர்கள் பட்டிருக்கும் சிரமத்திலே எட்டில் ஒரு பங்கு போப் பாதிரியார் பட்டிருப்பாரானால் இதற்கு முன் கவர்ன்மெண்டார் அவரைக் குபேரனாக்கி இருப்பார் களல்லவா? ஆனால் வெள்ளை நிறம் கொண்ட தேவியின் அனுக்கிரகம் சாமிநாதய்யர் அவர்களிடம் பரிபூரணமாக இருந்தபோதிலும் வெள்ளை நிறம் கொண்ட தேவர் (ஐரேப்பியர்)களின் கிருபை போப் பாதிரியாரிடம் நிரம்ப இருக்கின்றன.'' *

விடுதலை பெற்ற நாட்டில்தான் தாய்நாட்டறிஞர்கள் ஏற்றிப் போற்றப்பட நல்வாய்ப்புக்கள் நிறைந்திருக்கும் என்பதை பாரதியார் குறிப்பாக உணர்த்துகிறார்.

ஆனால், இந்தத் தமிழ் அகராதி தயாரிப்பு முயற்சி கைவிடப்பட்டது. சென்னை அரசாங்கத்தின் கோரிக்கையை இந்திய அரசாங்கச் செயலாளர் ஏற்கவில்லை.

---

* பாரதி தரிசனம்1; பக். 278.

போப் அவர்களின் முதுமை, மிகுதியான பணச்செலவு எனும் காரணங்கள் கூறப்பட்டன.

''அரசாட்சி மாறுபாடுகளிலும் காலவேறுபாடுகளிலும் தமிழ்ப்பாஷைக்குக் குறைபாடு நேரவேயில்லை.'' இவ்வாறு **''தமிழ் வளர்ச்சி''*** யைப் பற்றிய தமது ஆய்வுரையில் உ.வே.சா. கூறியிருப்பது பாரதியாரின் கருத்தோட்டத்திற்கு முற்றிலும் முரணானது. ஆயினும், உ.வே.சா. போன்றோரின் தமிழ்ப் பணியை தற்காலத் தேவைக்கேற்ப விளக்கிக் கூறியவர்களில் முன் நின்றவர் பாரதியார்.

---

* நல்லுரைக்கோவை—11. பக். 52.

புலவர் மரபும், தேசியமரபும் இணையக் குரலெழுப்பியவர்

1922—ல் பாரதியாரின் அருமை மனைவி செல்லம்மா பாரதி அவர்கள் ''சுதேச கீதங்கள்—இரண்டாம் பாகம்'' நூலை வெளியிட்டார். இந்த நூலில் பாரதியாரின் மிக நெருங்கியத் தோழர் வி.சக்கரை செட்டியார் பாரதி யாரின் அரசியல் வாழ்வைப்பற்றி ஆங்கிலத்தில் இலக்கியத் தரம் வாய்ந்த ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்.

* இக் கட்டுரை பாரதியாரை புறநானூற்று காலப் பாணரோடு ஒப்பிட்டுள்ளது. அதன் சில பகுதிகள் வருமாறு:

''திருவாளர் சுப்பிரமணிய பாரதி, தமிழ் மறுமலர்ச்சி யின் முன்னோடி; தேசியத்தின் எழுச்சிமிக்க பாணன்; அவர் மறைந்துவிட்டார். ஆயினும், கண்ணுக்குப் புலப் படாத மாவீரர்களைப் போல, அவர் தமது கவிதைகளின் குழலிசையால் இன்னமும் நம்மோடு உரையாடுகின்றார்... அடிப்படையில் அவர் ஒரு தன்னுணர்ச்சி இசைக்கவிஞர் (**Lyrical Poet**); பழங்காலமாயிருந்தால், அவர் புறநானூற் றுப் பாணர்கள்போல் அரசவைகளில் புகழும் பொருளும் பெற்றிருப்பார். ஆனால், அவரோ கொடுங்கோலாட்சி

---

* **The Political life of Sri Subramanya Barathi.**

சுதேச கீதங்கள்-இரண்டாம் பாகம்-பாரதி ஆச்ரமம், திருவல்லிக்கேணி-பக். xi.

யின் காலத்தில் வாழ நேர்ந்ததால் தாய் நாட்டின் வீழ்ச்சி யையும், புதிய கட்சியின் எதிர்கால நம்பிக்கைகளையும், அச்சங்களையும் பற்றிப் பாடினார்.''

தோழர் வி.சக்கரை செட்டியார் அவர்கள், **Like the bards of Purananuru''** என்று பாரதியாரைக் குறிப் பிட்டது, பாராட்டுதலுக்குரியது. மறைந்துபோன வீரயுகப்பாணர் மரபிற்கு புத்துயிர் அளிக்கத்தோன்றியவர் பாரதியார் என்பதை நினைவுறுத்துகிறார்.

இந்தச் சிறப்புமிக்க பாராட்டுரையைப் பெற்ற தற் காலக் கவிஞர்களுள் பாரதியார்தான் முதல்வராவார்.

புறநானூற்றுச் செய்திகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போருக்கு பயன்படுத்திய முதல் கவிஞரும் பாரதியே.

தமிழ்ப் புலவர்களிடம் தமிழ்ப்புலமையோடு தேசபக்தி யையும் பாரதியார் பெரிதும் எதிர்பார்த்தார்.

தமிழ்ப்புலவர்களிடம், தாம் முதலில் எதிர்பார்த் ததைப்பற்றி பாரதியாரேசுதேசமித்திரன் இதழ் வாயிலாக ஒரு விண்ணப்பம் விடுத்தார். ''**விண்ணப்பம்**'' எனும் தலைப்பில் பிப்ரவரி 13, 1905-ல் வெளி வந்த பாரதியாரின் வேண்டுகோள் தமிழ்ப் புலவர்களிலிடையே தேசியத்தை யும், தமிழையும் ஒன்றுபடுத்த எழுந்த முதல் முயற்சி யாகும்.

விண்ணப்பத்தின் முழு வடிவம் வருமாறு:

''எமது தாய்நாடாகிய பாரதாம்பிகையின் பெரு மையை வருணித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல்வேறு காலத்தும் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற செய்யுள் மணிகளை ஓர் மாலையாகப் புனைந்து பதிப்பிக்கக் கருதி

யிருக்கின்றேனாதலின் பண்டைத்தமிழ் நூல்களில் பாரத நாடு முழுவதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் பாடல்களை அறிஞர் தெரிந்தனுப்புவார்களாயின், அவர் மாட்டு மிக்க கடப்பாடுடையவனாவேன். தமிழ்ப்புராணங் களிலும் இதிகாசங்களிலும் நாட்டுப் படலங்களில் நிடதம் கோசலம் முதலிய பகுதிகளைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் வருணனைகள் பயன்படமாட்டா. **தற்காலத்தே, தமிழ்ப் புலமையிற் சான்று விளங்கும் பெருமக்கள் புதியனவாக 'தேச பக்திப், பாக்கள் புனைந்தனுப்புவாராயின் அவையும் நன்றியறி வுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.**

சிறிய ஆற்றலுடையேனாகிய யான் இப்பெரிய தொழிலை நிறைவேற்றுவதன் கண்ணே எவ்வாற்றானும் துணைபுரிய விரும்புவோர் காலபரியயம் செய்யலாகா தென்று பிரார்த்திக்கின்றேன்.''*

பாரதியாரின் இந்த ''விண்ணப்பத்திற்கு ஏழு மாதங் களுக்கு முன்பாகவே ''சக்ரவர்த்தினி''யில் என். ராக வாச்சாரி பி. ஏ. என்பவர் எழுதியக் கட்டுரையில் தமிழ்க் கவிஞர்கள் அரசியல் உணர்வுடன் கவிதைகள் படைக்க முன்வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இதில் வியப் பென்னவென்றால், அந்தக் கட்டுரை பாரதியார் ஆசிரிய ராக விருந்த இதழில் வெளி வந்தது என்பது தான். அப் பொழுது பாரதியார் அரசியல் கவிதை எழுதத் தொடங்க வில்லை.

''தமிழ்க் கவிஞர்...சுயேச்சை, குடியரசு முதலியவை களைப்பற்றிப் பாடினாரில்லை'' என்று பாரதியாரை

---

* பாரதிதமிழ்; இன்பம் நிலையம். பக். 100. அழுத்தம் இந்நூலாசிரியருடையது.

வைத்துக் கொண்டே எழுதிய அந்தக் கட்டுரையில் ஒரு பகுதி வருமாறு.*

''தமிழ்க் கவிஞர் மலை, கடல் முதலியவைகளை வெகு அழகாகப் பாடினராயினும் சுயேச்சை, குடியரசு முதலியவைகளைப் பற்றிப் பாடினாரில்லை. இவையே தற்கால எண்ணங்களெனத் தோன்றுகின்றன. ஆதலின் இவையே தங்கி நிற்கத் தகுவன, இவைகளைப் புகட்ட நம்மிடத்து கவிஞரும் எழுவரோ? எழுந்த கவிகளை நமது தேசம் போற்றுமோ?''*

தேசிய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டுகள் பழந்தமிழ்ப் பாடல்களுள் உள்ளன என்பதையும், அந்த மரபின் தொடர்ச்சியாகப் புதியப் பாடல்களைத் தமிழ்ப்புலவர்கள் படைக்க வேண்டும் என்பதையும் பாரதியார் எதிர்ப்பார்த்தார்.

தமிழ்ப்புலவர்களிடத்தில் தேசபக்திப் பாடல்களை பாரதியார் எவ்வளவ பேராவலுடன் எதிர்ப்பார்த்தார் என்பதற்கு ஒரு சான்றாக, முதல் விண்ணப்பம் விடுத்த பதினைந்து நாட்களுக்குள்ளேயே மீண்டும் 28 பிப்ரவரி 1906-ல் '**ஓர் சுதேசிய விண்ணப்பம்**' என்ற தலைப்பில் மீண்டும் ஒரு வேண்டுகோளை வெளியிட்டார்.

1904 நவம்பர் இறுதியில் சுதேசமித்திரன் உதவி ஆசிரியர் குழுவில் ஒருவராகச் சேர்ந்த பிறகு பாரதியார் தேசபக்திப் பாடல்களின் தேவையைப்பற்றிச் சிந்தித்தார் எனலாம்.

---

* சக்ரவர்த்தினி-ஆகஸ்ட், 1905- பக். 9.

இதுவரை கிடைத்த பாரதியார் பாடல்களுள் 15-9-1905-ல் சுதேசமித்திரனில் வெளிவந்த 'வங்கமே வாழிய' என்பது பாரதியாரின் முதல் தேசிய கவிதையாகக் கருதப்படுகிறது. இதைத் தொடர்ந்து பின் வரும் வரிசையில் பாரதியாரின் தேசபக்திப்பாடல்கள் வெளிவரத் தொடங்கின.

வேல்ஸ் இளவரசருக்கு வாழ்த்து—29 ஜனவரி 1906

வந்தே மாதரம் — 24 பிப்ரவரி 1906

என்னே கொடுமை — 4 ஏப்ரல் 1906

எனது தாய்நாட்டின் முன்னாட் பெருமையும்—

இன்னாட் சிறுமையும் — 11 ஏப்ரல் 1906

இவ்வாறு தேசபக்திப் பாடல்களைப் படைத்துக் கொண்டு வந்த நிலையில்தான் தமிழ்ப்புலவர்களிடத்தில் முற் கூறிய இரு விண்ணப்பங்களை பாரதியார் சமர்ப்பித்தார்.

பாரதியார் வேண்டுகோளில் உள்ளவாறு தேசபக்திப் பாடல்களை தமிழ்ப் புலவர்கள் புனைந்தளிக்க முன்வரவில்லையென்றாலும், அக்காலத்தில் வீறுகொண்டெழுந்த வந்தே மாதர இயக்கத்திற்கு விளக்கம் அளிக்கும் வகையில் இரு பெரும் புலவர்கள் "**வந்தேமாதர மந்திரச் செய்யுள்களை**" இயற்றினர்,

பரம்பரைத் தமிழ்ப்புலவர் திரு. மு. ரா. கந்தசாமிக் கவிராயர், மகாவித்துவான் சோழவந்தான் அரசஞ் சண்முகம்பிள்ளை எனும் இருவரே அந்தப் பெரும் புலவர்கள். இருவரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் புலவர்கள்.

மு. ரா. கந்தசாமிக் கவிராயர் (-1918)

பெரும் புலவர் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் தேசிய மணங்கமழ்ந்த மதுரை 'விவேகபாநு'வின் ஆசிரியராக இருந்தவர். தூத்துக்குடியில் வ.உ.சி. நடத்தி வந்த 'விவேகபாநு' 1901 இறுதியில் நின்றுபோய் விட்டது. இது மீண்டும் மதுரையில் இருந்து 1902-இல் வெளிவரத் தொடங்கியது இவர் வ.உ.சி., பாரதியாரின் நண்பர்.

1907-ல் 'தூத்துக்குடி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'க்கு ஆதரவு திரட்டித்தந்து வ.உ.சி.யின் முயற்சி வெற்றி பெற சுற்றுப்பயணம் மேற்கொண்டவர் கந்தசாமிக் கவிராயர், வ.உ.சிக்கு ஆதரவாக 1908-இல் நீதி மன்லத்தில் இருமுறை சாட்சி கூறியவர், வ,உ.சியின் நூல்பதிப்பு முயற்சிக்கு உதவியவர். பாரதியாரின் ''**தனிமையிரக்கம்**'' என்னும் முதல் கவிதை, விவேகபாநுவில் வெளிவந்தது.''*

தேசியம், தமிழ் இரண்டையும் வளர்த்த உயர்தர மாத இதழாக விவேகபாநு விளங்கியது, தேசிய இயக்கச் செய்திகள் தொடர்த்து வெளிவந்தன: முதல் இதழ் 1902 செப்டம்பரில் வெளி வந்தது. ''விஷயங்களென்னும் கிரணங்களால் அஞ்ஞானமென்னும் அந்தகாரம் துரத்தப் படுதலின் அவ்விஷயங்களையுடைய இப் பத்திரிகை ஞான சூரியன் என்னும் பொருளடங்கிய 'விவேக பாநு' என்று அழைக்கப்பட்டது.'' இவ்வாறு முதல் இதழில் பெயர்க் காரணம் கூறப்பட்டது.

---

* ஜூலை 1904, பக், 275.

கந்தசாமிக் கவிராயர், அரசஞ் சண்முகனார் பாடிய மாலைமாற்றுமாலை எனும் நூலுக்கு உரை எழுதி அதனைப் பதிப்பித்தார். கம்பராமாயணம் ஆரணிய காண்டத்துக்கு உரையெழுதினார். மற்றும் பல சமய சம்பந்தமான நூல்களை இயற்றினார். ''கவிராயரவர் களுடைய தமிழ்ப்பாஷா பாண்டித்தியம் தமிழுலகினர் அறிந்ததே'' என்றும் ''பாஷாபிமானமும், தேசாபிமான மும் மிக்க கவிராயர்'' என்றும் விடுதலை வீரர் சுப்பிர சிவம் பாராட்டியுள்ளார்.*

பாரதியாரின் '**சக்கரவர்த்தினி**' மாத இதழ் தோன்றி யதும் (ஆகஸ்ட், 1905), வரவேற்று கந்தசாமிக் கவிராயர் கூறியதாவது:

''இதன் நடை எளிதாகவும் இனிதாகவுமிருக் கின்றது.. இதன் பத்திராசிரியராகிய மிஸ்டர் ஸி. சுப்பிர மணிய பாரதியவர்களின் நன்முயற்சி மேன்மேலும் ஓங்கி வளரும் வண்ணம் திருவருளின் திருவடிகளைப் பிரார்த்திக் கின்றோம்.''

சுதேசி இயக்கத்தின் மந்திரச் சொல்லாக நாடெங்கும் பரவிய 'வந்தே மாதரம்' எனும் தேசிய முழக்கத்தின் பெருமைகளை விளக்கி கந்தசாமிக் கவிராயர் ஒரு கவிதையை யாத்து விவேகபாநுவில் வெளியிட்டார்.**

விவேக பாநுவில் வெளிவந்த கவிதையின் அமைப்பு வருமாறு:

---

* ஞான பாநு-நவம்பர் 1914: பக் 215

** விவேகபாநு—நவம்பர் 1906, பக்: 340

வந்தே மாதர மந்திரச் செய்யுள்

விவேகபாநுப் பத்திராதிபர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் இயற்றிய கவிகள்

சந்தப் பாட்டு

எங்கானாலும் நலஞ்செயுமேயின்பே யோருரு
வங்கொளுமே
செங்கோல் ஆதி வயந்தருமே செந்தே னாம்ருசி தந்திடுமே
இங்கே யாயுள் பணந்தருமே எந்தாய் வீரம் வளர்ந்திடுமே
மங்கா வாழ்வு தரும்பதமே **வந்தே மாதர மந்திரமே**

வேறு

சந்தோ ஷாகரம் முன்போல் ஓர்தரம்
சம்பூர் ணோதயம் கொண்டேமேலெழும்
செந்தே வாமிர்தம் இன்பே மேவிடும்
தென்பார் மாதவம் பொன்போல் வாளெனும்
நந்தாய் வாழ்பதம் நன்றே கூர்பலம்
நம்போல் வார்மனஞ் சென்றே சேர்திடம்
வந்தோர் யாரையும் தன்பா லேகொளும்
வந்தே மாதரம் வந்தே மாதரம்

வேறு

எல்லாருஞ் சகோதரரென் றெண்ணச் செய்யும்
எப்பொருளும் நம்தேசத் திருக்கச் செய்யும்

கல்லாரும் பலகலைகள் கற்கச் செய்யும்
　　கைத்தொழிலும் வர்த்தகமும் கதிக்கச் செய்யும்
நெல்லாதி விளைபொருள்கள் நிலவச் செய்யும்
　　நித்தமும்நம் பொருள்நமக் கேநிலைக்கச் செய்யும்
வல்லாண்மைப் போர்வெல்லும் வகையும் செய்யும்
　　வந்தே மாதர மெனுந்தாய் வணக்கந் தானே 3

சாதிமத பேதமெனும் பெருநோய் கொண்டு
　　தவிக்குநமக் கிரங்கிநமைத் தருந்தா யான
மேதினிமான் கொடுத்த அரு மருந்தே போல
　　விளங்குவதாம் ஒற்றுமையை விளைப்ப தாம்எப்
போதும்நலம் புரிவதுமாம் எதிர்த்தோ ருள்ளம்
　　புழுங்கிநடு நடுங்கவென்று புரப்ப தாகும்
மாதிரம்விண் புவிமுழுதும் முழக்கஞ் செய்யும்
　　வந்தே மாதரம் எனுந்தாய் வணக்கந் தானே 4

தந்தேகத் தினிலொருசாண் கும்பிக் காகத்
　　தருஞ்சோற்றுச் சிறுதொழிலே தகவா எண்ணிச்
சந்தேகத் துடன்பயந்து தாயை வேண்டார்
　　சழக்குரையைப் புறந்தள்ளித் தருமம்பேணி
நம்தேசம் செழிப்பெய்த நமது செல்வம்
　　நம்மிடத்தே நிலைத்திருக்க நாடிக்கூடி
வந்தே மாதரம் என்று சொல்வோம் வெல்வோம்
　　மாணவர்காள் சுதேசத்தாய் மலர்ந்தாள் போற்றி 5

ஓர் முக்கியமான அறிகுறி

வந்தே மாதரத்தின் பெருமையை கந்தசாமிக் கவிராயர் எடுத்துரைத்தது, பாரதியாரிடத்தில் ஓர் உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. தமிழ்ப் புலவர்கள், நாட்டு நடப்புகளை கூர்ந்து கவனித்து மக்களிடையே தேச

பக்தியைப் பரப்ப உதவ வேண்டும் என விரும்பிய பாரதியாருக்கு, வந்தேமாதரப் பெருமைகளை எழுச்சியுற விளக்கும் கவிதைகளின் தோற்றம் ஒரு முக்கிய அறிகுறியாகத் தோன்றியதில் வியப்பில்லை.

'இந்தியா' இதழில், நவம்பர் 24, 1906-ல், தமிழ்ப் புலவர்களின் தேசிய சிந்தனையை வரவேற்று எழுதினார்.

''ஓர் முக்கியமான அறிகுறி'' (A sighn of the Times) என்று தலைப்பிட்டு மகிழ்ந்தார்.

ஒரு முக்கியமான அறிகுறியாக எதை வரவேற்றார் என்பதை விளக்கி பின்வருமாறு எழுதினார்;

''காலாபிவிர்த்திக்கேற்பவே பலமுக்கிய அறிகுறிகள் பல திசைகளிலும் வெளிப்பட்டு வருகின்றன. இந்திய ஜனங்கள் மனதிலே புதிய ஆவல்கள் திளைக்கின்றன. இது வரை தேசப் பொதுமை சம்பந்தப்பட்ட மட்டிலே அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளாத ஜனங்களெல்லாம், இப்போது ராஜதந்திர விவகாரங்களைக் கவனிக்கத் தொடங்கினார்கள். சென்ற தடவை **'விவேக பாநு'** பத்திரிகை நமது பார்வைக்கு வந்தது, அதிலே சில விஷயங்களைப் படித்துப் பார்த்தவுடனே நமக்கு ஈசனிடம் அடங்காத நன்றி அறிவு பொங்கிடுவதாயிற்று. இலக்கண விஷயங்களிலே நாளெல்லாம் கழித்த பண்டித சிரோன்மணிகள் இப்போது ராஜாங்கத்தாரின் செலவு கணக்குகளிலே சிரத்தை எடுக்கத் தொடங்கி விட்டார்கள்.'' *

கந்தசாமிக் கவிராயரின் பாடலைத் தமது 'இந்தியா'வில் மறுவெளியீடு செய்து பெருமைப்படுத்தினார்.

---

* பாரதிதரிசனம்—I; பக். 168—169

பாரதியார். இப்பாடல் ஒரு முக்கிய அறிகுறியாக விளங்கு வதையும் பாராட்டுரையின் இறுதியிலே குறிப்பிட்டார்.

''எல்லோரும் சகோதரரென்றே எண்ணச் செய்யும்' என்று தொடங்கிய இன்பம் நிறைந்த பாட்டிலே ஸ்ரீகந்த சாமிக் கவிராயர் விரும்பிக் கூறியிருக்கும் நோக்கங்களெல் லாம் நிறைவேறுவதற்குரிய காலம் பிறந்துவிட்டதென் பதற்கு அவர் இவ்வாறு பாடியிருப்பதே முக்சிய அறிகுறி யாக விளங்குகிறது.'' *

அரசஞ் சண்முகனார் (1868-1915)

கந்தசாமிக் கவிராயரைப் போலவே வந்தே மாதரத் தின் மாண்பினை, அரசஞ் சண்முகனார் விளக்கியதையும் ஒரு முக்கியமான அறிகுறியாகப் பாராட்டி வரவேற்றார், பாரதியார்.

மதுரைத் தமிழ்ச்சங்கத் தொடக்க விழாவில் திருமயிலை சண்முகம்பிள்ளை எனும புலவரும் கலந்து கொண்டார். சோழவந்தான் சண்முகம் பிள்ளையும பங்கு கொண்டார். ஒரே பெயரில் இருவரெனும் மயக்கம் தீர, இவர் அப்பொழுதே தம் தந்தை அரசப்ப பிள்ளையின் பெயர்ச் சுருக்கமாக 'அரசன்' என்பதைத் தம் பெயருடன் சேர்த்துக் கொண்டார்; அரசஞ் சண்முகனார் ஆனார்.**

அரசஞ் சண்முகனார் ஆசிரியராகவும், சொற்பொழி வாளராகவும், உரையாசிரியராகவும் நூலாசிரியராகவும்,

---

* பாரதி தரிசனம் 1; பக், 170.

** ஆய்வுலகம் போற்றும் ஆசிரிய மணிகள்; பக்: 49

இலக்கணக் கடலாகவும் பல துறைகளிலே சிறப்புப் பணிகளை ஆற்றினார்.

தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் இரு கண்களாகக் கொண்டவர்; பதினைந்து வரிகளையுடைய தொல்காப்பியப் பாயிரத்திற்கு 246 பக்க அளவில் விருத்தியுரை எழுதிய காரணத்தால் 'தொல்காப்பியப் பாயிர விருத்தி ஆசிரியர் அரசஞ் சண்முகனார்' எனத் தனிச்சிறப் பெய்தினார். தமது விருத்தியுரையில் 164 குறட்பாக்களை பாயிரத்தினை விளக்குவதற்காக ஆண்டார்.*

தனியாக திருக்குறள் சண்முக விருத்தி யுரையையும் படைத்தார்.

அரசஞ் சண்முகனாரின் ஆராய்ச்சியுரைகளை மு. ரா. கந்தசாமிக் கவிராயரின் **விவேகபாநு**', சி. வை. தாமோதரம் பிள்ளையின் ,**ஞானசித்தி**', மதுரைத் தமிழ் சங்கத்தின் '**செந்தமிழ்**', மறைமலை அடிகளாரின் '**ஞானசாகரம்**' என்னும் இதழ்கள் வெளியிட்டுப் பெருமையுற்றன.

கந்தசாமிக் கவிராயரின் உயிர்த் தோழர், அரசஞ்சண்முகனார். தமது தோழர், வந்தே மாதரப் பெருமைகளை விதந்தோதியதைப் போலவே அரசஞ் சண்முகனாரும் ஒரு கவிதையைப் புனைந்தளித்தார்.

'விவேக பாநு', அரசஞ் சண்முகனாரின் தேசிய நோக்குடைய தெள்ளமுதக் கவிதையை வெளியிட்டது.**

---

* ஆய்வுலகம் போற்றும் ஆசிரிய மணிகள்; பக்: 20

** விவேகபாநு-நவம்பர் 1906 = பக். 340, 341

கந்தசாமிக் கவிராயரின் கவிதையை அடுத்துள்ள சண்முகனாரின் கவிதை வருமாறு;

சோழவந்தான் வித்துவான்
ஸ்ரீ மத் அ. ஷண்முகம் பிள்ளையவர்களியற்றின

அந்தா மரையய னந்தா வுருவுட
    னன்பா னீருண வின்மால் வாழ்வுற
நந்தா வளமல கின்றே யாமுற
    நங்காய் நீயருள் கின்றா யேமுறு
சிந்தா குலமற நண்பார் மணிவகை
    செந்தா தாதிய தந்தாய் நீதா
வந்தே மாதரம் வந்தே பாடுது
    வந்தே மாதரம் வந்தே மாதரம்

தருந்தே கம்பல விருந்தே வளர்நிலை
    தம்பா லாசுற வந்தேய் நோயென
வருந்தி தன்பகை யொழிந்தே கெடநமர்
    மைந்தோ டேநல முன்போன் மேவிட
இருந்தே யம்பல கொளும்பா ரதமெனு
    மெந்தாய் மாதருள் வந்தே யீதொரு
மருந்தே தந்தனள் வருந்தே மினியது
    லந்தே மாதரம் வந்தே மாதரம்.

வேறு

பண்பார் காசினி நந்தாய் மாணிசை
    பண்டே போலுற நின்றிடு மே
நண்பால் வாழுந ரெண்சீர் யாவையும்
    நன்றே தாமுற வந்தெழு மே
விண்பா லாருமு ணண்பா ளாரெனின்
    வென்போ யோடிட முந்துற மே
மண்பால் யாமினி நண்பா லோதுவம்
    வந்தே மாதர மந்திர மே.

வேறு

வந்தேமா தரமென்னும் மந்திரத்தா
 லெய்தாத வரமுமில்லை
நந்தேய மக்களுக்கு நலந்தருவ
 திதுபோலெந் நாட்டுமில்லை
முந்தேயு மந்திரம்போ லொரு சிலர்க்கே
 யாவதன்று முற்று மாகும்
வந்தேற்றுக் கொண்மினெல்லா வாழ்வுக்கும்
 வித்திதுதான் மறக்கொணாதே,

வந்தே மாதரம்
அ. ஷண்முகம் பிள்ளை

இப்பாடலில் வந்தே மாதரம்! வந்தே மாதரம்! என அரசஞ் சண்முகனார் சிந்தை குளிர குரல் எழுப்புகின்றார். பாரத தேவியை நோக்கி தமிழ்ப் பெரும் புலவர் பாடியுள்ளார். ''சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய தேசபக்தி'' என பாரதியார் சாற்றியது போல அரசஞ் சண்முகனாரும் **''எலா வாழ்வுக்கும் வித்திது தான் மறக்கொணாததே''** என வந்தே மாதரத்தின் அடிப்படைத் தத்துவத்தை எடுத்தோதுகிறார்.

அரசஞ் சண்முகன்ாரின் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றிலே பின்வரும் செய்தி கூறப்பட்டுள்ளது.

''பாட்டுக்கொரு புலவராம் பாரதியார் மதுரையில் இருந்த காலத்தில் நம் சண்முகனாரை நெருங்கி 'வந்தே மாதரம்' என்பதற்குப் பொருள் கேட்டராம். நாளுக்கு ஓர் உரையாகப் பதின்மூன்று நாட்களில் வெவ்வேறு பொருள் உரைத்தாராம் நம் புலவர்.''*

பாரதியார் 'வந்தே மாதரம்' மந்திரத்திற்கு பொருள் கேட்டார் என்பது மறுக்கத்தக்கச் செய்தியாகும். அவர் பங்கிம் சந்திரரின் ''வந்தே மாதரம்'' பாடலை பொருளறிந்து இருமுறை மொழிபெயர்த்தவர். முதல் மொழிபெயர்ப்பு 1905 நவம்பரில், அரசஞ் சண்முகனாரின் வந்தே மாதரம் பாடலுக்கு ஓராண்டிற்கு முன்பே வெளி வந்து விட்டது. அத்துடன் வங்கத்தின் வந்தே மாதர இயக்கத்தில் அரசியல் வழியில் ஈடுபட்டவர் பாரதியார்.

மதுரையில் பாரதியார் தமிழாசிரியராகப் பணி புரிந்த சில மாதங்களில் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். அரசஞ் சண்முகனாரைப் பற்றி பாரதியார் கூறியிருப்பதும் நோக்கத்தக்கது.

பாரதியார் கூறியதாவது:

''...ஸ்ரீ அ. சண்முகம் பிள்ளை (என்ற) மற்றொரு இலக்கண வித்வான் **''வந்தே மாதரம்''** மந்திரத்தைப் பற்றிய சில இனிய பாடல்கள் எழுதியிருக்கின்றார்...ஸ்ரீ அ. சண்முகம் பிள்ளை மலை புரண்ட போதிலும் தமது கல்வியினின்றும் கருத்தை அகல விடாத தன்மையினர். இலக்கண ஆராய்ச்சியே இவருக்கு முக்கிய தொழில். அதுவே இவருக்கு உயிர். இதைத் தவிர வேறொன்றையும் இவர் கவனிப்பது கிடையாது. இப்போது பாரததேவி இவருடைய சிந்தையையும் மாற்றி விட்டாள், பாரத தேவியின் தெய்வீக விழிகளினின்றும் உதிரும் கண்ணீர்கள் இவரது நெஞ்சை உருக்கி...எமது தாய்க்கு அடியையாக்கி விட்டன.

'அது ஆகுபெயரா? அன்மொழித் தொகையா? தொல் காப்பியத்திற்கு இவ்விடத்தில் நச்சினார்க்கினியர் கூறிய உரை பொருந்துமா ? பொருந்தாதா ?' என்பது போன்ற இலக்கண விவகாரங்களைச் சிறிது அகற்றிவைத்து விட்டு இந்த வித்வான்,

''வந்தே மாதரம் மென்னும் மந்திரத்தா
லெய்தாத வரமுமில்லை
நந்தேய மக்களுக்கு நலந்தருவ
திதுபோலெந் நாட்டு மில்லை''

என்று பாட்டியியற்றத் தொடங்கி விட்டார். கல்வித் தாய்க்கு மட்டிலுமே, இதுவரை வழிபாடு இயற்றி வந்த இவர் இப்போது பூமித் தாய்க்குத் தொண்டு புரிவது அதைக் காட்டிலும் உயர்வாகுமென்பதை அறிந்து கொண் டார். இதுவெல்லாம் நமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. இதுவெல்லாம், கால மாறுபாட்டை உள்ளங்கை நெல்லிக் கனி போல விளக்குகின்றது.'' *

இப்பாடலையும் 'இந்தியா'வில் வெளியிட்டு மகிழ்ந் தார் பபரதியார்.

அரசஞ் சண்முகனாரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'அன்மொழித்தொகை'யைப் பற்றிக் குறிப்பிட்டாரல்லவா பாரதியார். இக்குறிப்பில் ஒரு சிறப்புண்டு. யாழ்ப்பாண தமிழறிஞர் கதிர்வேற் பிள்ளை அவர்கள் அன்மொழித் தொகை, ஆகு பெயர் பற்றிய ஐயங்களுக்கு அரசஞ் சண்முகனாரிடம் விளக்கம் கேட்டறிந்தார். ''எம்முகத்தா லாகநனவும் சண்முகத்தாலாகும்'' என வியந்துரைத்தார்.

பாரதியார் இந்த அன்மொழித தொகை ஆராய்ச்சி யைப் பற்றி நகைச் சுவையுடன் பிறிதோரிடத்தில், 1916-ல் கூறியுள்ளார்.

---

* பாரதி தரிசனம்-1; பக் 169-70.

''நெல் எப்படி விளைகிறது' என்பதைக் கற்றுக் கொடுக்காமல், ''அன்மொழித் தொகையாவது யாது?'' என்று படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும் போது கொஞ்சம் சிரிப்புண்டாகிறது. அன்மொழித் தொகை சிலரைக் காப்பாற்றும், ஊர் முழுதையும் காப்பாற்றாது. நெல்லுதான் ஊர் முழுதையும் காப்பாற்றும். அன்மொழித் தொகையைத் தள்ளி விட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால், அன்மொழித் தொகையைப் பயிர் செய்து நெல்லை மறந்து விடுவது சரியான படிப்பில்லையென்று சொல்லுகிறேன். அவ்வளவு தான்.'' *

1905 பிப்ரவரியில் வந்தே மாதர மந்திரத்தின் பெருமைகளை விளக்கி பாரதியாரும் ஒரு கவிதை புனைந்தார்.

கந்தசாமிக் கவிராயர், அரசஞ் சண்முகனார் கவிதைகளோடும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக பாரதியார் கவிதையும் முழுமையாகத் தரப்பட்டுள்ளது.

ஆரியமென்ற பெரும்பெயர் கொண்டவெம்
அன்னையின் மீதுதிகழ்
அன்பெனு மென்கொடி வாடிய காலை
யதற்குயிர் தந்திடுவான்
மாரியெ னும்படி வந்து சிறந்தது
வந்தே மாதரமே
மானுயர் பாரத தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே
வீரிய ஞான மரும்புகழ் மங்கிட
மேவி நல் ஆரியரை
மிஞ்சி வளைந்திடு புன்மையிருட்கணம்
வீவுற வங்கமகா

---

* பாரதி தமிழ்-இன்ப நிலையம்- பக் : 147

வாரிதி மீதி லெழுந்த இளங்கதிர்
வந்தே மாதரமே
வாழிந லாரிய தேவியின் மந்திரம்
வந்தே மாதரமே.

காரடர் பொன்முடி வாணி மயந்தரு
கங்கை வரம் பிணிலும்
கன்னியை வந்தொரு தென்றிசை யார்கலீ
காதல் செயா யிடையும்
வீரர்கள் மிஞ்சி விளங்கு புனா முதல்
வேறுள ஊர்களிலும்
விஞ்சை யெனும்படி யன்புடன் யாரும்
வியந்திடு மந்திரமும்
பாரத தேச விரோதிகள் நெஞ்சு
பதைத்திடு மந்திரமும்
பாதக ரோதினு மேதக வுற்றிடு
பண்புயர் மந்திரமும்
வாரமுறுஞ் சுவை யின்றை வுண்கனி
வான் மருந்தெனவே
மாணுயர் பாரத தேவி விரும்பிடும்
வந்தே மாதரமே.

இம்மூவரில் கந்தசாமிக் கவிராயரின் கவிதையில் வந்தே மாதரத்தின் மாண்புகள் சற்று விரிவாக, அழுத்தமாக இசைக்கப்பட்டுள்ளன. ''எதிர்த்தோருள்ளம், புழுங்கி நடு நடுங்கவென்று புரப்பதாகும், மாதிரம் விண் புவி முழுவதும் முழக்கஞ் செய்யும்'' என்னுமிடமும், ''...ஒரு சாண் கும்பிக்காகத், தருஞ் சோற்றுச் சிறு தொழிலே தகவா எண்ணிச், சந்தேகத்துடன் பயந்து தாயை வேண்டார், சழக்குரையைப் புறந்தள்ளி'' என்னுமிடமும் கந்தசாமிக் கவிராயரின் கவிதையை உயர்த்திவிடுகின்றன.

1905 டிசம்பர் 28-ல் வந்தே மாதர தமிழ் மொழி பெயர்ப்பைப் பற்றி பாரதியார் எழுதியுள்ள குறிப்பு. வந்தே மாதரத்தை வங்க மொழியில் எழுதிய, பங்கிம் சந்திரரின் பெருமையைப் பேசுகிறது.

''அந்தக் கீதமானது பழமையில் முன்னோர்களால் வழங்கப்பட்டு வந்ததும் ஒப்பற்றதுமான சம்ஸ்கிருத பாஷையோடு தற்காலப் பாஷை கலப்புற்று அமைக்கப் பெற்றிருப்பதால் பூர்வ காலத்துடன் தற்காலத்துடன் இணைப்பதாக இருக்கிறது.'' இவ்வாறு 'வந்தே மாதரம்' கால் மாறுபாட்டிலும் ஓர் இணைப்புச் சக்தியாக விளங்கு வதை பாரதியார் குறிப்பிடுகிறார்.

சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்

தமிழ்ப் புலவர் சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் திரு. மு. ரா. கந்தசாமிக் கவிராயரின் சகோதரர்; செப்பறைப் பிள்ளைத் தமிழ் என்னும் நூலை இயற்றியவர். பாண்டித் துரை தேவரின் ஆதரவில் தமிழ்ப் பணி புரிந்த புலவர் குழுவில் ஒருவர்.

கந்தசாமிக் கவிராயர், அரசஞ் சண்முகனார் ஆகி யோரைப் பாராட்டிய கட்டுரையிலேயே பாரதியார், சுப்பிரமணியக் கவிராயரையும் பாராட்டியுள்ளார். முன் னிருவரை, அவர்கள் இயற்றிய வந்தே மாதரக் கவிதை களுக்காகப் பாராட்ட, சுதேசியத்தை வரவேற்று விளக்கி எழுதிய கட்டுரைக்காக, சுப்பிரமணியக் கவிராயரை பாராட்டினார்.

பாரதியாரின் பாராட்டுரை வருமாறு :

''திருவாடுதுறை ஆதீன வித்வானும், மதுரை தமிழ் சங்கத்து சைவ நூற் பரிசோதகருமாகிய ஸ்ரீ சுப்பிரமணியக்

க்கிரா'யர் சுதேசீய முயற்சியைப் பற்றி நேர்த்தியான ஒரு வியாச மெழுதி இருக்கின்றார். ராஜாங்க விவகாரங்களி லேயே நாட்களையெல்லாம் செலவிட்ட விற்பன்னர்கள் கூட இத்தனை நன்றாக எழுத மாட்டார்கள். இவருடைய வியாசத்திலிருந்து சில குறிப்புகள் அடுத்த முறை நமது பத்திரிகையிலே பதிப்பக்கக் கருதியிருக்கின்றோம். சுதேசீய முயற்சியிலே அன்பில்லாதவர்களை இப் பண்டிதர் காகங்களுக்கும் எறும்புகளுக்கும் கடைப்பட்டதாக எழுதுகின்றார்,'' *

மறைமலை அடிகள் (1876-1950)

சுதேசி இயக்க வேகம் மறைமலை அடிகளாரையும் ஒரு காலத்தில் ஆட்கொண்டதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

பாரதியாரை, சோமசுந்தர பாரதியார் ஒரு சமயம் மறைமலை அடிகளாரிடம் அறிமுகம் செய்வித்த பொழுது பாரதியாரிடம் காட்டவேண்டிய மதிப்புணர்ச்சியை மறைமலை அடிகள் காட்டவில்லை என்னும் ஒரு குறிப்பு, மறை திருநாவுக்கரசு எழுதியுள்ள அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றில் உள்ளது.

ஆங்கில அரசாட்சிக்கு எதிராக, ''கிளர்ச்சி செய்தல் தகாது—இந்நாட்டவரும் (தமிழ் நாட்டவர்) வட நாட்ட வரும் ஒருங்கு குழுமித் தாமே தமது நாட்டை அரசு புரிதல் கனவிலும் கைகூடாது'' என்று 1935-ல் கூறியவர் மறைமலை அடிகள்.'' **

---

* பாரதி தரிசனம்-1. பக். 169,

** ஒப்பியல் இலக்கியம்-டாக்டர் க. கைலாசபதி பக். 276

இதே மறைமலை அடிகள், பண்டிதர் நாகை வேதாசலம் பிள்ளையாக இருந்த காலத்தில்-1916-ல்-''**சுதேச முயற்சி வாழ்த்து**'' எனும் தலைப்பில் இருபத்தெட்டு வரிகளில் தேசிய நோக்குடன் ஒரு கவிதை எழுதியுள்ளார். *

வங்காள மாநிலத்தில் எழுந்த சுதேசிய இயக்கத்தின் பெருமையை, தமிழகத்தில் பண்டிதர் நாகை வேதாசலம் எதிரொலித்தார். தமிழ்நாடும், வடநாடும் ஒன்று சேர்ந்திருக்க முடியாது எனக் கூறியவர் '**இந்திய மாதே**' எனப் புகழந்துரைத்தார். இவர் கவிதையின் சில பகுதிகள் வருமாறு :

அலையுலவும் வங்காளக் குடாக்கடலின் அடிக்கிடக்கும்
விலைவரம்பு காணாத முழுமுத்தும் மேலுயர்ந்த
மலையருவி கொழித்துவரும் மணிகளொடு
பசும்பொன்னும்
தலையணியப் பிறநாட்டார் தந்தனை **இந்திய மாதே**

உலகிற் கோர் விளக்கனையாய் எம்முயிர்க்கோர்
உயிரனையாய்
பலவாறு நின் புகழ்மை பாரித்து என் சிற்றறிவாற
சொலவருமோ? தொலையாத வளமுடையாய்
தொன்றுதொட்ட
நலமெலாயிரம் பிறர்கவர இந்நாளில் நாணினையே

அந்நாணம் இனியொழிய நின்மகார் அறிந்தெழுந்து
முன்னாளில் விரிந்தபல கைத்தொழிலும்முதிர்ச்சியுற்ற
மன்னிமிக முயல்கின்றார் மனக்கவலை நீங்குற்றோம்
இன்னுமிவர் சிறக்கவென ஏத்திமிக வாழ்த்துவமே

---

* இந்து தேசாபிமானிகள் சரித்திரம்-முதற் பாகம், 1916; பக்-2.

வந்தேமாதரத்தின் பெருமை, சுதேசிய முயற்சிக்கு வரவேற்பு ஆகியவற்றை ஓரளவு தமிழ்ப் புலவர்கள் ஆதரித்து எழுதினாலும், பாரதியார் விண்ணப்பத்திற்கிணங்க ''பாரத நாடு முழுதினையும் ஒருங்கே புகழ்ந்து கூறப் பட்டிருக்கும் பாடல்கள்'' புதியனவாக 'தேச பக்தி' பாக்கள் முதலியன தோன்றவில்லை.

தேசபத்தர் வி. கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்கள் பாரதியார் புதியனவாக இயற்றிய மூன்று தேசபக்தி பாடல்களைக் கேட்டு, அவைகளை ஒரு சிறு வெளியீடாகக் கொண்டு வர நிதியுதவி செய்தார். இதன் காரணமாக 1907ல், ''வந்தே மாதரம் என்போம்'', ''எந்தையுந் தாயும்மகிழ்ந்து குலாவியிருந்ததுமிந்நாடே'', 'மன்னுமிமய மலை யெங்கள் மலையே'' எனும் தேசபக்திப் பாடல்கள் கொண்ட சிறு வெளியீடு நான்கு பக்கங்களில், வெளி வந்தது.

இந்த வெளியீடு மக்களிடையே பரவ இலவசமாக வழங்கப்பட்டது. தூத்துக்குடியில் தேசபக்தர் வ.உ. சிதம் பரம் பிள்ளை அவர்கள் வீட்டில் 'ஸ்வதேச கீதங்கள்' என்னுமிந்த இந்த முதல் வெளியீட்டைப் படித்துப் பரவச மடைந்து தேசபக்தியுணர்ச்சியை பெற்றதாகப் பரலி. சு. நெல்லையப்பர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் தமது விண்ணப்பத்தில் வேண்டியதை, இந்த இலவச வெளியீடு நிறைவேற்றியது. தொடர்ந்து 1908-ல் பதினான்கு பாடல்களைக் கொண்ட ஸ்வதேச கீதங்கள், முதற் பாகமும், 1909-ல் பதினாறு கவிதைகள் கொண்ட ஜன்ம பூமி (ஸ்வதேச கீதங்கள்-இரண்டாம் பாகம்)யும் வெளிவந்தன. இந்த இரண்டு நூல்களின் முகவுரைகளிலும் தேசபக்தியுணர்ச்சியாலேயே கவிதைகள் படைத்துப் பாரததேவியின் திருவடிகளில் சமர்ப்பித்த தாகக் குறிப்பிட்டுள்ளார், பாரதியார்.

தேசிய பார்வையில் புறநானூறு

தேசபக்தியுணர்ச்சி பரவ, புதியப் படைப்புகளை படைத்ததோடு, பழந்தமிழ் இலக்கியச் செய்திகளையும் தேசிய பிரசாரத்திற்கு பயன்படுத்தியதிலும் முன் நின்றார், பாரதியார்.

''**அழியாப் புகழ் கொண்ட பழங்கால தமிழ்மாது**'' எனும் கட்டுரையில் புறநானூற்று வீரத் தாய்மாரின் வீரவுணர்ச்சியை தமது கால தேசபக்தியுணர்ச்சி பிரசாரத்திற்கும் பயன்படுத்தினார், பாரதியார்,

பாரதியார் போற்றிய அழியாப் புகழ் கொண்ட பழங் காலத் தமிழ்மாது, புறநானூற்றுப் பாடல் 278-ல், பெண் பாற் புலவர் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடிய, ''நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள் முளரி மருங்கின், முதியோள்'' ஆவாள்.

புறநாறூற்றுச் செய்தியை தேசிய பார்வையில் பாரதியார் எப்படி எடுத்துரைக்கிறார் என்பதை பின்வரும் பகுதி உணர்த்துகின்றது.

''ஐயோ, தாய் பூமியின் பொருட்டாக இரத்தம் சிந்தாத, தைரியமில்லாத இந்தக் கோழைப் பிள்ளையையா பெற்று இத்தனை காலம் வளர்த்தேன்? தேச பக்தியைக் காட்டிலும் உயிரைப் பெரிதாகக் கருதும் அற்பனையா பெற்று வளர்த்தேன்? இப்போதே போர்க் களத்திற்குச் சென்று பார்க்கிறேன், அங்கே இவன் தனது துணைவர்களெல்லாம் இறந்து வீழ்ந்திருப்பதுபோல, தனது உயிரையும் பலியிட்டு இருந்தால் விட்டது; இல்லா விடில் இந்த அதைரியம் கொண்ட பேடிக்கு பால் கொடுத்த எனது மார்பினைத் திருகியெறிந்துவிட்டு, நான் போர்க் களத்திலே செத்து விடுகிறேன்''+ என்ற நிச்சயத்துடன் அந்த வயது முதிர்ந்த அன்னை போர்க்களத்திற்குள் போனாள். அங்கே தனது வீர குமாரன் முன்னணியில்

கிடப்பதைப் பார்த்த பிறகு அம் மகனது பெருமைகளை நினைத்துப் புலம்பியும், இவன் தாய்நாட்டின் பொருட்டால் உயிர் கொடுத்தமை பற்றி மனதாறியும் மீண்டனள்.''*

வழக்கமான புலவர் பாணியில் எழுதப்பட்டுள்ள புற நானூற்று விளக்கத்தையும், பாரதியாரின் விளக்க வுரையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பாரதியின் பேராற் றலை அறியலாம். ''ஐயோ, தாய் பூமியின் பொருட்டாக இரத்தம் சிந்தாத...'', ''தேசபக்தியைக் காட்டிலும் உயிரைப் பெரிதாகக் கருதும் அற்பனையா பெற்று வளர்த்தேன்?'', ''தாய் நாட்டின் பொருட்டாக உயிச் கொடுத்தமை'*, என்னும் விளக்கவுரைகளில் தமது கால தேசிய போராட்ட வுணர்ச்சிக்கு வடிகால் அமைத்தார் பாரதியார்.

இருபதாம் நூற்றாண்டு இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு புறநானூற்று கால வீரத்தாய்மார்கள் தேவை என பாரதியார் இறைவனிடம் முறையிட்டார்.

''இந்தப் பெருமாட்டியின் பெயர் இப்போது தெரிய இடமில்லை. இவளைப் போன்ற தாய்மார்கள் பாரத கண்டத்திலே இக் காலத்தில் அநேகர் பிறக்குமாறு ஈசன் அருள் புரிந்தாலல்லவோ நமது குறைகளுக்கெல்லாம் முடிவு ஏற்படும்.'' இவ்வாறு தமது தவிப்பை பாரதியார் வெளியிட்டார்.

''நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்' உடைய அந்த முதியவளின் நற் பெயரை அறிய முடிய வில்லையே என ஏக்கம் கொண்ட முதல் புறநானூற்று வாசகர், பாரதியார்.

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமளித்த உலக நிகழ்ச்சிகளில், ரஷ்யாவை, போரில், ஜப்பான் தோற்கடித்த நிகழ்ச்சியும் ஒன்றாகும். புரட்சி வீரர் புபேந்திர நாத் தத்தா அவர்கள் தமது 1906-அக்டோபர் **'யுகாந்தர்'** இதழில் ஜப்பான், 'போர்க்கள வெற்றித் தேவதையின் புனிதயாத்திரைக்குரிய நாடாகவும் விளங்கு கின்றது', எனக் குறிப்பிட்டார். ஆசியா நாடாகவிருந்தும் மேலை நாட்டு சக்தி வாய்ந்த ஜார் மன்னனின் ரஷ்யாவை போரில் புறங்காணச் செய்த ஜப்பானைப் பற்றி பெருமித மாக அன்னாளைய தேச பக்தர்கள் பேசினர்; எழுதினர்.

பாரதியார்,புறநாற்றூற்று 'அழியாப் புகழ் கொண்ட தமிழ் மாதை'' தமது கால ஜப்பானிய வீரத்தாயோடு ஒப்பிட்டுள்ளார்.

மு. இராகவையங்காரும் பாரதியாரும்

மதுரையிலும், சென்னை திருவல்லிக்கேணியிலும் பாரதியாரோடு மிக நெருங்கியத் தொடர்பு கொண்டிருந் தார். மகாவித்துவான் மு. இராகவையங்கார். பாரதியார் மகாவித்துவானின் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்து வந்தார் என்பதற்கு சான்று உள்ளது. இளங்கோ அடிகள் பிறந்த வஞ்சி நகரம், தற்கால கரூர் நகரமாகும் என்று மகாவித்துவான் ஆய்வு செய்துள்ளதை பாரதியார், சுதேசமித்திரன் (19-11-1916) கட்டுரை யொன்றில், குறிப்பிட்டுள்ளார். வ. . . ட்ன் கப்பல் கம்பெனி முயற்சிக்கு உதவ நூறு ரூபாய் பங்கும் எடுத்தார். பழந்தமிழ் இலக்கியச் செய்திகளை தேசிய உணர்வின் எழுச்சிக்குப் பயன்படுமாறு எழுதுவதில் வல்லவர், பேரறிஞர் மு. இ.ராகவையங்கார். (1878-1950)

'பண்டைக் கைத்தொழில் வியாபாரங்கள்' எனும் ஆய்வுக் கட்டுரையில் தமிழ் இலக்கியச் செய்திகளைத் திரட்டி, விமர்சனம் செய்த பாங்கு தேசபக்தர் வ.உ.சி. யைக் கவர்ந்தது. வ.உ.சி. அவர்கள் தமது பாராட்டுரையை நாற்பது வரிகள் கொண்ட ஒரு கவிதையில் வெளிப்படுத்தி, மு இராகவையங்காருக்கு 16-10-1907-ல் அனுப்பி வைத்தார். வ. உ. சி. கூறுகிறார்,

பாரத வருடத்தின் பழைய கைத்தொழில்
வியபா ரங்களை விரித்து வரைந்த நின்
வியாச மதனை விருப்பொடு படித்தேன்
முற்றொழில் நிலைமையை முற்றுற மொழிந்த
கற்றநின் வாசகங் கண்டுளங் களித்தேன்.

பெரியவர் மு. ரா.வின் ஆய்வுக் கட்டுரையில் உள்ள பின்வரும் பகுதியும் நோக்கத்தக்கது. ''...இத்தகைய விரிந்த சிந்தனையும் தேசாபிமானமும் கொண்டு, ''உடைத்தம் வலியறிவார் ஊக்கத்தி னூக்கி, இடைக்கண் முரிந்தார் பலர்'' என்றவாறில்லாமல், தளராத உறுதியுடன் நின்று நல்லறிஞர்கள் நம்மவர்க்கு வழி காட்ட முயல்வாராயின், யாவரும் அவ்வழியையே பின்பற்றி நல்வாழ்வு பெறுவர் என்பதும் திண்ணம். கட்டுரையின் இறுதியில் மிகப் பொருத்தமாக ''வம்மின் புலவீர் நும் மெய்வருத்திக் கை செய்து உய்ம்மினோ!'' எனும் திருவாய் மொழியை நயம்பட வைத்தார். ''இத்தகைய விரிந்த சிந்தனை'' என்பது ஜி. சுப்பிரமணிய ஐயரின் 'ஜப்பான் சரித்திரம்' எனும் நூலின் முகவுரையில் கூறப்பட்டச் சிந்தனையாகும்.

ரஷ்யா ஜப்பானியப் போரில், ஜப்பான் அடைந்த வெற்றி, தமிழ்ப் பெரும் புலவர் மு. இராகவையங்கார் அவர்களையும் கவர்ந்தது.

''இரஷிய வதைப் பரணி''

பழந்தமிழ்ப் பெரும்புலவர் மு. இராகவய்யங்கார், தேசிய வுணர்ச்சியில் பரணி இலக்கிய வகையில் ரஷ்யா மீது ஜப்பான் கொண்ட வெற்றியைப் பாட முன்வந்தது, அக் காலத்தில் வியப்பிற்குரியது. பாரதியார் தமது 'இந்தியா' இதழ்களில் ஜப்பான் எழுச்சியை ஆசியாவின் எழுச்சியாகக் கொண்டாடி எழுதியுள்ளார். ஆனால், 'மு.ரா.' அவர்கள் கள் ''**இரஷிய வதைப் பரணி**'' என்னும் தலைப்பிட்டு 'செந்தமிழ்' இதழில் கவிதை நடையில் எழுதத் துணிந் தார். 'நூல் செய்தற்கு காரணம்' பற்றி அவர் எழுதிய தாவது:

கண்டமொன்றில் வாழ்கின்ற காரணமும்
நம்பெரியோரு
உண்டு பண்ணும் நல்லறமே ஓம்புதலும்-அண்டு
நமக்
கெய்ப்பதனில் வைப்பாகும் ஏற்றமும் யப்பானுக்கு
இப்பரணி செப்பற் கியைபு,

(நம்பெரியோர்-புத்தர்; யப்பான்-ஜப்பான்)

கடைத்திறப்பு பாடுமிடத்தில் பின் வரும் அடிக்குறிப் பைத் தந்துள்ளார்.

''மஞ்சூரியாவில் இரஷியருடன் அமர் புரியும் தம் கணவா அடையும் பெரு வெற்றிகளைக் கேட்டுத் தோகி யோவில் உள்ள அவர் மனைவியர் இரவில் எழுந்து, தம்மைப் போலக் கணவரைப் பிரிந்த மாதர்களுக்குச் சொல்லி மகிழவேண்டி, அவர்கள் வீட்டு வாசல்களின்று துயிலெழுப்புகின்றனர்''

'கடைத்திற'ப்பின் இரு கவிதைகள் பின் வருவன:

(1) நாட்டின் பொருட்டு நுங் கொழுநர்
நயந்த போரில் இரஷியர் தங்
கோட்டை யிடித்து முழங்கினரே
குளிர் பொற் கபாடந் திறமினோ

(2) வீரர் குதித்தனர் விழிமினோ
வீதி களிப்பன எழுமினோ
ஊரின் எழுச்சியை உணரவே
ஓடி முகக்கடை திறமினோ.

'ஒரு பண்டிதர்' எனும் புனைப்பெயரில் எழுதப்பெற்ற இக் கவிதை தொடர்ந்து வெளி வராமற் போயிற்று. அரசியல் எழுச்சிக்கு மறைமுகமாகக்கூட துணைபோகும் எழுத்துகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் அனுமதிக்காதச் சூழலில் 'ஒரு பண்டிதர்' என்ன செய்ய முடியும்? கவிதை முற்றுப் பெற்றிருக்குமாயின், அது தேசிய பரணி இலக்கியமாகத் திகழ்ந்திருக்கும்.

பாரதியாரின் ''சுவதேச கீதங்கள்'' நூலிற்கு மகா வித்துவான் 'செந்தமிழ்' இதழில் (பிலவங்க ஆண்டு, தை மாதம்) தேசியவுணர்ச்சியுடன் மதிப்புரை எழுதியுள்ளார், மதிப்புரையின் மாணிக்க வரிகளில் சிலவற்றைப் பார்ப்போம்:

''இத்திரட்டு ஒரு புது வழியைக் கற்பிக்க வந்ததென்பது விளங்கும்..நம்மவர்க்குத் தற்காலம் இன்றியமையாது வேண்டத்தக்கனவும் தேசாபிமானத்தை உண்டாக்க வல்லனவுமான உயர் கவிகள் கிடைத்தில...இப்பொழுது பாரதியார் தாமியற்றிய தேச கீதங்களைத் திரட்டிச் சிறு புத்தகமாக வெளியிட்டிருப்பது எமக்கும் பெரு மகிழ்ச்சி விளைத்தது...இயற்கையில் இனியகவிகள் பாடவல்ல பாரதியார் தம் சக்தியை இத்தகைய புது வழி

யில் திருப்பி உபயோகப்படுத்தியிருப்பது, நம்மவர்க்கு ஒரு நல்வழியைக் கற்பிக்கின்றது. இத்தகைய கீதங்களை, தேசாபிமானிகளான நந்தமிழ் நாட்டாரெல்லாம் படித்து மகிழ்வதுடன் முக்கியமாகத் தம் மக்கட்கு இவற்றை மனப்பாடம் பண்ணும்படி செய்வித்தல் மிகவும் வேண்டப்படுவது என்போம்.''

பாரதியார் பாராட்டிய ''வீரத் தாய்மார்கள்''

ஜப்பான் நாடு இருபதாம் நூற்றாண்டில் கண்ட வீரத் தாய்மார்ளின் வீரவுணர்ச்சியை விளக்கி புறநானூற்று வீரத்தாய்மார்களைப் பற்றி பெரும் புலவர் மு. இராகவையங்கார் 'செந்தமிழ்' இதழில் எழுதினார். ''வீரத்தாய் மார்கள்'' எனும் தலைப்புடைய அந்தத் தலையங்கக் கட்டுரையின் வாயிலாக புறநானூற்று கால வீரத்தாய் மார்களைப் பற்றி மேலும் அறிந்தார், பாரதியார்.

தமிழ்ப்புலவர்களிடம் தாம் எதிர்பார்த்த தேசபக்தி உணர்ச்சி, மு. இராகவையங்காரின் கட்டுரையில் பொங்கித் ததும்பியதைக்கண்டு, பாரதியார் நன்றிப் பெருக்குடன் பாராட்டி ஒரு கடிதம் எழுதினார்.

'செந்தமிழ்' ஆசிரியர் மு. இராகவையங்காருக்கு, பாரதியார் எழுதிய கடிதத்தை அறிவதற்கு முன், அக் கடிதம் எழுதப் படக் காரணமாயிருந்த 'வீரத்தாய்மார் கள்' கட்டுரையின் முக்கியப் பகுதிகளை நோக்குவோம்.

''யுத்த காலத்தில் ஜப்பானியத் தாய்மார்கள் காட்டிய தேசாபிமான வீரச் செயல்களை அப்போது வெளிவந்த 'இரஷ்யோ ஜப்பானீஸ் வார்' என்னும் புத்தகத் தொகுதிகளிற் பரக்கக் காணலாம். இவ்வரலாறுகள் இக்காலத்தவரான நமக்கு அருமையுடையனவாகத் தோன்றினும், நமது பழைய சரிதங்களை ஆராயின், நம் நாட்டிலும் அத்தகைய வீரத்தாயாரையும் வீரமக்களையும் மிகுதியாகக் காணலாம்.

புறநானூற்று வீரத்தாய்மார்களைக் குறிக்கும் பொழுது இவ்வீரத்தாயர்க்கிருந்ததாக நூல்களிற் காணப் படும் குண விசேடங்களை நோக்கும்போது உலக சரித் திரத்திலேயே இத்தகைய பெருமை காண்டற்கரிது என்று தோனறுமென் பதில் ஐயமில்லை. இவ்வாறு தமிழகம், முன்னாளில் அறிவாற்றல் மிக்க வீரத்தாயர்களை உடைய தாகி அருமையும் பெருமையுங் கொண்ட செயல்களுக்குரிய நிலைக் களமாயிருந்தது. அவர்கள் பெற்ற வீரர்கள், குடிகளின் க்ஷேமத்தின் பொருட்டும் அந்நாட்டு அரசர் பொருட்டும் ஆத்ம பரித் தியாகம் செய்வதிற் பயிற்சி மிக்க வராய் சமயம் நேர்ந்த போதெல்லாம் அவ்வாறு செய்வது, தமிழகத்தின் பெருமையை மலைமேலிட்ட தீபம் போல விளக்கி வந்தனர்.

சங்க நாளில், தமிழ் நாட்டின் மேல் வடவரசர் படை யெடுத்து வென்ற செய்தி கேட்கப்படுதலே அரிது. ஆனால், தமிழரசர் வடவருடன் போர் புரிந்து வெற்றி கொண்ட விஷயம் காணலாம். இதன் காரணம், அக் காலத்து விளங்கிய தமிழ் வீரத்தின் பெருமையே யாம். அத்தகைய வீரத்தை வளர்த்து வந்தவர் யாவர்? தமிழ்த் தாயர்களே யாவர்.

அச்சங்க காலத்துக்குப் பினபு, வீரத் தாயர்களும் ஆத்ம பரித்தியாகம் செய்ய வல்ல வீரர்களும் குறைந்து வந்தமையாற் போலும், வடவேந்தர் பலர் தமிழகத்தே பிரவேசிக்கத் தொடங்கிய செய்திகள் கேட்கப்படு கின்றன......

இக்காலத்தவராகிய நமக்கோ, மேலே கூறிவந்த அற்புத வீரச் செயல்களெல்லாம் வெறுங் கற்பனைக் கதை களாகவே தோன்றும் என்பது திண்ணம். ஏனெனில் நம்மவரது மனநிலை அவ்வளவு குன்றியொழிந்தது. கால

சக்கரத்தின் சுழற்சியால் உலகத்தில் ஓரிடத்திற்குள்ளே உண்டாகும் அற்புத மாறுதல்கள் இவை.'' *

மொத்தம் பதினொன்று பக்கங்களில் உள்ள 'வீரத் தாய்மார்கள்' தலையங்கத்தில், பொன்முடியார், பூங் கணுத்திரை, ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், ஔவையார், காவற்பெண்டு ஆகியோரின் பாடல்களையும், தகடூர் யாத்திரை, வெண்பா மாலையுடையார், தொல்காப்பியம், மணிமேகலை முதலானவைகளில் இருந்தும் ஆசிரியர் மு. இராகவை யங்கார், மேற்கோள்கள் எடுத்துக் காட்டியுள்ளார்.

பெரும்புலவர் இராகவையங்கார் **செந்தமிழில்** தலையங்கமாய் எழுதிய 'வீரத் தாய்மார்கள்' தலைப்பை, தமது **'இந்தியா'** இதழின் தலையங்கத்திற்கும் பாரதி யார் வைத்தார்.

செந்தமிழின் வீரத்தாய்மார்கள் கட்டுரையை இந்தியா இதழ்களில் தொடர்ந்து வெளியிட்டார், பாரதியார்.

'இநதியா'வின் வீரத்தாய்மார்கள் தலையங்கத்தில், பாரதியார், எழுதியுள்ளதின் சில பகுதிகள் வருமாறு:

''...நமது தமிழ் நாட்டிலேயும் அத்தகைய பெருங்குடி (மூதில) மாதர்கள் இருந்திருககிறாாகளெனபதைச ''செந் தமிழ்''ப் பத்திராசிரியா இம்மாதம எழுதியிருககும ஓர் திவ்யமான உபந்நியாசததிலே பல அரிய திருஷ்டாநதங் களாய் விளக்கியிருக்கிறார்......தமிழ் நாட்டுத தாய்

* செந்தமிழ்-பிலவங்க வருடம் ஆவணி மாதம்.

மாரைப் பற்றிச் ''செந்தமிழ்'' ஆசிரியர் எழுதியிருக்கும் உபந்நியாசத்தைப் படித்தபோது, எமக்குண்டான பெரு மகிழ்ச்சிக்கும் பெருந்துயரத்திற்கும் அளவேயில்லை.. ..

அந்நாட்களிலே மாதர்கள் காட்டிய வீரத்தன்மையை யும், இந்நாளிலே ஆண்மக்கள் காட்டும் பேடித் தன்மையை யும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ''ஆ! நமது உயர்வு கொண்ட பாரதஜாதி இத்தனை தாழ்ந்த நிலைக்கு வரு வதைக் காட்டிலும் ஒரேயடியாக அழிந்து போயிருந் தாலும் சிறப்பாயிருக்குமே'' என்று மனம் குமுறுகின்றது.

நமது பத்திரிகை படிக்கும் நேயர்களனைவரும் நாம் 'செந்தமிழ்''ப் பத்திரிகையிலிருந்து பெயர்த்துப் பதிப்பிட் டிருக்கும் உபந்யாசத்தை தாம் பலமுறை படிப்பது மட்டுமேயன்றித் தமது சுற்றத்தார்க்கும் மித்திரர்க்கும் தமது வீட்டு மாதர்களுக்கும் திரும்பத் திரும்பப் படித்துக் காட்டுதல் நலமென்று கருதுகின்றோம்.'' *

இந்த 'இந்தியா' தலையங்கத்தில், பொன்முடியார், ஒக்கூர் மாசாத்தியார், பூங்கண் உத்திரையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார் ஆகியோர் பாடல்களின் திரண்டக் கருத்துகளை கொடுத்துள்ளார்.

இறுதியாக, ''வானத்திலே துந்துபியொலி அதிரக் கேட்கிறோம். மகாபாரதம் (Great India) பிறந்து விட்டது.' என நம்பிக்கைக் குரல் எழுப்பினார், பாரதியார்.

'இந்தியா'* தலையங்கத்தில், வீரத்தாய்மார்கள் கட்டுரையின் முக்கியத்துவத்தை பாரதியார் வலியுறுத்தும் பொழுது 'இந்தியா' வாசகர்களின், ''சுற்றத்தார்க்கும

---

* பாரதியார் நூல்கள் (கட்டுரைகள்) - பாரதி பிரசுராலயம்- பக்: 694—696

மித்திரர்க்கும் தமது வீட்டு மாதர்களுக்கும் திரும்பத் திரும்பப் படித்துக் காட்டுதல் நலமென்று'' குறிப்பிட்டார். தேசிய உணர்ச்சியின் ஊற்றத்திற்கு அவை உதவும் எனக் கருதியே அவ்வாறு வலியுறுத்தினார். புறநானூற்றுச் செய்திகளை எங்கெல்லாம், எப்படிப் பரப்ப வேண்டுமென பாரதியார் 1907-லேயே வழிகாட்டி விட்டார்.

பாரதியார் கடிதம்

'இந்தியா' தலையங்கத்தில் குறிப்பிடாத ஓர் அரியக் கருத்தை, தமிழ்ப் புலவர்களிடம் பாரதியார் எதிர்பார்த்ததை, பெரும்புலவர் மு. இராகவையங்காருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார், பாரதியார்.

சென்னை, பிராட்வே இந்தியா அலுவலகத்தில் இருந்து அக்டோபர் 1907-ல் எழுதப்பட்ட கடிதம், அது.

தமிழ்ப் புலமையிலே 'ஸ்வதேச பக்தி' புது நெருப்பாக கனன்று ஒளிரவேண்டும் என்பதே தமிழ்ப்புலவர்களிடம் பாரதியார் எதிர்பார்த்ததில் தலையாயது ஆகும்.

இந்தப் பேருண்மையை இக்கடிதம் வெளிப்படுத்தியது. கடிதத்தின் முழுவிவரம் வருமாறு :

''அனேக நமஸ்காரம்.

ஒவ்வொரு காலத்துச் சோம்பல் மிகுதியாலும், ஒவ்வொரு காலத்தே முயற்சி மிகுதியாலும், தங்களைப் போன்ற பெரியோர்களுக்கு அடிக்கடி கடிதங்களெழுதிப் புனிதத் தன்மை பெறுவதற்கு அவகாசமில்லாதவனாக இருக்கிறேன்.

சென்ற முறை வெளிவந்த செந்தமிழ்ப் பத்திரிகையிலே தாங்கள் எழுதியிருக்கும் ''வீரத்தாய்மார்கள்'' என்ற அற்புத உரையைக் கண்டு மகிழ்ச்சி பூத்து அம்மகிழ்ச்

னையைத் தங்களுக்கு அறிவிக்கும் பொருட்டாக இக்கடிதம் எழுதலானேன்.

தங்கள் பாண்டித்தியத்தை நான் புகழ வரவில்லை. அதனை உலகமறியும், தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் ''ஸ்வதேச பக்தி' என்ற புது நெருப்பிற்குத் தான் நான் வணக்கம் செய்கிறேன்.

''காலச் சக்கரம் சுழல்கிறது'' என்று அவ்வுபந் நியாசத்தின் இறுதியிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆம்! காலச சக்கரம் சுழலவே செய்கின்றது; அச்சுழற்சியிலே, சிறுமைச் சேற்றில் ஆழ்ந்து கிடந்த 'நீசபாரதம்' போய் 'மஹா பாரதம்' பிறக்கும் தறுவாய் வந்து விட்டது.

'தாழ்நிலை' என்ற இருளிலே மூழ்கிக் கிடக்கும் பாரத வாசிகளுக்கு மஹாபாரதம் காட்டத் தோன்றியிருக்கும் சோதிகளிலே தமது நெஞ்சிற் பிறந்திருக்கும் நெருப்பொன் றாகும். அதற்குவணக்கம் செய்கிறேன். அது வளர்க. ஓம்!

குறிப்பு: ஸ்ரீ அழகிய சிங்கப் பெருமாளையங்கார் (பச்சையப்பன் காலேஜ்) அவர்களும் அவர் தம்பி ஸ்ரீ கிருஷ்ணமாசாரியாரும் தங்களுக்கு சாஷ்டாங்க வணக்கம் கூறும்படி என்னிடம் கற்பித்தார்கள்.' *

மேலேயுள்ள கடிதத்தில், ''வணக்கம் செய்கிறேன்'' என இருமுறை கூறியது, 'ஸ்வதேச பக்தி'க்கு என்பது குறிப் பிடத் தக்கது. கடிதத்தின் அடிக்குறிப்பில் பாரதியார் குறிப்பிட்ட அழகிய சிங்கப்பெருமாள் ** சுவாமி, விவேகா

---

* மேற்படி நூல்; பக் : 699.

** (1865-1909) இவர், பொது விஷயங்களில் ஆலோசனை கூறத்தக்கவர் என்று சகோதரி நிவேதிதை பாரதியாருக்கு எழுதியுள்ளார்.

வந்தரின் உள்ளங் கவர்ந்த இராமகிருஷ்ணர் இயக்கத் தொண்டர். 15-5-9019-ஆம் 'இந்தியா'வில் பாரதியார் அழகியசிங்கப்பெருமாளின் தேச பக்தியைப் பாராட்டி யுள்ளார்.

ம. கோபால கிருஷ்ணையர்

மதுரையில் பாரதியார் தமிழாசிரியராகப் பணி புரிந்த காலத்தில் பாரதியாரின் தமிழ்ப் புலமையைப் போற்றிய தமிழ்ப் புலவர் ம. கோபால கிருஷ்ணையர்; ஆங்கிலத்தி லும் வல்லவர்; சோழவந்தான் அரசஞ் சண்முகனாரின் மாணவர்; மதுரை செந்தமிழ்ச் சங்கத்தின் தலைவர்; மதுரை விவேகானந்த சபையின் செயலாளர்; மதுரை 'வித்தியாபாநு'வில் கந்தசாமிக் கவிராயருடன் இணையா சிரியர்; மதுரை காலேஜ் தமிழ்ப் பண்டிதர்; 'விவேகோ தயம்' மாத இதழ் ஆசிரியர்.

தேசபக்த தமிழறிஞர் ம. கோபால கிருஷ்ணையர் அவர்களுக்கும், பாரதியாருக்கும் இடையே நிலவிய நட் புறவை யோகி சுத்தானந்த பாரதியார், பின்வருமாறு விவரித்துள்ளார் :

''மதுரையில் நச்சினார்க்கினியர் சங்கம் உள்ளது. பாரதியார் அங்கே அடிக்கடி சென்று புலவர்களுடன் அள வளாவினார். அகராதி இலக்கணப் புலவர் எப்படி நினைத் தாலும் அவரை மதித்துப் போற்றிய ஒரு புலவர்மணி யிருந்தார்; அவரே, என் நண்பர் நேடிவ் காலேஜ் தமிழ்ப் புலவர் **கோபால கிருட்டிணையர்**, இவர் அரிய கவி, பெரிய அறிவாளி. ஆங்கிலத்திலும் தமிழிலும ஒப்பற்ற புலவர். சுவாமி விவேகானந்தரை பாஸ்கர சேதுபதி யுடன் பாம்பனில் இவர் வரவேற்றார். இவருடன் அளவ ளாவும் போது பாரதியைப் பற்றி புகழ்வார்; மதுரையில்

இவரே பாரதிக்கு எல்லா உதவியும் செய்த அரிய நண்பர்.'' *

சுதேசமித்திரனில் துணை ஆசிரியராக பாரதியாரைச் சேர்த்துக் கொள்ளும்படி சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரிடம் பரிந்துரை செய்தவர் ம. கோபால கிருஷ்ணையர்.

1895 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நியூயார்க் நகரில் உள்ள ஆயிரந் தீவுப் பூங்காவில் சுவாமி விவேகானந்தர் இயற்றிய 'சந்நியாசி கீதம்' என்னும் ஆங்கில மொழிக் கவிதையை 1904-ல் எழுச்சி மிக்க இனிய தமிழில் மொழி பெயர்த்தார், ம. கோபால கிருஷ்ணையர். பாரதி யாருக்கு, சுவாமி விவேகானந்தர் பற்றிய அறிமுகம் கோபால கிருஷ்ணையர் மூலமாகவும் கிடைத்திருக்கக் கூடும்.

1907-சூரத் காங்கிரசில் திலகர் கரத்தைப் பலப்படுத்த பாரதியாருடன் சென்றவர்களுள் ம. கோபால கிருஷ்ணை யரும் ஒருவர். சூரத் காங்கிரஸின் நடவடிக்கைகளைப் பற்றி சுருக்கமாக மதுரை'விவேகபாநு' வில்எழுதியுள்ளார் இந்தத் தமிழ்ப் புலவர். மின்டோ—மார்லி அரசியல் சீர் திருத்த அறிக்கையை ஆவேசமாகக் கண்டித்தார்.

பாபா பிரேமாநந்த சுவாமிகள் அவர்களின் அமெரிக்க நாட்டு சிஷ்யை ஆந்தன் அம்மையார் அவர்கள் 'இந்தியா வின் தேசிய கீதம்* எனும் கவிதை இயற்றினார். இக் கவிதையை ம. கோபால கிருஷ்ணையர் செந்தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தொடக்க வரிகள் வருமாறு:

---

* கவிக்குயில் பாரதியார்; பக் : 27-28

வாழிய! பண்டைப் பெயரே வாய்ந்திடுமா
வளநாடே! மாசில் தூய்மை
சூழ் இசைசேர் பாரதமே! தாயகமே
தாய்எலாம் தோன்றும் பூவே!
பாழியநின் பெருந் தகைமைப் பான்மையை யான்
பயில அருள் பாலிப் பாய்நீ.
ஆழிபுனை எப்புவிக்கும் ஆருயிரே
நினதுரிமை ஆம்என் உள்ளம்.

குருமலை சுந்தரம் பிள்ளை

சுதேசமித்திரனில் துணை ஆசிரியராகத் தொண்டாற்றிய தமிழறிஞர்; ''ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் சரிதம்'', எனும் நூலை 1906-ல் சுதேசமித்திரன் வெள்ளி விழாவின் பொழுது எழுதி வெளியிட்டார் குருமலை சுந்தரம்பிள்ளை. 'பொற்றொடி' நாவலின் ஆசிரியர்; 'வடமொழி ஆங்கில நடையைத் தழுவிப் புதிய வழியில்'' மொழி நூல்-வினையியல் எனும் தமிழ் இலக்கண நூலையும் இயற்றினார்; ஆங்கிலத்திலும்- தமிழிலும் புலமைபுடையவர்; 'கேசரி' எனும் தமிழ் வாரப் பத்திரிகையை ஒரு மாதம் நடத்தினார்; இறுதிக் காலத்தில் கோவில் பட்டியில் வழக்கறிஞராகப் பணி புரிந்தார்.

பாரதியார் தமிழ்ப் புலவர்களிடம் எதிர்பார்த்த தேசியவுணர்ச்சி குருமலை சுந்தரம் பிள்ளையிடம் நிறைந்திருந்தது. ஜி.சுப்பிரமணிய ஐயர் சரிதத்தைப் படிப்போர்க்கு இவ்வுண்மை விளங்கும்.

வங்க மாநிலம் தந்த தேசிய மாவீரர் சுரேந்திரநாத் பானர்ஜி சிறைப்பட்டதைக் கேட்டதும் சினங்கொண்டு பத்துப் பாடல்களை இயற்றித் துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு நாடெங்கும் அனுப்பி வைத்தார், குருமலை

சுந்தரம் பிள்ளை. இவ்வொரு பாடலின் இறுதியிலும் 'வந்தே மாதரம்' என்று அச்சிட்டார்.

இந்தத் துண்டுப் பிரசுரத்தின் ஒரு பாடலை நினைவு கூர்ந்து அறிஞர் பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்.

அடியாருக் கல்லல் புரியும் அடையலரை
அருட்திருக்கண் அனலால் நீற்றிப்
பொடியாகப் புறத்தூதும் புண்ணிய! வெண்
பொடி யொளிரும் புனிதா! இந்தப்
படியார் திண்புகழ் படைத்த
பாபு சுரேந்திரநாத பரனைத் தொட்ட
கொடியாரைக் கொடு நரகில் தள்ளாயேல்
உன்பெயர்க்குக் குறையுண்டாமே.

விருதை சிவஞான யோகிகள்

தமிழின் தனித் தன்மைச் சிறப்பினை நிலைநாட்டப் பெரிதும் உழைத்தவர் விருதை சிவஞான யோகிகள். 19-11.1908இல் திருக்குற்றாலத்தில் இவர் ''திருவிடர் கழகம்'' எனும் அமைப்பை நிறுவினார். இதன் நோக்கங்களில் ஒன்று பின்வருமாறு:

''திருவிட மொழியின் உண்மை வரலாறுகளை ஆராய்தல் என்பது திருவிட மொழியாகிய தமிழின் தோற்றம் யாது! அதன் இயல்பு யாது? அது இயல் மொழியா? செயல் மொழியா? அதன் வளர்ச்சி எவ்வாறு? அதனின்று தோன்றிய மொழிகள் எவை? அதிற் பிறமொழிகளின் கலப்புளதா? அவை யாவை? அதன் எழுத்தின் (இலக்கண) அமைப்பு எத்தகையது? தமிழ்த் தொன்மை நூல்கள் யாவை?-உலகிலுள்ள மொழிகள் அனைத்துக்கும் அல்லது ஒவ்வொரு சிறந்த மொழி

களுக்கும் தமிழுக்கும் என்ன ஒற்றுமைகள் அல்லது வேற்றுமைகள் உள்ளன என்பது முதலியவற்றைப் பற்றி ஆய்தல்.,'

இந்த அமைப்பின் நோக்கங்களை வெளியிட்டு ஆய்வு செய்த புலவர் இரா. இளங்குமரன், மறைமலை அடிகளாருக்குத் ''தனித்தமிழ் எண்ணம் தோன்றிச் செயலாக்கமுறுவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னமே தனித் தமிழில் எழுதிச் செயற்படுத்தும் முயற்சி கிளர்ந்து விட்டது எனலாம்'' என்று குறிப்பிட்டுள்ளார். *

சிவஞான யோகியாரின் 'தமிழர் தொன்மை' என்னும் 26 அடி அகவற்பாவில் ஆரியர் வந்து குடியேறுவதற்கு முன்பு தமிழ் மொழி பெற்றிருந்த மேன்மை விளக்கப்பட்டுள்ளது. ஆரியர் எதிர்ப்புணர்வில் தமிழர் தொன்மையை சிவஞான யோகியார் 1908-இல், விடுதலைப் போராட்டச் சுதேசி இயக்கத்தில் ஈடுபட்டிருந்தகாலத்தில் கூறியது கவனிக்கத் தக்கது. சுதேசமித்திரனில் இவருடைய சுதேசி இயக்கப் பேச்சுக்கள் வெளிவந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுதேசமித்திரன வெள்ளி விழாவிற்கு தலைமை வகித்தார். சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் அறுபதாம் ஆண்டு விழாவில் 1915-ல் 128 வரிகளில் அருமையான வாழ்த்துப் பாவைப் பாடினார். ஐயரின் சமூக சீர்திருத்தச் சாதனையையும், அரசியல் தொண்டையும் பாராட்டும் வரிகள் வருமாறு:

---

* மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை-1986, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். ப. 76

மீட்டுமணஞ் செயல் பூத்த பெண்மணத்தல்
மிருதியின் னெறியெனத் தெரிந்தவ வாழ்க!
நீ வித்திய நாட்டன்பு மறிவும்
முளைத்தமை போலப் பருத்துச் செழித்தும்
காய்த்தும் பயன்பல வாய்த்திவண் வாழ்க !
தென்னாப் பிரிக்கைப் போயர் தம்மால்
உடல் பொருளாவிக் கொடையனான
காந்தி முன்னைய விந்தியர் படுமினல்
முறையின் விளங்க வுரைத்து நம் நாட்டார்
பொருட்டுணை செய்யத் தெருட்டிய தெய்வ
வொண்மையில்புடை யண்ணல் வாழ்க !

5-5-1913-ல் தூத்துக்குடிச் சிவாநுபூதிச் சித்தாந்தச் சங்கத்தின் முதலாண்டு விழாவில் இவர் பாடிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் 'இந்தியா மன்னிறை முடிசூட்டு வாழ்த்துப்பா'வில் உள்ள பின்வரும் வரிகள் பாரதியாரின் வேல்ஸ் இளவரசர் வாழ்த்துப் பாவின் சில வரிகளை நினை வூட்டுகின்றன.

இந்நிலத் தயுற்புல மன்னவ ரிடையில்
வந்துவந் துறுத்திய துன்பந்தொலைத்தும்
வேளிர் புரிந்த கோளின வொழித்துக்
கொள்ளைக் கும்பினர் சள்ளை குலைத்தும்
அடிமைகொண் டொறுக்கு மிடும்பை துடைத்தும்
தீப்பாய்ந் துயிரை மாய்த்தலை நீத்தும்.

சுதேசிய இயக்கத்தின் ஆரம்பகாலத்தில் திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரோடுச் சேர்ந்து தீவிரமாகப் பாடுபட்டார் சிவஞானயோகி. 5-3-1908-ல் சுதேசமித்திரனில் சுதேசியத்தைப் பற்றி வெளிவந்த இவர் பேச்சு அரசாங் கத்தின் கண்டனத்திற்கு ஆளாகியது.

சுப்பிரமணிய பாரதியாருக்கு, 'பாரதியார்' எனும் பட்டத்தை வழங்கியவர் சிவஞானயோகி எனும் செய்தியொன்றும் கூறப்படுகிறது.*

பேராசிரியர் எஸ். வையாபுரி பிள்ளை (1891-1956)

பாரதியாரைச் சந்தித்த தமிழறிஞர்களுள் ஒருவர் பேராசிரியர் எஸ். வையாபுரி பிள்ளை. பாரதியாரிடம் கொண்ட ஈடுபாட்டை, மூதறிஞர் பி. ஸ்ரீ. ஆசார்யா அவர்கள் வாயிலாகவும், புதுவை. ரா. கனகலிங்கத்தின் 'என் குருநாதர் பாரதியார்' நூலில் உள்ள வையாபுரி பிள்ளையின் முன்னுரையில் இருந்தும் அறிகிறோம்.

வ. வே. சு. ஐயர், பாரதியின் கண்ணன் பாட்டிற்கு வழங்கிய முன்னுரையில் ''கற்பனா கர்வத்தோடும், சிருஷ்டி உற்சாகத்தோடும்'' பாரதியார் பாடும் அற்புதக் காட்சியை வருணித்துவிட்டு ''இந் நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக'' கேட்டவர் மதிப்பர் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த முன்னுரையை பி. ஸ்ரீ. ஆசார்யாவிற்கும், எஸ். வையாபுரி பிள்ளைக்கும் படித்துக் காட்டி வ. வே. சு. ஐயர் விளக்கினாராம். ''என்ன அருமையான உண்மை! என்ன அழகான வாக்கு!'' என்று வையாபுரி பிள்ளை இரண்டு மூன்று தடவை வியந்து கூறக் கேட்டியிருக்கிறேன்'' என பி. ஸ்ரீ. ஆசார்யா நினைவு கூர்ந்துள்ளார்.

24-11-1918ல்-ல் கடலூர் சிறையில் வைக்கப்பட்டு, 15-12-1918-ல் விடுதலை செய்யப்பட்ட பாரதியாரை 1919 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திருவனந்தபுரத்தில்

---

* நூற்றாண்டுகளில் தமிழ்; கா. பொ. ரத்தினம்; பக்: 254.

உள்ள சைவப் பிரகாச சபையில் எஸ். வையாபுரி பிள்ளை வரவேற்று உரையாடினார். 'ஊழிக் கூத்து' பாடலைப் பாடுமாறு பாரதியாரிடம் வையாபுரி பிள்ளை கேட்க, பாரதியார் பாடினார். ஊழிக் கூத்து தோற்றுவித்த இரசானுபவத்தை வையாபுரி பிள்ளை விரிவாக ''என் குருநாதர் பாரதியார்'' என்னும் நூலின் முன்னுரையில் எழுதியுள்ளார். தமது நண்பர் பி. ஸ்ரீ. க்கு எழுதிய கடிதத்தில் வையாபுரி பிள்ளை குறிப்பிட்டதாவது:

''தாங்கள் அடிக்கடி பாராட்டும் கவிதைத்திறனைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் அபரிமிதமாக அனுபவித்து விட்டேன்.''

'என் குருநாதர் பாரதியார், முன்னுரையில் வையாபுரி பிள்ளை பின் வருமாறு கூறியுள்ளதும் குறிப்பிடத் தககது.

'‘எனது நெல்லை நண்பர்களுள் ஸ்ரீ வ. வேதநாயகம் பிள்ளையவர்களும், ஸ்ரீ சோமசுந்தர பாரதியாரவர்களும் ஸ்ரீ. பி. ஸ்ரீ. ஆசார்யா அவர்களும் என்னிடத்தில் சுப்பிரமணிய பாரதியின் அபாரமான கவித்துவ சக்தியை அடிக்கடி பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். பாரதியின் உயிர்த்தத்துவம் நிரம்பிய பாடல்களை நானும் வாசித்து இன்புற்றுக்கிறேன்.''*

வழக்கறிஞர் வ. வேதநாயகம் பிள்ளை

பாரதியாரின் பிள்ளைப்பருவத் தோழர்களில் ஒருவர், திருநெல்வேலி வழக்கறிஞர் வ. வேத நாயகம் பிள்ளை. ''பாரதி-நான் கண்டதும்'' கேட்டதும் என்னும் தமது

* என் குருநாதர் பாதியார்-
புதுச்சேரி ரா. கனகலிங்கம், பக். 5.

நூலில் திரு. பி. ஸ்ரீ. ஆசார்யா, வ. வேதநாயகம் பிள்ளை யைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வேதநாயகம் பிள்ளை சிறந்த தமிழ்ப் புலவராகவும் விளங்கியவர்; மதநம்பிக்கை இல்லாதவர்; தேசிய இயக்கத்தில் பற்று கொண்டவர்; பாரதியாரின் சிறந்த ரசிகர்.

தேசிய இயக்கத் தொண்டர்களின் பெருமைகளை விளக்க **''புதிய திருத் தொண்டத்தொகை''** எனும் பெயரில் சில பாடல்களைப் புனைந்தார், வேதநாயகம் பிள்ளை. மிதவாத தேசியம் இவருக்கு உடன்பாடில்லை என்றாலும், தேசிய இயக்க வரலாற்றில் இடம்பெற வேண்டியவர்களை ஒதுக்காமல் குறிப்பிட்டார்.

கடலூர் சிறைவாசத்திற்குப் பிறகு உடலும் உள்ளமும் சோர்ந்த பாரதியார் திருநெல்வேலிக்கு வரும்போதெல் லாம் வேதநாயகம் பிள்ளையின் வீட்டிலேயே தங்குவாராம். பாரதியாரின் கவிதைகளைச் சுவைத்து மகிழ ஒரு ரசிகர் கூட்டத்தையே விருந்துடன் நடத்துவார், வேதநாயகம் பிள்ளை.

தமது திருத் தொண்டத் தொகையில் முதலில்,
புத்தமுதம் எனக்கவிசொல்
தாகூருக்கு அடியேன்

என எழுதியதைப் பின்பு மாற்றி,
''புத்தமுதக் கவி பாடும்
பாரதியார்க்கு அடியேன்.''

என அமைத்தார், வேதநாயகம் பிள்ளை,

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. (1883-1953)

பாரதியாரைப் போற்றுவதில் மற்றெந்தத் தமிழ்ப் புலவருக்கும் இல்லாதத் தனித்தகுதி தமிழ்ப் பெரியார்

திரு. வி. க. அவர்களுக்கு உண்டு. தேசிய இயக்கப் பிரசாரத்தில் இரண்டறக் கலந்ததே, அந்தத் தனித்தகுதி. பாரதி வழியை-மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இறைப் பற்று-முற்றிலுமாக ஏற்றவர் திரு. வி. கலியாணசுந்தரனார். தேசபக்தன், நவசக்தி இதழ்கள் வாயிலாக தேசியத்தைப் பரப்பியவர் திரு. வி.க. அவர்கள்.

பாரதியார் புதுச்சேரியில் கட்டுண்ட காலத்தில், தமிழகத்தில் பாரதியார் வருவதற்கு எவ்விதத் தடையும் இருக்கக் கூடாது எனப் பிரசாரப் போரை தமது ''**தேசபக்தன்**' நாளிதழில் நடத்தியவர், திரு.விக. இதைப்பற்றி திரு,வி.க.வின் செந்தமிழிலேயே அறிவோம்,

''அந்நாளில் தேசபக்தர் சிலர் புதுவையைப் புகலிடமாகக் கொண்டனர். அவருள் இங்கே குறிக்கத்தக்கவர் இருவர். ஒருவர் வ. வே. சு. ஐயர்; மற்றொருவர் சுப்பிரமணிய பாரதியார். ''இருவரும் பிரிட்டிஷ் எல்லையில் உலவும் உரிமையுடையவராயிருத்தல் வேண்டும்'' என்ற கிளர்ச்சியைத் 'தேசபக்தன்' தொடங்கினான். கிளர்ச்சி வெற்றியடைந்தது. புதுவையினின்றும் வ வே.சு. ஐயர், திரு. வி.க.விற்கு நன்றிகூறி கடிதம் எழுதினார்.*

பாரதியார் சிறைப்பட்டது

பாரதியார் புதுச்சேரி எல்லையைத் தாண்டியதும் கடலூரில் ''Ingress India ordinance of 1914''-ன் கீழ் பாரதியார் 24, நவம்பர் 1918, பிற்பகலில், கைது செய்யப் பட்டார்.

---

* திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்.4959;
பக். 284.

வழக்கறிஞர்கள் டி. இ. சடகோபாலாச்சாரியாரும், எம். நடராஜ ஐயரும் பாரதியாரை ஜாமீனில் விடக்கோரி சிதம்பரத்தில் கலெக்டரைச் சந்தித்து மனு கொடுத்தனர். இதில் தலையிட தமக்கு அதிகாரமில்லையென்று, அரசாங்க உத்தரவை நிறைவேற்றுவதாகவும் கூறினார். கலெக்டர் பிரிட்டிஷ் இந்தியாவில் நுழைவதற்கு சிலநாட்கள் முன் கடுங்காய்ச்சலில் பாரதியார் பாதிக்கப்பட்டு மிக்க பலவீன மடைந்திருந்ததால், சுகாதாரச் சூழலற்ற கடலூர் சப் ஜெயிலில் இருந்து, மாவட்ட சிவில் ஜெயிலுக்கு மாற்ற உத்திரவிட்டார், கலெக்டர். போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் சிறையில் பாரதியாரைச் சந்திததார். பாரதியாரின் தகுதியைக் கவனிக்காது தண்டனைக் கைதிகளோடு சேர்த்து அடைத்ததை பெசண்ட் அம்மையாரின் 'நியூ இந்தியா' கண்டித்தது.

பாரதியாரின் சிறைக் கைதி எண் 253, உணவு மட்டும் வெளியில் இருந்து வர அனுமதிக்கப்பட்டது.*

பாரதியார் சிறைப்பட்டதை அறிந்ததும், திரு.வி.க. தேசபக்தன் இதழில் கிளர்ச்சி செய்தார். திரு.வி.க. எழுதியதாவது;

''சுப்பிரமணிய பாரதியாருக்கு சிலதடைகள்கடலூரில் இடத்தப்பட்டன என்று ஓர் அரசியல் கிள்ளை 'தேசபக்த' னுக்கு அறிவித்தது. 'தேச பக்தன்' பாசுபதம் எழுந்தது- தடைகள் உருவெளியாயின. கவிஞர் சென்னை சேர்ந்தனர். யான் பாரதியாரை டிராம்வே தொழிலாளர் சங்கத்தில் கண்டேன். பாரதியார் நாவினின்றும் சக்தி பாட்டு வீறிட்டது.''

---

* G. O. NO: 1131 dated 18-12-1918(Public,confdle)

தேசபக்தன் நாளிதழின் அக்காலஇதழ்கள் கிடைத்தால் திரு.வி.க.அவர்களின் கிளர்ச்சி யுரைகளை, அதன் வாயி லாகபாரதியார்பெருமைகளை மேலும் அறியவாய்ப்புண்டு.

டிசம்பர் 15, 1918-ல் பிற்பகல் 3 மணி அளவில் பாரதி யார் விடுதலை செய்யப்பட்டார். நேராக தென்னார்கார்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அழைத்துச் செல்லப் பட்டார், அவருடைய நடமாட்டம், நடவடிக்கைகள்மீது அரசாங்கம் விதித்த கட்டுப்பாடுகள் எடுத்துக் கூறப் பட்டது. பாரதியார் கடையம் அல்லது பாபநாசத்தில் தங்கவேண்டும், வெளியூர் செல்ல வேண்டுமானால் மாவட்ட ஆட்சித் தலைவரிடமாவது அல்லது டெப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமாவது (காவல் துறை) தகவல் தரவேண்டும். அவரால் எழுதப்படுபவனவெல்லாம் முற்கூறிய இரு அதிகாரிகளிடம் முன்கூட்டியே காட்டப்பட வேண்டும்.''

இந்த நிபந்தனைகளைபாரதியார், ஏற்றுக் கொள்ளச் செய்து விட்டனர், அவர் விடுதலைக்கு ஏற்பாடு செய்த வர்கள்.

இந்திய தேசிய இயக்கத்தை ஒடுக்க பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம் தயாரித்த ரௌலட் சட்டத்தை எதிர்க்க காந்தி யடிகளின் தலைமையின் கீழ் நாடெங்கும் கிளர்ச்சி தோன்றியது.

1919 ஏப்ரல் ஆறாம் நாள், ''நோன்பு நாளாக'' அறிவிக்கப்பட்டது, சென்னையில் நோன்பு நாளை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பஜனை கோஷ்டிகள் அடங்கிய ஊர்வலத்தில் 'தேசபக்தன்' நாளிதழ் குழு

* December 16, 1918. New India.

முக்கிய இடம் பெற்றது. திரு. வி.க. அவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

இந்த ஊர்வலத்தில் பாரதியார் திடீரென்று வந்து கலந்துக் கொண்டார். இதைப் பற்றி திரு. வி. க. கூறியதாவது:

''சுப்பிரமணிய பாரதியார் பஜனை கோஷ்டியில் எங்கேயோ எப்படியோ கலந்து வந்தார்.''*

ஏப்ரல்18-ல் நடந்த பஞ்சாப் படுகொலைக்கு கட்டியங் கூறிய ஏப்ரல் 6 ஆம் தேதி ஊர்வலத்தில் ''எங்கேயோ, எப்படியோ'' எனக் கூறும் அவலநிலையில் பாரதியார் கலந்துக் கொண்டார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வேட்டை நாய்த்தனம் தான் இதற்குக் காரணம்.

திரு.வி.க.வின் ''ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை'' ஊர்வலம் முடிந்ததும் பாரதியார் பாடிய ''முருகா முருகா...'' எனும் பாடல் நிகழ்த்திய அற்புதத்தை திரு.வி.க. அவர்கள் உணர்ச்சிப் பொங்க தமது வாழ்க்கைக் குறிப்புகளில் வருணித்துள்ளார்.

பாரதியார் அமரரானதும் அஞ்சலி செய்து தமது நவசக்தியில் (1921 செப்டம்பர் 16) ஓர் உபதலையங்கம் எழுதினார், திரு.வி.க.

''தென்னாட்டுக் கவிஞரான ஸ்ரீமான் சி.சுப்பிரமணிய பாரதி சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று விண்ணுலகமடைந்தார் என்று அறிந்து பெரிதும் விசனிக்கிறோம். ஸ்ரீமான் பாரதியாரைப் பற்றி நாம் அதிகமாகத் தமிழ்

நாட்டாருக்குத் தெரிவிக்கவேண்டுவதில்லை. அவர் இயற் கையில் ஈடுபட்டு, கேட்போர் உள்ளம் உருகுமாறு பாடும் ஆற்றல் பெற்றவர். அவர் சிறந்த தேசியவாதி:அவருடைய மரணம் தமிழ்நாட்டிற்கே பெரிதும் துயரத்தை விளைவிப் பதாகும்.''*

29-9-1946-ல் ஆக்கூர் பாரதி சங்கத்தின் பத்தாம்ஆண்டு விழாவில் பாரதியாரின் அருந்தமிழாற்றலை அமுதத் திற்கு ஒப்பிட்டு, பின்வருமாறு, பேசினார். திரு. வி. க.

''தமிழ்நாடு ஒரு பெரும் பாட்டுக் கடல். அதனின்றும் திரண்டெழுந்த அமிழ்தம் நம் பாரதியார். அவர்தம்தமிழ் அமிழ்தம் நாட்டுக்கே உயிர்ப்பு வழங்கி வருதல் கண்கூடு... தமிழ் இனிமை பாரதியார் பாடலாகத் தேங்கியது எனக் கூறல் மிகையாகாது.''*

---

* தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு- நான்காம் பதிப்பு- 1947, பக். 435

பாரதியார் அடையாளங் காட்டிய கனகசுப்புரத்தினப் புலவர்- (1855-1950)

பிரெஞ்சிந்தியப் புதுச்சேரி அளித்தப் புகழார்ந்தத் தமிழ்ப் புலவர்களுள் கனக சுப்புரத்தினம், பாரதியாரின் புதுச்சேரி வாழ்க்கையில் தலை சிறந்தத் தமிழ் இலக்கியத் தோழனாக விளங்கினார். பாரதியாரின் 'இந்தியா' வார இதழைப் படித்து-படித்து, பாரதியாரின் சுதேச கீதங் களை இசையுடன் பாடிப்பாடி, ''நான் ஓர் இந்தியன்' எனும் பெருமிதத்தை சற்று ''அகம்பாவத்தோடு'' உணர்ந்ததாக பாரதிதாசன் தமது 'குயில்' இதழில் (10-6-1967) நினைவு கூர்ந்துள்ளார்.*

பாரதியாரின் இலக்கியவாழ்க்கையில் அவருடைய பன்னிரெண்டு ஆண்டு வாழ்க்கை புதுச்சேரியில் கழிந்தது. பாரதியார், கனக சுப்புரதித்னத்தின் பெயரை நேரடியாகச் சொல்லாமல், 'எழுக! நீ புலவன்' என்று கூறியதாக அறியப்படுகின்றது. பலவிதமான நாட்டுநடப்புகளை, கருத்துகளை துலாக்கோல் நெறியில் நிறுத்தி மதிப்பிட்டு பாரதியார் அக்கால சென்னை சுதேசமித்திரன் இதழிற்கு

• ''இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்''— கட்டுரை-டாக்டர் இரா. இளவரசு- 'புலமை' மாத இதழ், ஜூன், 1976, சென்னை, பக், 113-14.

'தராசு' என்னும் தலைப்பில் கட்டுரைகள் எழுதிவந்தார். 'தராசு' கட்டுரைகள் புதிய நடையை, புதிய பார்வையை, புதிய உத்தியை வளர்த்தன. இந்தக் கட்டுரைகள் ஒன்றில் கனக சுப்புரத்தினத்தை 'ஒரு தமிழ்க் கவிராய'ராகச் சந்தித்த விவரத்தை பாரதியார் விரிவாக எழுதியுள்ளார். அந்தச் சந்திப்பில் கனக சுப்புரத்தினம் பாடிய 'சக்தி' பாடல் பாரதியாரை கவர்ந்தது, 'தராசு' குரலில் பாரதியார் அறிவுரை பின்வருமாறு ஒலித்தது:

''ஆரம்ப குற்றமில்லை. விடாமுயற்சியும், தெய்வபக்தியும் அறிவிலே விடுதலையும் ஏறினால் கவிதையிலேலே வலியேறும். ...பாட்டிலே வலிமை, தெளிவு, மென்மை, நேர்மை இத்தனையுமிருக்கவேண்டும். இதற்கு மேலே நல்ல வர்ணஞ் சேர்ந்தால் குற்றமில்லை; சேராமலிருந்தால் விசேஷம்.*

அந்த அறிவுரையைக் கேட்ட நிலையில் பாரதியாரிடம் **''நீயே எனது குரு''*** என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் புலவர், நமஸ்காரம் செய்ததாகத் 'தராசு' குறிப்பிட்டுள்ளது. **இந்த நிலையில்தான் 'பாரதியார்,** ''எழுக! நீ **புலவன்.''** என்று வாழ்த்தினார். வாழ்த்தியதோடு அமையாமல், தம்முன் வளமான இசைக் குரலில் பாடிய புலவரின் பின்வரும் பாடலை சுதேசமித்திரனில் வெளிவர ஏற்பாடு செய்தார், பாரதியார். பாரதியாரின் சக்தி பாடலையொத்த அந்தப் பாடல் **வருமாறு:**

காளை யொருவன் கவிச்சுவையைக்-கரை
காண நினைத்த முழு நினைப்பில்-அம்மை
தோளசைத் தங்கு நடம் புரிவாள்-இவன்
தொல்லறி வாளர் திறம் பெறுவான்

---

* அழுத்தக் குறியீடு, இந்நூலாசிரியருடையது.

ஆ! எங்கெங்கு காணினும் சக்தியடா!-தம்பி
ஏழு கடலவள் மேனியடா!
தங்கும் வெளியினிற் கோடியண்டம்-எங்கள்
தாயின் கைப் பந்தென வோடுமடா!
கங்குலில் ஏழு முகிலினமும்-வந்து
கர்ச்சனை செய்தது கேட்டதுண்டோ?
மங்கை நகைத்த ஒலியதுவாம்-அவள்
வாயிற் குறுநகை மின்னலடா!

பாரதியாரின் தராசு கட்டுரையில் உள்ள இந்தச் செந்தமிழ் சக்திப் பாடலை சுதேசமித்திரனுக்கு அனுப்பிய பொழுது பாரதியார் இணைத்துள்ள பின்வரும் குறிப்பு, கனக சுப்புரத்தினப் புலவரை பாரதியார் அடையாளங் காட்டும் குறிப்பாகச் சிறப் பெய்தியது.

''ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த-கனக சுப்புரத்தினம் எழுதியது''.

புதுமுறை, புதுநடை காட்டியவர்.

கனக சுப்புரத்தினம் கவிஞராக மலர்ந்த நிலையில் புதிய கவிதை நெறியில் மேற்செல்ல, பாரதியார் தொடர்பே காரணம் என்பதை உரைநடையிலும், கவிதையிலும் தெள்ளத் தெளிவாகச் சாற்றியுள்ளார். உரைநடையில் 10-6-1997 இல் குயில் இதழில் கூறிய தாவது :

''அந்நாளில் புதுவையில் தமிழ்ப் பண்டிதர்கள் அமைத்திருந்த கலைக்கழகத்தில் சேர்ந்து புரியாதத் தமிழில் எழுதி நான் தீவிரமாகத் தொண்டாற்றிக் கொண்டிருந்தேன்:... ...பாரதியாருடைய தொடர்பு என்னுடைய பாநெறியில் ஒரு புதிய போக்கை ஏற்படுத்

தியது. நம் கண்ணெதிரில் காணப்படும் மக்களின் தேவைகளை அவர் பாடினார். அது என்னுடைய மனதைக் கவர்ந்தது. பிறகே, என்னுடைய பாக்கள் அரசியல், சமுதாயம், மொழி ஆகிய பல்வேறு துறை களில் உள்ள குறை நிறைகளை உருப்படியாக எடுத்துக் காட்டத் தலைப்பட்டன இவ்வகையில் பாரதியாருக்கு யான் மிகவும் கடமைப்பட்டவன்.'' *

தமது பாட்டுக்கு ''**புதுமுறை**, ''**புது நடை**''யை பாரதியார் காட்டியதை 1960-இல் வெளிவந்த ''**கவிஞரும் காதலும்**''* என்னும் நூலின் வாழ்த்துரையில் பின்வருமாறு கவிதையில் பதிவு செய்துள்ளார், பாரதி தாசன்.

முப்பது ஆண்டு முடியும் வரைக்கும் நான்
எழுதிய அனைத்தும் என்ன சொல்லும்?
கடவுள் இதோ என்று மக்கட்குக் காட்டிச்
சுடச்சுட அவன் அருள் துய்ப்பீர் என்று.
ஆயினும் கடவுள் உருவம் அனைத்தையும்
தடவிக் கொண்டுதான் இருந்ததென் நெஞ்சம்
பாடலிற் பலமுறை பழநடை என்பதோர்
காடு முழுவதும் கண்டபின் கடைசியாய்ச்
சுப்பிரமணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார். **

1946-ல் திருச்சி வானொலி கவியரங்கத்தில் தலைமை யேற்று பாரதிதாசன், பாரதியாரைப் பற்றிப் பாடிய

* மேற்கோள்- பாரதிதாசன் பார்வையில் பாரதி- 1982-டாக்டர் ச.சு.இளங்கோ ப. 140

** மேலது நூல்- ப. 31

கவிதையில் பாரதியார் தோன்றியக் காலச் சூழலைப் பின்வருமாறு குறிப்பிட்டார்.

தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமை திறவாமல் இருந்த நிலையில்
தமிழகம் தமிழருக்குத் தகும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங் கிடக்கையில்
இலகுப் பாரதி புலவன் தோன்றினான்

இதே கருத்து பாரதிதாசனின் ''பாரதி நாமம் வாழ்க!'' என்னும் கவிதையிலும் இசைக்கப்பட்டுள்ளது.

கனக சுப்புரத்தினம், பாரதிதாசனாக தம்மை 1921 முதல் அறிவித்துக் கொண்டார். பாரதியார் அமரரான அடுத்த ஆண்டில் 'கே. எஸ். பாரதிதாசன்' என்னும் புனை பெயரில் புதுச்சேரியில் பாரதி அன்பர் சைகோன் சின்னையா நடத்திவந்த ''**தேச சேவகன்**'' என்னும் தேசிய இயக்க இதழில் எழுதத் தொடங்கினார்.

பாரதிதாசன் என்னும் பெயரை வைத்துக் கொண்டதற்குரியக் காரணத்தை தமது 'குயில்' இதழில் 20-9-1960-இல் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''நான் பாரதிதாசன் என்ற புனைப் பெயர் வைத்துக் கொண்டுள்ளேன். இதற்குரிய காரணம் அப்போது அவர் என்னுள்ளத்தில் முதவிடம், பெற்றிருந்தது தான். சாதிக் கொள்கையை நன்றாக-உண்மையாக எதிர்த்தவர் பாரதியார்தாம். சென்ற காலத்தில் அவருக்கு முன் இவ்வாறு சாதிக் கொள்கையை எதிர்த்தவரை நான் கண்டதில்லை. பாரதி எதிர்த்துப்

பணிபுரியத் தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது.**

பாரதியார் அடிச்சுவட்டில்

பாரதிதாசன், பாரதியார் அடிச்சுவட்டில் 'தேச சேவகன்' இதழ்களில் தேசியப் பாடல்களை மிக அருமை யாக எழுதியுள்ளார்.

'தேசசேவகன்' என்னும் வார இதழ் புதுவையில் காங்கிரஸ் இயக்கத்தையும், காந்தியத்தையும் பரப்பு வதில் பாடுபட்டது. இந்த இதழ் 1922 முதல் 1924 வரையில் வெளிவந்தது. இந்த இதழில் பாரதிதாசனை தேசியப் பாடல்களை எழுதச் செய்ததில் சைகோன் சின்னையாவுற்கு பெரும் பங்குண்டு. தேச சேவகனில் ''K.S. பாரதிதாஸன்'' என்னும் பெயரில் 33 பாடல்கள் வந்தன.

பாரதிதாசன் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத் திலும் பங்கேற்றவர். அவருடைய தேசியப் பாடல்கள், 'சிறுவர் சிறுமியர் தேசிப கீதம்', தொண்டர் படைப்பாட்டு 'கதர் இராட்டினப் பாட்டு' என்ள்ம் நூல்களாக வெளி வந்துள்ளன.**

காந்தியடிகள் முதல் பல தேசியத் தலைவர் களைப் பற்றியும், ஒத்துழையாமை இயக்கம், காந்தியடி களின் நிருமாணத் திட்டங்கள், கதரியக்கம் முதலான வற்றைப் பற்றியும் பாரதிதாசன் பாடியுள்ளதை வைத்துப் பார்க்கும்பொழுது, அவர் ''காத்தியுகக் கவிஞர்'' என்று புகழ்பெற்ற நாமக்கல் இராமலிங்கம் பிள்ளைக் கும் முன்னோடி என்பது தெரிய வரும்,

---

* மேலது நூல்- ப. 152

** இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்-1990 முனைவர் இரா, இளவரசு-ப.57.

மாகும். சுயமரியாதை இயக்கச் சார்பு நிலையிலும் பாரதிதாசன் தேசியவுணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளதையும் முனைவர் இரா. இளவரசு எடுத்துக் காட்டியுள்ளார். பிற்காலத்தில் சீனப் படையெடுப்பின் பொழுது பாரதிதாசனிடம் வெளிப்பட்ட தேசியவுணர்வு அவருடைய இறுதிக்காலம் வரையில் **மீண்டும்** மலர்ந்து மணம் வீசியது.

காங்கிரஸ் 'மாநாடுகளில் கலந்துக் கொண்ட பாரதியார், 'தாயின் மணிக் கொடி'யைப் பற்றிப் பாடிய பாரதியார், **காங்கிரசிற்கு என்று தனியாக ஒரு பாடலைப் படைத்தாரில்லை.** காந்தியுகத் தோற்றத்திற்கு பூபாளம் பாடிய பாரதியார், காந்தி வளர்த்த காங்கிரசைப் போற்றிப் பாடல்படைக்காமற் போனது, காங்கிரசின் தலைக்குறைவாகும். காங்கிரசின் வரலாற்றை எழுதியுள்ளார், பாரதியார் என்பதும் கவனத்திற்குரியது. இவற்றையெல்லாம் நினைவில் நிறுத்திப் பார்க்கும் பொழுது, பாவேந்தர் பாரதிதாசன் ''**தேச மகா மன்றம்**'' என்னும்தலைப்பில் காங்கிரஸ் கட்சியைப் பற்றி அற்புதமாக பாடியுள்ளது அரிய வரலாற்றுச் சிறப்பிற்குரியதாகின்றது.

''தேச மகா மன்றம் (காங்கிரஸ்)''

'தேசிய கீர்த்தனைகள்' என்னும் தலைப்பில் K.S. பாரதிதாசன் எழுதிய கவிதைகளுள் ஒன்று 'தேச மகா மன்றம் (காங்கிரஸ்)' என்பதாகும். இந்தத் தன்னேரில்லா அன்றைய காங்கிரஸ் பிரசாரக் கவிதை ',தேச சேவக'னில் 1924, மார்ச் 13-இல் வெளிவந்தது. இந்தக் கவிதையின் முழு வடிவம் வருமாறு:

மன்றத்தைப் போற்றுவதா லுங்கள் செய்கைகள்
மாதவ மாகுமடா — அவை
மாதவ மாகுமடா — அந்தக்
குன்றத்தை வாய்மைக் குணக்கட்டை மீறுதல்
குற்றம் பெருங்குற்றமாம் — அது
குற்றம் பெருங்குற்றமாம்.

தின்றிடும் சோறும் பிடுங்கப் படாது
தேசமன்றத் துணையால்-இந்தத்
தேசமன்றத் துணையால்-ஒரு
கன்றுக்குச் சொந்தம் கறந்திடும்பால் இக்
கருத்தை நிசம் புரிவீர்-இக்
கருத்தை நிசம் புரிவீர்.

முப்பது முக்கோடி மாந்தர் கருத்தில்
முளைத்த பெருநதெய்வமாய்-நன்கு
முளைத்த பெருந்தெய்வமாய்-ஒரு
மெய்ப்பதம் உண்டெனில் உம்மினும் வேறொரு
வீரக்குலம் புகல்வாய்-ஒரு
வீரக்குலம் புகல்வாய்.

இப்பொழுதே உங்கள் தெய்வ மகாமன்
றிணையற்ற தாக்கிடுவீர்-சென்
றிணையற்ற தாக்கிடுவீர்-நீர்
அர்ப்பணம் செய்திடுவீர் அந்த மன்றத்தின்
ஆணைக்குயிர் பொருள்கள்-அதன்
ஆணைக்குயிர் பொருள்கள்

கெட்ட நெடுங்கதை கட்டுவதும் வெறும்
கீர்த்திக்குப் பேசுவதும்-வெறும்
கீர்த்திக்குப் பேசுவதும்-இனி
முட்டுந் தடையின்றி மன்றத்தின் வேகத்தில்
மூச்சை நடத்திடடா-உன்
மூச்சை நடத்திடடா.

கொட்டும் பறைவாய்மை முற்றும் ஓரே வழிக்
கோலி முழக்குவதால்-நன்கு
கோலி முழக்குவதால்-திசை
எட்டும் நமக்குள்ள கீர்த்தி விரிந்திடும்
இன்பம் நிலைத்துவிடும்-நமக்
கின்பம் நிலைத்து விடும்.

இத்தனை கோடி யிளம்புங்கள் விடும்
எண்ணம் பெறாம் பெரும்வேல்-அவை
எண்ணம் பெறாம் பெரும்வேல் -அவை
அத்தனையும் குறிவைத் தெறியத் தரும்
யுத்த களம்புகல்வேன் ஒரு
யுத்த களம்புகல்வேன்-அது

சத்திய மன்றிச் மூசக்கிய வாவகை
தாயருளாகு மன்றம்-அது
தாயருளாகு மன்றம்-அந்த
உத்தம மன்றினை வாழ்த்திடுவீர் அதை
ஓங்கப் புரிந்திடுவீர் வெற்றி
ஓங்கப் புரிந்திடுவீர்.

'தேச சேவகன்' வெளிவந்த காலத்திலேயே புதுவையில் இருந்து வெளிவந்த மற்றொரு தேசிய இதழான 'ஆத்ம சக்தி'யிலும் பாரதிதாசனின் தேசிய கவிதைகள் வெளிவந்தன. காந்திய இயக்கம் பரவத் தொடங்கியக் காலத்தில், ''பாரத மாதா நவரத்தின மாலை'' 'வாழ்க நீ எம்மான்' முதலானப் பாடல்களில் காந்தியடிகளின் புதிய வரலாற்றுப் பாத்திரத்தை வரவேற்றுப் பாடிய பாரதியார் வழியில் பாரதிதாசனும், காந்தி இயக்கம் பரவிடக் கவிதையாத்துள்ளார். 1928 சூலை1-ம் தேதி 'ஆத்ம சக்தி' இதழில் 'ஏடுகள் (பத்திரிகைகள்) வாழ்க!'' என்னும் கவிதையின் இறுதியில் ''ஏடெல்லாம்

காந்தி இயக்கம் பரப்பிடுங்கள்'' என்று முத்தாய்ப்பாகக் கூறியுள்ளார், பாரதிதாசன். இதே இதழில் ''தேவி அனுப்பிவிட்டாள், அந்தத் திருவருள், தாள் ஆவி யொடு காந்தி அவதாரம் கண்டிடுங்கள்'' என்றும் காந்தியடிகளைப் போற்றிப் பாடியுள்ளார். ''மனிதரில் மிக்கோன் காந்தி மகாத்மா'*, ''தனக்கென அன்றிச் சகத்துக்கே வாழும் வீரன்'' என்றும் பாரதி தாசன் காந்தியடிகளை 1923-இல் போற்றியுள் ளார். *

17. 9. 1933 முதல் 27. 1. 1935 வரையில் வெளிவந்த '**மணிக்கொடி**' என்னும் தமிழ்ப் படைப்பிலக்கியப் புத்தெழுச்சியின் விடிவெள்ளியாக விளங்கிய தேசிய இதழிலும் பாரதிதாசனின் பதினான்கு கவிதைகள் வெளி வந்துள்ளன. பாரதி வழியில் பீடுநடை போட்ட 'மணிக்கொடி'யின் சாதனைகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் பின் வரும் கருத்தும் பாரதிதாசனை பாரதியார் அடையாளங் காட்டியதைச் சுட்டிக் காட்டு கின்றது.

''பாரதி நமக்குக் கைகாட்டி விட்டுப் போன பாரதி தாசனை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்த ஒன்றையே ''மணிக்கொடி'' தனது பெரிய சாதனையாகக் கருதிப் பெருமைப்பட முடியும்'' **

மேலும் இது குறித்து எழுதப்பட்டதாவது: ''பாரதி என்ற பெயருடன் தொடங்கிய தமிழ்க் கவிதை வெள்ளப்

---

* முனைவர் இரா. இளவரசின் முற்கூறிய நூல்; பக். 1

** மணிக் கொடி காலம்-1980-ஆசிரியர், பி. எஸ். ராமையா ப. 57

பெருக்கு பாரதிதாசன் என்ற பெயருடன் மேலும் தொடர்ந்துபாய்ந்துகொண்டிருக்கிறது என்ற உண்மையை தமிழ்ப்புலவர்கள் அறிய வழி செய்தது. மெய்தான்''

மணிக்கொடி கவிதைகளில் ஒன்றான பாரதிதாசனுடைய 'வேண்டுமடி எப்போதும் விடுதலை- பிறந்த வகை'' என்னும் கவிதையில், பாடல் பிறந்தச் சூழலை அறுபத்தாறு வரிகளில் விளக்கமாகத் தந்துள்ளார்.*

பாடல் பிறக்கும் சூழலை அறிவதும் திறனாய்வு நெறிக்குரியதாகும். ''கொடைத் தமிழன்'' என்னும் தலைப்பில் 'மணிக்கொடி'யில் வெளிவந்த பாரதிதாசன் கவிதை பின் வருமாறு தொடங்கியது.

''திங்கள் கதிர் உள்ளமட்டும் கீர்த்தியுண்டு
செவி பெற்ற பாக்கியத்தால் ஓங்குன் பாட்டில்
பொங்கிவரும் சுவையனைத்தும் உண்ணுகின்றோம்
சிங்கமென்று நீயுரைத்தாய் தமிழர் தம்மை
செய்கையிலே வானுயர்ந்தாய் தமிழா! உன்னை
எங்குலத்து வீரனென நாங்கள் ஏத்தும்
இசையுனக்குக் கேட்பதுண்டோ வானிலாங்கே''

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்

தம்மை சுதேச மித்தரனில் அறிமுகப் படுத்த பாரதி ஆண்ட ''ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலம'' என்னும் சொற்றொடரையே தமது கவிதை ஏட்டின் பெயராகக் கொண்டார், பாரதிததசன். தமிழில் வெளி வந்த முதல் கவிதை ஏடான ''ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்'' புதுவையில் இருந்து மாதா இதழாக

* மணிக்கொடி- 1934, ஜனவரி 21 ப. 13

வெளிவந்தது. 'தேசியம் பாடுக' என்பதே **'கவிதா மண்டலத்தின் குறிக்கோள்களுள் ஒன்றெனக் குயில் மாத இதழில் (7-1-1948இல்)** குறிப்பிட்டுள்ளார், பாரதிதாசன்.

புதுச்சேரி யுவ வருஷம், வைகாசி மாதம் 1935-இல் புத்தகம்—1. வெளியீடு—3 இல் வெளிவந்த, 'ஸ்ரீ சுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம்' இதழில், **''தமிழ்க் கவிஞர்களே!''** என்று விளித்து வெளிவந்து வேண்டுகோளில் இரண்டாவதாக அமைந்துள்ள பின் வரும் பகுதி பாரதி பரம்பரை வளர்ச்சியை அவாவியது.

''எளிய நடையில், புதிய வகையில் சுவை ஒழுகும்படி கவிதை தந்து உதவிய ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரைப் போல் நூற்றுக் கணக்கான பாரதிகள் நமது கவிதா மண்டலத்தில் தோன்றி மிளிர வேண்டும்.''

பாரதியாரின் வெளிவராதப் பாடலையும் இந்த இதழ் வெளியிட்டது. ''இப்பாட்டு இது வரையில் வெளி வராதது*'' என்னும் குறிப்புடன் **''காலனுக்குரைத்தல்''** எனும் பாடல் வெளியிடப்பட்டது.

பத்திரிகையின் சந்தாதாரராக சேர விரும்புவோரை ஊக்கமூட்ட பாரதிநூல்களை இலவசமாக வழங்கியது, இந்த இதழ்.

பாரதி புகழ்பாடும் பாடல்களையும் இந்த இதழ் வெளியிட்டு வந்தது. பாரதி முழக்கம் செய்து வந்த தோழர் ஜீவானந்தம் அவர்களின் **''பாரதி கீதம்''** 1935, வைகாசி இதழில் வெளிவந்தது.

பாரதிதாசனின் ''கதர் இராட்டினப்பாட்டு'' என்னும் சிறு நூலைத்திறனாய்வு செய்துள்ள முனைவர்

இரா. இளவரசு, ''சுப்பிரமணிய பாரதி கவிதா மண்ட டலத்தைச் சேர்ந்தவர் பாரதி தாசன்' என்பதைப் மெய்ப் பிக்கும் வகையில் பாரதிப் புலவரின் தாக்கத்தைப் பாட்டுக் களில் காண முடிகின்றது'' என்பதைத் தக்கச் சான்று களுடன் விளக்கியுள்ளார்.

பாரதி கீத மண்டலம்

பாரதியார் பாடல்களை மனம் போனவாறு ராகத்தை அமைத்துப்பாடி ரசம்-பாவம் பேதமுற்று பாடல்களின் பொருட் சிதைவு ஏற்படாமல் தவிர்க்க தக்க முறையில் பயிற்சி அளிக்க புதுச்சேரியில் 3-12-1936-ல் ''பாரதி கீத மண்டலம்'' என்னும் பெயரில் ஓர் அமைப்பு தொடங்கப் பெற்றது. ''ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்'' ஸ்ரீ சமரச ஞான சங்கீத சபை இவற்றின் ஆதரவில் தொடங்கப் பெற்ற இந்த அமைப்பு பாரதியார் பாடல் களை நல்ல முறையில் பாடக்கூடியத் தொண்டர்களை உருவாக்கத் திட்டமிட்டது. இதற்காக எல்லாவித வாத் தியங்களும் இலவசமாகப் பயிலவும் ஏற்பாடாகியிருந்தது. இந்தப் பயிற்சி பாரதிதாசன் மேற்பார்வையில் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.*

பாரதிதாசன். கர்நாடக இசையில் ஈடுபாடு மிக்கவர்; தியாகய்யரின் தெலுங்கு கீர்த்தனைகள் சிலவற்றை 'கவித மண்டலம் இதழில் மொழி பெயர்த்து வெளியிட் டுள்ளார்.

பாரதி பாடல்களை இசையுடன் பாடுவதில் வல்ல ரான, பாரதிதாசன், பாரதியாரை முதன் முதலில்

---

* ஊழியன், மாத இதழ் -காரைக்குடி 18-12-1936 —பக். 20

சந்தித்தபொழுது ''வீர சுதந்திரம் வேண்டி நின்றார்'' ''தொன்று நிகழ்ந்ததனைத்தும்'' எனும் பாடல்களை இன்னிசையுடன் பாடினார் என்பதும் நினைவிற்குரியது.

மகாகவி பாரதியார்

'பாரதியார், மகாகவியா?' என்னும் இலக்கிய விவாதம் இருபெரும் பாரதி அன்பர்களிடையே துரதிர்ஷ்ட வசமாக 1935-இல் நிகழ்ந்து 'பழங்கனவாய்' போய் விட்டது. வ. ரா. வும், 'கல்கி'யும் பாரதி புகழ் பரப்பும் அருந்தொண்டில் திளைத்தவர்கள்.

1930-இல் வ. ரா., தேசபக்தர் என்னும் தகுதியில் அலிபுரம் சிறைக் கைதியாக சில மாதங்கள் இருந்தார். அங்கும் அவருடைய எழுத்துப் பணி தொடர்ந்தது. ஆங்கிலக் கவிஞர்களில் சிலர், பண்டைய இந்தியக் கவிஞர்களில் தமிழ்க் கவிஞர்கள் உட்பட சிலரைப் பற்றியத் தமது இலக்கிய விமர்சனத்தை நாள்தோறும் தேதியிட்டு ஒரு குறிப்பேட்டில் (நோட்புக்) ''What is Poetry?'' என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதினார். ''V. Rama swamy Aiyangar'' என்று கையெழுத்திட்டதுடன் தமது சிறைக் கைதி எண்ணான 1557 யையும் குறிப்பிட்டார். சுமார் ஐம்பத்தாறு பக்கங்களைக் கொண்டது, ''What Is Poetry''* இதில் பாரதியாரைப் பற்றி பின் வரும் ஆய்வுக் குறிப்பு எழுதப்பட்டிருந்தது.

'' I have an idea of giving a fuller Picture and criticism of Bharati's mighty genius and works. Bharati is a strange but sweet Combination of Kamban, Shelly aod Andal.''

''பாரதியின் மகத்தான மேதா விலாசத்தையும், அவருடைய படைப்புகளைப் பற்றி திறனாய்வுடன் முழுமையாக எடுத்துக் காட்டவேண்டும் எனும் எண்ணம் உள்ளது. கம்பன், கீட்ஸ், ஷெல்லி, ஆண்டாள் ஆகியோ ரின் வியப்பிற்குரிய ஆனால் இனிமையானக் கலவையாகத் திகழ்பவர், பாரதி.'' இவ்வாறு வ.ரா. எழுதினார்.

வ.ரா. வின் இந்தக் கையெழுத்துப் பிரதி வ. ரா. வின் மிக நெருங்கிய நண்பர்களாலும் அறியப்படாமல் இருந்தது. 12-9-1980-இல் இந்நூலாசிரியர், காலஞ்சென்ற திருமதி புவனேசுவரி வ. ரா. வீட்டில் பழைய 'மணிக் கொடி' இதழ்களைக் காணச் சென்றபொழுது, வ. ரா. வின் இந்தக் கையெழுத்துப் பிரதியை அங்கிருந்த புவனேஸ்வரி வ. ரா. வின் உறவினர் சத்யநாராயணா உதவியுடன் கண்டெடுத்தார். இந்தப் 'புதையல்' பற்றியச் செய்தியை வ. ரா. வின் யாத்தத் தோழர் பெ. கோ. சுந்தரராஜன் 'சிட்டி'யின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இந்நூலாசிரியரால் பிரதி யெடுக்கப்பட்டு, அதன் பெரும் பகுதி 'சிட்டி'யின் குறிப்புரையுடன் சென்னை 'இந்தியன் ரெவ்யூ' என்னும் மாதஇதழில் 1982 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் வெளியிடப் பட்டது. இந்தக் கையெழுத்துப் பிரதி முழுமையாகத் தனி வெளியீடாக இதுவரை வெளிவிரவில்லை என்பதும் வேதனைக்குரியது.

வ.ரா., பாரதியாரிடம் கொண்டிருந்த பெருமதிப்பை வெளியிட்டுள்ளதைப் போன்று 'கல்கி' யும் தமது குருபக்தியை 1931 இல் வெளியிட்டுள்ளார். 'கல்கி', பாரதியார் பாடல்களை இளம் வயதிலேயே பொதுமேடைகளில் பாடியுள்ளார். 9 9.1931 இல் வெளிவந்த ''சுதந்திரச் சங்கு'' என்னும் புகழ்பூத்த

தேசிய இதழில் 'கல்கி' யின் ஓரு கடிதம், பின்வருமாறு, வெளியிடப்பட்டது.

''பாரதியாரை நான் கண்ணால் பார்த்ததில்லை. ஆனால் அவரையே எனது பரம குருநாதராகக் கொண்டிருக்கின்றேன். எனக்கு தேசபக்தி ஊட்டியவர் பாரதியார். தாய்மொழிப்பற்றை அருளியவர் பாரதியார். கவிதையின்பம் துய்க்கும் ஆற்றலைஅளித்தவர் பாரதியார். ரசிகர்களின் நட்பாகிய பெரும் பாக்கியத்தைத் தந்தவர், பாரதியார். என்னைப் போன்ற பரமானந்த சிஷ்யர்கள் தற்போது பாரதியாருக்குத் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்காக இருக்கின்றனர்.''

ஷேக்ஸ்பியர், ஷெல்லி, தாகூர் முதலானப் பெருங் கவிஞர்களைக் காட்டிலும் பாரதியார் 'மகா கவி' யாக உயர்ந்து நிற்கிறார் என்று வ.ரா. பேசியதை விவாதத் திற்கு உட்படுத்திய, 'நெல்லை நேசன்' என்ற புனை பெயரில் மற்றொரு பாரதி அன்பரான பி.ஸ்ரீ. எழுதப் போக, அதைத் தொடர்ந்து ஆனந்த விகடன் ஆசிரியராக விருந்த ரா. கிருஷ்ண மூர்த்தி ஆதரித்து எழுதினார். இந்த விவாதத்தில் 'மணிக்கொடி' எழுத்தாளர்களான 'கு.ப.ரா' வும். 'சிட்டி' யும் வ. ரா. வை ஆதரித்து எழுத ''விவாதம்'' கனன்றது. *

கு. பா. ராஜகோபாலன், பெ. கோ. சுந்தரராஜன் ''சிட்டி'', ''மகாகவி'' கட்சியில் வ.ரா.வின் முடிவை நிறுவத் தொடங்கினர். கு.ப.ரா.வும், 'சிட்டி' யும் இணைந்து எழுதிய ''கண்ணன் என் கவி'' 1937 இல்

---

* இதன் விவரத்தை இந்நூலாசிரியர் தொகுத்த ''பாரதி புகழ் பரப்பிய முன்னோடிகள்'' (1983) என்னும் நூலில் காண்க.

வெளிவந்தது. 'மகா கவியா' எனும் விவாதத்தில் பாரதியியலுக்கு புத்திலக்கியம் கிடைத்தது.

இந்த 'விவாதத்தில்' பாரதிதாசன் வ.ரா.வின் கருத்தை ஆதரித்தும், 'கல்கி'யின் கருத்தை எதிர்த்தும், ''**மகாகவி பாரதியார்**'' என்னும் கவிதையை தமது 'ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார் கவிதா மண்டல'த்தில் பின்வருமாறு வெளியிட்டார்.

பாரதியார் உலக கவி! அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்
ஒருருக்கு ஒருநாட்டுக்கு உரியதான
ஓட்டைச் சாண்நினைப் புடைய ரல்லர்-மற்றும்
வீரர் அவர்! மக்களிலே மேல்கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளிவிட வேண்டும் என்பார்
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க்கின்ற
செம்மை நலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்
வையத்து மாக்கவிஞர் மறைந்து போனார்
வைதிகர்க்குப் பாரதியார் பகைவரேனும்
செய்வதென்ன? மேலுக்குப் புகழ்ந்தே வந்தார்!
சிலநாட்கள் போகட்டும் என இருந்தார்
உய்யும் வழி கெடாதிருக்க மெதுவாய் இந்நாள்
'உலககவி அல்ல அவர்' எனத் தொடங்கி
ஐயர் கவிதைக்கு இழுக்கும் கற்பிக்கின்றார்
அழகாய் முடிச்சவிழ்த்தால் விடுவார் உண்டோ?

இந்தக் கவிதை, பாரதிதாசன் கவிதைத் தொகுப்பில் வெளிவந்த பொழுது பின்வரும் அடிக் குறிப்பு சேர்க்கப் பட்டது.

''இது அந்நாளில் ஆனந்த விகடனில் 'ரா. கி' யால் பாரதி உலக கவியல்ல என்றும், அவர் பாடலில் வெறுக்கத் தக்கன உள்ளன என்றும் எழுதியதற்கு மறுப்பாக எழுதப்பட்டது. 'கல்கி' யை மட்டுமன்று தமத திராவிட இயக்கத் தோழர்களில் சிலர் பாரதி யாரைசாதி இனவாதங்களின் கண்ணோட்டத்தில் தாக்கிய தையும் கண்டனம் செய்தவர் பாரதிதாசன் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

வ.ரா. - கல்கி கருத்துப் போரில், கல்கியின் எதிர்வாதங்களில் எங்கும்வைதிகர் ஆதரவு உணர்ச்சியோ, சாதி உணர்ச்சியோ அடியோடு இல்லை என்பதைக் கருத்தில் நிறுத்த வேண்டும். 'மகாகவி' இலக்கிய விவாதம், 'தனிப்பட்ட பொறாமைப் பகையால்' மூண் டெழுவில்லை என்பதையும் பாரதி ஆய்வியல் முன்னோடி ரா.அ. பத்பநாபன் கூறியுள்ளார். *

'மணிகொடி காலம்' என்னும் நூலில், நூலாசிரி யா பி.எஸ்.ராமையா, கல்கியிடம் பாரதியார், மகாகவி அல்லர் எனும் கருத்துத் தோனற 'ரசிகமணி*' டி.கே.சி. இலக்கிய வட்டத்தின் சூழல் காரணமாகும் என்று குறிபபிட்டுள்ளாா.**

இந்த விவாதத்தை கருத்தில் கொண்டு பிற்காலத்தில் 194.-இல் வ.ரா. மணி விழாவை முன் நின்று நடத்தி, மணி விழா மலரைத் தயாரித்து, ''வ. ரா. ஒரு. சக்தி'' என்னும் கட்டுரையில கல்கி, குறிப்பிட்டுள்ள கருத்து ''மகாகவி விவாதத்தை'' மறக்கப்படவேண்டிய பழங்கனவாகச் செய்தது.

---

* குமரிமலர், மாத இதழ் ஆசிரியர், ஏ.கே.செட்டியார், ஆகஸ்ட், 1977-பக்.50

** மணிக்கொடி காலம்-1980-பக். 72-73

''அவர் தமிழ் நாட்டுக்குச் செய்திருக்கும் சேவைகளில் எல்லாம் மிகச் சிறந்தது மகாகவி பாரதியாரைப் பற்றி அவருடைய இடைவிடாதப் பிரசாரமாகும்.''*

வ. ரா வின் ''மகாகவி பாரதியார்'' 1944-இல் புகழ் பெற்ற சக்தி காரியாலயத்தாரால் ('சக்தி' வை. கோவிந்தன்) வெளியிடப்பட்டது.

ஈடு இணையற்ற பாரதி புகழ்பாடும் கவிதை

பாரதி புகழ்பாடும் கவிதைகள் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை முதலான பலரால் இயற்றப்பட்டு, அவை இன்னும் தொகுக்கப்பட்டு தனி நூலாக வெளி வராதிருந்தாலும் பாவேந்தர் பாரதிதாசன் கவிதை இமயத்தின் எவரெஸ்ட் சிகரமாக, ஈடு இணையற்று, 'வானம் அளந்து அனைத்து அளந்திடும்' வண்ணம் திகழ்கின்றது.

செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக்குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடு-துயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றாம் கவிதையின் புதையல்
திறம் பாடவந்த மறவன்; புதிய
அறம் பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து!
மண்டு மதங்கள் அண்டா நெருப்பவன்;
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்

* அழுத்தக்குறியீடு, இந் நூலாசிரியருடையது.

என்னென்று சொல்வேன் ! என்னென்று
சொல்வேன் !

தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
தமிழ், பாரதியால் தகுதி பெற்றதும்.

பாரதிதாசன், திராவிட இயக்கக் கவிஞராக போர் முரசு கொட்டியக்காலத்தில் தேசிய இயக்கத்தினருள் பலர் பாவேந்தரின் பாரதி நெஞ்சத்துடிப்பைச் செவி மடுத்தார் இல்லை. இதனால், இழப்பு பாரதியியல் ஆய்விற்குத் தான், பாவேந்தருக்கு இல்லை. கட்சி எல்லையைக் கடந்து பாரதி புகழ்பாடியவர் பாரதிதாசன்.

முதல் பாரதி திறனாய்வாளரான தமிழ்ப் பெரும் புலவர்

பாரதியாரை அவருடைய சமகாலத்தமிழ்ப்புலவர்கள் சிலர் பாராட்டியதுண்டு. ஆனால் மகாகவி யெனப் போற்றித் திறனாய்வு செய்த முதல் பாரதி திறனாய்வாளர் சுவாமி விபுலானந்தர் (1892-1947), இவர் ஆங்கிலம் விஞ்ஞானக் கல்வியில் தேர்ச்சி பெற்றதுடன் தமிழ்ப் பெரும் புலவராகவும் சிறப்பெய்தியவர். இலங்கை மட்டக் களப்பைச் சார்ந்த பண்டிதமயில்வாகனர். இராம கிருஷ்ண மிஷனில் சேர்ந்து சுவாமி விபுலானந்தர் எனும் துறவிப்பெயரைப் பெற்றார். 1916-இல் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வில் தேறிய முதல் இலங்கைத் தமிழர் எனும் சிறப்பிற்கும் உரியவர். இவருடையத் தமிழ்ப் பெரும் புலமை இயல், இசை, நாடகத் துறைகளில் பல படைப்புகளைப் படைத்துள்ளது. 'முத் தமிழ் வித்தகர்,' என்றும் பாராட்டப்படுபவர். இவருடைய 'யாழ் நூல்' தன்னேரில்லாதது. இத்தகையப் பல்வேறு சிறப்புகளைக் கொண்ட சுவாமி விபுலானந்தர் 1925-லேயே பாரதி புகழ் பரப்பிய முன்னோடியாகத் திகழ்ந்தார்.

''ஆழ்வார்களுடைய பிரபந்தங்களைப் பொறுக்கி எடுத்துப் புகழ் பெறும்படி செய்த எம்பெருமானார் போல் பாரதியாருடைய கவிதையை எடுத்துக் காட்ட மனிதர்கள் இல்லையே'' என வ. வே. சு. ஐயர் தமது புதுச்சேரி வாழ்க்கையில் (1910-1918) வேதனைப்பட்டதை மாற்றி

யமைத்து பாரதியியலுக்கு வளம் சேர்த்தவர் சுவாமி விபுலானந்தர்.

மகாகவியின் பாடல்களை, ''பாரதமாதா, கண்ணன், பராசக்தி, பாரதவீரன், பாரத மக்கள், குமரவேள்'' என்று ஆறு நோக்குகளில் வகைப் படுத்தித் திறனாய்வு செய்தவர், சுவாமி விபுலானந்தர்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, ஆன்மிக நோக்கு ஆகியவற்றில் சுவாமி விபுலானந்தர், பாரதியாருடன் ஒத்திசைவு கொண்டவர்.

தமிழ்ப் புலமையில், ''ஸ்வதேச பக்தி'' என்னும் ''புதிய நெருப்பு'' கனன்று ஒளிவீச வேண்டும் என்றும், ''கல்வித் தாய்க்கு மட்டும்'' தொண்டு புரிவோர், ''பூமித்தாய்க்கும்'' தொண்டு புரிய முன்வர வேண்டும் என்றும் 1906-இல் பாரதியார் அவாவி நின்று எதிர்பார்த்ததை நிறைவு செய்தவர் சுவாமி விபுலானந்தர்,

பாரதியார் மறைவிற்குப் பிறகு ஓராண்டு முடிய சென்னை இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்த பண்டித மயில்வாகனன். சுவாமி விபுலானந்தராக ஏற்றம் பெற்றக் காலத்தில் பாரதியைக் கற்றறியும் வாய்ப்பைப் பெற்றிருக்கக்கூடும்.

1925-இல் இலங்கையில் திருகோணமலையில் இராமகிருஷ்ணா மிஷனை அமைத்தக் காலத்திலேயே, பாரதியார் புகழ் பரப்பும் பணியையும் தொடக்கி வைத்தார் சுவாமி விபுலானந்தர். இந்த ஆண்டில் திருக்கோண மலை இந்து கல்லூரி மாணவர்களை, பாரதியார் பாடல்களைப் படிக்கத் தூண்டினார்.

1925 ஏப்ரல் 28-இல் இலங்கை கீரி மலையில் நடைபெற்ற மாணவர் மாநாட்டுக் கருத்தரங்கில்

''தேசிய இலக்கிய மறுமலர்ச்சி'' எனும் தலைப்பில் பேருரையாற்றியபொழுது, அந்த மறுமலர்ச்சிக்கு பூபாளம் பாடிய மகாகவி பாரதியார் கவிதையை அன்றைய இலங்கைத் தமிழர்களிடப் பரப்பினார், சுவாமி விபுலானந்தர். *

இலங்கை கொழும்பு நகரில் விவேகானந்த சபையின் சார்பில் 1925 இல் குரோதன ஆண்டு கார்த்திகையில் வெளிவரத் தொடங்கிய ''விவேகானந்தன்'' என்னும் மாத இதழின் ஆசிரியரானார், சுவாமி விபுலானந்தர். இந்த இதழில் பாரதியார் கவிதையை ஆய்வு செய்துள் ளார், சுவாமி விபுலானந்தர்.

1925ஆம் ஆண்டு ஆவணி மாத இதழில் விவேகானந்தன் ''**ஆசிரியர்** உள்ளக்கிடக்கை'' என்னும் கட்டுரையில், இந்து மதத்தின் வரைவிலக்கணம் பற்றி கூறுமிடத் தில், பாரகூயார் காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தை வாழ்த்திப் பாடியக் கவிதையில் இருந்து மூன்று பாடல்களை மேற்கோள் காட்டினார். இவ்விடத்தில், ''கவிவாணரும் உத்தம தேசாபிமானியுமாகிய சுப்பிர மணிய பாரதியார் இவ்வுண்மையை வற்புறுத்தி .., இந்து மதத்துக்குக்கோர் வரைவிலக்கணங் கூறுகின்றார்'' என்று சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். எடுத்தாண்ட மூன்று பாடல்களின் பொழிப்புரையையும் கட்டுரையில் வழங்கியுள்ளார்.

---

* ''பாரதியும் இலங்கையும்'' -பேராசிரியர் சி. தில்லைநாதன். பாரதி பன்முகப் பார்வை, 1984, தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு கொழும்பு-பக். 189

1926-இல் 'பாரதி பாடல்' என்னும் தலைப்பில் இரு பகுதிகளாக வெளிவந்தத் திறனாய்வுக் கட்டுரை, சுவாமி விபுலானந்தரை பாரதியின் முதல் திறனாய்வாளர் எனும் பெருந் தகுதிக்கு உரியவராக்குகின்றது. இந்தத் திறனாய்வுக் கட்டுரையின் முதல் பகுதி ஆனி மாத இதழிலும், இரண்டாம் பகுதி, புரட்டாசி-ஐப்பாசி இதழிலும் வெளிவந்தது.

தமிழ்ப் பெரும்புலவர் விபுலானந்தர், பாரதியார் கவிதைகளை சங்க இலக்கிய மரபில் வைத்துப் போற்றியுள்ளார். இதன் ஒரு பகுதி வருமாறு:

''சங்கச் செய்யுட்களுள்ளே செறிந்து கிடக்கும் காதலின்பத்தையும் வீரமேம்பாட்டையும் யாவரு மெளிதிலுணர்ந்து கொள்ளற் பொருட்டு இலகுவான நடையிலமைந்த இன்னிசைத் தமிழ் பாடல்களாற் சொல்ல வல்ல கவிவாணர், தமிழ்நாட்டுப் பேருப காரிகளாவர். இத்தகைய கவிவாணருள் முதல்வைத் தெண்ணப்படும் தகைமை சான்றவர் ஸ்ரீமான் சுப்பிர மணிய பாரதியார். தமிழ் செய்த தவப் பயனாய் வந்த பாரதியார் தமது இன்னிசைப் பாடல்களினால் தமிழ் நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் அளத்தற்கரிய பேருபகாரத் தைச் செய்திருக்கின்றார்.''

''**தமிழ் செய்த தவப்பயனாய் வந்த**'' என்று 1926 இல் பாரதியாரைக் குறிப்பிட்ட சுவாமி விபுலானந்தர் 1931 இல் அக்டோபர் 4 இல் வெளிவந்த 'இந்தியா' என்னும் வாரப் பதிப்பில்(ஆசிரியர்; ஜே.எஸ். கண்ணப் பர்) ஆங்கிலப் பேராசிரியர் சு. விசுவநாதனுடன் இணைந்து எழுதிய ''பாரதியார் கவிநயம்'' என்னும் கட்டுரையில் தமிழ் செய்த ஓராயிர வருடத் தவம் பின்வருமாறு பாரதியார் கவிதையொன்றின் வாயிலாக வருணிக்கப்பட்டுள்ளது.

''இளங்கோவடிகள், கம்பர் என்னும் மலர்களைத் தந்த தெய்வத்தரு ஓராயிர வருடம் ஒய்ந்து கிடந்த பின்னர்' வாராது வந்த செல்வத்தைப் போல பாரதியாரென்னும் மலரை யளித்திருக்கின்றது.''*

'பாரதி பாடல்' என்னும் ஆய்வுக் கட்டுரை மிக நீண்ட காலமாக இலங்கையிலும், தமிழகத்திலும் பாரதியியல் ஆய்வுலகத்தால் அறியப் படாமல் இருந்தது. இந்தக் கட்டுரை ஐம்பத்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக **'அறிஞர்கள் பார்வையில், பாரதி'** என்னும் தொகுப்பு நூலில் 1982-இல் வெளி வந்தது.**

'பாரதி பாடல்' ஆய்வில் தாம் எடுத்துக் கொண்ட பொருட்பாகுபாடுகளைப் பற்றி சுவாமி விபுலானந்தர் எழுதியதாவது :

''பாரதியாருடைய பாடல்களைப் பொருள் நோக்கி ஆறுவகையாகப் பிரித்துக் கொள்ளலாம். பாரத மாதா, கண்ணன், பராசக்தி, பாரத வீரர், பாரத மக்கள், குமர வேள் ஆகிய பாட்டுடைத் தலைவரைப் பரவுகின்ற இன்னிசைப் பாடல்கள் சிலவற்றை இம்முறையே வைத்து ஆராய்வோம்.''

கண்ணன் பாட்டு

இந்த ஆய்வில் கண்ணன் பாட்டை விரிவாக ஆய்ந்துள்ளார், சுவாமி விபுலானந்தர். ''நெஞ்சினையுருக்கும்

---

* பாரதியார் கவிநயம்—தொகுப்பு, ரா அ. பத்மநாபன்—1982- பக்:8.

** தொகுப்பாசிரியர், பெ. சு.மணி-வெளியீடு மணிவாசகர் நூலகம், சென்னை.

நீர்மை சான்ற கண்ணன் பாட்டு'' என்பது அவருடைய வாக்கு.

சுவாமி விபுலானந்தரின் 'கண்ணன் பாட்டு,' அளப்பரிய ஈடுபாட்டைப் புரிந்துக் கொள்ள மறைந்த பேரறிஞர் கலாநிதி க. கைலாசபதியின் பின்வரும் கருத்து உதவுகின்றது.

''கற்றறிந்தாருக்கு ஏற்றது **கலித்தொகை** மாத்திரமன்றி **கண்ணன் பாட்டும்** என்று துணிந்து கூறியவர் எமது அடிகளார்.'' *

'கண்ணன் பாட்டு' கவிதை எழிற்சிறப்பின் ஏற்றங்களைப்பற்றியத் திறனாய்வின் சில கருத்துகள், வருமாறு;

(1) நெஞ்சினை யுருக்கும் நீர்மை சான்ற பாரதியாருடைய **கண்ணன்** பாட்டு என்னும் கவிதைத் தொகுதியானது, ஏனையப் பாடல்களைப் போலப் புதிய நடையும் புதிய கருத்துக்களும் நிரம்பியுள்ளது.

(2) கண்ணனைச் சற்குருவாகப் பாடியச் செய்யுள் புதியதொரு சித்தாந்தத்தை நிறுவுவது. வாழுகின்ற ஞான மார்க்கத்தை இச் செய்யுள் நலம்பெறக் கூறும்.

(3) கண்ணனைக் காதலனாகக் கொண்டு பாடிய பாடல்கள் பலவுள. சிருங்காரம், வீபத்ஸம், பயாநகம், அற்புதம், ரௌத்ரம் என்னும் ரஸங்கள்.

---

* ''முத்தமிழ் முனிவரின் ஒப்பியல் நோக்கு''-கட்டுரை கலாநிதி, க. கைலாசபதி - அடிகளார் படிவமலர்-1969 ஆசிரியர், எம். சற்குணம் பக். 79

ஒன்றும் பலவும் பொருந்தி வருகின்ற இச்செய்யுள்கள் கவிச்சுவை நுகரவல்லாருக்குத் தெவிட்டாதாத்தெள்ள முதமாவன.

'கண்ணன் பாட்டு', சுவாமி விபுலானந்தரின் 'நெஞ்சை அள்ளும்' கவிதையாகத் திகழ்ந்ததையும் அறி கின்றோம். மட்டக் களப்பு புனித மைக்கேல் கல்லூரியில் தலைமை ஆசிரியர்கள் மாநாட்டில் மூன்று பேருரைகள் நிகழ்ந்தன், இவற்றுள் சுவாமி விபுலானந்தர் பேருரையும் ஒன்றாகும். தமது பேருரைக்கு அவர் எடுத்துக் கொண்டத் தலைப்பு ''Living Poetry''* - வாழும் கவிதை - என்பதாகும்.

சுவாமி விபுலானந்தர் மேலை நாட்டுக் கவிதைகளையும், சம்சுகிருத, தமிழ்க் கவிதைகளையும் ஆழக்கற்றுணர்ந்தவர். இந்தக் கவிதைக் களஞ்சியத்தில் அவர் தேர்ந்தெடுத்தக் கவிதை பாரதியாரின் ''**கண்ணன் என் காதலன்**'' என்னும கவிதையே யாகும். அவருடைய அன்றைய 'வாழும கவிதை'ப் பேருரையை நேரில் கண்டும் கேட்டும புதிய இலக்கிய அநுபவத்தைப் பெற்ற அறிஞர் க. கணபதிப்பிள்ளை தமது Vipulananda-A Biography, The man and his achivements என்னும்நூலில் (1991) மிக்கச் சுவையூற எழுதியுள்ளார சுவாமி விபுலானந்தர் பேருரையில் பாரதியார் கவிதை இசைக்கப் பட்ட பான்மையையும், சொற்களின உணர்ச்சிகளுக்கு ஏற்ப வன்மையாகவும் மென்மையாகவம், இனிமையாகவும், சந்தநலத்துடனும் அமைந்த பேச்சாற்றலும் நிறைவுற்றிருந்ததை சுவாமி விபுலானந்தரின் நண்பர் கணபதிப் பிள்ளை விதந்தோதியுள்ளார்.

வேறு சில மதிப்பீடுகள்

1, ''தமிழ், தமிழ்த்தாய், செந்தமிழ் நாடு, தாய் மொழி வாழ்த்து'' என்னும் பொருள் பற்றியெழுந்த

செய்யுட்கள் தாய்நாட்டின் மீதும் தாய்மொழியின் மீதும் பாரதியாருக்குள்ள கரைகடந்த அன்பின்றிறத்தைக் காட்டுகின்றன.

2, ''சூர்யஸ்தோமம், அக்னிஸ்தோமம், சோம தேவன் புகழ், யாகப்பாட்டு, வேள்விப் பாட்டு என்றிவை வேத சம்ஹிதைகளின் நடையையும் பொருளையுஞ் சார்ந்து நிற்பன.''

பாரதியார் கவிதைகளில் வேத ரிஷிகள் கவிதையின் தாக்கம் விரிவாக ஆய்வு செய்வதற்குரியது. *

இந்த ஆய்விற்கு ஊக்கம் தரும் வகையில் மேற்கண்ட வாறு சுவாமி விபுலானந்தர் சூத்திரமாகக் கூறியுள்ளது, குறிப்பிடத்தக்கது. பாரதியார் வேதங்களை நன் குணர்ந்து வேதரிஷிகளின் கவிதையில் ஈடுபட்டவர். அவருடைய கவித்திறம் நன்றாக முதிர்ச்சியடைந்த பொழுது, 'காட்சி' முதலிய பாடல்களைப் பாடியிருக்கக் கூடும்.

''சமய அநுபூதியுடன் ஏழைகளிடத்திலும், தாழ்த்தப் பட்டவர்களிடத்திலும் தமக்குள்ள எல்லையற்ற அன்பை இணைத்தார்'' என்று 1932-இல் ஆங்கிலக் கட்டுரையில சுவாமி விபுலானந்தர் பாரதியார் ஆன்மிகப் பார்வையின் தனித்தன்மையைச் சுட்டிக் காட்டியுளளார்.

---

* இத் தலைப்பில் 1994 டிசம்பரில் புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் பெ. சு. மணி ஆற்றிய அறக் கட்டளைச் சொற்பொழிவு, நூலாக வெளிவர வுள்ளது.

4, மேற்சுட்டிய ஆங்கிலக் கட்டுரையில் தொடர்ந்து பாரதியார் கவிதைத் திறனை மதிப்பிட்டுக் கூறியதாவது:

''கொற்றவைக்குரிய பழையத் துதிப் பாடல்களைக் காட்டிலும் (பாரதியாரின்) சக்தித் துதிப்பாடல்கள் உன்னதமானவை. அவருடைய இசைப் பாடல்களின் பரவசமும், தேசபக்திப் பாடல்களின் வீறார்ந்த த்வனியும், அவருடைய மக்கள் அவரிடம் அன்பு கொள்ளச் செய்தன. அவருடைய பாடல்களின் அடிப்படையான, ஆரோக்யமான வாழ்க்கைக் கண்ணோட்டம் உலக நோக்குடையது. மானுடம் முழுவதையும் ஒன்றாகக் காணும் அவருடையக் கருத்துகள், வடக்கையும்—தெற்கையும், மேற்கையும், கிழக்கையும் பிராம்மணர்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும், கற்றாரையும் கல்லாதவரையும் ஆரத் தழுவ நிற்பனவாகும்.'' *

''பழமையில் வேரூன்றிப் புதுமையில் பூத்துக் குலுங்கும் தரு மகாகவி பாரதி'' என்று விபுலானந்தர் கூறுவது வழக்கம் என்று அவருடைய நண்பர் க. கணபதிப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

இராம கிருஷ்ண மிஷன் கல்விக்கூடங்கள் பாடத் திட்டத்தில் பாரதி பாடல்கள்

தமிழ்நாட்டில் பாரதியார் பாடல்களை கல்விக் கூடங்களில் பாடத் திட்டத்தில் சேர்த்திட எவரும் துணிவு காட்ட முடியாத நிலையில் சுவாமி

---

* ''The Development of Religious Thought''- Journal of the Annamalai University—1932.

விபுவானந்தர். இராமகிருஷ்ண மிஷன் பொறுப்பில் இருந்தப் பள்ளிக் கூடங்களில் 1-ஆம் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரையில் அந்தந்தவகுப்பிற்கு ஏற்றவாறு பாரதி பாடல்களைத் தேர்ந்தெடுத்து பாடத்திட்டத்தில் சேர்த்தார். *

சுவாமி விபுலானந்தரின் நண்பர் யாழ்ப்பாணம் கல்வி அதிகாரி தி. சதாசிவ ஐயர் எழுதிய பாட நூல்களின் பாரதி வரலாறும், கவிதைகளும் 1930-களிலேயே இலங்கைப் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களில் சேர்க்கப் பட்டு விட்டன என்று இலங்கை ஆய்வாளர் கோ. சிவபாத சுந்தரம் எழுதியுள்ளது கவனத்திற்குரியது. **

இலங்கைத் தமிழ் அறிஞர்கள் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலும் பாரதியார் கவிதைகளை, தமிழக தமிழ் அறிஞர்கள் சிந்தித்துப் பார்க்காதக் காலத்திலேயே, சேர்ந்து விட்டனர். ''பேராசிரியர் சு. வித்தியானந்தன் 1946ஆம் ஆண்டு முதல் பாரதி கவிதைகள் குறித்தும் பல்கலைக் கழகத்திற் கற்பிக்கலானார். 1949 இல் பலகலைக் கழக முதற் கலைத் தேர்வுக்கும் பாரதியின் பாஞ்சாலி சபதமும் பாட நூலாக்கப்பட்டது'' என்று இலங்கைப் பேராதனைக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன் கூறியுள்ளதும் கவனத்திற்குரியது.

''யான் கண்ட விபுலானந்தர்'' - கட்டுரை-வி.ரி-செல்லத்துரை - அடிகளார் படிவமலர், 1969. பக். 36.37

''இலங்கையில் பாரதி'' - கண்ணன் என் கவி- இரண்டாம் பதிப்பு 1981-ஆசிரியர்கள், கு ப. ராஜ கோபாலன், பெ. கோ. சுந்தராஜன் (சிட்டி) பக். 12.

தமிழ் நாட்டில் 1922-ஆம் ஆண்டில் திருநெல்வேலி 'தாலுகா போர்டு' பள்ளிக் கூடங்களின் பாடத் திட்டத்தில் சில பாரதி பாடல்களைச் சேர்த்ததை அன்றைய சென்னை நீதிக்கட்சிஅரசு அநுமதிக்காததைக் கண்டனம் செய்து சட்ட மன்றத்தில் நாவலர்சத்திய மூர்த்தி பேசினார்.

இலங்கையில் பாரதியார் புகழ் பரப்பிய முன்னோடி-விபுலானந்தர்

எழுத்தாலும் பேச்சாலும் இலங்கையில் பாரதியார் கவிதைத் திறனைப் பரப்புவதைச் சிறந்தத் தமிழ்த் தொண்டாகக் கருதிப் பாடுபட்டவர் சுவாமி விபுலானந்தர்.

கொழும்பில் 1926-இல் ''சுப்பிரமணிய பாரதியும் கவிதைத் திறமையும்'' என்னும் பொருளில் இரண்டு மணி நேரம் சொற்பொழிவாற்றியுள்ளார். ''யாழ்ப் பாணத்தில் முதன்முதற் பொது மேடைகளிற் பாரதியைப் பற்றிப் பேசிய கல்விமான் சுவாமி விபுலானந்தரே'' என்னும் முதற் சிறப்பிற்குரியவரானார், *

மரபு வழிப்பட்டத் தமிழ்ப் பெரும் புலவர்கள் செல்வாக்கு பெற்றிருந்த இலங்கைத் தமிழ்ச் சூழலில் சுவாமி விபுலானந்தர் 1925-லேயே பாரதியை அறிமுகப்

''பாரதியும் இலங்கையும்''- கட்டுரை- பேராசிரியர் சி. தில்லைநாதன்- பாரதியார் பன்முகப் பார்வை, 1984-தேசிய கலை இலக்கியப் பேரவை-கொழும்பு பக். 187

படுத்தியதை மீண்டும் இங்கு நினைவு கூர்வோம். புதுமை உணர்வினால் உந்தப் பெற்ற மரபுவழிக் கல்வியாளரே பாரதியார் கவிதைகளில் ஈடுபாடு கொண்டதை கலாநிதி க. கைலாசபதி சுட்டிக்காட்டியுள்ளார். *

1935-ல் தமிழ் நாட்டில் பாரதியார் 'மகாகவியா' எனும் தேவையற்ற விவாதம் எழுந்ததும், 'வ.ரா.' அவர்கள் தலைமையில் தமிழ் எழுத்தாளர்கள் சிலர் பாரதியாரை மகாகவியே என்று நிறுவியதையும் வரலாற்றில் அறிவோம், ஆனால் **இதற்கு எட்டாண்டுகளுக்கு முன்பாகவே பாரதியாரை மகாகவியாகக் கண்டு பேருரையாற்றிவர் சுவாமி விபுலானந்தர்.**

1927-ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16-ஆம் தேதியன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில், யாழ்ப்பாணம் ஆரிய - திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் சுவாமி விபுலானந்தர் "**மகாகவி பாரதியார்**" என்னும் தலைப்பில் பேருரையாற்றியச் செய்தி யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த 'இந்து சாதனம்' என்னும் இதழில், அக்காலத்தில், வந்துள்ளது. **

1930-களில் இருந்து பாரதியார் எழுத்துகள் இலங்கையில் சிறுதுளிகளாகப் புகத் தொடங்கின என்றும், அறிஞர்கள், படைப்பிலக்கிய எழுத்தாளர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், முடிவாக அரசியல்வாதிகள்

---

* "இலங்கை கண்ட பாரதி"-மல்லிகை-மே, 1982 யாழ்ப்பாணம்- பக். 20

** விபுலானந்த தரிசனம் 1993 - வ. சிவசுப்பிரமணியம் - மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை வெளியீடு - பக். 82.

பாரதியார் எழுத்துகளை கவனிக்கத் தொடங்கினர் என்று கலாநிதி க. கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். *

சுவாமி விபுலானந்தர் பாரதியார் கவிதைகள் முழுவதையும் கவனித்துக் கற்றறிந்தவராக, வேண்டுமிடங்களில் ஒப்பு நோக்கியும் பாரதிவெள்ளப் பெருக்கில் மூழ்கித்திளைத்தவர். ஆம்; அவரைப் பொறுத்தவரையில் "Bharathi's writings began to trickle down" ஆக, கைவாசபதி குறிப்பிட்டவாறு, அமையவில்லை. "பாரதியாரை மிகவும் முற்படப் பாராட்டித் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவர் விபுலானந்தர்"** என்று கைலாசபதி சுட்டிக்காட்டியுள்ளார். பொதுவான இந்தக் குறிப்பை, கருத்தில் கொண்டு இலங்கையில் பாரதியாரை அறிமுகப்படுத்தியக் கல்வியாளர்களில் முதன்மையானவர், முன்னோடி விபுலானந்தர், என்னும் சிறப்புக் குறிப்பையும் கருத்தில் நிறுதத வேண்டும்.

யாழ்ப்பாணத்துச் சுவாமி

பாரதியார், தமது ஞான ஆசிரியர்கள் துதிப்பாக்களில் 'குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்; தேவி பதம் மறவாத தீரஞானி; மங்களஞ்சேர் திருவிழியால் அருளைப் பெய்யும் வானவர் மகான்; யாழ்ப்பாணத்

---

* "The cultural and Linguistic consciousness of the Tamil community in Sri Lanka — Punithavathy Tiruchelvam memorial Lecture - 1982"

** "ஈழத் தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம் — சில குறிப்புகள்"

ஞானபண்டிதம்—கொக்குவில் ஞானபண்டித வித்தியா சாலை வைர விழா மலர் — ஜூன் 1982,

தீசன்'' என்று ஓர் ஞானைசிரியரைப் போற்றுகின்றார். புதுச்சேரியில் பாரதியார் நேர்முகமாக அறிந்துப் பழகியவர்களில் ஒருவர், யாழ்ப்பாணத்துச் சுவாமி. ஆனால், இவர் யார்? என்பதைப் பற்றிக் கண்டறிந்து விவரங்களை வெளிப்படுத்த சுவாமி விபுலானந்தர் முயற்சி எடுத்தாரா? என்பதை அறிய முடியவில்லை. பாரதியார் கவிதையில் **''யாழ்ப்பாணத்தான்'', ''யாழ்ப்பாணத்தீசன்''** எனும் பெயர்கள் சுவாமி விபுலானந்தரின் பார்வைக்கு தப்பியிராது. அவர் காலத்திலேயே முயன்றிருந்தால், அதுவும் சுவாமி விபுலானந்தர் போன்ற தகுதி மிகுதிப் படைத்தவர் முயன்றிருந்தால், யாழ்ப்பணத்துச் சுவாமி பற்றிய 'புதிர்' விடுபட்டிருக்கும். இந்த ஏக்கம் பாரதி ஆய்வாளர் சிலருக்கு உண்டு.

இந்த ஏக்கத்தைப் போக்க முதன் முயற்சி 1961-ல் அ.ந. கந்தசாமி என்னும் இலங்கைத் தமிழ் எழுத்தாளரால் எடுக்கப்பட்டது.* யாழ்ப்பாணம் பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த சுவாமி அருளம்பலம் மோனம் (1878-1942) என்பவரே பாரதி குறிப்பிடும் 'யாழ்ப்பாணத்தீசன்' என்பது வெளிப்பட்டது. இதைப் பகிரங்கப்படுத்தி அங்கீகரிக்க இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 7-5-1963-ல் வியாபாரிமூலையில் ஒரு விழா எடுத்தனர். இவ்விழாவில் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பியும் கலந்துக் கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தத் தேடலின் முடிமணியாக கலாநிதி நா. ஞானகுமாரன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியந்துறை) எழுதிய ''பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்'' (1992) வெளிவந்தது.

---

* ''பாரதியும் இலங்கையும்'' - கட்டுரையாசிரியர் பேராசிரியர் சி. தில்லைநாதன் - பாரதி பன்முகப் பார்வை ப. 186.

இதை வெளியிட்டது, யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் சபையாகும்.

பாரதியார் சமகாலத்தில் யாழ்பாணத்தில் வாழ்ந்த பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை (1872-1929), பாரதியை அறிந்தாரில்லை. இவர், **இதோபதேச கீதரச மஞ்சரி, யாழ்ப்பாண சுவதேசக்கும்மி** எங்கள் **தேசநிலை** ஆகிய நூல்களைப் படைத்திருந்தாலும், பாரதியாரைப் போன்று மகா கவியாக அரசியல் விழிப்புணர்வுடன் மலர வில்லை என்பது இலங்கைத் தமிழ் ஆய்வாளர் கணிப்பு.*

பாரதி ஆய்வு வட்டம் (Bharathi Study cirle)

சுவாமி விபுலானந்தர் இலங்கையில் பாரதியியல் ஆய்விற்கு அடித்தளம் அமைத்ததோடு, இந்தியாவில் தமிழகத்தில் தமிழ்ப் பேராசிரியர்களுக்கு வழிகாட்டியாக **'Bharathi study circle'** என்னும் பாரதி ஆய்வு வட்டத்தை அமைத்தார். அதுவும் பல்கலைக்கழக வளாகத்திற்குள் 1932-ல் அமைத்தார் என்றால் அது போற்றுதலுக்கும். வியப்பிற்கும் உரியதாயிற்று.

1930-ல் காந்தியடிகளின் உப்பு சத்யாக்கிரக இயக்கம் வீறுபெற்றிருந்தது. சென்னை மாகாண பிரிட்டிஷ் அரசின் கடுமையான கண்காணிப்பு மிகுந்திருந்தது. 1933-ல் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவிற்கு அன்றைய சென்னை மாநில ஆளுநர், வந்த சமயத்தில் பேராசிரியர்கள் தங்கள் இல்லங்களில் 'பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடி'யை பறக்கவிட்ட சமயத்தில், சுவாமி விபுலானநதர் மட்டுமே தேசிய இயக்க மூவண்ணக் கொடியை மிக்கத் துணிவுடன் பறக்க விட்டார். காந்தியடிகள், பாரதியார் ஆகியோரை ஒருங்கிணை

---

* பாவலரும் பாரதியும் 1982-கலாநிதி நா. சுப்பிரமணியம்.

ந்து ஆன்மிக, தேசிய, சமூகவுணர்விற்கு ஆக்கம் தேடியவர் சுவாமி விபுலானந்தர். பாரதி ஆய்வு வட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அமைத்தார். அவ் வமயம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரிய ராகப் பணியாற்றினார், சுவாமி விபுலானந்தர்.

பாரதி ஆய்வு வட்டத்தில் பாரதியார் கவிதையைக் குறித்து சுவாமி விபுலானந்தர் தலைமையில் மாணவர்கள் ''தினங்களுக்கு இருமுறை சொற்பொழிவு ஆற்றுவ துண்டு'' என்று அடிகளாரின் மாணவர் பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் 1949-ல் நினைவு கூர்ந்து எழுதி யுள்ளார். பாரதியார் பாடல்களை இசையறிந்தப் புலவரைக்கொண்டு இசையுடன் பாடுவித்தார்'' என்றும் அறிகிறோம்.**

2-2-1932-ல் பாரதி ஆய்வு வட்டத்தின் ஆதரவில் பாரதியார் திருவுருவப்படத்தை நாவலர் எஸ். சத்திய மூர்த்தியைக்கொண்டு திறந்து வைத்தார், சுவாமி விபுலானந்தர். இலங்கையில் திருக்கோணமலை இந்து கல்லூரியில் பாரதி படத்தைப்பார்த்து 'இவர் யார்'? என்று கேட்டவரிடம் ஆவேசமுடன், **''அவர்தாம் கவி அரசன் பாரதி. தமிழகத்தை உய்விக்க வந்த தெய்வம்''** என்று முழங்கினார், சுவாமி விபுலானந்தர். மட்டக்களப்பு அருகில் அமைந்தஅவருடைய ஆச்ரமத்தில் மகாகவி பாரதி யார் திருவுருவப் படத்தை வைத்தார். அந்தப் படத்தை

---

*''தமிழ்ப் பேராசிரியர் விபுலானந்தர்''- பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார்-ஈழமணி விபுலானந்தர் நினைவு மலர்-ப. 21.

** க. கணபதிப் பிள்ளை-அடிகளார் படிவமலர் -ப.46-

இந்நூலாசிரியர் 1993-ல் மட்டக்களப்பு சென்ற பொழுது. இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஜீவனானந்தா அவர்கள் காட்டுவிக்கக் கண்டார்.

பாரதியை பின்பற்ற விடுத்த அழைப்பு

'தமிழரின் சமயச்சிந்தனை வளர்ச்சி' **(The Development of Tamil Religious Thought)** எனும் அரிய ஆய்வுக் கட்டுரையின் முத்தாய்ப்பாக பாரதியாரைக் குறிப்பிட்டு, அவரைப் பின்பற்ற முன் வருமாறு அமைப்பு விடுத்தார், சுவாமி வியுலாந்தர்- அந்த அழைப்பின் வாசகங்கள், வருமாறு:

''புகழார்ந்த நாகரிகத்தை பாரம்பர்யமாகப்பெற்றுள் ளனர் தமிழ் மக்கள். அவர்களுடைய அண்மைக்காவக் கவிஞரான பாரதியார் கண்களைக் கொண்டு உலகத்தைப் பார்க்கட்டும்; குறுகிய உட்குழு மனப்பான்மையிலிருந்தும் அற்ப சமூக சம்பிரதாயங்களில் இருந்தும் விடுபட்டு மேல் நோக்கி எழட்டும்; ஒழுக்கம், அழகு, உண்மை முதலான அனைத்திற்கும் மூலதனமான தெய்வீக உணர் விற்கு அழைத்துச் செல்லும் பாதையில் முன்னேறட்டும்.''

இவ்வாறு பாரதியாரைப் பண்முகப் பார்வையில் போற்றிப் பரவி, பாரதியாரைத் தெளிவாகப் புரிந்துக் கொள்ளப் பாடுபட்ட முதல் தமிழ்ப் பெரும் புலவர் சுவாமி விபுலானந்தர்.

தமிழ் உறவில் பாரதியாரும் வ. உ. சி. யும்

முதல் சந்திப்பில் மலர்ந்தத் தமிழ் உறவு

பாரதியாருடன் 1906-ல் சென்னை திருவல்லிக்கேணியில் தமக்கு ஏற்பட்ட முதல் அறிமுகத்தையும் நட்பையும், வ. உ. சி. தமிழ் உறவாகவே பின்வருமாறு சித்தரித்துள்ளார்.

''பெரும்பாலும் பாரதியாரும் நானும் சிறிது நேரம் தேச காரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்பேச்சு அவரைக் கம்பராகவும் என்னைச் சோழனாகவும் நான் நினைக்கும்படி செய்தது''. இந்த உறவு அவர்கள் உரையாடலின் இறுதியில் ''மாமனும் மருகனும்' எனும்உறவாயிற்று என்று வ.உ.சி.குறிப்பிடுகின்றார். இந்த முதல் சந்திப்பிற்கு முன்பே வ. உ.சி. யின் தகப்பனார், பாரதியை 'அதிபுத்திசாலி என்றும், சிறுபிள்ளையாயிருந்தாலும் தமிழில் சுயமாகப் பாடுவானென்றும்'' வ. உ. சி. யிடம் தெரிவித்துள்ளார். பாரதியாரின் தந்தை சின்னசாமி ஐயரும், வ. உ. சி. யின் தந்தை உலகநாத பிள்ளையும் நண்பர்களாதலால் அவர்கள் புதல்வர்களும் நேர்முக சந்திப்பிற்கு முன்பே ஒருவரையொருவர் பற்றி அறிந்துவைத்திருந்தனர். அவர்கள் முதல் சந்திப்பின் பொழுது. பாரதியாருக்கு வயது 24; வ. உ. சி.க்கு வயது 34.

இவர்கள் இருவரிடையே நிகழ்ந்த அரசியல் உறவு குறித்தச் செய்திகள் வீரயுகக் காப்பியப் படைப்புக்கான அளவு நிறைந்துள்ளன. ஆனால், தமிழ் உறவு குறித்தச் செய்திகள் தனிப்பாடல்களுக்கு உரிய அளவு மிகவும் குறைந்தேயுள்ளன.

வ.உ.சி. நூல்களுக்கு - மதிப்புரை

பாரதியார் வாழ்ந்த காலத்தில் வ. உ. சி. யின் 'மனம் போல் வாழ்வு' 'அகமே புறம்', மெய்யறம் மெய்யறிவு, பாடற்றிரட்டு ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள், 'மனம் போல் வாழ்வு'", ''அகமே புறம்'' எனும் இரு நூல்களுக்கு மட்டும் பாரதியார் மதிப்புரை எழுதியிருக்கின்றார் எனும் செய்தியை ''மெய்யறம்'' நூலில் 'நூலைப்பற்றிய அபிப்பிராயங்கள்' என்று விளம்பரப்படுத்தப் பெற்றுள்ள பக்கங்களில் இருந்து அறிகின்றோம். பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்தக் காலத்தில் இவ்விரு நூல்களின் மதிப்புரைகளை எழுதியுள்ளார். இவற்றை தாமே வெளியிட்டப் பதிப்பில் வ. உ. சி. பயன்படுத்தியுள்ளார். பாரதியார் 'மனம் போல் வாழ்வு' நூலைப்பற்றியத் தமது மதிப்புரையை பின்வருமாறு எழுதியுள்ளார்.

''இதன் முதனூல் எழுதியவர் அன்னிய தேசத்தராயினும் நமது தேசத்து வேதாந்த சாஸ்திரத்தின் உண்மைகளை நன்கு தெளிந்துணர்ந்த அறிஞர். மொழிபெயர்த்தவருடைய மகிமையைப் பற்றி நான் எழுதத் தகுதியுடையவனில்லை. அறிவிலே தெளிவும், நெஞ்சிலே உறுதியும் கொண்டு வாழ்நாளைப் பொருளும் பயனும் உடைதாக்க

தமிழர்களெல்லோரும் இந்தப் புஸ்தகம் ஒன்று வாங்கி எப் போதும் திரும்பத் திரும்பப் படித்து வரவேண்டும்.*''

மேலே 'அன்னிய தேசத்தராயினும்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது, ஜேம்ஸ் ஆலன் (1864-1912) என்னும் ஆங்கி லேயே அறிஞராவார், 'கீழ்நாட்டாரே மெய்ஞானக் கருவூ லம்' என்று ஜேம்ஸ் ஆலன் அடிக்கடி கூறுவதுண்டு என வ. உ. சி, எழுதியுள்ளார். 1905-லேயே ஜேம்ஸ் ஆலன் நூல்களை ஆர்வமுடன் படித்தவர், வ.உ.சி. ''As a man thinketh'' என்னும் ஜேம்ஸ் ஆலன் நூலையே வ,உ.சி. தமது சிறைவாசத்தில் மொழி பெயர்த்தார்.

இந்நூலுக்கு பாரதியார் எழுதிய மதிப்புரையின் ஒரு பகுதிதான் வெளியிடப்பட்டதா? இந்த மதிப்புரை எதில் வந்தது? போன்ற வினாக்களுக்குரிய விடைகள் இன்னமும் தேடலிலே தொடர்கின்றன. இந்த மதிப்புரையில் ''மொழி பெயர்த்தவருடை மகிமையைப் பற்றி நான் எழுதத்தகுதியுடையவனில்லை'' என்று மிகுந்த அடக்கத்துடன் கூறிவிட்டதால் 'மஹிமை'யைப் பற்றி வாசகர்கள் விளங்கிக் கொள்ள வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

'மனம்போல் வாழ்வு', வ. உ. சி. கோயமுத்தூர் சிறைச்சாலையில் இருந்த பொழுதே நூலாக வந்தது. இந்நூலுக்குரிய ஒரு மதிப்புரை புதுச்சேரியில் 'இந்தியா' வில் (டிசம்பர் 4, 1909) வெளிவந்துள்ளது. இதிலிருந்து பின்வரும் பகுதியை வ.உ.சி. தமது 'மெய்யறம்' நூலில் வெளியிட்டுள்ளார்.

''இந்நூலை ஒரு முறை படித்துப் பார்த்தால் ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்குத் தமிழிலிருக்கும் விசேஷப் பாண்டி

* மெய்யறம்-1914-வ.உ. சிதம்பரம்பிள்ளை-சென்னை பக். iii

டித்யம் நன்கு விளங்கும். இதை ஒவ்வொரு பாரதனும் கட்டாயமாய்ப் படித்துணர வேண்டுமென்று நாம் கூறுகிறோம்.''*

இந்த மதிப்புரை, பாரதியார் எழுதியதகாது. ஏன் எனில் 'இந்தியா' இதழில் தொடங்குகின்ற மதிப்புரையின் முதல் வரியான ''அபிநவபாரத ஸ்வராஜ்ய கொள்கையை'' என்பதும் மற்றும் சில பிரயோகங்களும் பாரதியைஅடையாளங் காட்டவில்லை.

''அகமே புறம்'' என்ற பெயருடன் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் புதிய நூல் ஆலன் என்ற பண்டிதரின் ஆங்கில நூல் ஒன்றிலிருந்து மொழி பெயர்த்தது. எனினும், பிள்ளையவர்கள் இதிலே பரிபூரணமான தமிழ் மணத்தை யேற்றியிருக்கின்றார்கள். பிறநாட்டுப் பொன்னிலே நமது முத்திரையை வைத்து நம் பொருளாக்கி இது மொழிபெயர்ப்பென்று பிள்ளையவர்கள் சொல்லாவிடில் நாம் இதனைத் திருக்குறளின் சில பகுதிகளுக்கு விரிவுரையென்று கொண்டிருப்போம். நோய், கீழ்மை, மிடிமை முதலிய தண்டனைகள் இப்பிறப்பில்இன்றே, இப்பொழுதே தொலைந்து நலமெய்த வேண்டுவோர் இந்நூலின் உபதேசங்களைக் கொள்க. உடலுறுதி, வீடு ஆகிய இன்ப நிலைகளைப் பெற விரும்புவோருக்கு ஸ்ரீமான் பிள்ளையவர்கள் நல்லதுணையாக அமைந்துள்ளார்கள். இது நன்று.''

ஜேம்ஸ் ஆலனின் ''Out of the Heart'' என்னும் நூலையே தமிழில் ''அகமே புறம்'' என்ற பொருட்செறிவுடைய தலைப்பில் வ.உ.சி. மொழி பெயர்த்துள்ளார். ''மனம்போல் வாழ்வு'' எனும் நூலை தொடர்ந்து, 'அகமே புறம்' வ.உ.சி.யால் வெளியிடப்பட்டது.

---

*மேலது-ப-1

மதுரை விவேகபாநுவில், 1906 பிப்ரவரியில், வெளி வந்த வ.உ.சி.யின் 'சுதேசபிமானம்' எனும் கட்டுரையின் தொடக்கத்தின் ஒரு பகுதியை மட்டும், 'சுதேசம்' என்னும் பகுதியை மட்டும், பாரதியார் தமது 'கர்மயோகி'யில் (பிப்ரவரி) வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு பாரதியார் தமது சமகால வ.உ.சி. எழுத்துக்களில் சிலவற்றிலேயே கவனம் செலுத்தி கருத்துக்களை வெளியிட்டதாகக் கொள்ளலாம்.

பாரதியார், வ.உ.சி.-யின் கவிதை நூல்களைப்பற்றி ஏதும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'மெய்யறம்', 'மெய்யறிவு', 'பாடற்றிரட்டு' என்பன பாரதியார் காலத்திலேயே வெளிவந்துள்ளன. அக் காலத்தில் அவர் புதுச்சேரியில் வாழ்ந்திருந்தாலும், அந்த வெளியீடுகளை அறிந்திராமல் இரார். சென்னையில் இருந்து வெளி வந்த 'சுதேசமித்திரன்', 'ஞானபாநு' முதலான இதழ்களில் இந்த வெளியீடுகள் பற்றி விமர் சனங்கள் வெளிவந்துள்ளன. இந்த இதழ்களுடன் பாரதி யாருக்கு நெருக்கமான உறவு இருந்தது. இவற்றில் பாரதியார் எழுதியும் வந்தார். இந்தச் சூழலில் பார்க்கும் பொழுது, பாரதியார் வ.உ.சி.யை ஒரு கவிஞராக ஏற்றிருப்பாரா? எனும் கேள்வி எழுகின்றது. சான்றுகள் கிடைக்கும்வரையில் காத்திருக்க வேண்டும்.

தமிழ் உறவில் சுப்பிரமணிய சிவா

மூவாத் தமிழ் உறவில் பாரதி, வ.உ.சி. சுப்பிரமணிய சிவா ஆகிய மூவரும், அரசியலில் போலவே, தமிழ்ப் பற் றிலும்இணைந்துமூழ்கித் திளைத்தவர்கள். சுதேசமித்திரன் தமிழ் நடையைப் பற்றி சிவாவின் 'ஞானபாநு' விமர் சனம் செய்ய, அது இரு இதழ்களுக்கிடையே கருத்துப் போரை உருவாக்க, வ. உ.சி. 'ஞானபாநு'வை ஆதரித்து சுதேசமித்திரனிலேயே எழுதினார். பாரதியார் கவிதைகள்,

கட்டுரைகள் 'ஞானபாநு'வில் வெளிவந்தன. 'மெய்யறம்*, பாடற்றிரட்டு' என்னும்இரு கவிதை நூல்களுக்கும் இவா எழுதிய மதிப்புரைகளை தமது வெளியீடுகளில் சேர்த்துள்ளார். வ, உ,சி. பாரதியார் எழுதியிருந்தால், சேர்த்து இருப்பார்.

வ.உ.சி.யை கவிஞராக, கவிதைத் திறமையுடையவராக சிவா தமது பின்வரும் மதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். ''எனது நண்பர் ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் ''பாடற்றிரட்டு'' இனிய செந்தமிழில் இயற்றப்பட்டுள்ள பல பாக்களால் அநேக அரிய விஷயங்களை மிகத் தெளிவாக விளக்குகின்றது. இதற்கு முன்னர் பிள்ளையவர்கள் தமது குடும்பத்திற்குப் பரம்பரையாகவே 'கவிராயர்' என்ற பட்டம் உண்டென்றும் அப்பட்டத்தை உண்மையிலேயே தாம் அனுபவிக்க ஈசன் அருள் புரிந்தானென்றும் கூறியுள்ள முகவுரையைக் கொண்ட ''மெய்யறம்'' என்னும்-ஓரடிச் சூத்திரச் செய்யுள்-நூலால் அவர்களுடைய **கவிதைத்திறமை புலப்பட்டது**. பிள்ளையவர்களது ''பாடற்றிரட்டு'' **அவர்கள் ''கவிராயர்'' என்பதை உறுதிப்படுத்திவிட்டது**. பாடசாலைகளின் உபயோகங்கட்கு மாத்திரம் **பண்டிதர்கள்** பெருகி வருகின்ற காலத்தில் நவீன நாகரீகமும் ஆங்கிலக் கல்வியும் நன்கு கொண்டுள்ள பிள்ளையவர்கள் பூர்வீக காலத்துப் புலவர்களைப் போல இன்புற்ற பொழுதும் துன்புற்ற பொழுதும் கவிபாடுவதிலேயே காலத்தைக் கழிப்பது பிள்ளையவர்களுக்கும் பரம்பரையாகவும் இயற்கையாகவும் அமைந்துள்ள கவிராய வல்லமையைக் காட்டுகின்றது. கலைமகளின் கருணையைப் பெற்றுள்ள இக்கவிஞர் நிலமிசை நீடூழிகாலம் வாழ்ந்திருந்து தரும சேவை செய்யுமாறு எல்லாம் வல்ல எம் இறைவி அநுக்கிரகிப்பாராக,''*

---

* பாடற்றிரட்டு- 1915-ப.iii. அழுத்தக் குறியிடுகளில் 'பண்டிதர்' தவிர பிற இந்நூலாசிரியருடையது,

பாரதியார் மதிப்புரை பெறாத வ.உ.சி.யின் மற்றொரு செய்யுள் நூலான மெய்யறத்திற்கும் சுப்பிரமணிய சிவா விரிவான மதிப்புரை எழுதியுள்ளார். *

வ.உ.சி. யின் நினைவுக்குறிப்புகளில் பாரதியார்

தமிழ் உறவில் வ.உ.சி. யைப்பற்றி பாரதியார் வாய்மொழியாக அறியக்கிடப்பதைக் காட்டிலும், வ.உ.சி. யிடம் குறைவாகவே காணக்கிடக்கின்றது. இதன் தொடர்பாகப் புரிந்துக் கொளள வேண்டியதொன்று உள்ளது. அதாவது அவாகளுடைய **தமிழ் உறவு பற்றிய எண்ணங்கள் எழுத்துகளாக வெளிப்படவில்லையென்பதேயாகும்.**

வ.உ.சி. தமது நினைவுக்குறிப்புகளில், பாரதியார் தேசியகீதங்களின் உயர்வைப்பற்றியும் அவற்றின் அருமை-பெருமைபற்றி கூற நினைததைதயும் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''கடைசியாக மாமா வானுலகம் சென்றார் என்று கேட்டு துக்கக் கடலில் ஆழ்ந்து கரையேறினேன். அவர் இவ்வுலகை விட்டுப் போய்விட்டாலும் அவருடைய தேசிய கீதங்களும் மற்றைய பாடல்களும் கதைகளும் இவ்வுலகம் உள்ள அளவும் நிலைநிற்குமென்பதில் ஐயம் இல்லை. அவருடைய பெயர் தேசாபிமானிகளுடைய சரித்திரத்தில் மட்டுமலவாமல் கவிகளுடைய சரித்திரத்திலும் முதன்மையான இடத்தைப்பெறும். அவருடைய பாடல்களின் அருமையையும் பெருமையையும் சிறிது இயம்ப வேண்டுமென்று நினைத்தேன். ஆற்றலின்மையாலும் அவகாசமின்மையாலும் அவ்வேலையில் புகாது

---

* பார்க்க: 'வீரமுரசு' சுப்பிரமணிய சிவா- 1984, பெ.சு. மணி-பக். 264-266

நின்று பாரதியாரின் பாடல்களையே நம் தேசத்து மக்கள் படிக்க வேண்டுமென்று கோருகின்றேன்.'' *

தமிழ் உறவில் ஒரு கருத்துப் பூசல்

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே', 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்,'' 'வானமளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி' என்று பலவாறாக தமிழ் முழக்கம் செய்து தமிழிற்கு 'புதுஉயிர்' தந்த பாரதி, ''தமிழில் எழுதத்துக் குறை''யைப் பற்றியும் எழுத வேண்டியச் சூழல் ஏற்பட்டு விட்டது. புதுச்சேரியில் அரவிந்தருடன் அவ்வப்பொழுது நிகழ்ந்து வந்த ஆன்மிக, இலக்கியச் சந்திப்புகளில் ஒரு சமயம் அரவிந்தர், ஒரு வங்காளியின் பெயர் தமிழில் உச்சரிக்கப்பட்ட பொழுது, அதன் வங்க மொழி உச்சரிப்பு ஒலி பெற்ற பெரும் மாற்றத்தைக் கண்டு, பாரதியாரிடம். 'சொல்லிச்சொல்லி'சிரித்தாராம்'பெள்ளாரி''குத்தி' பனாராஸ்,பம்பாய் என்ற நாட்டு ஊர்ப்பெயர்களைக்கூட நாம்விபரீதமாக எழும்படி நேரிட்டிருக்கிறது.இதற்கென்ன விமோசனம்? என்றும் நமது பத்திரிகைகளில் ஐரோப்பாவிலுள்ள நகரங்கள், மலைகள் முதலியவற்றின் பெயர்களைப் பாக்கும் போது கண்கூசுகிறது. அதைத் தமிழ் மாத்திரம் அறிந்த தமிழர் எப்படி வாசிப்பார் களென்பதை நினைக்கும்போது காது கூசுகிறது'' என்றும் பாரதியார் தமது சில கருத்துகளை ''தமிழில் எழுத்துக் குறை'' என்னும் தலைப்பிட்டு எழுதியது, சுப்பிரமணிய சிவாவின் 'ஞானபாநு' இதழில், 1915 ஜூலை மாத இதழில்.வெளிவந்தது.

சம்சுகிருத மொழியின் வருக்க எழுத்துகள் தரும் வெவ்வேறுவிதமான ஒலிகள் தமிழில் இல்லை என்று

---

* வி. ஓ. சி. கண்டபாரதி-1946-வ.உ.சி. சுப்பிரமணியம்

குறை கூறப்படும் வாதம் பழமையானது. பரிதிமாற் கலைஞர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் உட்பட பலர் தமிழில் வர்க்க எழுத்து ஒலிப்பு முறையின்மை ஒரு குறையேயன்று எனச் சாற்றியுள்ளனர்.

பாரதியார் கருத்துகள்

பாரதியார் தெரிவித்தக் கருத்துகளை பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. ''ஸமஸ்க்ருதச் சொற்களை ஸமஸ்க்ருத வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியமில்லையாதலால் நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லையென்று சிலர் ஆலோசிக்கலாம். சரி, நியாயமென்று வைத்துக்கொள் வோம். வெளி நாட்டு ஊர்களின் பெயர்களையும் மனிதர் களின் பெயர்களையும் நாம் சரியானபடி சொல்ல வேண் டாமா, அதுவும் வேண்டாமா?

0, ''இங்கிலீஷ் அக்ஷரத்தில் ப்ரெஞ்ச், அரபி, பார்ஸி, ஸமஸ்க்ருதம் முதலிய பாஷைகளின் பதங்கள் சிலவற்றை எழுதுவதற்கு, சாதாரண இங்கிலீஷ் அரிச்சுவடி இடங் கொடாததைக் கருதிச் சில புதிய குறிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்நிய பாஷைகளிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக்கு இணங்குபடி சில தனிக்குறிகள் ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டிருக்கின்றன. நாமும் அப்படியே சில விசேஷக்குறி கள் ஏற்பாடு செய்துகொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.''

3. ''இப்புதிய உபாயத்தை அனுஸரிப்பதால் இப்போது நாமெல்லோரும் எழுதிவரும் முறைமைக்கு யாதொரு ஸங்கடமும் உண்டாகாது. புதிய குறிகள் தெரியாதவர் கூட வழக்கம் போலவே படித்துக் கொண்டு போவார்கள். யாருக்கும் எவ்விதமான சிரமும் ஏற்படாது. நமது

பாஷைக்கு நமது அரிச்சுவடி போதும். அந்நிய தேசப் பெயர்கள் முதலியவற்றுக்காக மாத்திரம் இப்புதிய முறை ஏற்பட்டது.''

வ.உ.சி. யின் மறுப்பு

பாரதியார் கருத்துகளை மறுத்து வ.உ.சி. தமது மறுப்பை 'ஞானபாநு' வில் வெளியிட்டார். 1915 செப்டம்பரில் வெளிவந்த வ.உ.சி. யின் கருத்துகள் பின் வருமாறு தொகுக்கப்பட்டுள்ளன.

1. ''ஸமஸ்க்ருதச் சொற்களை ஸமஸ்க்ருத வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியமில்லையாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லையென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். சரி; நியாயமென்று வைத்துக் கொள்வோம்'' என்று கூறுகின்றார்கள். அச்சிலர் பிற பாஷைகளின் மனிதப்பெயர், நகரப்பெயர் முதலியவற்றை யும் அவ்வப் பாஷைகளின் மனிதப் பெயர், நகரப் பெயர் முதலியவற்றையும் அவ்வப் பாஷைகளின் வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியமில்லையாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லையென்று கூறு கின்றனர். இக்கூற்றையும் நமது நண்பரவர்கள்'' ''சரி நியாயமென்று வைத்துக் கொள்வோம்'' என்று அங்கீ கரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

2. தெய்வ பாஷையென்றும் பூரணபாஷையென்றும் பல பாஷைகளுக்கு தாய்பாஷையென்றும் சொல்லப்படு கிற ஸம்ஸ்கிருதபாஷை எழுத்துக்களோடும்....ழ,ற,M,F,Z என்னும் எழுத்துக்களையாவது அவற்றின் ஒலிகளைக் குறிக்கும் குறிகளையாவது சேர்ப்பதற்கு நண்பரவர்

களும், அரவிந்தரவர்களும் முயற்சி செய்து வெற்றி பெறுவார்களாயின், அவர்கள் நமது தமிழ் மக்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டிகளாவார்கள். பின்னர் நமது தமிழ் மக்கள் அவர்களைப் பின்பற்றத் துணிவார்கள்.

3. இதுகாறும் தமிழ்ப் பாஷை எழுத்துக்களில் குறையுள்ளது அல்லது தமிழ்ப் பாஷையில் குறையுளது என்று கூறியவர்களில் ஒருவரும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பூரணமாகக் கற்றுணர்ந்தவராகவாவது சமஸ்கிருத சம்பந்தமில்லாதவராகவாவது சமஸ்கிருத பாஷைகளில் மேற் சொல்லிய திருத்தங்களையோ வேறுதிருத்தங்களையோ செய்யவேண்டுமென்று கூறியவராகவாவது காணப்படவில்லை யென்றும் அவர்கள் நம் தமிழ்ப் பாஷையைத் திருத்த முயல்கிறார்களோ வருத்த முற்படுகிறார்களோ என்றும் நம் தமிழ் மக்களிற் சிலர் ஐயமுறுகின்றனர்.

4, அவருடைய அவ்வையத்தை நிவர்த்திப்பதற்காகவாவது நம் தமிழ்ப் பாஷையில் திருத்தம் செய்யவேண்டுமென்று கூற முன்வருபவர்கள் தமிழ் இலக்கணங்களுக்குக்கெல்லாம் மூலமென்று சொல்லப்படத்தக்கதாயுள்ள தொல்காப்பியம் ஒன்றையும், தமிழ் இலக்கியங்களுக்குக்கெல்லாம் சிறந்தவையென்று சொல்லப்படத் தக்கவாயுள்ள 'சீவக சிந்தாமணி', 'சிலப்பதிகாரம்', 'மணிமேகலை', 'திருக்குறள்', 'கலிங்கத்துபரணி, 'கலித்தொகை', 'திருக்கோவையார்' முதலியவற்றில் ஒரு சிலவற்றையுமாவது பூரணமாகக் கற்க வேண்டுவது இன்றியமையாதது.

5. ஒரு பாஷைச் சொற்களை அப்பாஷை எழுத்துக்களாலேயே எழுதப்படுதல் நன்றென்றும், பிறபாஷை எழுத்துக்களால் எழுதப்படுதல் தீதென்றும்

சில அறிஞர் கூறுகின்றனர். அவ்வாறு அவர் கூறுவதற்குரிய காரணங்களிலொன்று ஒரு பாஷைச் சொற்கள் மற்றொரு பாஷை எழுத்துக்களால் எழுதப்படுமானால் நாளடைவில் உலகிலுள்ள பலபாஷைச் சொற்களும் பிற பாஷைச் சொற்களோடு கலந்து எவையெவை என்னென்ன பாஷைச் சொற்களென்று தெரியாமற் போகுமென்பது.

6. தமிழ்பாஷை எழுத்துக்களிற் பிற பாஷை எழுத்துக்களையோ அவற்றின் சப்தத்தை கொடுக்கும் குறிகளையோ சேர்ப்பதும், தமிழ் நாட்டுக் கிராமங்களில் உழவுத் தொழில் செய்து ஊரை விட்டு வெளியேறாதிருக்கும் தமிழ் மக்களும் பிற பாஷையினரின் சம்பந்தம் வேண்டாத தமிழ் மக்களும் அவற்றைக் கற்க வேண்டுவதும் அவசியம்தானா என்பதைத் தீர்மானித்து அதனைத் தக்க காரணங்களோடு தமது 'ஞானபாநு' மூலமாக வெளியிடுவார்களாக.''*

வ.உ.சி. யின் இந்த மறுப்புரையில் தருக்கத்துடன், சீற்றமும் வெளிப்பட்டுள்ளது. குறிப்பாக, 'எழுத்துக்குறை' பற்றிக் கூறவந்த பாரதியாரின் இலக்கண-இலக்கிய அறிவைப் பற்றி ஐயுறத்தக்க வகையில் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவது போல் உள்ளது.

பாரதியார் விளக்கம்

பாரதியார், வ.உ.சி. குறிப்பிட்டதற்ணங்க தமது 'தக்க காரணங்களை' விளக்கிக் கூறியது ஞானபாநு, அக்டோபர் 1915-ல் பின்வருமாறு வெளிவந்துள்ளது.

''ஜ, ஷ, ஸ, க்ஷ என்ற எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடியில் நமது பூர்வீகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்காவிட்டால் தமிழ் நேரே பேச முடியாமலும், எழுத முடியாமலும் போய்விடுமென்று அவர்

களுக்கு அச்சமுண்டாயிற்று. தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதாவண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற்காட்டிய எழுத்துக்களையும் சேர்த்தார்கள். நாமும் அப்படியே நமக்கு இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவிருத்தி செய்து கொள்ளுவதற்கு, கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கலாமென்று சில பெரியோர் கருதுகிறார்கள். ஆனால், அதைக் காட்டிலும் அடையாளங்கள் போடுவது சுலபமான வழி.

''இப்போதுள்ள அரிச்சுவடியிலே பழகிய தமிழுக்கு மேற்படி அடையாளங்களால் எவ்வித சங்கடமும் நேரிடாது. தப்பாகவோ, சரியாகவோ வழக்கம் போல வாசித்துக் கொண்டு போவதை அடையாளங்கள் தடுக்க மாட்டா. கிரந்த எழுத்துக்களைக் கொண்டு சேர்த்தால் பாதி படிக்கும்போதே நிறுத்தி விட நேரிடும்.

''ப்ரெஞ்ச், இங்கிலீஷ், முதலிய ஐரோப்பிய பாஷைகளிலும, உயிருள்ள பாஷைகளிலே வளர்வனவெல்லாவற்றிலும்-உச்சரிப்புத் திருத்தத்தைக் கருதிப் பழைய எழுத்துக்களில் சில அடையாளங்கள் சேர்த்து சௌகரியப் படுத்திக் கொள்ளுகிறார்கள், இதனால் எழுத்து வடிவத்தில் யாருக்கும சந்தேகம் நேரிடாது. இந்த எளிய வழியை அனுசரித்து நமது தாய்மொழி விசாலமடைய வேண்டுமென்பதே என்னுடைய விருப்பம்.''

இந்தப பதிலுரையில் பாரதியார், வ.உ.சி.யைப் பெயரிட்டுக் குறிப்பிடவில்லை. அந்த அளவிற்கு வ.உ.சியிடம் பாரதியார் வைத்திருந்த பெரு மதிப்பு புலனாகின்றது,

பாரதியார் அளித்த விளக்கத்தைத் தொடர்ந்து வ.உ.சி, மீண்டு விவாதத்தை வளர்த்தாரா என்பதை அறியமுடியவில்லை.

பாரதியார், தமிழ் எழுத்துக் குறையை நீக்கும் பொருட்டு ''மிகவும் சுலபமாக ஐந்து விஷயங்களில் யாரும் கற்றுக் கொள்ளக்கூடிய*'' சில குறிப்புகளை தயார் செய்து வைத்திருந்ததாக முதலில் குறிப்பிட்டிருந்தார். ''எனது புதிய முறையை இப்போதே அறிந்து கொள்ள விரும்புவோர் கீழ்கண்ட என் விலாசத்துக்கு இரண்டணா தபால் முத்திரை வைத்தனுப்பினால் அவர்களுக்கு இம் முறையை நல்ல கையெழுத்தில் தெளிவாக எழுதுவித்து அனுப்புகிறேன்'' என்று பாரதியார் ஜுலை மாத இதழில் (1915) குறிப்பிட்டார். ஆனால் வாசகர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்களா என்பது தெரியவில்லை. ''இப் புதிய வழியைத் தமிழ் நாட்டுப் பத்திராதிபர்களும் பிறரும் அறியும்படி தூண்டும் பத்திரிகைகள் போட்டு வேலை செய்வதற்கு வேண்டிய சௌகர்யங்கள் எனக்கு இன்னும் சில மாதங்கள் கழிந்த பிறகுதான் ஏற்படும்'' என்றும் பாரதியார் அறிவித்திருந்தார்.

வ.உ.சி.யும் பாரதியாரரின் 'புதிய வழி'யின் எதிர்பார்ப்பை சுதேசமித்திரனில் (29-10-1915) எழுதிய சுதேசமித்திரன் நடையைப் பற்றிய வேறொரு கட்டுரையின் இறுதியில் பின்வருமாறு வெளியிட்டார்.

''பல கார்யங்களின் நிமித்தமாகப் பல பாஷையினரோடு பலவகை சம்பந்தங்களை வைத்துக் கொண்டிருக்கிறயானும் நமது நண்பர் ஸ்ரீ.சி. சுப்பிரமணிய பாரதி அந்நிய பாஷைச் சொற்களைத் தமிழில் எழுதுவதற்குக் கண்டுள்ள புதிய முறையின் வெளிவரவை எதிர்நோக்கியிருக்கிறேன்.''

பாரதியார் 1920-களில் சுதேசமித்திரனில் எழுதியக் கட்டுரைகள் சிலவற்றில் ஒலிக் குறிப்பை அறிவிக்க ஆங்கில எழுத்துக்களை அடைப்புக் குறிகளில் போட்டுள்ளார். சில சான்றுகள், வருமாறு: எமீர் (f) பெய்ஸீல், (b) பூர், (g)க்ரி, (d) டார்வின். இவ்வகையான உச்சரிப்பு விளக்கக் குறிகளை சோதனை முயற்சியாக பாரதியார் செய்துள்ளது, எத்தகைய வரவேற்பு பெற்றிருக்கும் என்பதை அறிய வாயப்பில்லை. பாரதியாரும் இதைத் தொடரவில்லை.

தமிழ் இலக்கண, இலக்கிய நோக்குகளில் தமிழ் உறவு

இந்திய தேசிய விடுதலைப் போராட்டம், வளர்த்த தமிழ் உணர்வும், தமிழ் உறவும் பழந் தமிழ் இலக்கியத்தையும், புத்தெழுச்சிப் புத்திலக்கியத்தையும் போற்றுவதில் ஆக்க பூர்வமாகச் செயலாற்றின. பாரதியார், வ.உ.சி, சுப்பிரமணிய சிவா, வ. வே.சு. ஐயர் ஆகியோர் 'தமிழ்' பற்றி பெருமிதவுணர்வு அலைமோத வெளியிட்டக் கருத்துகள் தமிழியல் வரலாற்றை வளமாக்கின.

பாரதியார், வ.உ.சி.யின் கவிதைகள் முதன்முதலில் மதுரை விவேகபாநுவில் 1904-இல் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

வ.உ.சி.யின் இலக்கணவுணர்வு பரம்பரைப் புலவர் வழியை அவாவியது. 'விவேக பாநு'வில் (தொகுதி 3, புத்தகம் 7) வ.உ.சி, 'அன்பு', 'ஈகை, 'உண்மை' என்னும் ஒவ்வொரு தலைப்பில் பத்து வெண்பாக்கள் எழுதினார். பாரதியாரின் (அச்சில் வந்த) முதல் தமிழ்க்

கவிதையான 'தனிமையிரக்கம்' 1904 ஜூலை 'மாத 'விவேக பாநு' இதழில் வெளிவந்தது. பண்டிதத் தமிழ் நடையில் இயற்றப்பட்ட இந்தப் பாடல் 'பதினான்கு வரிகளையுடைய ஆங்கில மொழிப்பாவினமான 'ஸானெட்' என்பதை ஒத்திருந்தது, பாரதியார் மிக விரைவிலேயே பண்டிதத் தமிழ் நடையில் இருந்து விடுபட்டு, ''புதுமுறை, புது நடை, எளிதில் அறிந்துக் கொள்ள கூடிய சந்தம்' பொதுமக்கள் விரும்பும் மெட்டு'' முதலானவற்றைக் கொண்டு மக்கள் கவியாக ஏற்றம் பெற்று, கவிதையின் உள்ளடக்கத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புணர்வையும், இந்தியத் தேசியமும் தமிழ்த் தேசியமும் இணைந்து வளர்ந்தோங்கவும் புதுயுகக் கவியாக மலர்ந்தார்.

வ.உ.சி., பாரதியாரின் மிக நெருங்கிய நண்பராய், மாமன்—மருமகனாய், இருந்த நிலையிலும் பாரதியாரின் தேசிய கவிதைப் பண்புகளின் எளிமை வ.உ.சி.யின் கவிதையைப் பாதிக்கவில்லை. அவருடைய மெய்யறம், மெய்யறிவு, பாடற்றிரட்டு சுயசரிதை யாவும் மரபு வழியில் ஆழ்ந்து அழுத்தமாக விளங்கின. 'பாடற்றிரட்டு' கவிதைத் தொகுப்பின் பாயிரத்தில் அவர் ஆண்ட பலவித யாப்புகளை பின்வருமாறு பட்டியலிட்டுள்ளார், வ.உ.சி.

''எனது தனிப் பாடல்களில் முந்நூற்றைம்பது வெண்பாக்களும், ஒரு தாலாட்டும், மூன்று விருத்தங்களும், பதினைந்து கட்டளைக் கலித்துறைகளும் நானூற்று நாற்பத்து மூன்று வரிகள் கொண்ட பதினொரு நிலை மண்டில ஆசிரியப் பாக்களும் இப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.''

வடிவம், உள்ளடக்கம் இரண்டிலும் வ.உ.சி. பழமையில் இருந்து விடுபடவில்லை. விடுதலைப் போராட்ட

வுணர்வுடைய தேசபக்தர்கள் இலக்கியத்தின் பழமை யையும் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதற்கு சான்றாகத் திகழ்ந்தார், வ.உ.சி. இதே நோக்கில் தான் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பதில் பேரார்வம் காட்டினார், வ. உ. சி. இவ்வகையில் அவர் தமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதய்யர் தடம் பற்றி நின்றார்.

''எமக்கு தெரிந்த மட்டில் நவீன எண்ணங் களை உட்கொண்டு ஒரு கவிதான் தமிழ்நாட்டில் உலவுகிறார்'' என்றும் ''நாட்டில் புதிய இயக்கம் பிறந்ததும் அதேற்கேற்ற கவி ஒருவரும் தோன்றி னார்'' என்றும். பாரதியாரை '„தமிழ்'' என்ற கட்டுரையிலும் (சுதேசமித்திரன், 9-2-1914), ''மறு மலர்ச்சி*'' என்ற மற்றொரு கட்டுரையிலும் (சுதேச மித்திரன் வருஷ அனுபந்ம் 1918) தமிழ்த் திறனாய்வின் முன்னோடி வ.வே.சு. ஐயர் மதிப்பீடு செய்தது, பாரதி யாரை, வ.உ.சி.யிடமிருந்து தமிழ் உறவில் இனம் பிரித்துக் காட்டுகிறது.

தமிழ் இலக்கண, இலக்கிய நூற்பரப்பின் எல்லை களை வ.உ.சி. அறிந்த அளவிற்கு பாரதி அறிந்து வைக்கவில்லை என்பது அவர்கள் கட்டுரைகள் வழியே அறியமுடிகின்றது.

1918-சுதேமித்திரன் வருஷ அனுபந்தத்தில் வெளி வந்த 'தமிழ் நூல்கள்' என்னும் கட்டுரை வ.உ.சி. யின் பரந்துபட்ட நூலறிவைப் பறைசாற்றுகின்றது. தமிழ் இலக்கண-இலக்கிய நூல்களை சிற்சில வரிகளில் மதிப்பீடு செய்து வ.உ.சி. அறிமுகப்படுத்தியுள்ளப் பாங்கு அவரைத் தேர்ச்சியுடைய கட்டுரை இலக்கியக் கர்த்தாவாக எடுத்துக்காட்டுகின்றது. பத்துப் பாட்டு, எட்டுதொகை, காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள்,

பலவகைப்பட்டத் தத்துவ ஞான நூல்கள், நீதி நூல்கள், இலக்கண நூல்கள் ஆகியனவற்றையெல்லாம் ஆய்வு நலம் வாய்ந்த வரலாறாக படிப்போர் உணரத்தக்க வகையில் எழுதியுள்ளார்.

தொல்காப்பியமும். திருக்குறளும் வ.உ.சி.யின் இரு கண்களெனத் தகும் பான்மையில் அவர் தோய்ந்து உறைந்தவராவர். ''இக் காலத்து வழங்கும் முத்தமிழ் மூத்த இலக்கணங்களுக்கும் முதனூலாக நிற்பது. ... இக் காலத்து வழங்கும் இலக்கியங்களின் இலக்கணங்களை யெல்லாம் கொண்டு நிற்பது, இலக்கியங்களில் வள்ளுவர் முப்பால் ஒப்புயர்வற்று விளங்குவது'. என்னும் புகழுரையுடன் 'தமிழ் நூல்கள்' கட்டுரையை நிறைவு செய்துள்ளார். *

தொல்காப்பியம் குறித்து பாரதியார் வெளியிட்டுள்ள சில கருத்துகள் (முன்பக்கங்களில்) அவருடைய தொல்காப்பிய அறிமுகத்தில் உள்ள குழப்பத்தையும், ஆழ்ந்தப் பயிற்சியின்மையையும் எடுத்துக் காட்டுகின்றன.

'தமிழ் தந்த வ.உ.சி.' என்னும் ஆய்வு நூலில் ஆசிரியர் டாக்டர் தி. லீலாவதி குறிப்பிட்டுள்ள பினவரும் ஆய்வுரை, பாரதியின் இலக்கியப் பார்வையுடன் வ.உ.சி.யின் இலக்கியப் பார்வை இணங்கி நிற்பதில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

''அந்நியர் ஆட்சியையும், மொழியையும் வெறுத்த வ.உ.சி. தமிழ் மண்ணில் ஆரியர் ஆதிக்கத்தையும் உள்ளூர விரும்பவில்லை; வாய்ப்பு நேரிடும் இடங்களி லெல்லாம் இக் குறிப்பு இலைமறை காயாக வெளிப்

---

* சுதேசமித்திரன் வருஷ அனுபந்தம்-1918-ப,24

படக் காணலாம். தொல்காப்பியம் தமிழ் மொழிக்குத் தலையாக விளங்கும் ஒப்புயர்வற்ற இலக்கணம் என்று கொண்டாடி இளம்பூரணத்தைப் பதிப்பித்த வ.உ.சி. அவர்களே இளம்பூரண எழுத்ததிகாரப் பதிப்பு முன்னுரையில்,

''இவ்வகைத் தனிச் சிறப்புப் பொருந்திய இத் தமிழ் இலக்கணத்துள்ளும் ஆரிய மொழிகள் சிலவற்றை யும், ஆரியர் பழக்க வழக்கங்கள் சிலவற்றையும் ஆரியர் கொள்கைகள் சிலவற்றையும் இந் நூலாசிரியர் நுழைத் திருத்தலை ஆங்காங்கு காணலாம்'' என்று கூறுவது எண்ணத்தக்கது.'' *

கைவல்லியம், விசாரசாகரம், ஞானவாசிட்டம், சிவஞானபோதம் முதலானத் தத்துவ ஞான நூல் களில் ஆழ்ந்தப் பயிற்சி பெற்று வேதாந்த ஞானத்தைப் பரப்பியவர் வ.உ.சி. பாரதியார் வேத உப நிடதங்களையும் பகவத்கீதையையும் பெருமளவில் சார்ந்து நின்றார். வ.உ.சி.யைப் போல **வேதாந்த-சித்தாந்த வித்தகராகத்** தம்மைப் புலப்படுத்தவில்லை,

'தமிழ் வளர்ந்தால் தர்மம் வளரும்' என்று பாரதியார் கூறியுள்ளது போல, வ.உ.சி. கடவுள் ஞானத்தையும், 'தமிழ்ஞானத்தையும் தாம் பெற்றதை எண்ணி மனநிறைவு பெற்றவர். பாரதியார், சுப்பிரமணிய சிவா ஆகியோர் ஆன்மிக சமய உணர்வுகளை தேசியப் பிரசாரத்தில் பயன்படுத்தியிருக்க, வ.உ.சி. சமயம் வேறு, அரசியல் வேறு என்னும் பாகுபாட்டை வகுத்துக் கொண்டார். இஃது கருத்தில் நிறுத்த வேண்டிய முக்கியச் செய்தியாகும்-

---

* தமிழ் தந்த வ.உ,சி.-1986-உலகத் தமிழராய்ச்சி நிறுவன வெளியீடு - ப. 28

புதுச்சேரியில் பாரதியாருக்கு அரவிந்தர், வ.வே.சு. ஐயர், பாரதிதாசன் முதலானவர்களுடன் ஏற்பட்ட பத்தாண்டு கால ஆன்மிக-இலக்கியச் சூழல், வ.உ.சி.க்கு ஏற்படாமல் காலம் வஞ்சித்துவிட்டது.

வெவ்வேறு திசைகளில், வெவ்வேறு சூழல்களில் வ.உ.சி.யும் பாரதியாரும் அவ்வப்போது சந்தித்து இலக்கிய உறவும், தமிழ் உறவும் குறைவுபடாமல், கொள்ள முடியாது போயிற்று.

பரிசு பெறத் 'தவறிய' பாடல் படைத்த புதிய வரலாறு

பாரதியாரின் கவிதைகளில் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்னும் கவிதை அதன் தோற்றக் காரணத்தில் உள்ள முரண்பாடுகளினால் தனி ஆய்விற்குரியதாகின்றது.

இந்திய நாட்டின் பெருமைகளையும், தமிழ் நாட்டின் பெருமைகளையும் தமது கவிதைகளில் நனி சிறக்கப் பாடியவர், பாரதியார். இத்துறையில் தனித் தகுதி வாய்ந்த அவர் கவிதைக்கு பரிசுப் போட்டியில் முதற் பரிசு அளிக்கப்படாதது, விவாதத்திற்கும், கண்டனத்திற்கும் உரியதாகிவிட்டது,

தோழர் தொ. மு. சி. ரகுநாதன் அவர்கள், ''பரிசு பெறத் தவறி விட்ட பாரதியின் பாடல்'' எனும் ஆய்வுக் கட்டுரையில், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' எனும் பாடல் எழுதப்பட்டகாலம், பாடல் தோன்றக் காரணமாயிருந்த சூழ்நிலை, முதலானவற்றைப் பற்றி நல்லாய்வு நிகழ்த்தியுள்ளார்.*

அடுத்து, பாரதியாரின் சகோதரர் திரு. சி. விசுவநாதன் அவர்கள் செய்த ஆய்வு 'கவி பிறந்த கவிதை,

* அக்டோபர் 1979: 'தாமரை' மாத இதழ்.

எனும் சீரிய ஆய்வுக் கட்டுரையாக, கலைமகளில் வெளி வந்தது. முற்கூறிய ஆய்விற்கு மேலும் ஒளியூட்டியது, இவர் வெளியிட்ட சில புதியச் செய்திகள்.

தொடக்க காலத் தமிழ் நாவலாசிரியர்களில் புகழ்பூத்த அ. மாதவையா எழுதிய 'இந்தியக் கும்மி' எனும் பாடல், ஒரு பரிசுப் போட்டியில், முதற் பரிசுக்குரியது எனத் தேர்ந்தெடுக்கப்பட, தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதி யாரின், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' பரிசு பெறத் தவறி விட்டது,

தோழர் தொ. மு சி. ரகுநாதன், ''போட்டியில் முதல் பரிசு பெற்ற மாதவையாவின், 'இந்தியக் கும்மி' என்ற பாடலைப் படித்துப் பார்க்கும் 'பாக்கியம்' எனக்குக் கிட்டவில்லை'' எனத் தமது அக்கால ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழறிஞர் திரு. பெ. நா. அப்புசாமி, தமது சிறிய தகப்பனார். அ. மாதவையா பெற்ற முதற் பரிசைக் குறிப்பிட்டு பின் வருமாறு எழுதியதையும் விவாதத்திற் குரியதாகக் கொண்டார், தோழர் ரகுநாதன்.

''இப் பரிசுப் போட்டியில் (சி. சுப்பிரமணி) பாரதி யும் கலந்துக் கொண்டார். அவர் அனுப்பிய பாட்டு பரிசு பெறவில்லை. மாதவையர் எழுதிய பாட்டு அதனினும் மேலாகக் கருதப்பட்டு பரிசளிக்கப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது இம் முடிவை வாசகர்கள் ஒப்பலாம் அல்லது மறுக்கலாம். ஆனால், இது உண்மை.''

''இந்தப் போட்டி விவரத்தை நினைவூட்ட வந்த பெ. நா, அப்புசாமி, பரிசு பெற்ற மாதவையாவின் பாட்டையும் சேர்த்து எழுதியிருந்தால், நன்றாயிருந்திருக் கும்!'' எனும் கருத்தையும் வெளியிட்டார், தோழர் ரகுநாதன்.

முதற் பரிசு பெற்ற திரு. அ, மாதவையாவின 'இந்தியக் கும்மி' கவிதை கிடைக்கப் பெறாத நிலையில் தோழர் ரகுநாதன் ஆய்வு அமைந்தது.

'கவி பிறந்த கதை'யைக் கூறவந்த திரு. சி, விசுவா நாதன் அவர்களும் 'இந்தியக் கும்மி' பாடலைத் தர வில்லை; அவர் கட்டுரையின் நோக்கமும் ஒப்பு நோக்கு வதற்குரியதன்று. அவ்வாறு ஒப்புநோக்குவது 'உசிதமும் அல்ல' என்பதும் அவர் கருத்து. இதன் தொடர்பாக அவர் கூறியதாவது:

''பாரதியாரின் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்று ஆரம்பிக்கும் பாட்டை மிஞ்சிய பாட்டு எப்படியிருக் கும் என்று தெரிந்து கொள்ள விழைகின்ற நேயர்கள் அந்நூலைத் தருவித்துப் படித்துப் பார்த்துக் கொள்ள லாம்.''

மேலே எடுத்துக் காட்டியுள்ள இருவரின் கருத்து களைத் தொடர்ந்து, 'இந்தியக் கும்மி' பாடலின் முழு விவரத்தையும் தெரிந்துக் கொள்ள வேண்டியது, மிக இன்றிமையாதது என்பது தெளிவாகின்றது. ஆகவே. இந்தியக் கும்மி பாடலை முழுமையாக இங்கு அளித்து, முற்கூறப்பட்ட ஆய்வை மேலும் விரிவுபடுத்த வேண்டியுள் ளது.

சென்னை பிரசிடென்சி காலேஜில், சென்னை மாநில மிதவாதத் தேசியத் தலைவர்களுள் ஒருவரான திரு. வி. கிருஷ்ணசாமிஐயர் தமிழில் நிகழ்த்திய ஒரு சொற் பொழிவை பாரதியார் கேட்டு, அதன் காரணமாகப் பெற்ற மனவெழுச்சியால் 'செந்தமிழ் நாடெனும் போதி னிலே' எனும் கவிதையை இயற்றினார் என்பதே தமிழ் தாத்தா உ. வே. சா.வின் கருத்து.

''ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் அன்று அந்தப் பிரசங்கத்தைக் கேட்டு குதூகலத்தை அடைந்தார். அந்தப் பேச்சு அவர் உள்ளத்திலே ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது; அதிலிருந்து ஓரு பாட்டுக்குரிய பொருளைக் கிரகித்துக் கொண்டார். தமிழ்நாட்டைப் பற்றி அந்த முறையிலே பாட வேண்டுமென்று அவருக்கு அன்று ஒரு கருத்து உண்டாயிற்றென்றே தோன்றுகின்றது.'' இவ்வாறு உ. வே. சா. எழுதியுள்ளார்.*

தோழர் ரகுநாதனும், பாரதி சகோதரர் திரு. சி. விசுவநாதனும் தமிழ் தாத்தா உ. வே. சா. வின் கூற்றை மறுத்துள்ளனர். பாரதிதாசன் அவர்கள், யதுகிரி அம்மாள் அவர்கள் ஆகியோர் கருத்துகளும் உ. வே. சா. அவர்களின் 'நினைவு மஞ்சரி' கூற்றை மறுக்கின்றன.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே', எப்பொழுது எதற்காக எழுதப் பட்டது என்பதைத் தெளிவாக முடிவு செய்வதற்கு முன்பு, பரிசுப் போட்டி சம்பந்தமான ஓர் அறிவிப்பைப் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

திரு. அ. மாதவையாவின் நூலொன்றின் முன்னுரை, பரிசுப் போட்டியைப் பற்றியச் செய்தியை விரிவாகக் குறிப்பிடுகின்றது.

பொது தர்ம சங்கீத மஞ்சரி

1914-ல் திரு. அ, மாதவையர் இயற்றிய 'பொது தர்ம சங்கித மஞ்சரி' வெளி வந்தது. இந்நூல் 48 பக்கங்கள் கொண்டது. விலை 4 அணா. ''மதுரைத் தமிழ்ச் சங்கம் பிரஸில் அச்சிட்டு சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீநிவாஸ

---

* நினைவு மஞ்சரி 1; பக். 108

வரதாசாரி அண்டு கம்பெனியாரால் பிரசுரஞ் செய்யப் பட்டது.'' ''சென்னை ஹைகோர்ட் ஜட்ஜு கனம், ப்ரும்மஸ்ரீ சேஷகிரி ஐயரவர்கள்'' ஆங்கிலத்தில் எழுதிய முகவுரை பெற்றது.

இந்நூலாசிரியர் திரு. அ. மாதவையர் எழுதியுள்ள முன்னுரை, முழுவதும், வருமாறு:

''சாதாரண ஜனங்கள் பாடும் நாடோடிப் பாட்டுக் களை உண்டு பண்ணுஞ் சுதந்திரமட்டும் ஒருவனுக்கு ஏற்பட்டு விட்டால், அந்த நாட்டுச் சட்டதிட்டங்களை நியமிப்பவர் யாரென்று அவன், கவனிக்க வேண்டிய தில்லை, என்பது ஆங்கிலேயே மேதாவி ஒருவர் வாக்கு அவ்விதப் பாட்டுக்கள் ஜனங்களின் மனப்போக்கு நட வடிக்கைகளை மேலாடி வசீகரித்துத் தம் கருத்தின் வழிப் படுத்த வல்லன என்பது அவர் குறிப்பு

சிங்கார ரசமும் பக்தி ரசமும் செறிந்துள்ள பாட்டுக் கள் தமிழராகிய நமக்குள், அமோகமாயுள; நாடு நகர மடாலய ஜன சமூகம் பொது தர்மங்களைக் கூறும் கீதங் களோ, நரிக்கொம்பே.

பொது நன்மைக்காக உழைத்து வரும் எனது நண்பர் ப்ரும்மஸ்ரீ S.V. விசுவநாதையர், இக்குறையை நீக்கக் கருதி இந்தியாவின் அருமைகளையும், சாமான்ய கல்வி யும் கைதொழிலாகிய தற்கால நாகரீகங்களும் தழைத்து, நாம் அபிவிருத்தி யடைவதற்கான சாதனங் களையும் பற்றி, எளிய நடையில், யாவர்க்கும் பயன்படும் வண்ணம் இயற்றப்படும் தமிழ்ப் பாட்டுக்களுக்கு இரானடே, கோக்கலே என்னும் தேசாபிமானிகள் பேரில் ரூ,350 வரைப் பரிசுகள் கொடுப்பதற்காகப் பத்திரிகை களில் பிரசுரஞ் செய்தார். அவ் விளம்பரப்படி வந்த கீதங் களில் இப் புத்தகத்திலுள்ள இந்தியக் கும்மி, தக்க

மத்தியஸ்தர்களால், இரானடே தலைப்பரிசு அளிக்கப் பட்டது. பாட்டு முழுவதும் ஒரே மெட்டிலிருத்தலினும், பல வர்ண மெட்டுகளிலிருப்பது நலமென்று, பரிசுதவ வேண்டும் மதிப்பாளிகளும் வெளியிட்ட அபிப்ராயத்தை அனுசரித்து, அதையே, சிறிது பிரித்தும் சுருக்கியும், இதிலுள்ள தாய்நாடு என்னும் பாட்டாகச் செய்தேன்: இந்திய சிந்து, அம்மே!, தாய்நாட்டு வணக்கம், என்னும் கீதங்களும் அதே சந்தர்ப்பத்தில் இயற்றப் பட்டனவே.

இவ்வாறு தமிழ் நாட்டு நாடோடி மெட்டுக்களிற் கவனஞ் செய்யும் இடங்களில், ஆங்கில பாஷையிலிருந்தும் திருக்குறளிலிருந்தும், அருமையான சில பாக்களையும் பெயர்த்தமைத்துக் கொள்ள நேர்ந்தது. தமிழ் நாட்டார்க் கும் பயன்படுமென்றெண்ணியே, அவற்றையுஞ் சேர்த்து வெளியிடலாயிற்று. சாதாரண ஜனங்களுக்கென்றே பெரும்பாலும் உண்டாக்கப்பட்ட இச் சங்கீத மஞ்சரி நம் தமிழ்நாட்டில் ஊர் தோறும், வீடுதோறும், நறுமணம் வீசி, ஆண் பெண் இரு பாலாராலும் மகிழ்ந்து கொண்டாடப்பட வேண்டுமென்பது எம் உள்ளத்தழைப்பு. எம் அபிலாஷையில் ஒரு சிறிதுமே நிறைவேறினும், எமக்குத் தக்க கைம்மாறாவதுமன்றி, இன்னும் இவ்வழி யில் மேற்செலுத்தும் தூண்டுகோலுமாம்.''

மேலே மாதவையா எடுத்துக் காட்டியுள்ள திரு. எஸ் வி. விசுவநாதய்யர் அறிக்கையின் சில வாசகங்கள், 1906-ல் சுதேசமித்திரனில் தமிழ்ப் புலவர்களுக்கு விடுத்த வேண்டு கோளில் உள்ள சில வாசகங்களுடன் உணர்ச்சி அளவில் ஒத்துள்ளன. தேசபக்தி உணர்ச்சியும், எளிய நடையும்

வற்புறுத்தப்பட்டது இரண்டிலும் உள்ள பொது அம்சங்கள்.

திரு. விசுவநாதய்யர், இந்தியாவின் அருமை பெருமை களைப் பற்றிய பாடல்களை பரிசுக்குரியதாகத் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

கவிஞர் பாரதிதாசன் அவர்கள், 1935-ல் ''ஸ்ரீ சுப்ர மணிய பாரதி கவிதா மண்டலத்தில்'' எழுதிய பாடலின் பின்வரும் வரிகள், திரு. விசுவநாதய்யர் பெயரில் உள்ள அறிக்கையோடு முரண்படுகிறது,

தமிழ்நாட்டைப் பற்றித்
தமிழ்க் கவிகள் தந்தால்
அமைவான பாட்டுக்கு
அளிப்போம் பரிசென்று
சான்ற மதுரைத் தமிழ்ச்
சங்கத்தார் 'உரைத்தார்.

20-9-1960-ல் தமது 'குயில்' இதழிலும் பாரதிதாசன் 1935-ல் கூறியதை மீண்டும், பின்வருமாறு, குறிப்பிட்டுள்ளார்.

''மதுரைத் தமிழ்ச் சங்கத்தை முன்னின்று நடத்திக் கொண்டிருந்த பாண்டித்துரைத் தேவர் ஏடுகளில் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதன் கருத்து பின் வருமாறு:

''தமிழ்நாட்டைப் பற்றிச் சுருக்கமாக எல்லாரும் பாடக் கூடிய மெட்டில் பாட்டு எழுதி அனுப்புக. நல்லதற் கும் பரிசு தருகின்றோம்'.''

''பாரதி நினைவுகள்'' என்னும் நூலில், திருமதி யதுகிரி அம்மாள் கூறியுள்ளது, முற்கூறிய அறிக்கையின் வாசகங்களோடு சற்று மாறுபட்டுள்ளது.

''சென்னையில் உள்ள ஒரு சங்கத்தினர், ''நம் நாட்டின் மேல் நன்றாகக் கவிதை செய்து அனுப்புகிறவர் களுக்கு முதற் பரிசு முன்னூறு ரூபாய், இரண்டாவது பரிசு இருநூறு ரூபாய், மூன்றாவது பரிசு நூறு ரூபாய் என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருந்தனர்.'' *

பாரதியாரின் அருமைத் தோழர் நாவலர் சோமசுந்தர பாரதியார், பாரதியார் சகோதரர் திரு.சி. விசுவநாதன், அவர்களுக்கு 7-3-1944-ல் ஆங்கிலத்தில் எழுதிய கடிதத்தின், பின்வரும் பகுதி விவாதத்திற்குரிய அறிக்கையின் நோக்கத்தைப் பற்றி வேறுவிதமாகக் கூறுகின்றது.

''தமிழ் இளைஞர்களுக்கு தேசபக்தியூட்டும் சிறந்த தேசிய பாடல்களுக்கு, இரண்டு பரிசுகள் வழங்கப்போவதாக தூத்துக்குடியைச் சார்ந்த மூத்த வழக்கறிஞர் திரு. எஸ்.வி. விசுவநாதய்யர் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்.''

பரிசுப் போட்டியின் நிபந்தனைகளை அறிந்துகொள்ள உதவும் அறிக்கையின் மூலபாடம் (Text) கிடைக்காத நிலையில், மேலே எடுத்துக்காட்டப்பெற்ற குறிப்புகளில் இருந்து தெளிவான முடிவெடுக்க வாய்ப்பில்லை.

இந்திய நாட்டின் பெருமைகளைக் கூறுவதாக அமைய வேண்டுமா? அல்லது தமிழ்நாட்டின் பெருமைகளை விளக்குவதாக இருக்க வேண்டுமா? அல்லது தமிழ் இளை

---

* பாரதி நினைவுகள்-மலிவுப் பதிப்பு-
அமுத நிலையம்; பக். 17

ஞர்களுக்கு தேசபக்தியை உணர்த்துவதாக விளங்க வேண்டுமா? இம் மூன்றில் பரிசுக்குரிய நிபந்தனை எது என்பதை முற்கூறப்பட்ட குறிப்புகளில் இருந்து ஒரு மன தாக முடிவு செய்ய இயலவில்லை.

தேசபக்தர் திரு. எஸ்.வி. விசுவநாதய்யர் அறிக்கை விட்டதோடு அமையாமல், தமது நண்பர் தேசபக்த தமிழறிஞர் திரு. சோமசுந்தர பாரதியாரின் உதவியையும் நாடினார். இது குறித்து சோமசுந்தர பாரதியார் எழுதிய தாவது.

'எனது இலக்கிய நண்பர்களுக்கு போட்டியில் கலந்துக் கொள்ள எழுதுமாறு என்னிடம் குறிப்பாகக் கேட்டுக் கொண்டார். அக் காலத்தில் சிறந்த இரு தமிழ்க்கவிஞர் களாக விளங்கிய திரு.சி.எஸ். பாரதிக்கும், மதுரை கந்தசாமிக் கவிராயருக்கும் எழுதினேன். இருவரும் உடனே பதில் எழுதினார்கள். போட்டியில் கலந்துக் கொண்டு முதற் பரிசு பெறுவேன் என பாரதியார் மிக்க நம்பிக்கையுடன் எழுதினார்.

போட்டியில் வேறு எவரைக் கலந்துக்கொள்ள கேட்டு எழுதியிருக்கிறீர்கள் என கந்தசாமிக் கவிராயர் கேட்டெழுதினார். போட்டிக் களத்தில் உங்கள் சகோதரர் வருவதாக எழுதினேன். அவர் உடனே எனக்கு பதில் எழுதினார். பிறரை கிரகணம்போல் மறைத்துப் போட்டி யில் முதன்மை பெற்று விடுவார், பாரதியார் என்றும், கவிதைப் போட்டியில் அவருடன் எவரும் போட்டியிட முடியாதென்றும், முதலிடம் பெறும் நமபிக்கை நமக் கில்லையாதலால் போட்டியிட விரும்பவில்லையென்றும, எழுதினார்.

கவிஞர் பாரதிக்கே வெற்றி உறுதி என்பதால் தாம் மறைப்பிற்கு ஆளாக நேரிடும் எனும் அச்சத்தால் போட்டி

யில் கலந்துக் கொள்ளும் எண்ணத்தை அவர் கைவிட்டார். பாரதி வாக்களித்தவாறு, உள்ளக் கிளர்ச்சியூட்டும் பாடலை திரு. விசுவநாதய்யருக்கு அனுப்பி வைத்தார். தலைசிறந்த இந்தப் புதியபடைப்பிற்குரிய பரிசு கிடைக்கும் என நாங்கள் அனைவரும் எதிர்பார்த்தோம். ஆனால் பரிசுகள், வேறு இருவருக்கு வழங்கப்பட்டன...... எவ்வாறிருப்பினும் தூத்துக்குடி வக்கீலுக்கு தமிழகம் நன்றிக்கடன் பட்டுள்ளது. இவரால் அல்லவோ, வேறெந்த மொழியிலும் காணமுடியாத மிக இனிமை வாய்ந்த பாடலை நாம் பெற்றோம்.'' *

கந்தசாமிக் கவிராயர், லோகமான்ய திலகரின் தேசிய அணியைச் சார்ந்த தீவிரவாத தேசபக்தர். வ.உ.சி.அவர்களின் சுதேசிய கப்பல் கம்பெனி முயற்சிக்கு உதவி தேடச் சுற்றுப்பயணம் மேற்கொண்டவர். தமிழ் உணர்ச்சிக்கு சமமான தேசிய உணர்ச்சியைக் கொண்ட செந்தமிழ்க் கவிஞர்; இவர் பாரதியாருடன் போட்டியிட தம்மால் இயலாது எனக் குறிப்பிட்டார் என்பது பாரதியார் பெருமையை உயர்த்திக் காட்டுகிதது.

நாவலர் சோமசுந்தர பாரதியாருக்கு, கந்தசாமிக் கவிராயர் எழுதிய முற்கூறிய கடிதம் பாதுகாக்கப்பட்டிருக்குமானால், சமகாலக் கவிஞர் ஒருவரின் ஒப்பற்ற பாராட்டுரையை பாரதியார் பெற்றுச் சிறப்புற்றதை மூல வடிவத்திலேயே படித்து மகிழும் அரிய வாய்ப்பு தமிழர்களுக்கு கிடைத்திருக்கும்.

கந்தசாமிக் கவிராயரே அஞ்சிய நிலையில் அ. மாதவையா போட்டிக் களத்தில் புகுந்து, பாரதியாருக்கு எதிராகப் பரிசைத் தட்டிச் சென்றார் என்றால், அது வியப்பாக வேதனையாக உள்ளதல்லவா?

---

* பாரதியார் சகோதரர் திரு.சி. விசுவநாதன் அவர்களுக்கு 7-3-1944-ல் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதம்.

போட்டிக்கு பாரதியார், மாதவையா, ஆகிய இருவரின் பாடல்களைத் தவிர மற்றவர்கள் பாடல்களும் வந்தனவா என்பதைப்பற்றியும் அறிவாய்ப்பில்லை.

பாரதியாரின் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' எனும் பாடல், நாடறிந்தது.

மாதவையாவின் பாடலை முழுவதுமாக அறிந்த பிறகு போட்டியின் முடிவைப்பற்றி விமர்சனம் செய்யலாம் எனும் கருத்தில் 'இந்தியக் கும்மி' எனும் மாதவையாவின் பாடல் முழுவதுமாக இங்கே தரப்பட்டுள்ளது.

1. கும்மியடி பெண்ணே
 கும்மியடி, மனம்
குளிர்ந்து, மகிழ்ந்து கும்மியடி;
 நம்மவர் நன்மையை,
இந்தியா அம்மையை,
 நாடிக்கும்மி அடியுங்கோடி!—புகழ்
பாடிக் கும்மி அடியுங்கோடி!

2 பூமா தேவிமுகம் போலும், இந்தப்
 புண்ணிய நாட்டுக் கும்மிபாட,
நாமகள்! நல்லதமிழ்தரு வாய்; என்தன்
 நாவினில் வந்து நடம்புரிவாய்!

3 முந்திய கீர்த்தித் திரள்என, மோடுற
 மோதும் இமாலயம் ஆதியன
சந்தனம், தந்தம், லவங்கம், முதலிய
 சர்வ மலைவளம் தந்திடுமே!

4 கங்கை, யமுனை, கோதாவரி, நர்மதை
 காவேரி, தாமிர வர்ணி, ஸிந்து,
துங்கபத்ரா, ப்ரும்மபுத்ரா, க்ருஷ்ணா, வைகை,
 தூயநதிவளம் சொல்லரிதே

5 ஆணிமுத் துப்,பவளம், சங்கு மச்சமோ
டாயிரம் ஆகும் அலைவளமே;
மாணிக்கம் ஆதிமணிகளும், ஐம் பொன்னும்,
மற்றுள யாவும் நிலவளமே!

6 வேத, புராண, இதிகாசங்கள் வித்தை
மேவு கிரந்தங்கள், காவியங்கள்,
ஆதியில் ஓதி உணர்த்திய மாட்சியை
ஆறுமதங்கள், கலைவளமே;

7 காசி, ப்ரயாகை, கயா, மதுரை, பூரி.,
காஞ்சி, அருணை, அரங்கம், இரா
மேசுரம், வேங்கடம், தில்லை, நெல்லை, புண்யம்
மேவு பதிகளோர் ஆயிரமே!

8 ஒப்பில் கவீந்திரர், உத்தம வித்தகர்,
உக்கிர வீரர், உயர் சீலர்,
தப்பில் தவத்தினர், தர்ம சொருபமே
தாங்கிய தையலார் ஆயிரரே!

9 கோயில், மடம், குளம், சத்திரம், சாலைகள்
கோபுரம், தூபிகள், கோடியவே!
தாய் அவள் இந்தியா போலிசை தாங்கும்
தலமும் வேறுண்டோ தரணியிலே!

10 போனவர் கீர்த்தி நமதா மோ? பிறர்
போசனத் தால், நம் பசிபோமோ!
வானுயர் மாட்சி அவரது; பின்னுற
வந்துள தாழ்ச்சியே நம்மது வே!

11 முன்னவர் கால மேலாம்போச் சே; நமை
மூடின சோர்வு, பழி, ஏச்சே;
அன்னையும் ஏக்கம் உறலாச்சே; இனி
ஆண்மையும் ஆமோ வெறும் பேச்சே!

12 கர்மம் பிராரத்துவ வம்என்று நாளைக்
கழிப்பது மூடத் தனமே யாம்;
மர்மம் அறிந்தால், முயற்சி தெய்வத்தினும்
வல்லதே என்றுமே ஆகிடுமே!

13 சாதி மதமெனும் சாதக பாதகம்
சற்றும் இலாது, நம் தாய் பணியில்
ஓதிடும் பக்தி தழைத்தினி, ஒற்றுமை.
ஊக்கம் சிறக்க உழைத்திடுவோம்!

14 சூது வாதுகள் மறந்திடு வோம்; இனிச்
சோம்பலை முற்றும் துறந்திடுவோம்;
வேதிய ரேவழி காட்டிடுவோம்; வசை
விட்டிடு வோம்; இசை நாட்டிடு வோம்;

15 வங்கர், தமிழர், மராட்டியர், ஆந்திரர்,
மகமதீயர், மலையாளர்
கொங்கர் எனாமற் சகோதர ராகவே
இந்தியர் யாரையும் கொண்டிடுவோம்!

17 பள்ளுப் பறையரும் இந்தியரே! உயர்
பார்ஸிப் ரபுக்களும் இந்தியரே
துள்ளு துருக்கரும் இந்தியரே! கிறிஸ்
துவர், சமணரும் இந்தியரே.

17 கல்வி இல்லான் இரு கண்ணுமில் லான்எனக்,
கற்ற புலவர் கழறிடலால்,
செல்வர், மடாலய கர்த்தர்கள், தேசம்
செழித்திடக் கல்வி விதைத்திடுவோம்

18 யாருமே நன்கு படித்திடுவோம்; மட
வாரையும் நன்கு பயிற்றிடுவோம்;

சீரும் பெருமையும் நாடிடுவோம்: இசை
தேடிடுவோம்; வலி கூடிடுவோம்!

19 யாரும் இகழுவர் ஏழைகளைப் பொருள்
யாது பகையும் அறுந்திடு மால்
தேரும் அதைப்பல தேசங்கள் சென்றுமே
தேடும் வழிகள் தெளிந்திடுவோம்!

20 கைத்தொழிற் சாலைகள் வைத்திடுவோம்; பல
கஷ்டமுற்றும், அவை கற்றிடுவோம்;
மெய்த் தொழில்மேவி உழைத்து, நம்மூளை
வியர்த்து நம் தாயை உயர்த்திடுவோம்!

21 துய்ய பருத்திகள், பட்டுக்கள், சாயங்கள்,
தோன்றித் துலங்கி வதிந் நாடாம்
நெய்து, பல்லாடைகள் விற்றுச் செழித்து
நிறைவது மற்றொரு நாடாம்!

22 கொட்டை முத்து, வெல்லம், கோதுமையாதிய
கொண்டு கொடுப்பதும் இந்நாடாம்:
மற்றுநமக் கெண்ணெய், சீனி, மா, ஆகிய
வந்து விலை செய்தோர் நாடாம்!

23 தோல்கள் அனுப்புவ திந் நாடாம்; பதன்
இட்டுத் தொழில் செய்வதோர் நாடாம்!
நல்வகை நல்மரம் இந்நாடாம் நல்ல
நாற்காலி மேஜைகள் ஓர் நாடாம்!

84 வெண்ணெய் கொடுத்துப் பணங் கொடுத்தும்; பிறர்
மேன்மையாய் விற்கும் நெய் கொள்ளுவமோ!
கண்ணிழந் தோரிற் கலங்குவமோ? இனிக்
கைத்தொழில் நாமுமே கற்றிடுவோம்.

25 பண்டே இப் பாருல கெங்கும் பரவிடப்
பல்வகைக் கைவினை வல்ல முன்னோர்
கொண்ட உதிரமே கொண்டவர் நாம்; ப்ரும்ம
வித்தையும் கொண்ட மதியுமுண்டே!

26 கேடுவிளைக்கும் வழக்கங்கள் தம்மைக்
கெடுத்து, நலமே அடுத்திடுவோம்;
நாடு, நகர, மடாலய வேலைகள்
நன்மையுறவே நடத்திடுவோம்!

27 ஆளும் துரைகளைக் கொண்டு, நம் கீழ்மை
அகற்றியே, ஆண்மை சிறந்திடுவோம்!
கோளும், கொடுமையும், சோம்பலு மாதிய
குற்றங்கள் யாவும் குறைத்திடுவோம்!

28 பொய், மது, சூது, களவு, விழிகாமம்
பொறாமை, புறங்கூறல் போக்கிடுவோம்
மெய்யும், ஆண்மையும் தன்மரியாதையும்
மேன்மை சிறக்கவே ஆக்கிடுவோம்!

29 'மந்திரமகால் மதிமுக்கால்' என்னும், வல்ல
'சோணியன் வீட்டு விதவை' என்னும்
வந்திடும் வாசகம் எண்ணிடுவோம், மதி
மோசம் போகாமல் மடந்தையரே!

30 பொம்மை விவாகம், ஆண் பெண்களை விற்குதல்
புத்தியில் டம்பம், புகலரிய
கைம்மையர் கஷ்டங்கள், ஆதிய நம்முளே
காணுங் குறைகளை நாணுவமே!

31 ஏழுந்யா யஸ்தலம் ஏறி இகலியே
எந்த வழக்கும் தொடராமல்,
பாழுக் கிறைத்துப் பதையாமல் நல்ல
பஞ்சாயத் தாரையே வைத்திடு வோம்!

32 நாங் கொடுக் கும்வரிக் கொண்டு, நமக்கு
நலங் கொடுத்தற் கென்றே சம்பளமும்
வாங்கும் பலரையும் தாங்கியே, லஞ்சமும்
ஏன் கொடுப் போமினி; மாதரசே!

33 கோவில், மசூதி அநேகமுள; அவை
கொண்டுள சொத்தும் அமோகமுள;
தேவ நம்பிக்கை சிறிது முண்டேல், அவை
சீமை சிரிக்கவே செய்குவமே!

34 காசே கடவுள், அவ் வேசையர்க்கே; அவர்
ஆசாபாசங்கள கருதியே நாம்,
பூசையிலும் அவர் போந்திட, மற்றவர்
சீ! சீ! என்றேசிடப் போற்றுவ மோ!

35 தீர்த்தம், திரைகள், தமக்கு முதல் என்றும்
தேவ சொத் தெல்லாம் தம தென்றும்,
பார்த்துப் பாராமலும் கொள்ளை யடித்திடும்
பாதகரும் தர்ம கர்த்தர்களே

36 பக்தி தழைக்க, மெய்ஞ்ஞானம் தழைக்கப்
பரத்தையரும் பழி நீங்கிடவே,
யுக்திகள் செய்து, மடாலய வேலைகள்
யோக்கிய மாக நடத்திடுவோம்!

37 நாடி நமையுறும் வியாதிகளின் நிஜ
ஏதுவை நாடிடின் ஓர் சுடலை
மாடன் இல்லை; ஒரு மாரி இல்லை;
மூடத்தனங்களே, மானிடரே!

38 கூடென ஆன்மாக் குலவிடும் தேகம், ஓர்
கோயில் என்றெண்ணி ஒழுகுவ மேல்,
வீடுகள், வீதிகள், ஊர்கள் சுசியாய்
விளங்கிடின் வியாதிகள் ஓடிடுமே!

39 ஆறு, குளம், கிணறாதிய, யாதும்
அசுத்தங்கள் என்றும் அணுகாமல்,
சேறுகள் நாறுதுலின்றிப் புனிதம்
சிறந்திடின் நோய்கள் பறந்திடுமே!

40 ஈக்கள், கொசுக்கள், இருந்து பெருகிட
எங்கும், எந்நீருமே தேக்கலின்றி
ஆக்கி மனைகளை, ஊர்களைக் காத்திடின்
வீக்கு பிணிகளும் போக்குறுமே!

41 'ஐயகோ! ஏழை என் செய்வதென்றே' அவ
மாயிருப்போய்! ஒரு கோழையோ நீ!
பொய், களவின்றி, உன் கைகளாலானவை
பொற்புறச் செய்து புகழடையே!

42 பிச்சை எடுத்தும், பிறர் தயவாலும்
பிழைக்கும் பிழைப்பே வசையாகும்;
இச்சையில் எத்தொழி லேனும் இயற்றியே
இன்புறல் என்றும் இசையாமே,

43 மோட்டார், வண்டி, குதிரை, பல்லாக் கெனும்
மோகத்தில் மூழ்கிடும் முட்டாளே!
கோட்டான் போற்பணம் காப்பவனே! அவை
கூடவருமோ நீ போம் பொழுதே?

44 மாதா, பிதா, மனை, மக்களென்ற, உன்தன்
வாழ்வை மகிழ்ந்ததில் ஆழ்பவனே!
ஏதுமே மானம் இல்லாதவனோ? அவை
என்ன, நம் அன்னையினும் பெரிதோ?

•45 பொய் உடம்பே இது; மெய் உடம்போ புகழ்;
பொன்னைப் பொதிந்தவனே இழந்தான்,
மெய்யிதறிந்து, நம் அன்னை பணிகளில்
ஈடில் புகழையும் தேடிக்கொள்வீர்!

46 தாமின் புறுவதுலகின் புறக்கண்டு
காமுறும் கல்வி தழைத்தவரே!
நாமும் உயர்ந்திட, நம்மவர் யாருக்குமே
நல்லறி வூட்டுதல் நும்கடனே.

47 வேறுள பாஷைகள் தேறியுள்ளீர்!-மிக
மேன்மை, பயன் தரும நூல்களெலாம்,
பேறுபெறும்படி நம்மொழி தன்னினும்
பேர்த்திடுவீர், தமிழ் போற்றிடுவீர்!

48 தத்தமால் ஏற்றவை நித்தமும் செய்து
சகோதர வாஞ்சை தழைத்துறவே,
உத்தம மாதுரு பக்தி துலக்கி
உழைத்தலே மெய்த்துற வாகிடுமே!

49 நீட்டிடவேண்டாம்; மழிக்க வேண்டாம் முடி;
நிர்வாணம், காவியுடை வேண்டாம்;
நாட்டி மனத்தினைப் புத்தியை நன்மையில்
நம்மனம் ஒப்ப நடப்போமேல்;

50 பாரும்! எல்லோரும் மனமொருப் பட்டிடும்;
பல்துளியே பெரு வெள்ளம் எல்லாம்;
வாரும், நம் அன்னை மகிழ்ந்து சிறந்திட,
மண்ணில உயர்ந்திடப் பண்ணுவமே!

51 வாழி, எம் அன்னையே! வாழி, எம இந்தியா
மரது சிரோமணி வாழியவே!
ஊழிவரை, எமதூனுயிர் யாவுமே
உன்னதே காணினி, வாழியவே?

ஐம்பத்தொன்று சரணங்கள் கொண்ட 'இந்தியக் கும்மி'யில் கவிதைச் சுவையை தேடியலைந்தாலும் அது கிட்டாப் பொருளாகி விடுகிறது.

தேசபக்திப் பாடலின் ஆதார சுருதியாய் அமைய வேண்டிய 'உணர்ச்சி', இந்தியக் கும்மி'யில் போதிய அளவு இடம் பெறவில்லை.

'இந்தியக் கும்மி', இடம் பெற்றுள்ள நூலின் பெயர் 'பொது தர்ம சங்கீத மஞ்சரி' என்பதாகும். நூலின் தலைப்பு சுட்டிக் காட்டும் பொது தர்மங்கள் ஏராளமாக இந்தியக் கும்மியில், பேசப்பட்டுள்ளன.

இந்தியாவின் அருமை பெருமைகளைப் பற்றியதாகப் பாடல் அமைய வேண்டும், எனும் நிபந்தனையை நினைவில் கொண்டு பார்ப்போமானால் 4 முதல் 9வரையில் உள்ள ஆறு சரணங்களே குறிப்பிட்ட நிபந்தனையை நிறைவேற்றுவதில் **ஓரளவு மட்டுமே** முயன்றுள்ளன. பதினைந்தாம் சரணம், மொழிப்பற்றையும். நாட்டுப் பற்றையும் இருகண்களாகக் கொண்ட சுதேசிய இயக்கக் குரலுக்கு ஒத்ததாக இல்லை.

இருபத்தேழாம் சரணத்தில் மிதவாத தேசியத்தின் விண்ணப்ப வழிபாட்டு முறை வெளிப்படையாகவே பேசப் பட்டுள்ளது.

சமூக சீர்திருத்தச் சிந்தனைகளை வலியுறுத்தும் சரணங்களும், இந்திய மூலப் பொருள்களை கொள்ளையடித்து மீண்டும் விற்பனைப் பொருளாக இந்தியர்மீதே திணித்துச் சுரண்டும் போக்கை ஓரளவு சித்தரிக்கும் சரணங்களும் பாராட்டுதலுக்குரியன.

இந்தியக் கும்மியைத் தேர்ந்தெடுத்த குழுவினர் மூவருள் திரு. எஸ்.வி. விசுவநாதய்யரும், இசையறிவோடு ஓரளவு தமிழும் அறிந்த திரு. ஏ. மகாலிங்கம் ஐயரும் இருவராவர்.

தூத்துக்குடி வக்கில் எஸ்.வி. விசுவநாதய்யர் மிதவாத தேசியத்தைப் பின்பற்றியவர். சமூக சீர்த்திருத்தத்தில் தீவிரப் பற்றுடையவர். அக்காலத்தில் அரசியலில் தீவிரம் காட்டுபவர், சமூகசீர்திருத்தங்களில் நிதானம் காட்டுவர். அரசியலில் நிதானம் காட்டுபவர். சமூக சீர்திருத்தத்தில் தீவிரம் காட்டுவர். மாதவையா அவர்கள் சமூக சீர்திருத்தத்தில் மிக்க தீவிரம் காட்டியவர். தமிழ் நாவல்களில சமூக சீர்திருத்தத்தை மிக அழுத்தமாக வலியுறுத்திய பெருமையைப் பெற்றவர். ஆனால், அரசியலில் மிதவாதப் போக்குடைய தேசபக்தர்.

மகா கோவிந்தரானடேவின் முயற்சியால் காங்கிரஸ் மகாசபையோடு இணைந்து நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாட்டிலும் மாதவையா கலந்து கொண்டதுண்டு.

தெலுங்கு மொழியில் சமூக சீர்த்திருத்தப் பிரசாரத்தை பயனுற நடத்திய வீரேசலிங்கம் பந்துலுவைப் போல தமிழில் சமூகச்சீர்திருத்தப் பிரசாரத்தை நடத்தவேண்டும் எனும் கொள்கையை வலியுறுத்தியவர் மாதவையா. *

மிதவாத—தேசியத் தலைவர்களான ரானடே, கோகலேயின் பெயரால் இரு பரிசுகளை, எஸ். வி. விசுவநாதய்யர் அறிவிக்க, அதே அணியைச் சேர்ந்த மாதவையா 'ரானடே தலைப்பரிசை'ப் பெற்றதில் ஒரு பொருத்தம் உள்ளதே தவிர, கவிதைச் சுவைக்கோ, பொருட் சிறப்பிற்கோ பெறப்பட்டதாக கொள்வதற்கில்லை.

மாதவையாவின் பாடல் பரிசுப் பெற்றதை நியாயப் படுத்தி மூதறிஞர் திரு. பெ. நா. அப்புஸ்வாமி எழுதியதாவது:

---

* பாரதியாரும் சமூக சீர்திருத்தமும்; பக், 34.

''ஓரளவு உணர்ச்சியோடு, பேரளவு பொருட் செறிவு இருந்தது. போட்டி நிபந்தனை இவ்விரண்டையும்(எளிமையையும் அதாவது மாதர்கள் பாடிக் கும்மி அடிக்கக் கூடிய சொல் எளிமையாயும், அவர்களுக்குத் தெரிவிக்கும் செய்திகளையும்) குறிப்பிட்டிருந்தது ஆகவே, நடுவர்கள் இவ்விரண்டையும் கவனிக்க வேண்டியிருந்தது. அவ்விரண்டையும் கவனித்தால்தான் மாதவையரின்பாடல் பாரதியின் பாடலைவிடச் சிறந்ததாக மதிக்கப்பட்டது என்று எண்ணுகிறேன். ...எது சிறந்த கவிதை என்பது நடுவர்களின் மதிப்புக்கு விடப்பட்ட விஷயம் அன்று; கொடுக்கப்பட்ட விவரங்களுக்கு இணங்க உள்ளது எது என்பதே விஷயம். அவ்விரண்டையும் ஒப்பிடும்போது மேற்கூறிய பின்னணியை மறத்தலாகாது.'' *

போட்டியின் முடிவைப்பற்றி, அறிந்ததுமே முதல் கண்டனக்குரலை எழுப்பியவர் வீர விளக்கு வ.வே.சு. அவர்கள். இலக்கிய மேதை வ. வே. சு. ஐயரின் மனவருத்தத்தை யதுகிரி அமமாள் அவர்கள் பின்வருவாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

''பரிசோதகர்கள் மீது வ. வே. சு. ஐயர் வருத்த முற்றார். முதற் பரிசுபெற்ற பாட்டோ இந்தப் பாடலில் உள்ள ஓரடிக்கு இணையாகாது. இதன் இனிமையும் சந்தமும் நயமும் பொருளும் அந்தப் பாடல் களில் இல்லை; மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்' இதழின் மலர்கள் பல. அவற்றை இணைக்க உறுதியான வாழைநார்கூட இல்லை'' என்று அங்கலாய்த்தார். 'பொது ஜனங்கள் கவியின் பெருமையை அறியவில்லையே'' என்று அவர் அடிக்கடி வருந்துவார்... ''ஆழவார்களுடைய

* இந் நூலாசிரியருக்கு, 14—8—81-ல் எழுதப்பட்ட கடிதத்தின் ஒரு பகுதி.

பிரபந்தங்களைப் பொறுக்கி எடுத்துப் புகழ்பெறும்படி செய்த எம்பெருமானார் போல் பாரதியாருடைய கவிதையை எடுத்துக்காட்ட மனிதர்கள் இல்லை'' என்பார் ஐயர்.''*

''போட்டியின் முடிவைப்பற்றி பாரதியார் சிறிதும் கவலைப்படவே இல்லை'' எனக் குறிப்பிட்டு யதுகிரி அம்மாள் அவர்கள் பாரதியாரின் பின்வரும் கருத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

'முன்னமேயே தெரிந்த விஷயம். அவர்கள் சங்கத்தில் யாருக்கோ கொடுக்க வேண்டும் என்று முதலிலேயே தீர்மானித்திருக்கிறார்கள். பொது ஜனங்களின் கண்ணைத் துடைக்க இந்த வழியைத் தேடினார்கள்'...

யதுகிரி அம்மாள் குறிப்பிட்டுள்ளதை பாரதிதாசன் அவர்களும் குறிப்பிட்டுள்ளார். 'ஸ்ரீசுப்ரமணிய பாரதி கவிதா மண்டல'த்தில் பாரதிதாசன் கூறியுள்ளதாவது:

''என் கவிதான் நன்றாய்
இருந்திடினும், சங்கத்தார்
புன்கவிஎன்றே சொல்லிப்
போட்டிடுவார், போட்டால்தான்
சங்கத்தில் சர்க்கார்
தயவிருக்கும்! ஆதலினால்
உங்கட்டு வேண்டுமெனில்
ஓதுகின்றேன் என்றுரைத்தார்.''

* பாரதி நினைவுகள்-மலிவுப் பதிப்பு; பக். 17-18.

யதுகிரி அம்மாள், பாரதிதாசன் ஆகிய இருவரின் குறிப்புகளில் பாரதியார் முன்கூட்டியே போட்டி முடிவின் தூரத்தைப்பற்றிக் கூறியுள்ளார் எனக்காணப்படும் செய்தி, முன்பு எடுத்துக்காட்டப் பெற்ற சோமசுந்தர பாரதியாரின் கடிதத்தில்உள்ள செய்தியோடு முரண்படுவதும் நோக்கத்தக்கது. முதல்பரிசு பெறுவேன் எனும் தன்னம்பிக்கையோடு பாரதியார் போட்டியில் கலந்துக்கொண்டார் என்பது, சோமசுந்தர பாரதியார் தந்தச் செய்தி.

தமிழ் நாட்டின் பெருமைகளை மட்டும் விதந்தோதும் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' எனும் பாரதியார் பாடல், போட்டிக்குரிய அறிக்கை விதித்தனவற்றை நிறைவு செய்யவில்லை என்று கூறுவாரும் உளர்.

தூததுககுடியில் தீவிரவாத தேசியத் தலைவராக விளங்கிய, திலகரின் சீடர், வ.உ.சிதம்பரம் பிள்ளையின் மனங்கவர்ந்த கவிஞர் பாரதியார், அதே தூத்துக்குடியில் மிதவாத தேசியத் தொண்டரான எஸ்.வி. விசுவநாத ஐயரின் மனதைக் கவரவில்லை போலும்,

போட்டிக்குரிய நிபந்தனையை பூர்த்தி செய்ய 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' தவறிவிட்டது எனக கூறும் வாதத்திற்கு எதிர்வாதமாக அமைந்துள்ளது, தொ.மு.சி. ரகுநாதனின பின்வரும் ஆவேசமான கேளவி.

''வெள்ளை அரசாங்கம் அஞ்சி நடுங்கும் அளவுக்கு கடுமையான தேசபக்திப் பாடல்களை எழுதி, குறைந்த பட்சம் தேசபக்தர்கள் மத்தியிலேனும்புகழ்படைத்தவராக அன்று விளங்கிய பாரதியின் பாடல்கள எதுவும் கண்ணுக குப் பட்டதில்லையா'பாரதியின் பாடல் போட்டிக்கு வந்த

பின்பும் அதற்குப் பரிசு அளிப்பதன் மூலம் அவரைக் கௌர விக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டதில்லையா?'' *

'செந்தமிழ் நாடெனும் போதினிலே' எனும் தேன் பிலிற்றும் இன்பத் தமிழ்க் கவிதையைப் போற்றி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பின்வருமாறு கூறியுள்ளதை நினைவு கூர்ந்து மகிழ்வோம்.

''தமிழ் நாடு பற்றியும், தமிழ்ப் புலவர்களைப் பற்றி யும் பாரதியார் தவிர எவராவது இத்தனை சுவையுடன் எழுதியுள்ளாராவெனில் இல்லவே இல்லை.''**

---

* தாமரை-அக்டோபர் 79; பக்; 17

** குயில்: 20.9-60

“சுதேச கீதங்கள்” சந்தித்தத் தடையுத்தரவு

நாடெங்கும் கொந்தளிப்பும் குமுறலுமாக இருந்த விடுதலைப் போராட்டக் காலத்திலேயே தடை செய்யப் படாத பாரதியாரின் சுதேச கீதங்கள், 1928-ல் தடை செய்யப்பட்டன.

பாரதியார் காலத்தில் ‘கனவு’ம், ‘ஆறிலொரு பங்கு’ம் தடை செய்யப்பட்டன. பாரதியார் தடையை எதிர்த்து சென்னை அரசாங்கத்திற்கும், பிரிட்டிஷ் நாடாளு மன்ற எதிர்க் கட்சித் தலைவர் ராம்சே மெக்டனால்ட்டுவிற்கும் எழுதினார்.

1917-ல் பாரதியாரின் புகழ்பரப்ப மெய்த்தவம் புரிந்த பரலி. சு. நெல்லையப்பர் சுதேச கீதங்களை ‘நாட்டுப் பாட்டு’ எனும் தலைப்பில் வெளியிட்டார்.

1919-ல் வெளிவந்த ‘நாட்டுப் பாட்டு’ பாடல் தொகுதியின் இரண்டாம் பதிப்பில் உள்ள பரலி. சு. நெல்லையப்பரின், பின்வரும் முகவுரை சுதேச கீதங் களின் என்றுமுளப் பெருமையைச் சாற்றுகின்றது.

‘பாரதியாரின் பாடல்கள் தமிழர்களுக்குப் புதிய உயிர் அளிப்பன. அவரது பாடல்களெல்லாம் மேலான தேச பக்தியையும் தெய்வ பக்தியையும் உண்மையான

கவிகள் விளைவிக்கும் ஒப்பற்றஇன்பத்தையும்விளைவிக்கின்றன. அவர் பாடல்களைப் படித்த காசிவாசியான எனது நண்பர் ஒருவர், ''அவரது அரிய கவிகளைப் படித்து உடம்பு சிலிர்த்தேன்; இத்தகைய சிறந்த கவி வல்லோர்கள் இன்னும் இருந்து பாரத நாட்டைச் சிறப்பித்து வருவதால் தான் தமிழ் மாது விருத்தாப்யதசை அடையவில்லை, அடைய மாட்டாள் என மகிழ்ந்தேன்'' என்று எழுதினார். ஆயினும், இத்தகைய புலவர்களின் பெருமையை அறிந்து, அவர்களை ஆதரித்து, அவர்கள் அறிவும் திறமையும் தமிழ் நாட்டாருக்கு மிகவும் பயன்படும் வண்ணம் செய்யக் கூடிய தமிழர்கள் மிகச் சிலர் கூட இல்லாதிருப்பதை நோக்கும் பொழுது எனக்கு அளவற்ற விசனம் உண்டாகிறது.

இந்த 'நாட்டுப் பாட்டின்' பெருமையைத் தமிழர்கள் நன்றாய் அறிவார்கள். எனது தாய்த் திருநாட்டைப் புகழும் இத்தகைய பாடல்களைப் பாடி மகிழுமாறு, யான் இந்த நாட்டில் கோடி கோடிப் பிறப்புப் பிறக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அண்ட சராசரங்கள் அனைத்தையும் ஆக்கியும், காத்தும், மாய்த்தும் வரும் பரம் பொருளின் பெரும் புகழை ஒருவன் எவ்வளவு காலந் தான் புகழ்ந்து போற்றினும் ஆவல் தீருமா? அதுபோல, இந்தத் தெய்வீகத் திருநாட்டின் பெருமைகளை ஒருவன் எவ்வளவு காலந்தான் புகழ்ந்து பாடினும் ஆவல் தீராது.''

1921-ல் பாரதியார் அமரரானதும், பாரதியாரின் தர்மபத்னி செல்லம்மா அவர்கள் தமது அன்புக் கணவரின் இறுதிக்கால இலட்சியமான நூல் வெளியீட்டு முயற்சியை நிறைவேற்ற விரும்பினார்.

மகாகவி பாரதியார் மறைவிற்கு இரங்கல்செய்தி அனுப்பியவர்களுக்கு நன்றி கூறிய பிறகு நூல் வெளியீட்டு முயற்சிக்கு ஆதரவுகோரி, செல்லம்மா பாரதி அவர்கள்

பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை தமிழ்ப் பெரியார் திரு. வி. க.வின் நவசக்தி இதழில், 30-9-1921-ல், வெளி வந்தது. அந்த அறிக்கையின் ஒரு பகுதி வருமாறு:

''பாரதியார் எனக்குப் பெரிய ஆஸ்தியாக வைத்து விட்டுப் போயிருப்பது அவரது அரிய பாடல்களும் வசன காவியங்களுமேயாகும். அவற்றையெல்லாம் அச்சிட்டு வெளியிடுவதற்குரிய ஏற்பாடுகளை நானும் எனது நண்பர் களும் செய்து வருகிறோம்......இவ்விஷயத்தில் எனக்கு எவ்வளவு சிறிய உதலி செய்பவர்களும், எனது குடும்பத் திற்கு உதவி செய்தார்கள் மட்டுமல்ல, தமிழ் நாட்டிற்குப் புத்துயிர் அளிக்கக் கூடிய பாரதியாரின் அரிய பாடல் களும் பிறவும் உலகத்தில் வெளிவரச் செய்யும் பெரு முயற்சிக்குத் துணை புரிபவர்களும் ஆவார்கள்.'' *

''இவ்வேண்டுகோளுக்கு தமிழ் நாட்டார் எவ்விதத் திலும் பின் வாங்க மாட்டார் என்று நம்புகிறோம். ஸ்ரீமான் பாரதியார் ஐரோப்பாவிலேனும் அமெரிக்காவி லேனும் பிறந்திருப்பாராயின் அவருக்கு இதுகாலை எத்தனை ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கும் என்பதை நாம் கூற வேண்டுவதில்லை. தமிழ் நாட்டாரிட மிருந்து அவ்வளவு பெரிய நன்றியறிதலை நாம் எதிர் பார்க்க வில்லையே யாயினும் அவருடைய நூல்கள் நல்ல முறையில் வெளிவருவதற்கேனும் போதிய துணை புரிவார்கள் என்று நம்புகிறோம்.''*

செல்லம்மா பாரதி அவர்கள், தம்முடைய சகோதரர் அப்பாதுரை ஐயரின் துணையோடு திருவல்லிக்கேணியில் பாரதி ஆச்ரமம் என்ற பெயரில் நூல் வெளியீட்டு நிறு வனத்தை அமைத்தார்.

---

* குமரிமலர், ஜூலை 1981: பக்: 19

* குமரிமலர், ஜூலை 1981: பக்: 18.

1922-ல் சுதேசகீதங்கள் 'இரு தொகுதிகள்' பாரதி ஆச்ரம வெளியீடுகளாக வந்தன.

1928-ல் பாரதியாரின் 'சுதேச கீதங்கள்' திடீரென்று தடை செய்யப்பட்டன. தடை செய்யப்பட்டதற்கான உத்தரவு சென்னை மாநிலத்தில் தோன்றாமல், பர்மா மாகாணத்தில் தோன்றியது தான் விந்தையாய் இருந்தது. இதில் மற்றொரு வியப்பு என்னவென்றால் பாரதி நினைவு நாளான செப்டம்பர் 11-ல் தடையுத்திரவு சென்னை அரசாங்க கெஜட்டில் வெளியிடப்பட்டது. பர்மா மாகாண அரசு ஆகஸ்ட் 7, 1928-ல் பிறப்பித்த தடையுத்தரவு வருமாறு;''

''1898-ஆம் ஆண்டின் இ. பி. கோ. 99 (ஏ) பிரிவுப்படி சென்னை திருவல்லிக்கேணி பாரதிஆச்ரமத்தார் வெளியிட்டிருக்கும் திரு. சி. சுப்பிரமணிய பாரதியாரின் தேசிய கீதங்கள் முதலிரண்டு பாகங்களிலும் ராஜத் துரோகமான விஷயங்கள் அடங்கியிருப்பதால் அவைகளை வெளியிடச் செய்வது இ. பி. கோ. 124 (ஏ) பிரிவுப்படி குற்றமாகுமாதலால் அப்புத்தகங்கள் எங்கிருந்தாலும் அவைகளைப் பறிமுதல் செய்யவேண்டும்.

பர்மா மாநில அரசின் இந்த உத்தரவு சென்னை மாநில கெஜட்டில் வெளியிடப்பட்டது. அப்பொழுது சென்னை மாநிலம் இரட்டையாட்சியின் கீழ் இருந்தது. ஜஸ்டீஸ் கட்சி மந்திரி சபை, ஆளுநரின் நிருவாக சபை இரண்டும் சேர்ந்து ஆட்சி செய்தன.

செப்டம்பர் 20-ஆம் தேதி சென்னை போலீசார், ஹிந்தி பிரசார சபையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சுதேச கீதங்களின் சுமார் 2000 பிரதிகளை பறிமுதல் செய்தனர். பிரதம பிரசிடென்சி மாஜிஸ்ரேட்டின் உத்தரவுப்படி எஸ். பிளனேடில் இருந்த தண்டபாணி

பின்னை கம்பெனியில் சோதனை செய்து பன்னிரண்டு பிரதிகளை கைப்பற்றினர்.

சென்னை சட்ட சபையில் பாரதி பாடல்கள் பறிமுதல் சம்பந்தமான எதிர்ப்புக் குரல், தேச பக்தர் எஸ். சத்ய மூர்த்தி அவர்கள் தலைமையில் எழுப்பப்பட்டது. ஜஸ்டீஸ் கட்சி உறுப்பினர்களுக்கு தர்ம சங்கட மேற்பட்டது. தடை யுத்திரவை, அவர்கள் கோரவில்லை.

அரசாங்க சார்புள்ள பள்ளிக் கூடங்களில் பாரதியார் பாடல்களைப் பாடப் புத்தகமாக வைக்க ஆங்காங்கே முயற்சியெடுக்கப்பட்டிருந்தன. பல பள்ளிக் கூடங்களில் பாடத் திட்டத்தின் கீழ் பயிற்றப்பட்டு வந்தன.

இரட்டையாட்சியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கரம் ஓங்கியிருந்தது.

சட்ட சபையில் நாவலர் சத்தியமூர்த்தி, பாரதி பாடல்கள் பறிமுதல் சம்பந்தமாக ஓர் ஒத்திவைப்பு பிரேரணையைக் கொண்டு வந்தார்.

சட்டமன்ற இயல் அறிஞரான நாவலர் சத்தியமூர்த்தி யின் அன்றைய சத்யாவேச ஆங்கில வுரையின் சில பகுதி கள் வருமாறு.

''அமரர் சுப்பிரமணிய பாரதியார் நாவில் கலைமகளின் தேசபக்தி நடனம் நிகழ்ந்தது, உலகத்தில், இந்தியாவை, தவிர பிற சுதந்திர நாட்டில் பாரதி பிறந்திருந்தால், அவர் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்திருப்பார்; மக்கள் உணர்ச் சியை மதிக்கத் தெரிந்த ஆட்சி அவருக்கு பட்டம் பதவி களைத் கொடுத்துப் பெருமைப்படுத்தியிருக்கும்; தேசத் தின் மிக அரிய போற்றுதலுக்குரியவராக வாழ்ந்து மறைந்திருப்பார்.

ஆனால், ஐயா, தமது அடிமை நாட்டில் பிறந்து, புதுச்சேரியில், அஞ்ஞாத வாசம் புரிந்து, பிரெஞ்சு ஆட்சியின் அரவணைப்பில் திளைத்து, இந்த ஆட்சியினால் எவ்வித பயனும் பெறாது, உள்ளமுடைந்து உயிர் துறந்தார். ஆனால், ஐயா, இவருக்கு முந்திய வீரர்களுக்கும் இதே கதி தான் ஏற்பட்டது.

சுப்பிரமணிய பாரதி, தேசபக்தராக வாழ்ந்தார்; தேசபக்தராகவே மறைந்தார். தலைவர் அவர்களே, மீண்டும் நான் கூற விரும்புவது யாதெனில், தமிழ் மொழி உள்ளளவும் நீங்கள் எவ்வளவு பிரதிகளையும் பறிமுதல் செய்யலாம். காலந்தோறும் எழுதாக் கிளவியாக வேதம் ஓதப்பட்டு வருவது போலவும், மில்டனின் சுவர்க்க நீக்கத்தை மெகாலே அடிபிறழாமல் மீண்டும் ஒப்புவித்தல் போலவும், ஒரு தமிழன் உள்ளவரையில் தமிழ்ப் பண்பாட்டின் விலைமதிப்பற்ற இந்தப் பாடல்கள் நின்று நிலவும்...

இந்தப் பாடல்கள் இருபத்தைந்து ஆண்டுகளாக இந்த மாநிலத்தில் பாடப்பட்டு வருகின்றன...இந்தத் தமிழ் நாட்டில் மிகப் பெரிய கூட்டத்தைக் கூட்டுவதற்கோ, மக்கள் ஆர்வத்தைத் தூண்டுவதற்கோ, பின்பற்றப்படும் வழிமுறை எது, தெரியுமா? இந்தப் பாடல்களை பாடுவதின் மூலம்தான்.

பர்மா அரசாங்கம் ஆணையிடுவதை இந்த அரசாங்கம் ஏற்க வேண்டுமா? இதில் சிறிதேனும் சுமரியாதை உணர்வு இருக்கின்றதா? இந்திய அரசாங்க கெஜட்டில் வெளிவருவதைத் தான் புனித ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் மீண்டும் இந்த மாநில மக்களின் நலனுக்காக வெளியிடுவார்கள். பர்மா அரசாங்க உத்தரவை, இந்த அரசாங்க கெஜட்டில் வெளியிடுவதற்கு எந்தவித சட்ட சம்மதமும் இல்லை.

இந்தப் பறிமுதல் விவகாரத்தின் அரசியல் அல்லது இலக்கிய அம்சங்கள் ஒருபுறம் இருக்கட்டும்; மனிதாபி

மான அம்சத்தைப் பார்ப்போம். நொந்த உள்ளமுடன், வறுமையால் வாடி மறைந்த சுப்பிரமண்ய பாரதியின் மனைவி, இரு பெண் குழந்தைகளுக்கு இந்த நூல்களில் கிடைக்கும் விற்பனைத் தொகையே மூலாதாரம்... கணவனை இழந்த அந்தப் பெண்மணியையும், பெண் குழந்தைகளையும் தண்டிக்கப் போகின்றீர்களா? தேச பக்திப் பாடல்களை படைத்தார் என்பதற்காகவா, இந்தத் தண்டனை?''

நாவலர் சத்யமூர்த்தி, மேலும் தொடர்ந்து பேசும் பொழுது, ''வந்தே மாதரம் என்போம்!*', ''செந்தமிழ் நாடெனும் போதினிலே'' என்னும் பாடல்களின் சிறப்பை விண்டுரைத்தார்.

துளசிராம் என்னும் உறுப்பினர் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்ற பாடலைப் பாடினார்; சபையில் இருந்தவர்கள் தாளம் போட ஆரம்பித்தனர்.

ஆங்கில மொழிக் கவிஞர்கள் டெனிசன், வில்லியம் பிளேக், பார்க்கர் ஆகியோரின் கவிதைகள் சிலவற்றை எடுத்துக்கூறி, அவர்களைக் காட்டிலும் பாரதியாரின் தேசிய கவிதைகளின் செய்திகள் அனைத்துலக கவிஞர்கள். தத்துவதரிசிகள், தீர்க்க தரிசிகள், பல்வேறு மக்கள் ஆகியோரைத் தழுவிச் செல்கின்றன என்பதை வலியுறுத்தினார், சத்திய மூர்த்தி.

பாரதியார் பிறப்பினால் பிராமணராயிருந்தாலும், அவருடைய இலக்கியத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் சாதி அல்லது வகுப்புவாத, உயர்வு, தாழ்வு அடிச்சுவட்டைக் காண முடியுமா? எனக் கேட்டார், சத்திய மூர்த்தி.

''பரந்த நோக்குடன், உலகம் தழுவிய தற்கால கவிஞர்களில் நான் அறிந்த வரையில், பாரதியாரே முதன்மையானவர்*' எனச் சாற்றினார்.

ஒற்றுமையுணர்வை ஓதும் அவர் நூல்களையா பறி முதல் செய்வது? என இறுதியாக வினா விடுத்து, அவையோரைச் சிந்திக்க வைத்தார்.

தேசபக்தர் ஹரிசர்வோத்மராவ் எனும் ஆந்திரர் தமக்குத் தமிழ் தெரியா விட்டாலும் பள்ளிக் கூடங்களில் பாடமாகப் போதிக்கப்படும் இப்பாடல்களை பறிமுதல் செய்வதை தாம் பலமாக கண்டிப்பதாகவும். எல்லாத் தமிழரும் ஒன்றாக எழுந்து ஒன்று சேர்ந்து அவைகளைப் பாடி அரசாங்கத்தார் என்ன செய்கிறார்களென, சோதித்துப் பார்க்க வேண்டும்'' எனக் கூறினார்.

அரசாங்கத்திற்கு எதிரான ஒத்திவைப்புப்பிரேரணை நிறைவேறியது. ஆட்சித் தரப்பில் உள்ளவர்களுள் பலர் நடு நிலைமை வகித்தனர். டாக்டர் சுப்பராயன், முத்தைய முதலியார், மாணிக்கவேலு நாயகர் முதலானோர், ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள், நடுநிலைமை வகித்தனர். ஆதரவாக 72, எதிராக 12, நடுநிலைமையாக 15 எனும் கணக்கில் வாக்கெடுப்பு நிகழ்ந்தது.

''பாரதியார் பாடலுக்கு ஆபத்தா'' எனும் தலைப்பில் செப்டம்பர் 7, 1928-ல் 'குமரன்' இதழில் ஒரு தலையங்கம் வெளிவந்தது. சீர்திருத்தச் செம்மலும், தேசிய சிந்தனையாளருமான குமரன் ஆசிரியர் சொ. முருகப்பா எழுதிய துடிப்புமிக்க நடையில் உள்ள தலையங்கத்தின் பெரும்பகுதி, வருமாறு:

''நமது தெய்வத் தமிழகத்தில் சென்று பல நூற்றாண்டுகளாக உயர்ந்த கவிகள் தோன்றினார்களில்லை. ஞானசம்பந்தப் பெருந்தகையாரின் அருட் கவிகளும், கம்பன் போன்ற கவிச் சக்ரவர்த்திகளின் இனிய நறும் கவிப் பாடல்களும் தோன்றிய இந்நாட்டில் பல நூற்றாண்டுகளாக அத்தகைய கவிகளைக் காணும் பேற்றி

ளைத் தமிழக மக்கள் பெற்றாரில்லை. தமிழ் இலக்கிய உலகம் புத்திலக்கியங்களையும் புத்தம் புதுக் கருத்துக் களையும் காணாது வளர்ச்சியுறாது ஞானறு மக்கள் நலனழிந்து அடிமை வாழ்க்கை வாழ்ந்து ஏங்கி நிற்பரென்பது சரித்திரம் போதிக்கும் உண்மையாகும். இந்நிலையடைந்து துன்புற்று நிற்கும் தமிழகத்தில் சென்ற பல நூற்றாண்டுகளுக்கிடையில் தோன்றிய மக்களுள் மூவர் பெயரை இங்கு குறிப்பிடுகிறோம். ஒன்று இராமலிங்க அடிகள்: மற்றொருவர் பி. சுந்தரம் பிள்ளை; மூன்றாவதாக நமது காலத்தில் நமது கண்முன்னே வாழ்ந்தருளிய பெரியோரான சி. சுப்பிரமணிய பாரதியாராவர். இம் முப்பெரும் புலவர்களைத் தமிழகம் தம் முடியின் கண் தோன்றும் மும்மணிகளாகக் கொள்ளல் சாலும்..

நமது பாரதியின் பாடல்கள் இறந்துபட்ட தமிழக மக்கட்குத் தேவரமுதெனை உயிர்ப்பு நல்கினவென்பதை யாரே மறுக்கவல்லார்? பாரதியார் பாடல்கள் தமிழகத்தில் யாண்டும் பரவி நிற்கின்றன. அப்பாடல்களிற் செறிந்து கிடக்கும் இனிய தமிழ் மொழிகளின் வெற்றியை யாரால் அளவிட்டுரைக்க முடியும்? தமிழ் உள்ளத்தோடு. ஆண்மையும் வீரமும் பிளிறி நிற்குமாறு பெய்யப்பட்டிருக்கும் சொற்களின் பேற்றறிய தமிழுணர்ந்தவரே அறிவர். தமிழ் மொழிக்கு இக்கும் ஆற்றலை ஒருவாறு காண முயல்வார் பாரதியின் நூலைத் துணையாகக் கொள்ளல் வேண்டும். சிறு சிறு சொற்களில் புகட்டும் உயரியபொருள் களையும், புது புதுக் கருத்துகளையும் எடுத்துக் காட்டும் திறமை பாரதியார் பாடலில் பரக்கக் காணலாம். இவ்வரிய நூலின்பால் அரசாங்கத்தாரின் பிறழ்ந்த பார்வை திரும்பியிருக்கிறதென அறிகிறோம்...

தமிழக மக்களெல்லாரும் அன்பு பாராட்டி வரும் ஒரு சிறந்த நூலின் மீது அரசாங்கத்தார் அம்பு தொடுக்க முயல்வது முன்புத்தியோடு செய்யும் காரியமென்றுநமக்குப்

படவில்லை. அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் இப்புத்தகங்களைப் பாடம் வைத்து அபிவிருத்தி செய்யாமற் போனாலும் அதன் மீது அம்பு தொடுக்காமலாவது இருக்கக் கூடாதா?

தமிழகத்தில் தோன்றிய பாரதி பாடலுக்கு இதுகாறும் எவரும் மறுப்புரை எழுத முன் வந்தாரல்லர். மூச்சு விடுவதற்கெல்லாம் சண்டையிடும் மதவாதிகளும், வயிறு வளர்க்கும் போலி மக்களும், வைதீகப் பிடுங்கல்களும், சாத்திர மூட்டைகளும் பாரதியார் பாடல்மீது போர் தொடுக்கவில்லை. ஆனால், இப்போது அரசாங்கத்தார் அப்பாடல்களுக்குக் குறுக்கே நிற்பது கேட்டுப்பலர் வருத்தமுறுவர் என்பதிலசதியமில்லை. பாரதியார் பாடலுக்கு இந்நிகழ்ச்சியால் பெருமதிப்பினைக் கொடுக்கவே அரசாங்கத்தார் முன் வந்திருக்கிறார்களென்று கூறுவார் கூற்றுகளும் பொருளில்லாமற் போய்விடாது.''

தேசபக்தர்களும், தமிழறிஞர்களும் பாரதி பாடல்களுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்துக் குரல் கொடுத்ததைப் போலவே, பாமரர்கள் மத்தியிலே தேசியத்தை நாடகங்கள், பாடல்கள் வாயிலாகப் பரப்பிய கலைஞர்களும் குரல் கொடுத்தனர்.

எஸ். எஸ்.விசுவநாததாஸ் எனும் தேசிய கலைஞரின் நாடகப் பாடல்கள் அக்காலத்தில் மிக்கச் செல்வாக்கு பெற்றிருந்தன. இவர், பாரதியார் பாடல்கள் பறிமுதல் செய்யப்பட்டதை கண்டித்து பாடிய பாடல் ஒன்று வருமாறு:

பாரதி சுப்ரமண்யத் தேசிய கீதங்களை
பறிமுதல் செய்ய வந்த பரிதாபமே
வீரச் சுடரடிக்கும் தீபமது கொடுக்கும்
வேந்தர் கவியிலென்ன விபரீதமே

தொகையறா

பசுமாத்தாணிபோல் நம்மவர் இதயத்தில்
பதித்ததே எந்நாளும்
பாரதி பாடலை நசுக்கவே அதிகாரி
பகற்கனவு கண்டாற் போலும்.

'மணவை மன் கூத்தன் வகுத்த கவி, தளைபட்ட காலுடனே கடலேழையுந் தாண்டியதே' எனும் பாடலைப் பாரதியின் பாடல்களுக்குப் பொருத்திக் காட்டினார், தமிழ் தாத்தா உ. வே. சா. அவர்கள். ''தளையென்பதற்கு விலங்கென்றும் கவிக்குரிய லக்ஷணங்களுள் ஒன்றென்றும் பொருள். இந்தப் பாட்டுக்கு இப்போது இலக்கியமாக இருப்பவை பாரதியாருடைய கவிதைகளாகும்'' இஃது தமிழ்த் தாத்தாவின் வாக்கு. பாரதத்தாயின் தளைகள் தெறித்து விழ, பாரதியார் பாடல்களும் பயன்பட்டதை வரலாறு காட்டி விட்டது.

The Message Bearers- S.T. Baskaran: P. 155.

பின்னிணைப்பு:

பாரதியியலில் பேராசிரியர் கைலாசபதி

பேராசிரியர் கைலாசபதியின் 49 ஆண்டுகால வாழ்க்கையில் (1933-1982), அவ்ருடைய எழுத்துலக வாழ்க்கை 29 ஆண்டுகளாக (1953-1982) அமைந்தது.

மாணவப் பருவத்திலேயே மார்க்சியம் பயின்றதினால் அவருடைய இலக்கியப் பார்வையில் சமூக விஞ்ஞானப் பார்வை இணைந்தது. அதே சமயத்தில் வறட்டுத்தனமானத் தத்துவப் பார்வையை வேண்டுமிடங்களில் விலக்கி வைக்கவும பயிற்சி பெற்றார், இந்த உண்மையை பாரதியியல் ஆய்வுகளில் பேராசிரியர் தெளிவுப் படுத்தியுள்ளார்.

பேராசிரியரின் ஆக்கங்கள் பற்றிய விவரப் பட்டியலில் முதல் கட்டுரையாக ''இலக்கியம் வேண்டுமா?'' எனும் கட்டுரை குறிப்பிடப்பட்டுள்ளது. *

இது 14-3-1953-இல் 'சுரபி'யில் வெளிவந்தது. ஆனால், இதன் பதிப்பு விவரம் தெரியவில்லை எனும் குறிப்பும உள்ளது. எமது பார்வைக்கு கட்டுரையும் கிடைக்கவில்லை. 'இலக்கியம் வேண்டுமா' எனும்

---

* Kailasapathy Commemoration Volume- Editors: M. Chitralegn, K. Shanmugalinka, S. Mauna Guru-Jaffna-1988

கேள்வியை தமது இருபதாவது வயதிலே எழுப்பிய இளைஞர் கைலாசபதி கட்டுரை, கதை, கவிதை, நாடகம் முதலான பல இலக்கிய வகைகளில் ஈடுபாடு கொண்டு ''பரிசோதனைகளை''ச் செய்தார். படைப்பிலக்கியக் கர்த்தாவாக தம்மை உருவாக்கிக் கொள்ளாமல், இலக்கிய வரலாற்றாசிரியராக, திறனாய்வாளராக தம்மைப் படைத்துக் கொண்டதை அவருடைய நெருங்கிய நண்பர் இ. முருகையன் தமது ''கைலாசபதியின் விமச்சனம்-கோட்பாடும் நடைமுறையும்'' எனும் அரிய ஆய்வுக் கட்டுரையில் விளக்கியுள்ளார். இந்தக் கட்டுரை **''பன்முக ஆய்வில் கைலாசபதி''** எனும் நூலில் வெளிவந்துள்ளது. *

படைப்பிலக்கியக் கர்த்தா- திறனாய்வாளர் இருவரைப் பற்றியும் கைலாசபதியின் கண்ணோட்டத்தை விளக்குவதற்காக, முருகையன் தமக்கு தனிப்பட்ட முறையில் கைலாசபதி 11-3-1953-இல் எழுதியக் கடிதத்தின் பின்வரும் வாசகங்களை வெளியிட்டுட்டார்.

''கலைஞனுக்கு ரஸ உணர்ச்சி இன்றியமையாதது என்று உமக்குத் தெரியும். கலையின் தத்துவத்திலேயே சிருஷ்டியும் ரஸனையும் (அல்லது) விமர்சனமும் இருப்பதும் தெரியும். ஆனால், ஒரு பேதம்- இரண்டிற்கும். சிருஷ்டி செய்கையில் அதன் முடிவைப் பற்றி-பயன்பற்றி- சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. சிந்திக்கவும் தேவையில்லை. ஆனால், விமர்சனத்திற்குக் கடமையிருக்கிறது- ரஸ உணர்ச்சியை-கலா ரஸனையப் பயன்படுத்துவது. எனவே விமர்சனத்திறகு நோக்கம் இருக்கிறது.

---

* 13 கட்டுரைகளின் தொகுப்பு—1992; கொழும்பு தேசியகலை - இலக்கியப் பேரவை, 'சென்னை சவுத் ஏசியன்புக்ஸ்.

நோக்கம் மனித வாழ்க்கை சம்பந்தமானது மட்டுமல்ல; அழகு, கலைநுட்பம் சம்பந்தமானதும். எனவே ஒவ்வொரு கலைஞனிலும் ஆரம்பத்தில் சிருஷ்டியும் விமர்சனமும் உள்ளிருக்கிறது. ஆனால், விமர்சனம் சுய விமர்சனமாவது குறைவு. (இதெல்லாம் உண்மைக் கலைஞர்கள் மட்டில்). சுய விமர்சனத்தின் தன்மை என்னவென்றால் (அந்த) விமர்சனம் ரஸ உணர்ச்சியினின்றும் எழுவதாகும். ...ரச உணர்ச்சிக்கு இரு தன்மைகள். அவை, சிருஷ்டி, விமர்சனம். ஆனால், பண்பட்ட ரஸ உணர்வு அருமையானது. ஆனால், அதிகம் விரும்பப்படாதது— பொதுமக்களால், உண்மையில் வளர்க்கப்பட வேண்டியது. இதனால் சிருஷ்டிகர்த்தாவும், விமர்சகனும் ஒரே நபராயிருந்தால் திறமாயிருக்கும். நல்ல ரஸ உணர்ச்சியுள்ள விமர்சகர்கள் தலைசிறந்த சிருஷ்டிகர்த்தாக்களாக இருந்திருக்கிறார்கள். *

மேற்காணும் கடித வாசகங்கள் கைலாசபதியின் பிற்கால திறனாய்வு ஆற்றலுக்கு கட்டியங் கூறிவிட்டன. ''சிருஷ்டிகர்த்தாவும், விமர்சகனும் ஒரே நபராயிருந்தால் திறமாயிருக்கும்** என்று மாணவப் பருவத்தில் கருதியிருந்தாலும், அவர் இறுதியாக தேர்ந்தெடுத்துக் கொண்டது திறனாய்வுத் துறையே யாகும். பண்டைய இலக்கியத்தையும், நவீன இலக்கியத்தையும் பேரார்வமுடன் ஊன்றிக் கற்று, திறனாய்வுக் கலையையே தனி ஒரு பேரிலக்கியமாய், உயர்த்திக் காட்ட முடியும் என்பதையும் பேராசிரியர் சாதனை செய்து விட்டார். இந்தச் சாதனையில் நவீனத்

** மேற்குறிப்பிட்ட நூல்-பக்.28-29

திறனாய்வு பற்றியத் தமது கோட்பாட்டை மிகத் துல்லியமாக யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறை ஏற்பாடு செய்த ''ஆக்க இலக்கியமும் அறிவியலும்'' என்னும் பொருள் பற்றியக் கருத்தரங்க வெளியீட்டு நூலிற்கு அளித்த அணிந்துரையில், பின்வருமாறு எடுத்துரைத்தார் பேராசிரியர் கைலாசபதி. *

''நவீன காலத்தில் திறனாய்வு தனித்த ஓர் இலக்கியப் பிரிவாகப் பரிணமித்துள்ளது. நோக்கம், ஆய்வுமுறை, பயன்பாடு இவற்றில் தனக்கெனச் சில சிறப்பியல்புகளைக் கொண்டியங்கும் திறனாய்வுக் கலை இலக்கண விதிகளை மட்டும் பிரமாண மாகக் கொள்வதில்லை. மனித வாழ்க்கையை விவரித்து விளக்கங் கூறும் அறிவுத் துறைகள் அனைத்தை யும் அது தழுவுவதாயுள்ளது. குறிப்பாகச் சமூக விஞ்ஞான இயல்கள் இலக்கியத் திறனாய்வின் பன்முகப் பட்ட வளர்ச்சியிற் பெரும் பங்கு வகித்திருக்கின்றன. மானிடவியல், சமூகவியல், மொழியியல், மெய்யியல், உளவியல், மக்கட் பண்பாட்டியல் முதலிய துறைகளின் செல்வாக்கை இன்றைய இலக்கியத் திறனாய்விலே காணக் கூடியதாய் உள்ளது. அந்த வகையில் திறனாய் வில் ஏனைய இயல்களைச் சார்ந்து இயங்கும் இப் பண்பே நவீன இலக்கியத் திறனாய்வை முற்கால இலக்கிய ஆய்வுகளிலிருந்து குறிப்பாக வேறுபடுத்து கிறது.''

இவ்வாறு நவீனத் திறனாய்வுக் கலையின் செல் நெறியை வகுத்துக் காட்டிய பேராசிரியர் கைலாசபதி யால் பாரதியியல் புதிய வலிவும் -பொலிவும்-பயன்பாடும்

---

* யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறை வெளியீடு —1; பதிப்பாசிரியர், அ. சண்முகதாஸ்-1977.

பெற்றது. ''பேராசிரியர் க, கைலாசபதியின் ஆய்வுக் குட்பட்ட பல கலை இலக்கியவாதிகளுள் அதிகம் கவனம் செலுத்தப்பட்டவர் பாரதி'' என்று ஈழத்து ஆய்வாளர் ந. இரவீந்திரன் சுட்டிக்காட்டியுள்ள தும் கருத்தில் நிறுத்தக்தக்கது. *

''பாரதியியல் என்ற சொற்றொடரும் அவராலேயே முதன்முதல் கையாளப்பட்டது எனலாம்'' என்றும் கூறப்படுகின்றது. **

இலங்கையில் பாரதியியல் நவீனத் திறனாய்விற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் சுவாமி விபுலானந்தர். அவரையடுத்து பாரதியியல் ஆய்வுப் பரப்பை விரிவுப்படுத் தியவர் பேராசிரியர் வகலாசபதி என்பது வரலாற்றில் நிறுவப்பெற்று விட்டது.

''இலங்கையில் பாரதியின் முக்கியத்துவத்தை ஆய்வு, அறிவு, வெகுஜன வழிகளில் அறிமுகப்படுத்தி பெரும் தாக்கத்தினை உருவாக்கியவர்களில் கைலாசபதி முன்னணிப் பாத்திரத்தை வகித்தவர். அது தனி ஆய்வுக் கும் விரித்து நோக்குதற்குமுரியதொன்றாகும்'' என்று யாழ்ப்பாணம் சார்ந்த ஆய்வாளர் சி.கா. செந்திவேல் குறிப்பிட்டுள்ளார்.

---

* ''தேசிய இலக்கியக் கோட்பாடும் கைலாசபதியும்'' ந. இரவீந்திரன்-பன்முக ஆய்வில் கைலாசபதி-1992-ப, 133.

** ''பதிப்புரை''-பாரதி ஆய்வுகள். க. கைலாசபதி-1984- நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் ப, iv

பாரதி இலக்கியத் திறனாய்வை சக்தி வாய்ந்த ஒரு பேரியக்கமாக உருவாக்கி வழி நடத்திய பேராசிரியர் கைலாசபதியின் பாரதியியல் பங்களிப்பு உண்மையிலேயே தனிப் பெரும் ஆய்வு நூலாகப் படைக்கப்படவேண்டும். இதற்கான ஓர் அறிமுகமாக இலங்கை மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் செ. யோகராசா, **''பாரதியியலுக்கு கைலாசபதியின் பங்களிப்பு''** என்னும் ஆய்வு கட்டுரையை எழுதி யுள்ளார் *

இலங்கையில் பாரதி

இலங்கை பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன் எழுதியுள்ள ''பாரதியும் இலங்கையும்'' எனும் ஆய்வு நலம் மிக்கக் கட்டுரையில் இலங்கையில் பாரதி புகழ் பரவிய வரலாறு விளக்கமுற்றுள்ளது. *

இந்த வரலாற்றில் 1930-இல் தொடங்கப் பெற்ற ஈழகேசரி பத்திரிகையின் பங்களிப்பை பேராசிரியர் தில்லை நாதன் கவனிக்கத் தூண்டியுள்ளார்.

''பாரதி புகழை இலங்கையிற் பரப்பியதில் ஈழ கேசரிக்கும் அதன் தாபகராகிய ந. பொன்னையாவுக்கும் கணிசமான பங்கு உண்டு'' என்று பேராசிரியர் தில்லை நாதன் குறிப்பிட்டு, பாரதி பாடல்கள் முழுவதையும் தமிழகத்தில் இருந்து பொன்னையா வரவழைத்து விற் பனை செய்வதில் பேரார்வம் கொண்டிருந்தார் என்றும் ஏறக்குறைய பாரதி பாடல்கள் முழுவதுமே அவருக்கு மனப்பாடம் என்னும் வியப்பிற்குரியச் செய்தியையும் தந்துள்ளார்.

---

* பன்முக ஆய்விய் கைலாசபதி-பக்.111-32

** மேலது நூல்-பக்,185-204

''ஈழகேசரி' பாரதியாரை ஏற்றிப் போற்றிக் கொண்டாடியதற்கான, முக்கியமான, தெளிவானக் காரணத்தை பேராசிரியர் தில்லைநாதன் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

''தேச விடுதலையினையும், தாய்மொழி வளர்ச்சி யினையும், சாதியொழிப்பினையும், உள்நாட்டுத் தொழில் வளர்ச்சியினையும் பண்டைப் பெருமையுணர்வினை வளர்ப் பதனையும் விரும்பியவர்களுக்கு அத்தேவைகளை பூர்த்தி செய்யும் உணர்வினை வளர்க்கவல்ல தமிழ்க் கவிஞனாக வாய்த்தவன் பாரதியே என்பதாகும்.''

கோ. நடேசய்யர் (1891-1947)

தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து 1920 இல் இலங்கையில் குடியேறி பத்திரிகைகள் வாயிலாகவும், தொழிற் சங்கம் இலங்கை சட்டசபை வாயிலாகவும் இந்திய வமிசா வளியினரான மலையக மக்கள் முன்னேற் றத்திற்கு பாடுபட்டவர், கோ.நடேசய்யர்.

''இந்நாட்டின் தொழிற் சங்க வரலாற்றிலும், அரசியல் நடவடிக்கைகளிலும், பத்திரிகை வெளியீட்டுத் துறையிலும். மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகளிலும் தமது பாரிய பங்களிப்பினால் முத்திரைப் பதித்துக் கொண்டவர்'' என மலையக இலக்கிய எழுத்தாளர் சாரல்நாடன் தமது ''தேசபக்தர் கோ.நடேசய்யர்'' எனும் ஆய்வு நூலில் கூறியுள்ளார். திரு. வி. க. வின் 'தேசபக்தன்' சென்னையில் நின்று போன சமயத்தில் அவ ருடைய அநுமதி பெற்று இலகையில் 'தேசபக்தன்' பத்திரிகையை நடத்தியதால் 'தேசபக்தன் கோ. நடேசய் யர்' எனும் பெயர் பெற்றார். சாரல்நாடான் அவர்கள் நடேசய்யரின் பாரதி புகழ் பரப்பியப் பணியை தமிழர் கள் கண்டறிந்து பாராட்ட கடமைப்பட்டவர்கள்

என்பதை உணர்த்த பின்வருமாறு எழுதியுள்ளார்.

''சுப்பிரமணிய பாரதியாரின் கவித்துவப் புகழை இலங்கையில் பரப்பிய பெருமையில் பெரும் பங்கு நியாயமாக தேசபக்தன் ஏட்டையும், அய்யர் அவர்களையும் சேரவேண்டும். அய்யரவர்கள் சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி ஆசிரிய தலையங்கம் தீட்டினார். அவரது கவிநய மாண்பு குறித்து கட்டுரைகளை எழுதுவித்தார்... கணவனும், மனைவியுமாக தோட்டங்களுக்கு சென்று கூட்டங்கள் போடும்போது பாரதியார் பாடல்களை பாடிக் காட்டுவதுண்டு.''

அன்று நடேசய்யர் போட்ட பாரதியார் புகழ் பரப்பும் வித்து இன்று இலங்கை மலையக மக்கள் இலக்கியக் கர்த்தாக்களால் ஆல்போல் தழைத்து வளருகின்றது. **'குன்றின் குரல்'** எனும் மலையக மக்கள் இலக்கிய இதழும், அதன் ஆசிரியர் அந்தனிஜீவாவும் இத்துறையில் பாடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

வ. ரா. (1887-1951)

1981-இல் 'கண்ணன் என் கவி'யின் இரண்டாவது பதிப்பில் 'இலங்கையில் பாரதி" என்னும் இணைப்புரையில் சோ. சிவபாத சுந்தரம் இலங்கையில் பாரதி பிரசாரம் செய்த'வ, ரா.'வைப் பற்றிக் கூறியுள்ளார். 1935ல் கொழும்பு'வீர கேசரி'யில் ஆசிரியப் பணியாற்ற இலகை வந்திருந்தார். வ.ராஅக்காலத்தில் சோ. சிவபாத சுந்தரம்'வ.ரா.'வுடன் தங்கியிருந்தார். வ.ரா.வின் பாரதி புகழ் பரப்பியப் பணியைக் குறித்து சிவபாவ சுந்தரம் எழுதியதாவது:

''பாரதி பக்தனான வ.ரா., கொழும்பிலிருந்த நாட்களில் பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் பல

பொதுக் கூட்டங்களுக்கு அழைக்கப்படுவார். அங்கெல்லாம் அவர் என்ன பொருளைப் பற்றி பேசினாலும் பாரதியாரையும் அவர் கவிதைகளையும் குறிப்பிடாமல் பேசியது கிடையாது. பழைய காலத்துப் புலவர்களாகிய கம்பனையும் இளங்கோவையும் பற்றி பேசினால் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள தமிழ் மக்கள் ரசிப்பது போல் பாரதியையும் ரசிப்பார்களோ என்று ஆரம்பத்தில் சந்தேகித்த வ.ரா., இலங்கைத் தமிழ் மக்கள் பாரதியையும் அவர் கவிதையின் பெருமையையும் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று கண்டு என்னுடன் பலதடவை ஆச்சரிப்பட்டார்.''

தோழர் ஜீவா (1907-1963)

கார்ல் மார்க்ஸ், லெனினுக்குப் பிறகு பாரதியாரைப் பற்றிப் பேசுவதையே தனியொரு மேடைத் தமிழ் மரபாக உருவாக்கியவர் தோழர் ப. ஜீவானந்தம். ''வ.ரா.வுக்குப் பிறகு பாரதியையும், பாரதியின் கவிதைகளையும் தமிழகத்துக்கு இவ்வளவு ஆழமாகப் பரிச்சயப்படுத்தியவர் வேறு எவரும் இல்லை என்று துணிந்து சொல்லலாம்'' என்று தோழர் பொன்னீலன தமது நூலில் சாற்றியுள்ளர். *

1948-ல் இலங்கைக்கு தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்டு, தோழர் ப. ஜீவானந்தம் சென்றபொழுது, பலவிடங்களில் அவர் ஆற்றியச் சொற்பொழிவுகளில் சோஷலிசக் கண்ணோட்டத்தில் பாரதி விளக்கத்தை அளித்தார். 'பாரதி வழி', 'பாரதியைப் பற்றி ஜீவா' என்னும் நூல்களில் பாரதியியலுக்கு ஜீவாவின் பங்களிப்பைப் பற்றி அறிய முடிகின்றது.

---

* ஜீவா என்றொரு மானுடன்- 1982- பொன்னீலன் நியு செஞ்சுரி புக்ஹவுஸ், (பி) லிமிடெட். ப. 312

தொ. மு. சி.யும் கைலாசபதியும்

ஜீவாவிற்கு பிறகு இலங்கை சென்று பாரதியாரை விஞ்ஞானப் புதிய பார்வையில் விளககிப் பேசியவர்களில் தோழர் தொ.மு.சி. ரகுநாதன் முதன்மையானவர். 1956-ல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க அழைப்பின் பேரில் பாரதி விழாக்களில் கலந்துக்கொள்ள தொ.மு.சி. ரகுநாதன் இலங்கை சென்றார். அங்கு நாற்பது நாட்கள் தங்கி மட்டக்களப்பு தவிர பிறவிடங் கள் எல்லாவற்றிற்கும் சென்று நாளொன்றுக்கு 2-3 சொற்பொழிவுகள் வீதம் நூற்றுக்கு மேற்பட்ட சொற் பொழிவுகளை நிகழ்த்தினார், 'தொ. மு. சி.' அந்தக் காலத்தில் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் 'எம். ஏ.' மாணவராக இருந்தார், கைலாசபதி. ''தமிழ் இலக்கியமும் தத்துவப் போராட்டமும்'' எனும் தலைப்பில் ரகுநாதன் மார்க்சீயக் கண்ணோட்டத்தில் பேசியதெல்லாம் கைலாசபதியைக் கவர்ந்தன. 3 வாரம் காலம் கைலாசபதி, ரகுநாதனுடனேயே இருந்தார்.

''இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் விருந்தினராக வந்திருந்த ரகுநாதனுக்கு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வரவேற்று இலக்கிய சொற்பொழி வாற்றவும், கண்டியில் நடந்த பாரதி விழாவில் உரை நிகழ்த்தவும் கைலாசபதி, வித்தியானந்தனின் உதவியுடன் செயலாற்றினார்.'' இவ்வாறு இலங்கை பிரபல தமிழ் எழுத்தாளர் சுபைர் இளங்கீரன் குறிப்பிட்டுள்ளதும் கவனத்திற்குறியது.*

ரகுநாதன் இலங்கை வருவதற்கு முன்பே அவருடன் கைலாசபதிக்கு கடிதத் தொடர்பு உண்டென்றும், அவருடன் பல பொழுதுகளைக் கழித்தார் என்றும்

---

* பேராசிரியர் கைலாசபதி, நினைவுகளும் கருத்துக் களும் - 1992 - சுபைர் இளங்கீரன் பக்.-122.

இளங்கீரன் எழுதியுள்ளார். 1954-இல் ரகுநாதன் நடத்திய 'சாந்தி' என்னும் பத்திரிகையில் கைலாசபதி எழுதினார் என்பது நினைவிற்குரியது. இவையாவும் பாரதியியலில் கைலாசபதிக்கு புதிய ஊட்டத்தையும், ஊக்கத்தையும் தரவல்லத் தாக்கத்தை ஏற்படுத்தியது.

''பாரதியியலுக்கு ஒரு பங்களிப்பு' எனும் கட்டுரையில் தலைசிறந்தபாரதி ஆய்வாளராகப் போற்றப் பெற்றுவரும் ரகுநாதனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள பின்வரும் மதிப்பீடு, கைலாசபதியின் பாரதியியலின் குறிப்பிடத்தக்க ' ஒரு விமர்சனமாகும்.

''பழந்தமிழ்ச் செய்யுள்களையும் - சில வேளைகளில் சிற்சில நாட்டார் பாடல்களையும் எடுத்துக் கொண்டு அவற்றுக்குச் சோடனை செய்து கதையளந்து கதாப் பிரசங்க முறையில் விளக்கம் கூறுவதே பெரும்பாலான தமிழறிஞர்களின் புலமை வெளிப்பாடாகவும், பொழுது போக்காகவும் இருந்து வந்திருப்பதைப் போலவே, பாரதி நூல்களைப் பொறுத்த வரையிலும் பொருள் விவரணக் கட்டுரைகளே பெருவாரியாக வெளிவந்திருக் கின்றன. பாரதியின் வாழ்க்கையையும், ஆக்கங்களையும் அவனது உலக நோக்கையும் முழுமையான ஆய்வுக்குரியன வாகக் கருதிச் செயற்பட்டு வந்திருப்பவர்கள் விரலில் எண்ணிவிடக் கூடியவர்கள். அதாவது வரலாறு, அரசியல், பொருளியல், அழகியல். உளவியல், சமூகவியல் முதலிய துறைகளில் பாரதியியல் என்று கூறத்தக்க ஆய்வுப் பரப்பை உருவாக்கியவர்கள் வெகு சிலரே. அவர்களுள் விதந்துரைக்க வேண்டியவர் சிதம்பர ரகுநாதன்.'' *

''மல்லிகை'' - மாத இதழ் - கொழும்பு - நவம்பர், 1982 - ஆசிரியர்-டொமினிக் ஜீவா.

ரகுநாதனின் பாரதி இலக்கிய ஆய்வுகள், பிற பாரதி ஆய்வுகளுக்குத் தூண்டுகோலாக இருப்பதையும் மேற் குறிப்பிட்ட கட்டுரையில் பின் வருமாறு கூறிள்ளார், கைலாசபதி.

''தொடர்ந்து நிகழும் பாரதி ஆராய்ச்சிகளிக்குத் தூண்டுகோலாகவும் ரகுநாதனின் கட்டுரைகள் அமைந்துள் ளன. ஆராய்ச்சி என்பதே அது தானே. தன்னளவில் புது ஒளி பாய்ச்சுவது மாத்திரமன்றிப் பிறர் ஒளியை நாடத் தூண்டுவதும் ஆராய்ச்சியின் பண்பாகும். அப் பண்பு ரகுநாதன் கட்டுரைகளில் அலாதியாய்க் காணப்படுகிறது. ''சிதம்பர ரகுநாதன்'' எனும் தலைப்பில் 1982 ஜுலை 'மல்லிகை' இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார், கைலாசபதி.

தொ. மு. சி. ரகுநாதனைப்பற்றி மேற்கண்டவாறு கைலாசபதி ஆய்ந்துரைத்தக் கருத்துகள் அப்படியே பிசிறு சிறிதுமில்லாமல் கைலாசபதிக்கும் முற்றிலும் பொருந் தும். ''**வரலாறு, அரசியல், பொருளியல், அழகியல், உளவியல், சமூகவியல் முதலிய துறைகளில் பாரதியியல் என்று கூறத்தக்க ஆய்வுப் பரப்பை**...'' என்று கூறுமிடத்தில் கைலாசபதி தமது பாரதியியலின் பலவகைப்பட்ட நோக்குகளைக் கூறுவதாக நாம் எடுத்துக் கொள்ளலாம். குறிப்பாக மார்க்சீய சமூகவியல் அடிப்படையில் பாரதி இலக்கியத்தை ஆய்வு செய்ய தமது பாரதியியலை அமைத்துக்கொண்டார், கைலாசபதி.

பேராசிரியரின் பாரதியியல் கட்டுரைகள்

1988-இல் யாழ்ப்பாணத்தில் வெளியிடப் பெற்ற **Kailasapathy Commemoration Volume**-இல் கைலாசபதி

யின் பாரதியியல் தொடர்பான கட்டுரைத் தலைப்புகளின் **விவரப்பட்டியல்** வருமாறு :

1, பாரதியார் பழமையும் புதுமையும் ... Ceylon university Magazine, செப்டம்பர் 1965

2. இருமகாகவிகள்...கொழும்பு தினகரன் இதழில் 1957-முதல் வெளிவந்தத் தொடர் கட்டுரைகள். 1962-இல் தனி நூலாக வெளிவந்தது.

3. பாரதியும் யுகமாற்றமும் ... கொழும்பு, வீரகேசரி, 1-11-1966

4. சிந்துக்குத் தந்தை ... தினகரன், 10-1-67

5. பாரதியும் சுந்தரம் பிள்ளையும் ... தினகரன், 11-9-67 18-9-67, 26-9-67

6. பாரதி வகுத்த தனிப் பாதை ... தினகரன் 29-6-69

7. பாரதிக்கு முன் ... Heartly College Miscellany, 1971

8. பாரதியும் வேதமரபும் ... யாழ் நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் கும்பாபிஷேக மலர், 1971

9. பாரதியைக் கற்க வேண்டிய நெறி .. இந்து மாணவன், நவ ராத்திரிச் சிறப்பிதழ் 1971

10. பாரதி நூல்களும்
பாடபேத ஆராய்ச்சியும் ... மல்லிகை, மார்ச், 1974

11. பாரதியாரின் கண்ணன்
பாட்டு - ஒரு வினாக்குறி ... வளர்மதி மலர் (1) ஆடி 1974

12. பாரதி நூல்களும் பாட
பேத ஆராய்ச்சியும் சில ... சென்னை இலக்கியச்
குறிப்புகள்ம் சிந்தனை - 1980

13. பாரதி ஆய்வுகள், வளர்ச்சியும்
வக்கிரங்களும் ... மல்லிகை, ஆகஸ்ட், 1981

14. பாரதி நூற்பதிப்புகள் ... தாமரை, சென்னை டிசம்பர் 1981

15. பாரதி நூற்றாண்டை
நோக்கி; செய்ய ... வசந்தம், சனவரி,
வேண்டியவை, பீப்ரவரி, 1981
செய்யக் கூடியவை

16. இலங்கை கண்டபாரதி... மல்லிகை, மே, 1982

17. ஈழத்துத் தமிழ்க்
கவிதையில் பாரதியின் ... தாமரை, ஆகஸ்ட், 1982
தாக்கம்

18. ஈழத்துத் தமிழ்க் கவி
தையில் பாரதியின் ... ஞானபண்டிதம், 1982
தாக்கம் சில குறிப்புகள்

19. சிறு சஞ்சிகைகளில்
பாரதி ஆய்வுகள் ... மல்லிகை, ஜூலை, 1982

20. பாரதி கண்ட இயக்க ... தீக்கதிர், பாரதி நூற்
வியல் றாண்டு விழா சிறப்பு மலர், 1982

21. பாரதி கண்ட புரட்சி ... வீரகேசரி, 24-5-1982

22. பாரதியார் கவிதையும் தமிழ்ப் புலமையும் ... மல்லிகை, ஜனவரி, 1982

23. பாரதியியலுக்கு ஒரு பங்களிப்பு ... மல்லிகை, நவம்பர், 1982

24. பாரதியின் சமகாலத்தவரும், பாரதி பரம்பரையினரும் ... மல்லிகை, மார்ச்- ஏப்ரல் 1982

25. பாரதியின் புரட்சி ... பல்கலை நோக்கில் பாரதி சென்னை பூரம் பதிப்பகம், கட்டுரைத் தொகுப்பு நூல், 1982

26. முற்போக்காளரின் பாரதி ஆய்வுகள் ... மல்லிகை, அக்டோபர், 1982

27. European Influences on Modern Tamil Poetry - Bharati and the European Poets .. The srilanka Journal of South Asian Studies December, 1982

பேராசிரியர் கைலாசபதி, பாரதியியல் தொடர்பாக எழுதிய இறுதி முன்னுரை **மகாகவி பாரதி** (ஆசிரியர் திருச்செல்வம்) எனும் நூலிற்காகும். இந்த முன்னுரை 22-12-82 இல் அவர் மறைவிற்கு சற்று முன்பு எழுதப்பட்டதாகும் எனும் குறிப்பும் முற்கூறிய கைலாசபதி நினைவேட்டில் பதிவாகியுள்ளது.

இரு மகாகவிகள் - 1962, பாரதி ஆய்வுகள் 1984, ON Bharathi - 1987- என்பன நூல்களாக வெளி வந்துள்ளன.

சிந்துக்குத்தந்தை

''பயில்தொறும் பயில்தொறும் பாரதியிற் புதுமை காணும் நான்''* என்று பேராசிரியர் தம்மைப் பற்றி கூறிக் கொள்வதில் பெருமிதம் கொண்டார். சிந்துக்குத் தந்தை, பாரதியும் சுந்தரம் பிள்ளையும், பாரதியும் மேனாட்டுக் கவிஞரும் என்பன ''பாரதி பற்றிய திறனாய்வுகளிலே போதியளவு வற்புறுத்தப் பெறாத அம்சங்களை'' எடுத்துரைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர்.

'சிந்துக்கு தந்தை' எனும் கருத்தை நிறுவுவதற்கு பேராசிரியர், 'சிந்து' எனும் பாடல் வகையின் பல்வேறு பரிணாம வளர்ச்சி நிலைகளையும், அதை ஆண்ட கவிஞர்கள் வரலாற்றையும் விளக்கிவிட்டு, அந்தப் பாவகை பாரதியாரால் மட்டுமே முதன்முறையாக ஓர் ''இலக்கியத் தகுதியையும் மதிப்பும் பெற்றது'' எனும் தமது திறனாய்வுக் கருத்தை வலியுறுத்தினார். 'சிந்து' வைக் கையாண்டதிலே உள்ள குறிப்பிடத் தக்க அம்சத்தை பின்வருமாறு பேராசிரியர் விளக்கி யுள்ளார்.

''கோபால கிருஷ்ண பாரதியார், அண்ணாமலை ரெட்டியார் முதலியோர் கையாண்ட முறையில் சொற் களும், அவற்றின் பொருளாழமும் முக்கியத்துவம் பெற்றன எனக் கூறுதல் இயலாது. இசைப் பண்பே

---

* ஒப்பியல் இலக்கியம்-முதற்பதிப்பின் முன்னுரை 1969 க.கைலாசபதி-ப.xii

தலைதூக்கி நின்றது'... சொல்லழகில் மட்டுமன்றிச் சொற் பொருளிலும் ஆழம் பார்த்தவன் அவன் என்பதை நினைத்துப் பார்த்தல் வேண்டும். நவநவமான தத்துவத்தை யெல்லாம் சொல்லில் வடித்தவன் அவன். எனவே இசைப் பண்பினை அளவுடன் நிறுத்திக்கொண்டு பொருள் வளமும் சேர்த்தான். அந்த வகையில் முன்னோரை மிஞ்சினான்.'' *

இங்கு ஒரு விளக்கம் தேவைபடுகின்றது. பாரதியார் 'சிந்து'வை ஆண்டப் புதுமையை பேராசிரியருக்கு முந்தி பாவேந்தர் பாரதிதாசனும், பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரும் எடுத்துக்காட்டியுள்ளனர், 'சிந்துவுக்குத் தந்தை' என்று பாரதிதாசன், தமது குருநாதரின் கவிதைப் பண்புகளை ஆராதித்துப் பாடிய அமுதத் தமிழ்க் கவிதை வரிகளிலே குறிப்பிட்டுள்ளார்,

பேராசிரியர் 'தெ.பொ.'மீ.' அவர்களும் 1965 இல், ''மக்கள் பாடலாகிய சிந்துவைக் காவிய ஆக்கத்துக்கும் பயன்படுத்தலாம் என்று காட்டியவர் பாரதியார். அவருடைய பாஞ்சாலி சபதத்திலும் கண்ணன் பாட்டிலும் உள்ள பாடல் பெரும் பாலானவை சிந்துப் பாடல்களே'' என்று குறிப்பிட்டுள்ளார். **

பாவேந்தர் பாரதிதாசனும், பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ யும் குறிப்பிட்டக் கருத்தை, பேராசிரியர் கைலாசபதி வரலாற்றுத் திறனாய்வுக் கண்ணோட்டத்தில்

---

* ஒப்பியல் இலக்கியம்-இரண்டாம் பதிப்பு-1978 பக். 255-256.

** தமிழ்ப்பொழில்-இலக்கிய இதழ்-சித்திரை! 1965

விளக்கினார். இந்த ஆய்வு முறை பாரதியியலுக்கு புதுமை சேர்த்தது.

''பாரதியும் சுந்தரம் பிள்ளையும்''

''பாரதியும் சுந்தரம் பிள்ளையும்'' என்னும் பாரதியியல் கட்டுரை தற்காலத் தமிழ் இலக்கிய இருவேறு ஊற்றுக் கண்களையும், ஓட்டங்களையும் விளக்க வந்தது. இந்த அரிய, ஆழமானக் கட்டுரையில் பேராசிரியர் மிகச் சரியாகவே சுட்டிக் காட்டிய பின்வரும் திறனாய்வு உரைகளும் பாரதியியலில் ஒளி பாய்ச்சுவன,

1. ''இருவரின் இலக்கியக் கோட்பாடும் வெளிப்படும் முறை உற்று நோக்கத் தக்கது. கற்றோரை இலக்காகக் கொண்ட சுந்தரம் பிள்ளை... இது விஷயத்தில் பாரதி நேரெதிரான போக்குள்ளவனாகவே காணப்படுகிறான்,

2. ''சுந்தரம் பிள்ளை போன்றோர் மூண்டிருக்கும் இந்நாளின் நிகழ்ச்சியை அறிந்திலர் என்று நாம் கூற வேண்டியதில்லை. நன்கறிந்திருந்தனர். ஆனால் கண்முன் கண்ட நிகழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் விமோசனம், வழி கூறிய திலேயே பாரதிக்கும் அவருச்கும் அடிப்படையான வேறுபாடு தெரிகிறது.''

3. ''சுந்தரம் பிள்ளை போன்றோர் மொழியையொரு கலாசார சின்னமாக மட்டும் கருதினர். பாரதியோ மக்கள் வாழ்வில் பின்னிப் பிணைத்துள்ள இயக்க சாதனமாகக் கொண்டார்''

''ஒரு வகையில் பார்க்கும்போது நான் எழுதும் கட்டுரைகள் பலவற்றிலும் இவ்வொப்பியல்

நோக்கு நிலை இழையோடுகிற தெனலாம்' என கைலாசபதி கூறியுள்ளது. அவருடைய பாரதியியல் கட்டுரைகளுக்கும் பொருந்துவதே. ''பாரதியும் சுந்தரம் பிள்ளையும்'' எனும் கட்டுரையில் ஒப்பியல் நோக்கு வீறுடன் ஆட்சி செலுத்தியுள்ளது.

''பாரதியும் மேனாட்டுக் கவிஞரும்''

இந்தக் கட்டுரையில் பேராசிரியர் கைலாசபதி பாரதியாரைக் கவர்ந்த மேனாட்டுக் கவிஞர்கள் யார், யார்? என்பதைக் கூறி பொது வகையில் ஒப்பாய்வுக் கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

''பாரதியைக் கவர்ந்த மேனாட்டுப் புலவர்களைத் தொகுத்துப் பார்க்கும்போது, ஏறத்தாழ ஏழுபுலவர்கள் நம்முன் தோன்றுகின்றனர். அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன், பெண்பாற்புலவர் மிஸ் ரீஸ், ஆங்கிலக் கவிஞர் களான ஷெல்லி, பைரன். கீட்ஸ், வேர்ட்ஸ்வர்த்து, பெல்ஜியக் கவிஞரான எமில் வெர்ஹறேன் ஆகியோர் பல வழிகளில் பாரதியின் கவிதா வெறிக்குத் தூபமிட் டுள்ளனர். தேசப்பற்று, விடுதலை வேட்கை, புதுமை மோகம் ஆகியவற்றை மேற்கூறிய புலவர்களிடத்துப் பாரதி கண்டு போற்றினாரென்பதை வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை.'' இவ்வாறு பேராசிரியர் குறிப் பிட்டு சுருக்கமாக பாரதியாருக்கும், மேனாட்டுக் கவிஞர் களுக்கும் இடையே காணப்படும் இலக்கிய உறவுகளை எடுத்துரைத்துள்ளார்.

இந்தக் கட்டுரையை ஒப்பியல் ஆய்வு எனும் நோக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இலலை. அந்த Gநாக்கில் எழுதவும் பேராசிரியர் திட்டமிடவில்லை.

பாரதியாரை மேனாட்டுக் கவிஞருடன் ஒப்பிட்டு முதன் முதலில் விமர்சனம் செய்தவர் சுவாமி விபுலானந்த ராக இருக்கக்கூடும். பாரதியாரின் ''காணி நிலம் வேண்டும்'' எனும் கவிதையை, ஐரிஷ் கவிஞர் யீட்சின் (W.B. Yeats, 1865-1939) கவிதையொன்றுடனும், எச். பெல்லாக் (1870-?) எனும் ஆங்கிலக் கவிஞர் கவிதையொன்றுடனும் சுவாமி விபுலானந்தர் ஒப்பாய்வு செய்துள்ளார். *

''On Bharathi'' எனும் கைலாசபதியின் ஆங்கில நூலில்,'' European Influenees on Modern Tamil Poetry- Bharathi And the European Poets ,, னும் தலைப்பில் அமைந்த அத்யாயத்தில் தமிழில் வெளிவந்த ''பாரதியும் மேனாட்டுக் கவிஞரும்'' எனும் கட்டுரையின் எதிரொலி உள்ளது.

கொழும்பு தினகரன் இதழில் வெளி வந்த தாகூர் பாரதி ஒப்பு நோக்கு விமர்சனக் கட்டுரைத் தொடர் 'இரு மகாகவிகள்' (1962) என்றுபேராசியருடைய முதல்ஒப்பாய்வு நூலாக வெளிவந்தது. இந்நூலில் பின்வரும் விமர்ச னத்தை முன்வைத்தார், பேராசிரியர்.

''இலக்கிய உலகில் இருந்து கொண்டு அரசியல் உலகின் விளிம்பில் உலாவினார் இரவீந்திரர்; அரசியல் களத்தில் நின்று கொண்டு தற்செயலாக இலக்கிய நிழலில் ஒதுங்கினார் பாரதி.'' இந்த விமர்சனவுரையில் ''தற்செயலாக'' என்பது சற்று நொய்மை வாய்ந்தது; விவாதத்திற்குரியது. அவருடைய, ஸ்வதேச கீதங்கள், எனும் கவிதை மலர்கள் தேசபக்தி எனும் புதிய சுடர் ஒளி யினால் மலர்ந்தவை என்று பாரதியார் கூறியுள்ளதும்

* விவரமறிய பார்க்கவும்-சுவாமி விபுலானந்தர் - 1992 - பெ. சு. மணி.

இங்கு இணைத்துச் சிந்திக்கப் பார்க்கத் தக்கது. ''நாட்டில் புதிய இயக்கம் தோன்றியதும். அதற்கேற்ற ஒரு கவியும் தோன்றினார்'' என்று பாரதியாரைப்பற்றி 'மறுமலர்ச்சி' கட்டுரையில்-1918-வ.வே.சு.ஐயர் கூறியதும் நினைவிற்குரியது. பாரதியாரின் அரசியல் தோழர் வி. சக்கரை செட்டியர் பாரதியாரை ''Like The Bards of Purananuru'' என்று குறிப்பிட்டதைக் கூட சற்று எச்சரிக்கையுடன் பொருள் கோடல் வேண்டும். புறநானூற்றுப் பாடலில் போர்க்களத்து வீரத்தைத்தான் 'விளிம்பில்' நின்று பாணர்கள் பாடினர். ஆனால் புதுயுகப் புறநானூற்றுப் பாணனான பாரதியார் கவிதை வாளேந்தி போர்க்களத்தில் உட்புகுந்து வீரம் பேசியும், வீரம் விளைவித்தும் காட்டினான். ஆகவே, அரசியலையும் இலக்கியத்தையும் திட்டமிட்டே இணைத்தார் பாரதியார்.

பாரதி கண்ட இயக்கவியல்

மார்க்சீய ஆய்வு நோக்கில் இந்தப் பாரதியியல் கட்டுரை மிக முக்கியமானது.

மார்க்சீய சமூகவியல் பார்வையில் பார்க்கும் பொழுது பாரதியாரிடம் முரண்பாடுகளை காண்பது என்பது இயற்கையேயாகும். அவருடைய இலக்கியத்தின் வர்க்க வேர்களையும் கண்டறியும் ஆய்வுகளும் உள்ளன. இதன் காரணமாக வாதப் பிரதிவாதங்கள் எழுகின்றன, இந்த நிலையில் ''பாரதி பற்றிய முரண்பாடுகளை தீர்ப்பது எப்படி?'' எனும் வினாவை எழுப்பி அதற்குரிய விடையையும் பின்வருமாறு பேராசிரியர் அளித்துள்ளார்.

''பாரதியை அவனது சரித்திரச் சூழலில் வைத்து நோக்குதல் வேண்டும். இந்தியாவின்-ஆசியாவின்-நவீன வரலாற்றுப் பின்னணியில் பாரதியை நுட்பமாக எடை போடுவது எப்படி? இவை முக்கியமான கேள்விகள்.

ஆழமான நுட்பமான மார்க்சிய ஆய்வுகளின் பயனாகவே இவ்வினாக்களுக்குத் திருப்திகரமான விடைகள் கூறலாம். *

இந்த முரண்பாடுகளுக்கு இயக்கவியல் அடிப்படையில் விளக்கம் தரத்தக்க ஆய்வுகள் விரிவடையவேண்டும் என்பதும் பேராசிரியரின் விருப்பமாகும். இதற்கான விளக்கங்களுள் ஒன்றுதான், பேராசிரியரின் 'பாரதி கண்ட இயக்கவியல்' எனும் கட்டுரை. இதன் ஒரு பகுதி, பின் வருவது.

''அன்றைய சமுதாயச் சூழலில் தமிழ்ப் பண்பாடு, இலக்கியம் என்பன மாற்றம் பெறவேண்டியிருந்தன என்பதை வரலாற்று அடிப்படையில் கிரகித்துக் கொண்டமையும், அதற்கு மேலாக, மாற்றத்தின் இயக்கவியலை உள்ளுணர்வாகப் புரிந்து கொண்டிருந்தமையுமே பாரதியின் ஆற்றலுக்குப் பிரதான ஆதாரமாகும். இயக்கவியல் என்று கூறியதுமே இயக்கவியல் பொருள் முதல் வாதத்தை நாம் எண்ணிக் கொள்ள வேண்டியதில்லை.

அறிவு பூர்வமாக இயக்கவியல் பொருள் முதல் வாதத்தை பாரதியார் அறிந்திருந்தார் என்றோ, அல்லது அதனை ஏற்றுக் கொண்டிருப்பார் என்றோ நாம் கருதவும் இயலாது. ஆனால் அநுபவ ரீதியாகவும் உள்ளுணர்வின் வெளிப்பாடாகவும் தனது காலத்தில் வாழ்க்கையிலே பழமைக்கும் புதுமைக்கும் பாரிய முரண்பாடுகள் உண்டென்பதையும் அம் முரணை அறுக்க

* ''பாரதி நூற்றாண்டை நோக்கி- செய்யவேண்டியவை, செய்யக் கூடியவை''- கட்டுரை-பாரதி ஆய்வுகள் - 1984 பக். 178

வேண்டுமானால் புதியவற்றைப் படைக்க முற்படவேண்டும் என்பதையும் தீர்க்கமாகத் துணிந்து கொண்டவர் அவர். அதே வேளையில் புதுமையைப் படைக்கும் பொழுது பழமையை முற்றிலும் புறக்கணித்து விட்டுச் சூன்யத்திலிருந்து புதுமையைச் சிருஷ்டித்து விட முடியாது என்ற யதார்த்தத்தையும் உணர்ந்து கொண்டார். இதனையே மாற்றத்தின் இயக்கவியல் உணர்வு என்று கூறுகிறோம். *

இந்திய தத்துவஞான மரபில் முகிழ்த்த ''பண்டைய இயக்கவியலின் சாசுவதக் கோட்பாடின் பிடிப்பு பாரதியாரில் சிறிதளவு இருந்ததை மறுக்க முடியாததாயினும் சமூகம், கலைகள், இலக்கியம் முதலியவற்றில் மாற்றத்தை விதியாகக் கொண்ட இயக்கவியலைப் பாரதியார் உணர்வு ரீதியாக ஏற்றுக் கொண்டிருந்தார் என்பதையும் மறுக்க இயலாது. பாரதியாரின் இறுதிக் காலத்தில் பாடப்பெற்ற 'உயிர்பெற்ற தமிழர் பாட்டு' இதற்கு முழுமையான வடிவம் கொடுத்துள்ளது.'' இவ்வாறு பேராசிரியர் அளித்துள்ள விளக்கம், மார்க்சீயப் பார்வையில் பாரதியாரை விமர்சனம் செய்ய முற்படுவோருக்கு வழிகாட்டக் ' கூடியது. பாரதியியலின் முக்கிய, தத்துவ விளக்கக் கட்டுரையாகும். இது.

''பாரதியாரின் கண்ணன் பாட்டு''

பேராசிரியரின் இந்தக் கட்டுரை மறுபரிசீலனைக்குரியதாகும். புதுமை நோக்கில் கூற வேண்டும் எனும் ஆர்வத்தால் பங்கிம் சந்திர சட்டர்ஜி (1838-1894) யின் ''கிருஷ்ண சரித்திரம்'' எனும் நூலின் தாக்கத்தை பாரதியாரின் கண்ணன் பாட்டிலே எடுத்துக் காட்ட

' பாரதி ஆய்வுகள்- பக்; 271-272

முயற்சி செய்தார், பேராசிரியர். தமது இந்த ஆய்விற்கு அவர் ஹரிதாஸ் முகர்ஜி, உமா முகர்ஜி எழுதியுள்ள பின் வரும் கருத்தை ஆதரமாகக் கொண்டார்.

''பங்கிம் சந்திரரின் கிருஷ்ணன் கடவுள் அல்ல. ஆனால் எக்காலத்துக்கும் உரிய இலட்சிய மனிதன் அல்லது அதிமனிதன். போராடிக் கொண்டிருக்கும் இந்திய மக்கள் அவனது கொடியின் கீழ் ஒற்றுமைப்பட்டுத் தேசிய ஒருமைப்பாடு காணமுடியும் என்று அவர் எண்ணி னார். கண்ணன் என்னும் பாத்திரத்தைத் தேசிய ஒற்றுமைக்குச் சின்னமாகப் போற்றினார்.''

1886-ல் வெளி வந்த கிருஷ்ண சரித்திரம் என்னும் வங்க மொழி நூலில் இருந்து மேற்காணும் கருத்து எடுத்தாளப்பட்டுள்ளது. பங்கிம் . சந்திரர் கிருஷ்ணரின் அவதார மகிமையையோ, கடவுட் தன்மையையோ ஏற்க மறுத்தார் என்பது இதற்கு பொருளல்ல. கிருஷ்ணரை கடவுளாக ஒப்புக் கொள்ள மறுப்பவர்கள், அவரை ஓர் இலட்சிய மனிதனாக் ஏற்றுக்கொள்ள பங்கிம் அவ்வாறு விளக்கமளித்தார். அக்காலத்தில் அவர் அகஸ்ட் காம்டே (1798-1857) எனும் தத்துவ அறிஞரின் நேர்காட்சி வாதக் கோட்பாட்டினால் (பாஸிடிவிஸம்) மிகவும் கவரப்பட்டி ருந்தார்.

பங்கிம் பார்வைஎப்படியிருந்த போதிலும், பாரதியா ரைப் பொறுத்தவரையில் அவருடைய' கண்ணன் பாட்டு- ஆழ்வார்களின் தாக்கத்தைப் பெருமளவு பெற்றிருந்தது. ஆழ்வார்களின் சொற்றொடர்கள், வருணித்த சம்பவங்

கள், படிமங்கள் முதலானவற்றை கண்ணன் பாட்டிலே காணத் தரும் என ஆய்வாளர்கள் மிகத் தெளிவாக உணர்த்தி விட்டார்கள்.

அத்வைத, விசிஷ்டாத்வைத, துவைதத் தத்துவக் கண்ணோட்டங்கள் பொருந்தும்படி,

யானே யாகி என்னலாற் பிறவாய்
யானும் அவையுமாய் இரண்டினும் வேறாய்
யாதோ பொருளாம் மாயக் கண்ணன்''

என்று, கண்ணன் என்சீடன்' எனும் பாட்டின் தொடக்கத் திலேயே கண்ணனின் தத்துவ ஞானக்கடவுட் தன்மையை விளக்கிவிட்டார், பாரதியார்.

பேராசிரியரும் ஆய்வு நெறிகளில் மறுமதிப்பீட்டை வெளிப்படுத்தியவர். ''கடவுளை பலவித பார்வைகளில் கண்டு பரவசமடையும் இடைக்காலக் கோட்பாடான சர்வ்வித பந்து' பார்வையை ஆழ்வார்களின் கவிதை யில் பாரதியார் பெற்றார். பாரதி, வ.வே.சு. ஐயர் ஆகியோருடன் உரையாடிப் பெற்றதின் பயனாக அரவிந்தரும் வைணவ ஆழ்வார்களைப் பற்றி எழுதி யிருக்கலாம்.'' *

பேராசிரியரின் இந்தக் கருத்தை அவருடைய ''கண்ணன் பாட்டு'' மீதான் மறுமதிப்பீடாகக் கொள்ள லாம்.

''பாரதியும் வேதமரயும்''

மீள் ஆய்வு செய்யப்பட வேண்டிய பேராசிரியரின் கட்டுரைகளில் ''பாரதியும் வேதமரபும்'' என்பதும்

---

* Foot Note - On Bharathi- P. 30

ஒன்றாகும். இதில் ''பாரதி ஆரிய சமாஜத்தின் செல்வாக்குக்கு ஆளாகியிருந்தார்'' எனும் கருத்தை வெளியிட்டுள்ளார் பேராசிரியர். ''வேதத்தை மூலாதார மாகக் கொள்ளும் வைதிக நெறியில் வருபவரே பாரதி என்னும் அடிப்படை உண்மையை நிறுவதற்கு இத்தகைய நோக்கு உபயோகப்படும் என்று எண்ணு கிறேன்'' என்றும் தமது 'புதிய பார்வை'க்கு விளக்கமளித் துள்ளார், பேராசிரியர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய பிரம்ம சமாஜம் (1828), ஆர்ய சமாஜம் (1875) இராமகிருஷ்ணமிஷன் 1886 மற்றும், தியாச பிகல் சொஸைடி 1875, வள்ளலார் ராமலிங்க சுவாமிகளின் சுத்தசமரச சன்மார்க்க சங்கம் (1865) ஆகியனவற்றையெல்லாம் பாரதியார் தமது எழுத்துக் களில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவருடைய வேத நெறி ஈடுபாடு சுத்த சுயம்புவாகும். பிறசமய-கலாசார இயக்கங்களைப் பற்றிக் கூறிய அளவிற்கு அவர் ஆர்ய சமாஜயத்தைப்பற்றிக் கூறவில்லை. அவ்வாறே பிற சமய-கலாசார இயக்கங்கள் அறிமுகமாக இயங்கிய அளவிற்கு ஆர்ய சமாஜம் தமிழகத்தில் செல்வாக்கு பெற வில்லை. சுவாமி தயானந்தரின் (1824-1883)''சத்யார்த்த பிரகாசம்'' என்னும் ஆர்ய சமாஜத்தின் 'வேத நூல்' இஸ்லாம், கிறித்துவ மதக் கண்டனங்களைக் கொண்டது. அத்துடன் ஆர்ய சமாஜம் உருவாக்கிய 'சுத்தி', ''சங்கடன்'' இயக்கங்கள் பாரதி இயக்கத்திற்கு உடன் பாடானவை அல்ல. பாண்டிச்சேரியில் அரவிந்தரு டன் வேத ரிஷிகள் கவிதையைப்பற்றி விவாதித்த நிலையிலும் ஆர்ய சமாஜத்தைப் பற்றி பாரதியார் குறிப்பிடவில்லை. அகப்புறச் சான்றுகளை வைத்துப் பார்க்கும் பொழுது பேராசிரியரின் ''பாரதியும்- வேத மரபும்'' அவசரத்தில் எழுதப்பெற்ற சில குறிப்பு களாகும்.

பிறகட்டுரைகள்

மூல பாடத் திறனாய்வு நோக்கில் பேராசிரியர் எழுதிய **''பாரதி நூல்களும், பாடபேத ஆராய்ச்சியும் சில குறிப்புகள்*''** எனும் கட்டுரை பாரதியியலில் பாய்ச்சப் பெற்ற புத்தொளியாகும். பேராசியருக்கு முன்பு புதுமைப்பித்தன் பாரதி பாடல்களை ''சரியான பாடங் களுடன் ஏன் பிரசுரிக்கலாகாது?'' எனும் கேள்வியை ''மணிக்கொடி''யில், 1937 இல் பாரதி பிரசுராலயம் வெளியிட்ட பாரதி பாடல்களில் இருந்த பாட பேதங் களையும், சுப்பிரமணிய சிவாவின் 'ஞானபாநு'வில் வெளிவந்த பாரதியார் பாடல்களையும் கொண்டு பாரதி யியல் தொடர்பான ஒரு விவாதத்தைத் தொடங்கி வைத்தார். *

பேராசிரியரின் பாரதி பாடல்களில் பாடபேத ஆய்வு ஆழமானது, திறனாய்வுக் கலை வழிப்பட்டது, வரலாற்று நெறி வழிபட்டது; மிக விரிவானது, ''பாரதி ஆய்வு தொடர்ந்து முன்னேற வேண்டுமானால் மூல பாடத் திறனாய்வு இனி, முக்கிய திருப்புமுனையாக அமைதல் வேண்டும். அதன் பின்னரே உண்மையான பாரதியை நாம் கண்டவர்களாவோம்'' என்று பேராசிரி யர் உணர்த்தியுள்ளார். பாட பேதங்கள் தோன்றுவ தற்கான பல காரணங்களை எடுத்துக் காட்டியுள்ளார். பாரதியாரே செய்த திருத்தங்களினால் ஏற்பட்ட பாட பேதங்களைப் பற்றியும் பேராசிரியர் விவாதித்துள்ளது, குறிப்பிடத்தக்கது.

பாரதி ஆய்வாளர்கள் நூல்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு எழுதியக் கட்டுரைகளிலும் பேராசிரியரின் பாரதியியல்

---

* அறிஞர்கள் பார்வையில் பாரதி-1982-பெ.சு.மணி பக். 10-13

பங்களிப்பு விளக்கமுறுகின்றது, இவ் வகையில் பாரதி பதிப்புகள், பாரதியார் கவிதையும் தமிழ்ப் புலமையும், முற்போக்காளரின் பாரதி ஆய்வுகள், பாரதியியலுக்கு ஒரு பங்களிப்பு முதலானக் கட்டுரைகள் குறிப்பிடத் தக்கன.

'ஈழத்துத் தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம்' எனும் கட்டுரையில் ஈழத்துக் கவிஞர் அ.ந. கந்தசாமியின் பின்வரும் கருத்தை எடுத்துக் காட்டியுள்ளார் பேராசிரியர்,

''மலட்டுப் பாண்டித்தியம் ஸ்தல புராணங்களுள் தமிழைச் சிறையிட்டு வைத்திருந்த நேரத்தில் பாரதியார் கட்டுகளை அவிழ்க்க முன் வந்தார். சீர்மிக்க செந் தமிழ்ச் சிட்டு குருவிபோல் வெட்டவெளியில் பறக்க வைத்தார்.''

தற்காலப் படைப்பிலக்கியத்துறையிலும், திறனாய்வுத் துறையிலும் 'சிற்றிதழ்கள்' என்றும் 'சிறு சஞ்சிகைகள்' என்றும் பெயரிடப் பெற்ற இதழ்கள் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது. பேராசிரியர் சிற்றிதழ்கள் வளர்ச்சியில் பெரிதும் நாட்டம் கொண்டவர். இதனால். ''சிறு சஞ்சிகைகளில் பாரதி ஆய்வுகள்'' எனும் கட்டுரையையும் எழுதத் தவறவில்லை.

பாரதியியலுக்கு பேராசிரியர் அளித்த பங்களிப்பில் சமூக விஞ்ஞானப் பார்வையில் பாரதி ஆய்வாளர் அணியை உருவாக்கியது அரிய சாதனையாகும். இந்த அணியில் யாழ்ப்பாண பல்கலைக் கழக வளாகப் பேராசிரியர்களும், வளாகத்திற்கு வெளியே உள்ள ஆய்வாளர்.களும் அடங்குவர்.

பாரதியியல் வளர்ச்சிக்கானக் கருத்தரங்கங்களையும் பல அமைப்புகளையும் வழி நடத்தியவர் பேராசிரியர்.

பேராசிரியரின் வழிகாட்டுதலைப் பெற்ற கொழும்பு தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடான **''பாரதி பன்முகப் பார்வை''** -1984 - என்னும் நூல் பாராட்டத்தக்கது.

பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராசிரியர் எம். ஏ. நுஃமான், பேராசிரியர் சி. மௌனகுரு, பேராசிரியை மௌ. சித்திர லேகா, இ. முருகையன், கே, செந்திவேல், மா. சின்னத்தம்பி, ந. இரவீந்திரன், சிவ. இராஜேந்திரன், அ. ஜெயரட்சனம் இவர்களுடன் மூத்த எழுத்தாளர் சுபையர் இளங்கீரன், விரிவுரையாளர் யோக ராசா, யோகநாதன், க. சண்முகலிங்கம் கலர்திதி ந. சுப்பிரமணியம், செ. வேலாயுதபிள்ளை. அ.ந. கந்தசாமி, எச். எம். பீ. மொஹற்தின், மு.தளைய சிங்கம், மாதகல் வ. கந்தசாமி, சபா. ஜெயராசா முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

'பாரதி ஆய்வுகள்' பதிப்புரையில் கூறப் பெற்றுள்ள பின்வரும் செய்திகளுடன் 'பாரதியியலில் போராசிரியர் கைலாசபதி' எனும் கட்டுரை நிறைவு பெறத் தக்கது.

''1982.ம் ஆண்டு பெப்ருவரி மாதம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த் துறையினரால் ஒழுங்கு செய்யப் பட்ட ''பாரதி- முன்னும். பின்னும்'' என்ற கருத்தரங்கத் தொடரில், 'பாரதி ஊற்றுக்களும் ஓட்டங்களும்' என்ற தலைப்பில் அவர் ஆய்வுரை ஒன்று நிகழ்த்தினார். இதனைத் தனி நூலாகவே எழுதுவதற்கு அவர் திட்டமிட்டிருந்தார். பாரதியாரின் ஊற்றுக் கண்களை விரிவாக விளக்கிய அவ் வாய்வு சிறு கட்டுரையாகவேனும் எழுத்து வடிவம் பெறாமற் போனது பாரதியியலுக்கு ஓர் இழப்பே யாகும்... மேலே குறிப்பிட்ட கருத்தரங்குத் தொடரில்

''பாரதி- தாக்கங்களும் தரிசனங்களும்'' என்ற தலைப்பில் இறுதி ஆய்வுரையைத் தாமே ஆற்றுவதற்கும் அவர் திட்டமிட்டிருந்தார். ஆனால் பாரதியியல் தனது பங்களிப்பாளரைப் பறி கொடுத்து விட்டது.''

பேராசிரியர் மறைந்தாலும், அவருடைய பாரதியியல் ஆய்வுகள், பாரதி ஆய்வுப் பரம்பரையை வளர்த்தெடுத்துக் கொண்டே செல்லும். அதற்குரிய உயிர்த்தத்துவமும், உயிர்ப்புச் சக்தியும் பேராசிரியரின் பாரதியியலுக்கு உண்டு.

பெ. சு. மணி

பின்னிணைப்பு : 2

பாரதியியலுக்கு பெ. சு. மணியின் பங்களிப்பு

இதுவரை வெளிவந்துள்ள பெ. சு. மணியின் 26 நூல்களுள் பின்வரும் 10 நூல்கள் பாரதியியலுக்கு உரியன. பாரதியாரும் இராம கிருஷ்ணர் இயக்கமும்-1977; பாரதியாரின் வேதரிஷிகளின் கவிதை-1978; பாரதியாரும் சமூக சீர்திருத்தமும்-1980 பாரதியாரும் தமிழ்ப் புலவர்களும்-1981; அறிஞர்கள் பார்வையில் பாரதியார்-1982; பாரதி புகழ் பரப்பும் ம.பொ.சி-1982; பாரதிபுகழ் பரப்பிய முன்னோடிகள்-1983; பத்திரிகையாளர் பாரதியார்-1989; பாரதியார் எழுத்துகள், சில புதிய கண்டு பிடிப்புகள்-1989; சுவாமி விபுலானந்தர்-1992.

பின்வருவன, பாரதியியல் தொடர்பான பெ.சு. மணியின் ஆய்வுச் சொற்பொழிவுகள்.

1. பாரதியாரின் அரசியல் சிந்தனைகள், புதிய பார்வை-1981; சிந்தனைப் பண்ணையில் பாரதியார், சென்னை.

2. சமூகசீர்த்திருத்தவாதி பாரதியார்-ஆங்கிலம்-1982 புதுதில்லி இந்திய நூலாசிரியர்கள் சங்கம் ஆண்டு மாநாடு.

3. பத்திரிகையாளர் பாரதியார்-1988; தமிழ்த்துறை சென்னைப் பல்கலைக்கழகம்.

4. இந்திய இலக்கியத்தில் பாரதியார் படைப்புகள்-1993, காந்திகிராமம் கிராமியப் பல்கலைக்கழகம்.

5. பாரதியும் விடுதலைப் போராட்டமும்-1994; மட்டக்களப்பு கலை இலக்கிய அமைப்புகள், இலங்கை.

6. பாரதியார் கவிதைகளில் வேதரிஷிகள் கவிதையின் தாக்கம்-1994; தமிழ்த்துறை, பாண்டிச்சேரிப் பல்கலைக்கழகம்.

7. பாரதியார்பார்வையில் அரசியல், சமூக 'ஆன்மிக' இயக்கங்கள்-1995, பேராசிரியர் மது. ச. விமலானந்தம் பாரதி ஆய்வு அறக்கட்டளைச் சொற்பொழிவுவரிசை- சென்னை.

8. பாரதியார் சிறுகதை, நாவல்களில் சமகாலவுணர்வுகள்-1995; பாரதிபாசறை-சென்னை.

பாரதியியல் வளர்ச்சியில் சாதனை செய்த, சாதனை செய்து வரும், அமரர் டாக்டர் ம.பொ.சி, அமரர் சி, விசுவநாதன் (பாரதியார் சகோதரர்) அமரர் கலாநிதி க. கைலாசபதி, தொ. மு. சிதம்பர ரகுநாதன், ரா. அ. பத்மநாபன், 'சிட்டி' பெ. கோ. சுந்தரராஜன், பாரதியார் சங்கம் நா. மகாலிங்கம் முதலானோர் பெ. சு. மணியின் பாரதி இயல் ஆய்வுகளைப் பாராட்டியுள்ளனர்.

''அன்பர் பெ. சு. மணி அவர்கள் ஒரு முற்போக்கான எழுத்தாளா என்ற முறையில் பிரதிபலன் எதையும் எதிர் பார்க்காமல் பாரதியின் இலக்கியங்களை ஆராய்ந்து வருகின்றார். மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார்.'' இவ்வாறு டாக்டர் ம.பொ.சி, பாரதியாரும் சமூக சீர்திருத்தமும் என்னும் நூலிற்கு எழுதிய வாழ்த்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

பாரதியார் சகோதரர் அமரர் சி. விசுவநாதன் பெ. சு. மணிக்கு 30-11-1981 இல் எழுதியக் கடிதத்தில் கூறியதாவது:

''சென்ற மூன்று தினங்களாகத்தான் தாங்கள் அன்புடன் அனுப்பிய தங்கள் ஆய்வு நூல் 'பாரதியாரும்

தமிழ்ப்புலவர்களும் என்ற அருமையான நூலைப் படித்தேன். அதன் பயனாக நான் தங்களைப் பற்றி ஏற்கனவே கொண்டிருந்த அபிப்பிராயமும் மதிப்பும் பன்மடங் கல்ல, பல மடங்கு அதிகமாய் விட்டது. இதுவரை பாரதியைப் பற்றி பலர் எழுதிய ஆய்வுகளைப் பார்த்திருக்கிறேன் ஆனால் தங்கள் நூலுக்கு அவற்றில் ஒன்றாவது இணையாகாது என்பது மிகையாகக் கூறுவதல்ல. தங்கள் நூல் பாரதி ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமல்லாமல், பாரதி வாழ்க்கை வரலாற்றை எழுத முயல்பவர்களுக்கும் பெரிதும் பயன்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.'' இவர் 5-2-1982-ல் மற்றொரு கடிதத்தில் எழுதியதாவது ''தங்கள் நூல்களைப் படிக்கப் படிக்க தங்கள் புலமையின், ஆழமும், விரிவும், தங்கள் ஆராய்ச்சித் திறனும், பிறசான்றுகளை உபயோகிக்கும் பான்மையும் என்னைபிரமிக்க வைக்கின்றன.''

பாரதியியல் ஆய்வு முன்னோடி ரா. அ. பத்மநாபன் ''பத்திரிகையாளர் பாரதியார்'' என்னும் நூலிற்க்கு எழுதிய முகவுரையில் உள்ள சில கருத்துக்கள் பின்வருவன: பெ.சு. மணி சிறந்த ஆராய்ச்சியாளர்... அன்பர் மணியின் நூல்களில் வெட்டிப் பரபரப்பு இராது. வரிதோறும் தக்க ஆதாரங்கள் கொண்ட புதிய புதிய தகவல்கள் பொதிந்து வைத்திருக்கும். அவரது நூல்கள் ஒவ்வொன்றும், பாரதியையும், பாரதியின் குடும்பத்தினர், நண்பர்கள், அவரது சம காலத்து அறிஞர்கள், பிறர்யாவரையும் பற்றி அதுவரை கண்டிராத ஒரு புதிய கோணத்தில் விரிவாக விமர்சிப்பதாக இருக்கும். அவரது ஒவ்வொரு நூலுமே பக்குவமான ஆய்வாகவும் அமைவது சிறப்பு.''

காலமும் கருத்தும் என்னும் அரிய பாரதியியல் ஆய்வு நூலிற்கு சாகித்ய அகாதமியின் பரிசுபெற்ற மூத்த தமிழ் ஆய்வாளர் தொ. மு. சிதம்பர ரகுநாதன், பெ. சு.

மணியின் 'கார்ல் மார்க்சின் இலக்கிய இதயம்' என்னும் நூலிற்கு (1986) வழங்கிய அணிந்துரையில் பின்வரும் கருத்துகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

''என்னைப் போலவே மகாகவி பாரதிபற்றிய ஆராய்ச்சியில் அவரும் ஈடுபட்டுப் பல நூல்களை எழுதியுள்ளதின் காரணமாக அவர் எனக்கு நண்பருமானார் ...பாரதியைப் பற்றி வெளிவந்துள்ள சிறந்தப்புத்தகங்கள் என்று ஒரு பட்டியல் போட்டால், அதில் திரு பெ. சு. மணியின் புத்தகங்களில் ஒன்றேனும் தவிர்க்கொனாத விதத்தில் இடம் பெறவே செய்யும்...எடுத்துக் கொண்ட தலைப்பு அல்லது கருப் பொருள் சம்பந்தப் பட்ட தகவல்கள் பலவற்றையும் கர்ம சிரத்தையோடு தேடிச்சேகரிப்பது, சான்றாதாரங்களைக் கூடியவரையில் அவற்றின் மூலவடிவிலேயே கண்டறியச் சிரமங்களை மேற்கொள்வது.. இப்போது பல எழுத்தாளர்கள் விஷயத்தில் இல் பொருளாகி விட்ட நேர்மையோடும், சத்தியத்தோடும் எழுத்துப் பணியில் ஈடுபடுவது ஆகிய இவையே திரு. பெ. சு. மணியின் நூல்களை அறிஞர் உலகமும் அறிவார்ந்த வாசகர் கூட்டமும் கணக்கில் எடுதது்க் கொள்ளச் செய்யும் சிறப்புக்கள் எனலாம்.''

இலங்கையில் பாரதி ஆய்வாளர்கள் பெ.சு. மணியை கவனிக்கத்தூண்டியவர்களுள் முதன்மையானவர் கைலாசபதி. இலங்கை இளம் பாரதி ஆய்வாளர் திரு. ந. இரவீந்திரன் எழுதியதாவது. ''தமது படைப்புகளால் பாரதியார் எழுத்துகளுககு ஒரு புதிய கோணத்தையும்' புதிய தாக்கத்தையும். செய்து வருபவர் பெ. சு. மணி.''

முற்றும்



''அன்பர் மணி அவர்கள் இலக்கியப் பணி என்ற பெயரால் தங்கள் பொழுதையோ, மற்றவர்கள் பொழுதையோ போக்கு வதற்காக நூல்கள் எழுதாமல் அறிவுக்கும் சிந்தனைக்கும் ஊட்டந் தரக்கூடிய நூல்களையே படைக்க வேண்டுமென்பதில் தீவிரவாதியாகத் திகழ்வது எனக்கு பெரிதும் உவகையூட்டு கிறது'' என்று அமரர் **வெ. சாமிநாத சர்மா** *(1895-1978)* அவர்களும்,

''திரு. பெ. சு. மணி அவர்கள் தாம் படித்துப் பெற்ற அறிவை அடிப்படையாக்கி நூலறிவால் நுண்ணறிவை வளர்த் துக்கொண்டவர். நூலகங்களே இவருடைய வாசஸ்தலங்கள்; அறிஞருலகிலேயே சஞ்சாரஞ் செய்பவர். இந்தப் பழக்கங் களால் என்னுடைய நெடுநாளைய நண்பரான அன்பர் மணி சிறந்த எழுத்தாளராக மலர்ந்துள்ளார்'' என்று அமரர் சிலம்புச்செல்வர் **ம. பொ. சி.** *(1906-1995)* அவர்களும் இந் நூலாசிரியரைப் பாராட்டியுள்ளனர்.

''நிதானம், நேர்மை, நுனித்து நோக்கும் திட்பம், நெஞ் சுறுதி ஆகிய சிறப்பியல்புகளிலே ஒருமைப்பாடுடையவராய் விருக்கின்றனர்'' எனும் திறனாய்வாளர்ப் பெயர்ப்பட்டியலில் இந்நூலாசிரியர் பெயரையும் குறிப்பிட்டுள்ளார் அமரர் பேராசிரியர் **க. கைலாசபதி** *(1933-1982)* (பார்க்க: இலக்கிய மும் திறனாய்வும்-1990—ப. 165).